

ஆசிரியரின் பிற நூல்கள்

1. விடுதலைப் பெற துடிப்பதேன்?
2. பூரண விடுதலைப் பெற இஸ்லாம் மார்க்கமே
3. தீண்டாமை ஒழிப்பு
4. செடியூல்டு இனத்தவர் கரசேவை
5. NEVER BE A HINDU (ஆங்கிலம்)
6. மண்டல் கமிஷன் மீதான தீர்ப்பின் ஆபத்து
7. செடியூல்டு இனத்தவர் தனி வாழ்நிலம்
8. பெண் விடுதலை (நூலகப் பதிப்பு)
9. ஏழையின் சிரிப்பு (நூலகப் பதிப்பு)
10. மயானக் காட்டில் ஒருநாள் (அச்சில்)
11. காலம் மாறுமா? (அச்சில்)
12. எருமை மாடுகளுக்கு மத்தியில் ஒருநாள் (அச்சில்)

நினைவில் நிற்பவைகள் டாக்டர் அ. சேப்பன்

நினைவில் நிற்பவைகள்







டாக்டர் அ. சேப்பன்

நினைவில் நிற்பவைகள்

டாக்டர் அ. சேப்பன், M.A., M.B.B.S., D.G.O.,

தங்கம்மாள் பதிப்பகம்

14/13, அஜீஸ் முல்க் 5வது தெரு,

ஆயிரம்விளக்கு, சென்னை-600 006.

போன் : 2829 2905

முதற் பதிப்பு : டிசம்பர் 2009

உரிமை : ஆசிரியருக்கே

விலை ரூ : 50/-

கிடைக்குமிடம் :
பாத்தாத் புக் சென்டர்
81/8, அங்கப்ப நாயக்கன் தெரு,
மண்ணடி, சென்னை-600 001.
போன் : 2524 0541

டைப் செட் : என்.ஆர். கிராபிக்ஸ்
சென்னை-5.

அச்சிட்டோர் :
சேகர் கிராபிக்ஸ் பிரிண்ட்ஸ்,
சென்னை-600 005.

முகவுரை

எனது குருநாதர் உவமைக் கவிஞர் சுரதா ஐயா அவர்கள் கடந்த பதினைந்தாண்டுகளாக நான் சந்திக்கும்போதெல்லாம் ''டாக்டர் நீங்கள் உங்களுடைய வாழ்க்கை வரலாற்றை எழுதுங்கள்'' என வலியுறுத்தி வந்தார்.

''ஐயா! வாழ்க்கை வரலாறு எழுதுவதற்கு எனக்கு என்ன தகுதி இருக்கின்றது?'' என்றேன்.

''உங்களுக்கு தகுதி இல்லாமல் இல்லை. நீங்கள் நினைவிலுள்ளதை எழுதுங்கள்'' என்றார்.

ஐயா இறப்பதற்கு சில நாட்களுக்கு முன்பு கூட வலியுறுத்தினார். ''சீக்கிரம் எழுதி கொண்டு வாருங்கள் நான் அணிந்துரை எழுதிக் கொடுக்கிறேன்'' என்றார்.

ஆனால் நேரமின்மையின் காரணமாக என்னால் எழுதி முடிக்க இயலவில்லை. ஐயா அவர்கள் மறைந்ததும் அவரிடம் அணிந்துரை பெற முடியாமைக்கு பெரிதும் வருந்தினேன். இருப்பினும் உவமைக் கவிஞரின் நினைவாக இயன்றவரை நினைவில் நிற்பவைகளை எழுதி முடித்தேன். இளம் வயதில் என்னுடைய பெயர் சேப்பான். இடையில் என் பெயரை சேப்பன் என்று மாற்றிக் கொண்டேன்.

டாக்டர்அம்பேத்கர் அவர்களின் வாழ்க்கை வரலாற்றை கவிதை வடிவில் அமைத்த எங்கள் ஊர்க்காரர் அண்ணன் மகாகவிஞர் பெங்களூர் பாவலர் இரத்தினம் அவர்கள் சரி பார்த்து அழகுபட இதை எழுதிக் கொடுத்தார்கள். அன்னாருக்கு எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்புடன்,
டாக்டர் அ. சேப்பன்

காணிக்கை



இந்நூல் எழுதுவதற்கு ஊக்குவித்த உலக மகா கவிஞர் சுரதா ஐயா அவர்கள் என்றும் என் இதயத்தில் நிலைத்து நிற்கின்றார்.

எனவே, உவமைக் கவிஞர் சுரதா ஐயா அவர்களுக்கு இந்நூலை காணிக்கையாக்குகிறேன்.

டாக்டர் அ. சேப்பன்

நன்றி!

பொருளாதார நெருக்கடி காரணமாக நீண்ட நாட்களாக முயற்சித்தும் நூலை வெளியிட முடியாத நிலை ஏற்பட்டது. இந்நிலையில் இந்திய குடியரசு கட்சியின் தேசியச் செயலாளர் சகோதரர் திரு. **ஜெயகுமார்** அவர்களும், இந்திய உணவுக் கழக சகோதரர்களும் இந்நூல் அச்சிடுவதற்கு உதவினார்கள். அவர்களுக்கு எனது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் உலக மகாகவி உவமைக் **கவிஞர் சுரதா** அவர்களின் புதல்வர் சகோதரர் **கவிஞர் சுரதா கல்லாடன்** அவர்கள் சிறந்த முறையில் அச்சிட உதவினார்கள். அன்னாருக்கும் எனது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் எழுதிய இந்நூலை எங்கள் ஊர்க்காரர் அண்ணன் பெங்களூர் பாவலர் **இரத்தினம்** அவர்கள் பிழை திருத்தி எழுதிக் கொடுத்தார். அன்னாருக்கும் என்றும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளேன்.

-டாக்டர் அ. சேப்பன்
தேசிய மூத்த துணைத் தலைவர்
இந்திய குடியரசுக் கட்சி

பொருளடக்கம்

எங்கள் ஊர்ப் பகுதி

என்னுடைய சொந்த ஊர் முந்தைய தஞ்சாவூர் மாவட்டம். தற்போதைய நாகப்பட்டினம் மாவட்டம், வேதாராண்யம் வட்டம், ஆயக்காரன்புலம் கிராமமாகும். இதுமுதல் சேத்தி, இரண்டாம் சேத்தி, மூன்றாம் சேத்தி, நான்காம் சேத்தி என பிரிக்கப்பட்ட மிகப்பெரிய கிராமம். ஆயக்காரன்புலம் நான்காவது சேத்தியைச் சேர்ந்த கோவில்குளம் எனது தந்தையின் பூர்வீகக் கிராமமாகும். ஆனால், நான் பிறந்தது முதல் முதற்சேத்தியிலேயே வசித்து வந்தேன்.

இந்த வட்டம் தற்போது புதிதாக ஏற்படுத்தப்பட்டுள்ள வேதாரணியம் தாலுக்காவிற்குள் வருகிறது. இதன் தெற்குப் பகுதியில் தேவர்கள் பெரும்பான்மையினராகவும் வடக்குப் பகுதியில் வன்னியர்கள் பெரும்பான்மையினராகவும் வாழ்கிறார்கள். ஆனால், ஆதித்திராவிடர்கள் எல்லா கிராமங்களிலும் பரவலாக உள்ளனர்.

தாயுமான அடிகள், தென்னாட்டுக் காந்தி சர்தார் வேதரத்தினம் பிள்ளை, மனிதநேயக் காப்பாளர் அய்யா பி. வெங்கடாசல தேவர், மனிதநேய மாமனிதர் குரவப்புலம் அய்யா மாரிமுத்துக் கவுண்டர், தமிழறிஞர் இலக்குவனார், பெரியார் பெருந்தொண்டர் க. சுந்தரம், ஆயக்காரன்புலம் செட்டியார் குத்ததை கொடைவள்ளல் பண்ணையார் நடேச தேவர் போன்றவர்கள் இந்த வட்டத்தைச் சேர்ந்த சிறப்புமிகு மாமனிதர்களாவர்.

தலித் மக்களின் அவல நிலை

தலித் மக்கள் கொத்தடிமைகளாகவே நடத்தப்பட்டார்கள். இவர்கள் ஊர் எல்லைப் புரத்தில் ஒதுக்கி வைக்கப்பட்டனர். இவர்கள் தொட்டாலே தீட்டு; இவர்கள் காலில் செருப்பணிந்து செல்லக்கூடாது; குடைப் பிடிக்கக் கூடாது; முழங்காலுக்குக் கீழே உடை உடுத்தக்கூடாது; பெண்கள் இரவுக்கைப் போடக் கூடாது; கூலிகளாக அடிமை வேலை பார்த்தல், மாடு மேய்த்தல், எடுபிடி வேலை செய்தல் போன்ற பணிகளைச் செய்து வந்தார்கள். அதோடு பறையர்களின் பெரும்பாலானவர்கள் பறையடித்தல், பிணம் சுடுதல், செத்த மாட்டைத் தூக்கி வருதல், சவக்குழி தோண்டுதல், துக்கச் செய்தி எடுத்துச் செல்லுதல் போன்ற இழி தொழில்களைச் செய்து வந்தார்கள்.

தலித் மக்கள் சிறு தவறு செய்தாலும், உயர் சாதியினர் அவர்களை மாட்டை அடிப்பது போன்று தடிகொண்டு அடித்துச் சித்திரவதை செய்வார்கள். தலித் மக்களை அடிப்பதற்கென்றே சில ஜமீன்தார்கள் திருக்கைமீன் வால் வைத்துக் கொள்வார்கள். வண்டி மாட்டை அடிப்பதற்குப் பயன்படுத்தும் சாட்டையாலும் மிதியடி கட்டையாலும் அடிப்பார்கள்.

பனை, தென்னை, மா போன்ற மரங்களில் கட்டி வைத்து திருக்கை மீன் வாலால் (சவுக்கால்) அடிப்பார்கள்.

ஏன்? எதற்கு? என்று கேட்கவே முடியாது. இந்தக் கொடுமைகள் தாங்க முடியாமல் பலர் சிங்கப்பூர், மலேசியா, பர்மா, இலங்கை போன்ற நாடுகளுக்குச் சென்று விட்டார்கள். ஆங்கிலேயர்கள் ஆட்சியில் எந்த நாட்டிற்கு வேண்டுமானாலும் இலவசக் கப்பலில் (தருமக்கப்பல்) செல்ல முடியும்.

தேநீர்க் கடைகளில் வெளியே நின்று பனை மட்டையில்தான் தேநீர் வாங்கி அருந்த வேண்டும். காலப் போக்கில் வெளியே தேநீர் குவளை (டீ கிளாஸ்) தொங்கவிடப்பட்டது.

சவரத் தொழிலாளர்கள் தலித் மக்களுக்கு முடிவெட்ட மாட்டார்கள். சலவைத் தொழிலாளர்கள் தலித் மக்களுக்கு துணி வெளுக்க மாட்டார்கள். அதனால், பெரும்பாலான தலித் ஆண்கள் நீண்ட குடுமியுடன் இருப்பார்கள். சிலர் தங்களுக்குள்ளேயே முடி திருத்திக் கொள்வார்கள்.

இந்தியா சுதந்திரமடைந்து பூரண மதுவிலக்கு அமுல்படுத்தப்படும் வரை தங்களுக்குக் கிடைக்கும் குறைந்த கூலியின் பெரும்பகுதியை கள்குடித்து செலவழித்து வந்தார்கள்.

பூரண மதுவிலக்கு அமுல்படுத்தப்பட்ட பின்புதான் ஆடு வாங்கினார்கள்; மாடு வாங்கினார்கள். சிலர் சொந்தமாக நிலம் கூட வாங்கினார்கள்.

தேவர்கள்

இந்தப் பகுதியிலுள்ள தேவர்களில் ஜமீன்தார்கள் தலித் மக்களை சித்திரவதை செய்தார்கள். அதே நேரத்தில் தலித் மக்களுக்கு ஆதரவாகவும்

பல தேவர்கள் இருந்தார்கள். இப்பகுதியிலுள்ள தேவர்களில் பலர் பகுத்தறிவாளர்கள் எனலாம்.

தலித் மக்களிடையே விழிப்புணர்வு இல்லாததினால் இந்த வட்டத்தில் சாதிக் கலவரங்கள் ஏற்படவில்லை. அடிவாங்கிக் கொண்டு அழுது புலம்பித் தவித்த மக்களை ஒன்று சேர்த்து ஆதிக்க சக்திகளை எதிப்பதற்கான தலித் தலைவர்கள் அந்தக் காலத்தில் யாருமில்லை. அதனால் சாதிக் கலவரங்கள் ஏற்படவில்லை எனலாம்.

இப்பகுதி தேவர்களிடையே சாதி வெறி அதிகம் கிடையாது. இருப்பினும் இந்துமத சாதி வழக்கப்படி (சம்பிரதாயம்) தீண்டாமை பாராட்டினார்கள் எனலாம்.

இப்பகுதி தலித் மக்களின் விடுதலைக்காக முதன் முதலில் நான்தான் போராட்டம் ஆரம்பித்தேன். எனது போராட்டத்திற்கு கருப்பம் புலம் மனிதநேயக் காப்பாளர் அய்யா பி. வெங்கடாசல தேவர் அவர்களும் ஆயக்காரன்புலம், மலையான் குத்தகை சகோதரர் தியாகி அப்பாதுரை தேவர் அவர்களும் பெரும் துணை புரிந்தனர்.

இந்தியா விடுதலையடைவதற்குமுன் தியாகி சர்தார் வேதரத்தினம் பிள்ளை அவர்கள் தலைமையில் சேரிகளுக்கு வந்து துடைப்பான் ஏந்தி சேரிகளைச் சுத்தம் செய்வார்கள். கைராட்டையை வைத்துக் கொண்டு சேரிகளில் வந்து தேசவிடுதலைப் பாட்டுப் பாடுவார்கள்.

சர்தார் வேதரத்தினம் பிள்ளை, ஆசிரியர் இராமாமிர்தம் ஆகியோர் எங்கள் வீட்டு முற்றத்தையும் சுத்தம் செய்தார்கள். நான் அப்போது சிறுவனாக இருந்தேன். யாரோ சில பிராமணர்களும் வந்து சேரி சுத்தம் செய்தார்கள். அவர்கள் யார் என்று அப்போது எனக்குத் தெரியாது. மதுரை வைத்தியநாத அய்யர் வந்ததாக பின்னாளில் கூறினார்கள்.

எங்கள் ஊருக்கு ஒரு பெருமை

உப்பு சத்தியாக் கிரகம் எங்கள் ஊரில் தான் நடைபெற்றது. இராஜாஜி அவர்கள் நடந்தே வந்தார்களாம். உப்பு சத்தியாக்கிரகத்திற்கான ஏற்பாடுகளை சர்தார் வேதரத்தினம் பிள்ளை எனது மைத்துனர் தியாகி

சின்னான், மேதகு முன்னாள் நீதிபதி திரு. சொக்கலிங்கம் அவர்களுடைய தந்தையார் ஆகியோர் முன்நின்று செய்தார்களாம்.

சத்தியாக்கிரகப் போராளிகளுக்கு யாரும் தங்குவதற்கு இடம் கொடுக்கக் கூடாது; உணவு கொடுக்கக் கூடாது என ஆங்கில அரசு தடை விதித்திருந்தது.

எனவே, வழியிலுள்ள கோயில்களில் தங்கியிருந்து பயணத்தைத் தொடர்ந்தார்கள். வரும் வழி பெரும்பாலும் காட்டுப் பகுதியாகவே இருந்தது. போராளிகளுக்கு உணவுப் பொட்டலங்களை மரத்தில் கட்டித் தொங்க விட்டிருந்தார்கள். போராளிகள் அதை எடுத்துச் சாப்பிட்டார்களாம்.

மேதகு நீதிபதி அய்யா சொக்கலிங்கம் அவர்களுடைய தந்தை தான் அவ்வாறு உணவுப் பொட்டலங்களைத் தொங்கவிட்டவர். அதை கிராம அதிகாரி காட்டிக் கொடுத்து அரசுக்கு புகார் அனுப்பியுள்ளார். அதனால் நீதிபதியின் தந்தையார் கைது செய்யப்பட்டுத் தண்டிக்கப்பட்டார்.

உப்புச் சத்தியாக்கிரகப் போராளிகள் சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரி (இராஜாஜி) அவர்களுடைய தலைமையில் எங்கள் ஊர் ஆயக்காரன்புலம் 3ஆம் சேத்தி, நல்லான் குத்தகையிலுள்ள ஒரு கோவிலில் தங்கி இருந்தார்கள்.

மகாத்மா காந்தியின் தண்டி யாத்திரையைப் போல இராஜாஜி அவர்களின் வேதாரணியம் உப்பு சத்தியாக்கிரகப் போராட்டம் வரலாற்றில் இடம் பெற்றுள்ள ஒன்று. அந்தச் சிறப்பு எங்கள் ஊருக்கு உண்டு.

2. எனது முன்னோர்கள்

எனது முன்னோர்கள் அன்றைய தஞ்சாவூர் மாவட்டம் (இன்றைய நாகப்பட்டினம் மாவட்டம்) வேதாரணியம் வட்டம், ஆயக்காரன்புலம் 4ஆவது சேத்தி கோவில்குளம் என்ற கிராமத்தைச் சேர்ந்தவர்கள். இந்துக்களுக்கு பறையடித்தல், பிணம் சுடுதல், செத்த மாட்டைத் தூக்கி வருதல், விவசாய வேலைகள் செய்தல் போன்ற தொழில்கள் செய்து வந்தார்கள். அவர்கள் தேவர் இனத்தைச் சேர்ந்த ஜமீன்தார்களிடம் கொத்தடிமைகளாகவே வாழ்ந்தார்கள் எனலாம்.

எனது முப்பாட்டனார் "எல்லக்கிசேப்பான்" என அழைக்கப்பட்டார். அதாவது, பறையடித்துக் கொண்டு ஊர் எல்லைகளில் திருடர்கள் வராமல் காவல் காத்திடும் எல்லைக் காவலராகப் பணிபுரிந்ததால் அவ்வாறு அழைக்கப்பட்டார். எல்லக்கி சேப்பானின் மகன் வைத்தி என்பவர். அவர்தான் என்னுடைய பாட்டன். வைத்திக்கு இரண்டு மகன்களும் மூன்று பெண்களும் பிறந்தார்கள். அவர்களில் ஒரு பெண் பெரியம்மை நோயினால் இறந்து விட்டார். வைத்தியின் கடைசி மகன் அஞ்சான் என்ற அஞ்சப்பன். அவர்தான் என்னுடைய தந்தை.

நொண்டி வீரன்

எல்லக்கி சேப்பான் முந்திய தலைமுறையைச் சேர்ந்தவர் நொண்டி வீரன். அவர் ஊர்க்காவலராகவும் வைத்தியம் செய்பவராகவும் விளங்கினார். எல்லா சமூகத்தினரும் அவரிடம் குறிகேட்பது வழக்கம். நொண்டி வீரன் மனைவி தேவியம்மாள் என அழைக்கப்பட்டார். அவர் பெயர் பெற்ற (பிரபலமான) மருத்துவச்சியாகத் திகழ்ந்தார். நொண்டி வீரனும் தேவியும் தெய்வீகத் தன்மையுடையவர்களாகக் கருதப்பட்டார்கள். எல்லா சமூகத்தினருக்கும் சேவை செய்து வந்ததால் அவர்கள் இறந்தபின் கோவில் குளத்தில் அனைத்து இனத்தவர்களும் சேர்ந்து கோவில் கட்டியுள்ளார்கள்.

இன்றும் அய்யனார் கோவில் எதிரில் நொண்டி வீரன் சன்னதி, மறுபக்கம் யாதவர்களுக்காகப் பணியாற்றி மறைந்த இனியரன் சன்னதி ஆகியன உள்ளன.

நொண்டிவீரன்–தேவிக்கு எங்கள் குடும்பப் பரம்பரையைச் சேர்ந்த

பங்காளிகள் மட்டு பூசை நடத்துவது வழக்கம். நொண்டி வீரனுக்கு ஆடு, கோழி பலியிடுவது வழக்கமாகும்.

தேவி பெண்களுக்குப் பிரசவம் பார்த்தவர் என்பதால் எங்கள் ஊரில் கர்ப்பமான பெண்கள் நல்லபடியாகக் குழந்தை பிறக்க வேண்டுமென தேவியை வேண்டிக் கொள்வார்கள். குழந்தை பிறந்த பிறகு தேவிக்கு பதினாறு பெட்டை கோழிகளை அறுத்து சமையல் செய்து பூசை நடத்துவது வழக்கம். தேவிக்கு எங்கள் வீட்டில்தான் பூசை நடத்துவார்கள். ஆண்டுக்கு ஒருமுறை விழா நடத்துவது வழக்கம். நூற்றுக்கணக்கான கோழிகளை சமைத்து பூசை நடத்துவார்கள்.

இன்றும் நொண்டி வீரனும்-தேவியும் எங்கள் குலதெய்வமாக வணங்கப்படுகிறார்கள்.

எனது பெற்றோர்கள்

எனது தாய் தங்கம்மாள் ஆயக்காரன்புலம் முதற் சேத்தி ரங்கன் என்பவரது மகள். ரங்கள் (எனது தாத்தா) பலமுறை பர்மாவிற்குச் சென்றவர். தங்கம்மாளுக்கும் எனது தந்தை அஞ்சப்பனுக்கும் 1936–ல் திருமணம் நடைபெற்றது. எனது தாயின் சகோதரர்கள் (எனது மாமன்மார்கள்) குப்புசாமி, ரத்தினம் என்பவர்கள் ரங்கூனுக்குச் சென்று விட்டார்கள். அதனால் எனது மாமன் குடும்பம் மிகவும் வசதியான குடும்பம்.

திருமண ஊர்வலம்

அந்தக் காலத்தில் எங்கள் ஊர்ப் பகுதிகளில் தீண்டப்படாதவர்கள் வீட்டில் திருமணம் நடந்தால் உடனே பெண்ணும் மாப்பிள்ளையும் மற்றும் உறவினர்களும் மேளம் அடித்துக் கொண்டு அந்த ஊரிலுள்ள சாதி இந்துக்கள் அனைவர் வீட்டிற்கும் சென்று அவர்களின் காலில் விழுந்து வணங்கி மரியாதை செலுத்த வேண்டும். அவர்கள் எட்டணா (50 பைசா) அல்லது இரண்டு படி நெல் சன்மானமாகக் கொடுப்பார்கள். எந்த சாதி இந்துவின் வீட்டையும் ஒதுக்கி விடக்கூடாது. அப்படி ஒதுக்கினால் அவமரியாதை செய்ததாகக் குற்றம் சுமத்தி தண்டிக்கப்படுவார்கள். இதற்கு ஊர்வலம் (ஊர்கோலம்) எனப் பெயர்.

எனது தந்தை அஞ்சப்பனுக்கும் தாய் தங்கம்மாளுக்கும் திருமணம்

நடைபெற்றது. ‘‘நான் கல்யாணம் செய்து மற்றவன் காலில் எனது மனைவி விழுவதற்குச் சம்மதிக்க மாட்டேன்’’ என ஊர்கோலம் போவதற்கு எனது தந்தை மறுத்து விட்டார். இது அந்த ஊர் சாதி இந்துக்களையும் ஜமீன்தார்களையும் அவமரியாதை செய்ததாகக் கருதப்பட்டது.

எனது தந்தை கம்பீரமான உடலமைப்பு உடையவர். முரட்டுக் குணம் படைத்தவர். சாதி இந்துக்களாகிய தேவர்களுக்குப் பயப்படாதவர். எனவே அஞ்சப்பனைப் பழிவாங்குவதற்கு ஜமீன்தார்கள் காத்திருந்தனர்.

எனது தந்தை பழிவாங்கப்பட்டார்

திருமணமான மறுநாள் முதல் தீண்டப்படாதவரின் மனைவி தினம் காலையில் பண்ணையார் (ஜமீன்தார்) வீட்டு முற்றத்தை சுத்தம் செய்து சாணம் தெளிக்க வேண்டும். அதற்கும் எனது தகப்பனார் எனது தாயை அனுப்புவதற்கு மறுத்து விட்டார்.

எனவே, ஒருநாள் எனது தகப்பனாரை மாட்டுக் காம்பவுண்டிற்குள் அடைத்து வைத்து பண்ணையார் தடிகொண்டு தாக்கினார். மாட்டை அடிப்பது போன்று அடித்தார். எனது தந்தையார் சுவர் ஏறிக் குதித்து தப்பித்து வந்து விட்டார்.

சிலநாட்கள் கழித்து மீண்டும் பண்ணையார் வீட்டிற்கு வேலைக்குச் சென்றார். அந்தப் பண்ணையார் ஆயக்காரன்புலம் 4ஆவது சேத்தி பட்டாமணியார் வெங்கடாசல தேவர். அவரை நல்லாங்குத்தகை தெற்குப் பண்ணை என அழைப்பார்கள். அவர் ஊர் கிராம மணியக்காரர் (கிராம அதிகாரி). எனவே யாரும் எதிர்க்க முடியாது.

எப்படியும் அஞ்சப்பனைப் பழி வாங்க வேண்டும் என பண்ணையார் வெங்கடாசல தேவர் திட்டமிட்டிருந்தார். ஒருநாள் நெல் தொம்பை இருந்த கட்டடத்திற்குள் நெல் எடுக்க வேண்டுமென அழைத்துச் சென்றார். எனது தகப்பனார் உள்ளே சென்றதும் வெளியே நின்ற அவருடைய ஆட்கள் கதவைப் பூட்டி விட்டார்கள். பண்ணையார் வெங்கடாசல தேவர் எனது தகப்பனாரை காட்டு மிராண்டித்தனமாக அடித்தார். எனது தந்தை எவ்வளவோ கெஞ்சிப் பார்த்தும் பண்ணையார் விடவில்லை. அவ்வளவுதான், அஞ்சப்பன் வெறிப்பிடித்தவராகி விட்டார். பண்ணையாரை நோக்கிப் பாய்ந்தார். அவரைத் தாக்கினார். பந்தாடினார். பண்ணையாரை உயரத் தூக்கி

நெல் மூட்டை மீது வீசினார். கதவைப் பலமாக எட்டி உதைத்தார். கதவு உடைந்து வழிவிட்டது. ஓடி வந்து விட்டார்.

அன்றைய நிலையில் தீண்டப்படாதவர்கள் யாருமே துணிவோடு எதிர்த்துத் தாக்கியது இல்லை. ஆனால், அஞ்சப்பன் தான் முதன் முதல் ஒரு பயங்கரமான பண்ணையாரை எதிர்த்துத் தாக்கினார்.

''ஆறிலும் சாவு; நூறிலும் சாவு. எவருக்கும் பயப்படக் கூடாது'' என்று எனது தந்தை அஞ்சப்பன் அடிக்கடி கூறுவார்.

ஓடினார்! ஓடினார்! இரவு பகலாக ஓடினார்!

அப்போது எனது தாயின் வயிற்றில் நான் எட்டு மாத கருவாக இருக்கிறேன். எனது பெற்றோர்களுக்குக் கல்யாணமாகி ஒன்பது மாதங்கள் தான் இருக்கும். கல்யாணமான நாள் முதல் எனது தந்தை பண்ணையாரின் கொடுமைக்கு ஆளாக வேண்டியிருந்தது. அதாவது, எனது தந்தையின் போராட்டங்களுக்கிடையே நான் கருவுற்றிருக்கிறேன்.

தீண்டாமை கொடுமைகளுக்கிடையே போராடிக் கொண்டு எனது பெற்றோர்கள் என்னையும் உருவாக்கி போராடச் செய்தார்கள் போலும்.

அதற்கு மேல் ஊரிலிருந்தால் பண்ணையார் சும்மா விடமாட்டார் என்பதை உணர்ந்து எனது தந்தை எட்டுமாத கர்ப்பிணியாகிய எனது தாயை அழைத்துக் கொண்டு எனது மாமன் வீட்டிற்கு வந்து விட்டார். வரும் வழியில் ''இனிமேல் இந்த ஊரில் நான் அடியெடுத்து வைக்கமாட்டேன்'' என துணியைப் போட்டுத் தாண்டி சத்தியம் செய்தார். தனது மனைவியை தன் மாமனாரிடம் (எனது தாத்தா ரங்கன்) ஒப்படைத்து பாதுகாக்குமாறு கேட்டுக் கொண்டார். கண்கள் குளமாக பிரியா விடை பெற்று ஓடினார், ஓடினார் இரவு பகலாக ஓடி நாகப்பட்டினத்தை அடைந்தார். 50 கி.மீ. தூரத்தை கால் நடையாகவே ஓடிக் கடந்தார். நாகப்பட்டினத்திலிருந்து இலவச கப்பலேறி சிங்கப்பூர் போய்ச் சேர்ந்தார்.

3. நான் பிறந்தேன்! ஏன் பிறந்தேன்?

ஆயிரத்து தொளாயிரத்து முப்பத்தி ஏழாமாண்டு ஆகஸ்ட்டு மாதம் பதினேழாம் நாள் (17.8.1937) இரவு நான் துரதிஷ்டவசமாகப் பிறந்தேன். நான் பிறப்பதற்குச் சில மாதங்களுக்கு முன் எனது தந்தையின் தாயும் (பாட்டி) தாயாரின் தாயும் (பாட்டி) இறந்து விட்டார்கள். எனது தந்தையிடமிருந்து எந்தத் தகவலுமில்லை. அவர் எங்கே இருக்கிறார் என்பதும் தெரியவில்லை. அவர் உயிருடன் இல்லை என்றே கருதினார்கள். அதனால் நான் சிறுவனாக இருக்கும் போது என்னை ''தரித்திரியன்'' என கூறுவார்கள். இருப்பினும் சிவப்பாய் அழகான குழந்தை என்பதால் எல்லோரும் என்னைப் பிரியமுடன் கொஞ்சுவார்கள். நான் சிவப்பாக இருந்ததாலும் என்னுடைய முப்பாட்டன் பெயர் என்பதாலும் எனக்குச் 'சேப்பான்' என பெயர் சூட்டினார்கள்.

நானும் எனது தாயாரும் எனது பாட்டனார் ரங்கன், மாமன்மார்கள் பொன்னன், கண்ணப்பன் ஆகியோரின் பாதுகாப்பிலிருந்தோம்.

எனது தாயார் கூலி வேலை செய்து என்னைக் காப்பாற்றி படிக்க வைத்தார். எனக்கு விதவிதமான உடைகளை உடுத்துவார். ஆதித் திராவிடர்கள் தெருவில் வாசனை சோப்பு போட்டு யாரும் குளிப்பதில்லை. என் தாயார் என்னை சாண்டல் சோப்பு போட்டு குளிப்பாட்டுவார். அதாவது ஊரில் யாரும் வாங்க முடியாத விலை உயர்ந்த வாசனை சோப்பு. அக்காலத்தில் சாண்டல் சோப்பு தான்.

பள்ளியில் தீண்டாமை

ஆயக்காரன்புலம் இரண்டாவது சேத்தியில் மகாத்மா காந்தி பள்ளிக் கூடமென்று ஒரு பாடசாலை இருந்தது. பெயர் என்னவோ மகாத்மா காந்தி பெயரில் இருந்த போதிலும் அந்தப் பள்ளியில் தீண்டாமை தாண்டவமாடியது. என்னை அந்தப் பள்ளிக்கூடத்தில் சேர்ப்பதற்காக எனது தாத்தா முயற்சி எடுத்தார். பள்ளிக்கூடத்திற்கு அருகிலுள்ள மரத்தடி நிழலில் நீண்ட நேரம் காத்திருப்போம். இன்று, நாளை, அடுத்த மாதம் சேர்த்துக் கொள்வதாகக் கூறி ஆசிரியர் காலம் கடத்தி வந்தார். காரணம் நான் பள்ளியில் சேர்த்துக் கொள்ளப் பட்டால் பள்ளி தீட்டாகி விடும், அதனால், தேவர் வீட்டுப் பிள்ளைகள் பள்ளிக்கு வரமாட்டார்கள் என்று ஆசிரியர் அச்சங் கொண்டதே

யாகும். எனது ஆசிரியர்கள் புகழ்மிக்க காங்கிரசுக்காரர்கள்.

ஒரு ஒப்பந்தத்தின் அடிப்படையில் 1945ல் நான் பள்ளியில் சேர்த்துக் கொள்ளப்பட்டேன். அதாவது வகுப்பறையின் ஓரத்தில் தரையில் உட்கார வேண்டும். தேவர் வீட்டு பிள்ளைகளைத் தொட்டுவிடக் கூடாது என்பதாகும். எனது ஆசிரியர்களாகிய திரு. சாம்பசிவம், திரு. இராமாமிர்தம் ஆகியோர் காங்கிரஸ் தியாகிகள். மிகவும் நல்லவர்கள். ஆனால் நிலவி வரும் தீண்டாமையை அவர்களால் ஒன்றும் செய்ய முடியவில்லை.

வகுப்பிலிருந்து வெளியே வரும்போதெல்லாம் எல்லோருக்கும் முன்னால் நான் வெளியே ஓடிவந்து விடவேண்டும். அல்லது எல்லோரும் வெளியே சென்ற பின்பு நான் வெளியே வரவேண்டும். சில நேரங்களில் தேவர் வீட்டுப் பிள்ளைகள் ஓடிவந்து என்மீது விழுந்து விடுவார்கள். உடனே 'சார், சேப்பான் தொட்டுவிட்டான், தொட்டுவிட்டான்' என தேள்கொட்டியவனைப் போல கூச்சலிடுவார்கள். அவர்கள் வந்து என்னைத் தொட்டாலும் ஆசிரியர் என்னைத்தான் பிரம்பால் அடிப்பார்.

கைகூப்பி தண்ணீர் குடிக்க வேண்டும்

தாகம் எடுத்தால் நான் இரண்டு கைகளையும் கூப்பிக் கொள்வேன். தேவர் வீட்டுப் பையன்கள் எனது கூப்பிய கைகளில் தண்ணீர் ஊற்றுவார்கள். சில வருடங்கள் கழித்தபின் புன்னை இலையை மடக்கி வாயில் வைத்துக் கொள்வேன். அதில் தண்ணீர் ஊற்றுவார்கள். இது எனது மாபெரும் கண்டுபிடிப்பு என பெருமிதமடைந்தேன். இப்படி அந்தப் பள்ளியில் படிக்கும் நாட்களில் பல ஆயிரம் புன்னை இலைகளை நான் தண்ணீர் குடிக்க பயன்படுத்தி இருக்கிறேன்.

அந்தப் பள்ளியில் முதன்முதல் நானும் எனது மாமன் மகள் பாலாமிர்தமும் சேர்ந்தோம். நாங்கள்தான் அந்தப் பள்ளியில் சேர்ந்த முதல் பறையர்கள்.

1947இல் இந்தியா சுதந்திரமடைந்தபின் தாழ்த்தப்பட்ட மாணவர்களை கண்டிப்பாக பள்ளியில் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்ற நிலை ஏற்பட்டது.

இப்போது நாம் பாபா சகேப் அம்பேத்கர் அவர்களின் வரலாற்றைப் பார்க்கிறோம். ஆரம்பத்தில் மகாத்மாகாந்தி தீண்டாமை ஒழிப்பில் அக்கறை

எடுத்துக் கொள்ளவில்லை. இலண்டனில் நடைபெற்ற வட்டமேஜை மாநாட்டில் தீண்டப் படாதவர்களுக்கு எதிராகவே காந்தியார் செயல்பட்டார் என்பதை அறிந்தோம். மகத் என்னும் ஊரில் உள்ள சௌதார் குளத்தில் தீண்டப்படாதவர்கள் தண்ணீர் எடுக்க அனுமதிக்கவில்லை. எனவே, பாபாசாகேப் அம்பேத்கர் அவர்கள் பல ஆயிரக்கணக்கான மக்களோடு போராட்டம் நடத்தினார். அவருடைய மண்டையை உடைத்தார்கள். அப்போது காந்தியார் கண்டுகொள்ளவில்லை.

ஆகவே, பாபாசாகேப் அம்பேத்கர் அவர்கள் தொடர்ந்து காந்தியையும் காங்கிரசுக்காரர்களையும் எதிர்த்து குறை கூறி வந்ததால் தீண்டப்படாத மக்களை அம்பேத்கரிமிருந்து பிரித்து வசப்படுத்திக் கொள்வதற்காகவே காந்தியார் அரிசன சேவா சங்கம் அமைத்து கையில் கைராட்டையைத் தூக்கிக் கொடுத்தார்.

இந்தியா சுதந்திரமடைவதற்கு சில மாதங்களுக்கு முன்பாக 1947, ஏப்ரல் மாதம்தான் காங்கிரசுக்காரர்கள் ''இந்தியாவின் தீண்டாமை முற்றிலுமாக ஒழிக்கப்பட்டது'' எனத் தீர்மானம் நிறைவேற்றினார்கள். இது பாபாசாகேப் அம்பேத்காருக்குப் பயந்து நிறைவேற்றப்பட்ட தீர்மானமாகும்.

எனவே, இந்தியா விடுதலையடைந்ததும் ஆதித் திராவிட மாணவர்கள் நிறைய பேர்களை எங்களது பள்ளியில் சேர்க்க ஆரம்பித்தார்கள். எங்களுடைய சேரியிலிருந்து 105 மாணவர்களை நான் பள்ளியில் சேர்த்தேன். மாடு மேய்ப்பவர்களை எல்லாம் பள்ளியில் சேர்த்து விட்டேன். வகுப்பறையின் ஓரத்தில் தான் நான் அமர வேண்டும். நல்ல உடை உடுத்தி இருந்தாலும் மணலில் அமர்ந்திருப்பதால் வெளியே வரும்போது அடுப்பில் கிடந்த பூனைக் குட்டியைப் போல வெளியே வருவேன்.

தனியாக தண்ணீர்ப் பானை

தீண்டப்படாத மாணவர்கள் அதிக அளவில் சேர்ந்ததால் தனியாக தண்ணீர்ப் பானை வாங்கிக் கொடுத்தார்கள். தினம் நான் சீக்கிரம் சென்று தண்ணீர் எடுத்து வைக்க வேண்டும். அலுமினிய தம்ளர் அதையும் சிறுவர்கள் வாய் வைத்துக் குடித்து விடுவார்கள். அதனால் நான் பள்ளியில் தாகம் எடுத்தால் தண்ணீர் குடிப்பதை நிறுத்தி விட்டேன்.

பலகையில் அமர அனுமதி

ஆதித் திராவிட மாணவர்கள் தனியாக விளையாடுவோம். தேவர் வீட்டுப் பிள்ளைகள் தனியாக விளையாடுவார்கள். பாபாசாகேப் அம்பேத்கர் அவர்கள் அரசியல் சட்டம் எழுதிய பின்புதான் நான் பள்ளியில் மற்ற மாணவர்களோடு பலகையில் அமர அனுமதிக்கப்பட்டேன். அதுவும் பலகையில் கடைசியில் தான் அமர வேண்டும். அருகில் அமரும் தேவர் வீட்டுப் பிள்ளை கொஞ்சம் தள்ளியே இருப்பார்.

திருக்குளமும் தீட்டாகிவிடும்

நான் படிக்கும் பள்ளிக்கருகில் சிவன் கோவில் திருக்குளம் இருந்தது. அதில் மாடுகளும், பன்றிகளும் கும்மாளமடிக்கும். ஆனால் ஆதித் திராவிடர்கள் அந்தத் தண்ணீரைத் தொட்டால் தீட்டாகிவிடும். தாகம் எடுக்கும் போது அருகிலுள்ள குளத்தில் தண்ணீர் குடிக்கலாமெனில் தீட்டாகிவிட்டது என உதைப்பார்கள். எனவே யாரும் இல்லா நேரம் பார்த்து, திருட்டுத்தனமாக தண்ணீர் அள்ளிக் குடிப்போம்.

நான் ஆறாம் வகுப்பு முடித்ததும் மகாத்மாகாந்தி உயர்தர ஆரம்பப் பாடசாலையிலிருந்து விலகி ஆயக்காரன்புலம் கழக உயர்நிலைப் பள்ளியில் சேர்ந்தேன்.

4. பறையன் கோயிலுக்குள் சென்றால் கண் குருடாகிவிடும்

நான் ஆயக்காரன்புலம் முதலியார் குத்தகை மகாத்மா காந்தி ஆரம்பப் பாடசாலையில் மூன்றாம் வகுப்பு படிக்கும் போது எங்களுடைய ஆசிரியர்கள் எங்களை வேதாரணியம், கோடியக்கரை ஆகிய ஊர்களைப் பார்ப்பதற்கு சுற்றுலா அழைத்துச் சென்றார்கள்.

வேதாரணியம் கோவிலுக்குள் எங்களை ஆசிரியர்கள் அழைத்தார்கள். நான் உள்ளே செல்வதற்கு மறுத்துவிட்டேன். ''பறையன் கோவிலுக்குள் சென்றால் கண் குருடாகிவிடும் என்று ஊரிலுள்ளவர்கள் கூறுவார்கள். நாங்கள் வெளியில் நின்றுதான் சாமி கும்பிடுவோம். நான் உள்ளே வரமாட்டேன்'' என மறுத்துவிட்டேன்.

ஆசிரியர்கள் எனக்குத் தைரிய மூட்டி உள்ளே அழைத்துச் சென்றார்கள். வேதாரணியம் கோவிலில் ஒரு கல்லை உருட்டினால் நினைத்தது நடக்குமென்பார்கள். சிறுவர்களாகிய நாங்கள் அந்தக் கல்லை உருட்டி விளையாடினோம்.

நான் அப்போது மூன்றாம் வகுப்பு படித்துக் கொண்டிருந்தேன். மகாத்மா காந்தி அப்போது உயிரோடு இருந்தார். காங்கிரசுக்காரர்கள் 'அரிசனங்களை வைத்து ஆலயப் பிரவேசம்' நடத்திக் கொண்டிருந்தார்கள். எனது ஆசிரியர்கள் காங்கிரசுக்காரர்கள். அதனால்தான் என்னை கோவிலுக்குள் அழைத்துச் சென்றார்கள்.

சர்தார் வேதரத்தினம் பிள்ளையுடன் அறிமுகம்

பிறகு தென்னாட்டு காந்தி தியாகி சர்தார் வேதரத்தினம் பிள்ளை அவர்களிடம் எங்களை அழைத்துச் சென்றார்கள்.

என்னை சர்தார்ஜி அவர்களிடம் அறிமுகம் செய்து வைத்தார்கள். நான் கோவிலுக்குள் நுழைவதற்குப் பயந்ததை அவரிடம் கூறினார்கள்.

''சேப்பா, நீ கோவிலுக்குள் வேண்டுதல் கல்லை உருட்டினாயா ?''

என்றார் சர்தார்ஜி.

''ஆம் அய்யா உருட்டினேன்'' என்றேன்.

''நீ சாமியிடம் என்ன வேண்டினாய்?'' என்று கேட்டார் சர்தார்ஜி.

''எனக்கு நன்றாக படிப்பு வரவேண்டும் என வேண்டினேன்'' என்றேன்.

''படிப்பதற்கு எது முக்கியம்?'' எனக் கேட்டார்.

''கண் முக்கியம்'' என்றேன்.

''அப்படி என்றால் கண்ணைக் கொடுத்த கடவுள் உனது கண்ணைக் குருடாக்குவாரா?'' எனக் கேட்டார்.

''குருடாக்கமாட்டார்'' என்றேன்.

சர்தார்ஜி என்னைத் தட்டிக் கொடுத்தார்.

''பயப்படாதே! கடவுள் உன்னைக் காப்பாற்றுவார்'' என என்னை வாழ்த்தினார்.

வேதாரணியம் கோவிலுக்குள் முதன்முதலில் சென்ற பறையன் நான் தான். இதை எங்கள் ஊரிலுள்ளவர்கள் அறிந்ததும் என்னைத் திட்டினார்கள்! என்னை கோவிற்குள்ளே அழைத்துச் சென்ற ஆசிரியர்களையும் திட்டினார்கள்.

5. இளமையில் ஏற்பட்ட அதிர்ச்சி

நான் சிறுவனாக இருக்கும் போது எனது தந்தை அனுபவித்த கொடுமைகளைப் பற்றி எனது தாயாரும் தாத்தாவும் அடிக்கடி கூறுவார்கள். எனது உள்ளம் அப்பொழுதெல்லாம் கொதித்தெழும். ''நான் பெரியவனானதும் அந்தப் பண்ணையாரைப் பழிக்குப் பழி வாங்குவேன்'' என ஆவேசமாக நான் கூறுவதுண்டு.

அன்றொரு நாள் இரவு ஏற்பட்ட அதிர்ச்சி

ஒரு சமயம் எங்கள் ஊர்ப் பகுதியில் தொடர்ந்து பல நாட்கள் மழை பெய்து கொண்டிருந்தது. பயங்கர வெள்ளம். ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குப் போக முடியாத அளவிற்கு தண்ணீர் கரை புரண்டு ஓடியது. அரிசி மற்றும் வேறு எந்தப் பொருளும் கிடைக்கவில்லை.

எனவே, மரவள்ளிக் கிழங்கு, சர்க்கரை வள்ளிக் கிழங்கு, பனைக் கிழங்கு ஆகியவைகளை வேக வைத்துச் சாப்பிட்டு அன்றாடம் எல்லோரும் பசியைத் தீர்த்துக் கொண்டிருந்தோம். ஒருநாள் இரவு மழை பெய்து கொண்டிருந்தது. பண்ணையார் கணேச தேவர் தனது ஆட்களுடன் குடை பிடித்துக் கொண்டு அரிக்கன் விளக்குடன் வந்து எனது மாமா பொன்னன் என்பவரைக் கூப்பிட்டார். பசியோடும் குளிரோடும் வருந்திக் கொண்டிருந்த என் மாமா 'என்ன முதலாளி இந்த நேரத்தில்?' என்றார்.

மறுகணம் அவருடைய ஆட்கள் அவருடைய இரண்டு கைகளையும் பிடித்து தேங்காய் நார் கயிற்றினால் பின்பக்கமாகக் கட்டினார்கள். எங்களுக்கு ஒன்றுமே புரியவில்லை. என்னுடைய கண்களை யாரோ பிடுங்கியது போலிருந்தது. மீளமுடியாத அதிர்ச்சியில் 'ஓ'!வென அழ ஆரம்பித்து விட்டேன். எனது தாயாரும் தாத்தாவும் ''முதலாளி, சாமி, விட்டு விடுங்கள்'' எனக் கெஞ்சி, கையெடுத்து குப்பிட்டனர். அவர் அதைக் கண்டு கொள்ளவே இல்லை.

''நீ தனடா என் வயலுக்குள் தண்ணீரை உடைத்து விட்டது?'' என அதட்டினார்.

''இல்லைங்க சாமி, எனக்கு ஒன்றுமே தெரியாது, நான் உடைத்து விடவில்லை'' என்று என் மாமா அழுது கொண்டே கூறினார்.

அதாவது பிச்சக் கட்டளையில் எனது மாமனின் நிலத்திற்கு அடுத்த நிலம் கணேச தேவருடைய நிலம். மழை வெள்ளம் அதிகமானதால் எனது மாமனின் வயல்களிலிருந்து தண்ணீர் வரப்பை உடைத்துக் கொண்டு கணேச தேவர் நிலத்திற்குள் புகுந்தது. அதனால் அவருடைய வீடுவரை வெள்ளம் சூழ்ந்து விட்டது. எனது மாமன்தான் பிச்சைக் கட்டளை தண்ணீரை உடைத்து விட்டார் என பண்ணையார் தவறாகக் கருதி விட்டார். அதனால் என் மாமனை பழிவாங்கி விட்டார்.

தலையில் அரிக்கன் விளக்கினால் ஓங்கி அடித்ததால் உடைந்து போன கண்ணாடி ஓடுகள் எனது மாமனுடைய மண்டையைத் துளைத்து விட்டன. மண்ணெண்ணெய் விளக்கு, நல்ல வேளையாக மழை கொட்டுவதால், அணைந்து விட்டது. இல்லை என்றால் எனது மாமன் நெருப்பில் எரிந்திருப்பார்.

பண்ணையார் அதோடு விடுவதாக இல்லை. கொட்டும் மழையில் மாட்டை இழுத்துச் செல்வது போன்று எனது மாமனை இழுத்துச் சென்றார்கள். எங்களுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. என் மாமனை இழுத்துச் சென்று பண்ணையார் வீட்டு மாமரத்தில் கட்டிப் போட்டார்கள். அவரைத் துண்டு துண்டாக வெட்டிப் புதைத்து மாங்கன்று நடவேண்டுமெனக் கூறிக் கொண்டு அரிவாள் எடுத்து வருவதற்காக பண்ணையார் வீட்டிற்குள் நுழைந்தார்.

நல்ல வேளையாக மணியக்காரர் ஒருவர் எனது மாமனைக் கட்டவிழ்த்து விட்டு ''முதலாளி வருவதற்குள் ஓடிப்போய் பிழைத்துக் கொள்'' என்றார். தப்பித்தோம் பிழைத்தோம் என என் மாமன் ஓடினார்– ஓடினார்–இரவு முழுவதும் ஓடிப்போய் தேத்தா குடியிலுள்ள தனது மாமனார் வீட்டில் ஒளிந்து கொண்டார். பல மாதங்கள் ஊர்ப்பக்கமே வரவில்லை.

கணேச தேவர் அரிக்கன் விளக்கினால் அடித்தபோது, ''அய்யோ, அய்யோ'' என்று எனது மாமன் அழுததை இன்று நினைத்தாலும் எனக்கு தாங்க முடியாத வேதனை ஏற்படுகின்றது. அடிபட்ட இடத்தை கைகளினால் தடவிக் கொள்வதற்கு இயலாதவாறு இரு கைகளையும் சேர்த்துப் பின்னால் கட்டி விட்டார்கள்.

இது மாதிரியான கொடுமைகளை தாழ்த்தப்பட்ட மக்கள் பல இடங்களில் அனுபவிக்கிறார்கள். இம்மாதிரியான கொடுமைகளுக்குத் தீர்வு காணாமல் பலர் பூலோகம், பரலோகம் எனப் பேசி மக்களை மடையர்களாக மாற்றிக் கொண்டிருக்கிறார்கள். இந்தக் கொடுஞ் செயல் சுமார் 63 ஆண்டுகளுக்கு முன் அதாவது இந்தியா விடுதலையடைவதற்கு ஒரிரு ஆண்டுகளுக்கு முன் நடந்தது.

ஆனால், இந்த விஞ்ஞான காலத்தில் குடியரசு நாட்டில் திண்ணியம் என்ற கிராமத்தில் 2002–ல் தலித் இன மக்களை மரத்தில் கட்டி வைத்து, இரும்பைக் காய்ச்சி சூடுபோட்டு, மனிதனின் மலத்தைத் தின்ன வைத்த கொடுமைகள் நடைபெற்றது பற்றி மனித நேயத்தோடு சிந்திக்கும் எண்ணம் எந்த அறிவாளிக்கும் இல்லவே இல்லை.

''மதமாற்றத்திற்குத் தடை விதிக்க வேண்டும்'' என கூச்சலிடும் அறிவு ஜீவிகள் மனிதனின் மலத்தைத் தின்ன வைத்த கொடுஞ் செயலுக்கு ஒரு கண்டனமாவது தெரிவிக்காமல் மௌனம் சாதித்தார்கள் எனில் அவர்களை மகா மகாக் கொடியவர்கள் என்று தானே கூற வேண்டும்.

எனது நாய்க்குட்டி

நான் சிறுவனாக இருக்கும் போது ஒரு கருப்பு நாய்க் குட்டியை பாசத்துடன் வளர்த்து வந்தேன். அதன் பெயர் கருப்பன். நான் சொல்வதை யெல்லாம் செய்யும். என்னுடன் தான் உறங்கும். கருப்பன் மிகவும் அழகாக இருக்கும்.

ஒருநாள் அந்தப் பக்கம் வந்த பண்ணையார் கணேச தேவர் கருப்பன் என்னோடு விளையாடுவதைப் பார்த்து விட்டார். தனது ஆட்களை விட்டு எனது நாய்க் குட்டியைப் பிடித்துச் சென்று விட்டார். எனதருமைக் கருப்பன் இல்லாமல் என்னால் சாப்பிடவும் முடியவில்லை; தூங்கவும் முடியவில்லை. இரண்டாவது முறையாக, இதன் மூலம் பண்ணையார் கணேச தேவர் எனக்குப் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்திவிட்டார்.

பண்ணையாரின் அராஜகம்

எத்தனையோ பண்ணையார்கள் இருந்தார்கள். ஆனால் எங்கள் ஊரில் கணேச தேவர் போல தலித் மக்களைக் கொடுமைப்படுத்தியவர்கள் வேறு யாரும் இருக்க முடியாது. தலித் மக்களை மிரட்டுவதையும் ஒரு நாள்

வேலைக்கு வரவில்லை எனில் தென்னை மரத்தில் கட்டி வைத்து சாட்டையாலும் திருக்கை மீன் வாலினாலும் அவர்களை அடிப்பதையும் பண்ணையார் கணேச தேவர் தனது பிறப்புரிமையாக எண்ணி இருந்தார். பறையர்களை அடிப்பதற்காகவே திருக்கை மீன் வால்களை வைத்திருந்தார். தலித் மக்கள் வேலைக்கு வரவில்லை என்றாலோ அல்லது சிறு தவறுகள் செய்தாலோ அவர்களுடைய ஆடுமாடுகளைப் பண்ணையார் பிடித்துக் கொண்டு போய்விடுவார். யாரும், ஏன்? எதற்கு? எனக் கேட்க முடியாது. அவர் எங்களது சேரிவாழ் மக்களுக்கு இழைத்த கொடுமைகளின் காரணமாகத் தான் சிறுவயது முதல் சமுதாயப் போராட்டங்களில் ஈடுபட நேர்ந்தது எனலாம்.

சிறுவயதிலேயே கணேச தேவரை நான் எதிர்த்ததுதான். எனது முதல் சமுதாயப் போராட்டம். அதில் வெற்றியும் பெற்றேன். பின்வரும் பகுதிகளில் அதுபற்றி கூறுகிறேன்.

6. குளம் தீட்டாகி விட்டது

நான் ஒரு நாளைக்கு மூன்று தடவைக்கும் அதிகமாக குளத்தில் குளிப்பது வழக்கம். எங்கள் ஊரில் நிறைய குளங்கள் உண்டு. நான் சிறுவனாக இருக்கும் போது ஒரு குளத்தைப் பார்த்தால் அதில் இறங்கி நீச்சலடிக்க வேண்டும் என்ற ஆர்வம் என்னுள் பொங்கி எழும். நண்பர்களுடன் போட்டி போட்டுக் கொண்டு நீச்சலடித்து விளையாடுவேன்.

ஒருநாள் ஒரு குளத்தைப் பார்த்ததும் அதில் இறங்கி நீச்சலடிக்க வேண்டும் என்ற ஆசை பிறந்தது. மதியம் வெயில் நேரம். குளத்தில் இறங்கி நீச்சலடித்துக் கொண்டு இருந்தேன். அந்தக் குளத்தில் சில எருமை மாடுகளும் நீச்சலடித்துக் கொண்டு இருந்தன. குளக் கரையில் சில பன்றிகள் கோரைக் கிழங்குகளைத் தின்று கொண்டு இருந்தன.

சிறிது நேரத்தில் எருமை மாடுகளின் உரிமையாளர் மாடுகளை ஓட்டிச் செல்வதற்காக வந்துவிட்டார். அவர் தேவர் இனத்தவர். நான் அந்தக் குளத்தில் குளித்ததால் குளம் தீட்டாகிவிட்டது எனக் கூச்சலிட்டார். மாடுகளை அடிப்பதற்காக தன்கையில் வைத்திருந்த நொச்சிமரக் குச்சி யினால் என்னை விரட்டி அடித்தார்.

‘‘தேவர் அய்யா, என்னை அடிக்காதீர்கள் என நான் கெஞ்சிக் கேட்டும் விடவில்லை. அவர் என்னை அடித்து விரட்டிய போது தடுமாறி ஓடியதில் கிளிஞ்சல் ஓடு (மட்டி ஓடு) என் காலில் ஆழமாகக் கீறிவிட்டது. அந்தத் தழும்பு இன்னும் என் காலில் உள்ளது.

இன்றும் அதே நிலை

இது நடந்து 60 ஆண்டுகளுக்குப் பின் 1988ஆம் ஆண்டு தற்போதைய காஞ்சிபுரம் மாவட்டம், சுங்குவார் சத்திரம் அருகில், ஒரு கிராமத்தில் சேரி மக்கள் ஒரு விருந்து நடத்துவதற்கு அந்த ஊர் பொதுக் குளத்திலுள்ள தாமரை இலைகளைப் பறித்து வந்துள்ளனர். அதனால், குளம் தீட்டாகி விட்டதென்று, சேரியிலுள்ளவர்கள் விருந்து சாப்பிட்டுக் கொண்டு இருந்தபோது, சாதி இந்துக்கள் பயங்கர ஆயுதங்களுடன் படையெடுத்துச் சென்று தாக்கினார்கள். வீடுகளை இடித்து நாசப்படுத்தினார்கள். இலை

பறித்தவர்களைப் பிடித்துச் சென்று கட்டி வைத்து அடித்தார்கள்.

அந்த ஊர் தலித் மக்கள், சமுதாயப் போராளி அயிமச் சேரி அப்பா குப்புசாமி, அவருடைய மகன் ஏ.கே. தியாகராசன் ஆகியோரின் நெருங்கிய உறவினர்கள் ஆவர். பாபா சாகேப் அவர்களின் உண்மையான தொண்டரும் இந்தியக் குடியரசு கட்சியின் தளபதியுமாகிய ஏ.கே. தியாகராசன் அவர்கள் தலைமையில் நானும் சாந்தமூர்த்தியும் மறுநாளே அந்த ஊருக்குச் சென்றோம்.

தலித் மகள் தொட்டதால் தீட்டாகி விட்டது என்று சொல்லப்பட்ட குளத்தில் எருமை மாடுகள் நீச்சலடித்துக் கொண்டு இருந்தன. குளத்தின் கரையில் பன்றிகள் கோரைக் கிழங்குகளைத் தோண்டிக் கொண்டிருந்தன. ஆனால், மனிதர்கள் அதுவும் இந்துக்களாக வாழ்பவர்கள் ஊர்ப் பொதுக் குளத்தின் தண்ணீரைத் தொட்டு விட்டதால் குளம் தீட்டாகி விட்டது! என்ன விந்தை இது. ஆதித்திராவிடத் தோழர்கள் எருமை, பன்றியை விட இழிவானவர்களா?

மாவட்ட ஆட்சித் தலைவர், காவல் துறை அதிகாரிகள் ஆகியோரிடம் புகார் செய்தோம். தலித் மக்களைத் தாக்கியவர்கள் கைது செய்யப்படும் வரை போராடினோம்.

இதில் ஒரு வேடிக்கை யாதெனில் காஞ்சி காமகோடி பீடாதிபதி சங்கராச்சாரியார் சுவாமிகள் வாழும் மாவட்டம் அது. காஞ்சிபுரத்திற்கும் அந்தக் கிராமத்திற்கும் இடையே சுமார் 10 கி.மீ. தூரம்தான் இருக்கும்.

''நாமெல்லாம் இந்து! நாமெல்லாம் ஒன்று!'' எனக் கூச்சலிடுபவர்கள் எவரும் தலித் மக்கள் தொட்டதால் குளம் தீட்டாகிவிட்டது என்ற கூற்று பற்றி வெட்கப்படவே இல்லை. இதைக் கேட்பது தவறாகுமா?

தலித் மக்கள், எருமை, பன்றி, நாய் போன்ற விலங்குகளை விட கீழானவர்களாக நடத்தைப்படுவதை இன்னும் எவ்வளவு நாட்களுக்குப் பொறுத்துக் கொண்டிருப்பது?

7. சுடுகாட்டில் பிணம் சுட்டேன்– உதை வாங்கினேன்

ஆய்க்காரன்புலம் 2ஆவது சேத்தி முதலியார் குத்தகையில் ஒரு தேவர் வீட்டில் நிகழ்ந்த சாவு ஒன்றுக்கு பெரியவர்கள் பறையடிக்கச் சென்றார்கள். எனக்கும் அவர்களோடு போக வேண்டுமென்ற ஆசை. நான் சிறுவனாக இருக்கும்போது நன்றாகப் பறையடிப்பேன். எனக்கு ஒரு வேட்டியைக் கட்டி விட்டு தலையில் ஒரு முண்டாசுடன் அனுப்பினார்கள். அப்போதுதான் எனக்குக் கூலி கொடுப்பார்கள்.

தச்சன் தோப்படி மயானத்தில் சவ அடக்கம் நடைபெற்றது. சுடுகாட்டில் பிணத்திற்கு வாய்க்கரிசி போட்டார்கள். அன்றுதான் நான் முதன் முதல் சுடுகாட்டில் பிணம் அடக்கம் செய்வதைப் பார்த்தேன். எல்லோரும் வாய்க்கரிசி போட்டார்கள். விரிக்கப்பட்டிருந்த துணியில் வாய்க்கரிசி கொட்டப்பட்டிருந்தது. அதை நாம்தான் வாங்க வேண்டுமென எண்ணி நான் தப்புக் கட்டையை நீட்டினேன். அரிசியை உயரத் தூக்கி கொட்டினார்கள். என்னால் சரியாகப் பிடிக்க முடியாததனால் அரிசியைக் கீழே கொட்டி விட்டேன்.

உடனே பாடைக் குச்சியால் தேவர் ஒருவர் என்னைப் பலமாக அடித்தார். எனக்காக யாரும் பரிந்து பேசாமல் எல்லோரும் என்னை, ''நீ ஏண்டா அரிசியை வாங்கினாய்?'' என்று திட்டினார்கள். வாய்க்கரிசியைக் கீழே தவறவிட்டது கெட்ட சகுனமெனக் கருதினார்கள்.

நான் சிறுவனாக இருக்கும் போது துறுதுறுவென எதிலும் முந்திக் கொண்டு ஓடுவேன். ''இவன் சரியான வாலுப் பையன்'' எனக் கூறுவார்கள். வாய்க்கரிசியை நாம் வாங்கக் கூடாது என்பது எனக்குத் தெரியாது. அழுது கொண்டே இருந்தேன். பிணத்திற்குத் தீ மூட்டிவிட்டு தேவர்கள் அனைவரும் போய்விட்டார்கள். என்னையும் என் உறவினர் நொண்டி சிற்றப்பாவையும் பிணத்தைப் பார்த்துக் கொள்ளச் செய்து விட்டு பெரியவர்கள் கள் குடிக்கச் சென்று விட்டார்கள்.

நொண்டி சிற்றப்பா மரத்து நிழலில் படுத்து உறங்க ஆரம்பித்து

விட்டார். அந்தக் காலத்தில் சுடுகாடு ஊருக்கு வெளியில் காட்டுப் பகுதியில் இருக்கும். பகலில் கூட மயானம் பக்கம் வருவதற்கு எல்லோரும் அஞ்சுவார்கள். ஆனால் எனக்கு அடிவாங்கிய ஆத்திரத்தில் பயம் போய்விட்டது.

பிணம் சூடேறியதும் கால் கைகள் விறைத்துக் கொண்டு வெளியே நீண்டது. நான் அழுது கொண்டே பாடைக் குச்சியை எடுத்து பிணத்தை ஆத்திரம் தீர அடித்தேன்.

பிணம் உயிரோடு இருந்தபோது தாழ்த்தப்பட்ட மக்களை அடித்தது. இப்போது நாம் எவ்வளவு அடித்தாலும் தேவர் அய்யா நம்மை அடிக்க மாட்டார் என்ற துணிவு போலும்.

சிறிது நேரத்தில் கள் குடிக்கச் சென்ற பெரியவர்கள் திரும்பி வந்து விட்டார்கள். ''டேய்! டேய்! பாவமடா! பிணத்தை அடிக்காதடா'' என என்னைத் திட்டினார்கள். இந்தப் பிணத்தினால் தானே நான் அடி வாங்கினேன் என அழுது கொண்டே கூறினேன். என்னை ஆறுதலடையச் செய்தார்கள்.

இந்த நிகழ்ச்சி நான் சிறுவனாக இருந்தபோது நடைபெற்றது. ஆனால் இன்றும் தலித் மக்கள் மட்டுமே சாதி இந்துக்களின் பிணத்தைச் சுடவேண்டும் என்பது கட்டாயமாக உள்ளது.

இந்த இழிதொழில் ஒழிவதற்கு பாபாசாகேப் அம்பேத்கர் அவர்களுக்குப் பிறகு எந்தத் தலித் தலைவர்களும் அக்கறை எடுத்துக் கொள்ளாமலிருப்பது வருத்தப்பட வேண்டிய செய்தி மட்டுமல்ல கண்டிக்கத் தக்கதும்கூட.

நான் பிணம் சுட்டவன், பறையடித்தவன் என்பதால் இந்த இழி தொழில் ஒழிய வேண்டுமென சிறுவயது முதல் போராடிக் கொண்டிருக்கிறேன். ஆனால் பல மேனா மினுக்குகளான தலித் தலைவர்களுக்கு இந்தக் கொடுமையானதும் கேவலமானதுமான இழிதொழில் பற்றி புரிந்து கொள்வதற்கு வழி இல்லை என்று கூறுவதைவிட தெளிவான சமுதாய சிந்தனை இல்லை என்றே கூறவேண்டும்.

8. பறையடித்தேன்–உதை வாங்கினேன்

எங்கள் ஊரில் நான் படித்த பள்ளிக்கு அருகில் ஒரு மன்மதன் கோவில் இருந்தது. பெரியவர்களோடு சேர்ந்து மன்மதன் கோவிலுக்கு நானும் பறை (தப்பு) அடிக்கச் செல்வதுண்டு. மன்மதன் கோவில் பூசை பல நாட்கள் நடைபெறும். தேவர்கள் பாட்டுப்பாடுவார்கள். அதற்குத் தகுந்தாற்போல் பறையடிக்க வேண்டும்.

துறுதுறுவென நான் பறையடிக்கும் போது பாட்டுக்கு ஏற்றவாறு அடிக்காமல் தாறுமாறாக அடித்து விடுவேன். அதனால் ஒருநாள் எனக்குச் செம அடிவிழுந்தது. அதிலிருந்து நான் அந்த கோவிலுக்குப் பறையடிக்கச் செல்வதில்லை.

ஆனால் மன்மதனைப் பழிவாங்க வேண்டும் என்ற ஆத்திரம் தணிய வில்லை. மேலும் எங்கள் ஊரில் பெரியார் இயக்கத்தவர்களின் கூட்டம் நடைபெறுவதுண்டு. அதில் சாமி இல்லை, கடவுள் இல்லை என்று சொற் பொழிவாற்றுவார்கள். அது எனக்கு மேலும் துணிச்சலைக் கொடுத்தது.

ஒருநாள் பள்ளி மாணவ நண்பர்களுடன் மன்மதன் கோவிலுக்கருகில் சடுகுடு விளையாடிக் கொண்டு இருந்தேன். மன்மதன் சிலை (லிங்கம் போன்றது) என் கண்ணில்பட்டது. நண்பர்களுடன் சென்று அந்தக் கற்சிலையைத் தூக்கி வந்த செடிகளுக்கிடையே எலிவளை மண்மேட்டிற்குள் புதைத்து விட்டோம். மறுநாள் மன்மதன் சிலை காணவில்லை என்று தேடினார்கள். நாங்கள்தான் அந்த இடத்தில் மாலை ஆறுமணி வரை விளையாடிக் கொண்டு இருந்தோம் என்பதால் எங்களை விசாரிக்க ஆரம்பித்தார்கள். சில மாணவ நண்பர்கள் சேப்பான்தான் மணலுக்குள் புதைத்து வைத்தான் எனக் கூறிவிட்டார்கள். அதனால் எனக்கு செம அடி விழுந்தது.

இவ்வாறு பிணம் சுடுதல், பறையடித்தல் போன்ற இழி தொழில்களை பறையர்களும் அருந்ததியர்களும் மட்டுமே செய்வதால் உயர் சாதியினர் மட்டுமல்லாது தேவேந்திர குல வேளாளர்கள் (பள்ளர்கள்), கோலியர்கள் போன்ற மற்ற தலித் மக்களும் பறையர்களையும் அருந்ததியர்களையும் கீழ்ச் சாதியினர் என்றே கருதுகிறார்கள் எனலாம்.

பறையடித்தல், பிணஞ்சுடுதல், மலமெடுத்தல் போன்ற இழி தொழில்களை தலித் மக்கள் மட்டுமே செய்கிறார்கள். எனவே, அதை ஒழிக்க வேண்டுமென்று நான் சிறு வயது முதலே போராடிக் கொண்டிருக்கிறேன். பின்னாளில், முன்னாள் நாகை தொகுதி பாராளுமன்ற உறுப்பினர், தென்னாட்டு அம்பேத்கர் தொண்டு வ. வீராசாமி, சீர்காழி கே.வி. லிங்கம், மாவீரன் கே.பி.எஸ். மணி ஆகியோர் இழிதொழில் ஒழிப்புப் போராட்டம் நடத்தினார்கள்.

நானும் அண்ணன் தொண்டு வ. வீராசாமி, அண்ணன் கே.பி.எஸ். மணி, கே.வி. லிங்கம் ஆகியவர்களும் அன்றைய தஞ்சை மாவட்டத்தில் பல கிராமங்களுக்குச் சென்று இழிதொழில் ஒழிப்புப் போராட்டம் நடத்தி இருக்கிறோம். பலமுறை இழிதொழில் ஒழிப்பு விளக்க சுற்றுப் பயணம் நடத்தி இருக்கிறோம். அவர்களுக்குப் பிறகு நான் இழிதொழில் ஒழிப்பதற்காகத் தொடர்ந்து போராடிக் கொண்டிருக்கிறேன். சொல்லப் போனால், தொண்டு வீராசாமி அவர்களுக்குப் பிற்பட்ட நாட்களில் தலித் தலைவர்களிடையே பௌத்தப் பெரியார் சுந்தரராசனார், சொல்லின் செல்வர் சக்திதாசன், வேலூர் செயல்வீரர் வி.கே. தாமோதர மூர்த்தி, நான் ஆகியோர் மட்டுமே இழிதொழில் ஒழிப்புப் போராட்டம் நடத்தியவர்கள் எனலாம்.

தீண்டாமைக்கு அடிப்படைக் காரணம் இந்துமதமாக இருப்பினும், இன்றும் தீண்டாமை தொடர்வதற்கு இழிதொழில் செய்வதே முக்கிய காரணமாகும் என்பதை உணராமல், பல தலித் தலைவர்கள் சுயநலம், சுய விளம்பரம், பதவி ஆசை ஆகியவைகளின் அடிப்படையில் செயல்படுவதைக் கண்டு வேதனையடைகிறேன். இந்த நிலை நீடித்தால் தீண்டாமைக் கொடுமைகளை ஒழிக்கவே முடியாது!

9. எனது முதற் போராட்டம்

நான் மூன்றாம் வகுப்பு படிக்கும் போதே தெளிவாக எழுதுவேன். எங்கள் ஊரில் உ. பக்கிரி என்பவர் ஓரளவு எழுதப் படிக்கத் தெரிந்திருந்தார். அடுத்து நான்தான் எழுதப் படிக்கத் தெரிந்தவன். பள்ளிக்குச் சென்ற முதல் பறையன் நான்தான்.

எனவே, சாதிப் பஞ்சாயத்திற்கு நான் கணக்கப் பிள்ளையாக (காரியதரிசி) நியமிக்கப்பட்டேன். திருமணங்களுக்கு நான் தான் மொய் எழுத வேண்டும். எங்கள் ஊரிலிருந்து நிறைய பேர் சிங்கப்பூர், மலேசியா, பர்மா, இலங்கை போன்ற வெளி நாடுகளுக்கு வேலை தேடி போயிருந்தார்கள். அவர்களுக்கெல்லாம் நான்தான் இரவெலாம் கணவிழித்து கடிதம் எழுதிக் கொடுப்பேன்.

திருத்துறைப் பூண்டியில் பொது உடைமை (கம்யூனிஸ்ட்டு) கட்சி கூட்டங்களும் பெரியார், அண்ணா, குத்தூசி குருசாமி முதலான மாபெரும் திராவிட இயக்கத் தலைவர்கள் பேசும் பொதுக் கூட்டங்களும் அடிக்கடி நடைபெறும். அந்தக் கூட்டங்களுக்கெல்லாம் எங்களூர்ப் பெரியவர்கள் செல்வார்கள். அவர்களுடன் நானும் செல்வேன்.

ஒருநாள் திருத்துறைப் பூண்டியில் நடந்த பொது உடைமை கட்சி பொதுக் கூட்டத்தில் அந்தக் கட்சியின் தலைவர்களாகிய பி. இராமமூர்த்தி அனந்த நம்பியார், ஏ.கே. சுப்பையா ஆகியோர் பேசினார்கள். பி. இராமமூர்த்தி பேசும் போது உணர்வு பூர்வமாக ஒரு குட்டிக் கதையைக் கூறினார். அவர் சொன்ன கதை :

''ஒரு ஊரில் ஒருவனுக்கு இரண்டு கால்களுமில்லை. எட்டு முழ வேட்டியை நன்றாகக் கட்டிக் கொண்டு ஒரு நாற்காலியில் அமர்ந்து கொள்வான். கையில் ஒரு குண்டாந்தடியை வைத்துக் கொள்வான். அந்த வழியாக போவோர், வருபவர்களையெல்லாம் குண்டாந்தடியைக் காட்டி மிரட்டுவான். அதைக் கண்டு வழிப் போக்கர்கள் பயந்து போய் தங்களிடமுள்ள பொருட்களையும் பணத்தையும் அவனிடம் கொடுத்துவிட்டு தப்பித்தோம் பிழைத்தோம் என ஓடி விடுவார்கள்.

ஒருநாள் அந்தக் கால் இல்லாதவன் தடியை ஓங்கும் போது ஒரு

இளைஞன் தடியைப் பிடித்து இழுத்தான். கால் இல்லாதவன் கீழே விழுந்து விட்டான். அவனுக்கு இரண்டு கால்களுமே இல்லை என்பது அப்போது தான் தெரிந்தது. வழிப்போக்கர்கள் அவனைச் செம்மையாக அடித்து உதைத்தார்கள்.

அதைப் போலத் தான் ஜமீன்தார்களும் ஏழை எளியவரை மிரட்டிக் கொண்டு இருக்கிறார்கள். அவர்களைப் பார்த்து நீங்கள் பயப்படாதீர்கள். விவசாயக் கூலிகளாகிய நீங்கள் இல்லாமல் ஜமீன்தார்கள் இல்லை. அவர்களுக்கு நிலமிருக்கிறது. நீங்கள் இல்லாமல் அந்த நிலத்தில் அவர்களால் ஒன்றுமே செய்ய முடியாது.

எனவே, தோழர்களே, பண்ணையார்களைக் கண்டு நீங்கள் பயப்படாதீர்கள். துணிவோடு செங்கொடியைப் பிடியுங்கள். போராடுங்கள்! வெற்றி பெறுவோம்'' என்றார்.

கூட்டம் முடிந்து 18 மைல்கள் தூரம் நடந்தே ஊர் வந்து சேர்ந்தோம்.

முதல் போராட்டம்

எங்கள் ஊரில் இரவில் நீண்ட நேரம் நிலா வெளிச்சத்தில் இளைஞர்கள் சடுகுடு விளையாடுவார்கள். மணலில் அமர்ந்து கொண்டு ஊர்க் கதைகளைப் பேசுவதுண்டு. ஒருநாள் பி. இராமமூர்த்தி திருத்துறைப் பூண்டி பொதுக் கூட்டத்தில் கூறியதைச் சொல்லி எல்லோரும் சிரித்துக் கொண்டு இருந்தோம்.

அப்போது நான் ''நம்மை சித்திரவதை செய்யும் பண்ணையார் கணேச தேவர் கொட்டத்தை எப்படி அடக்குவது என பேச்சை ஆரம்பித்தேன். பலர் பலவிதமான கருத்துகளைக் கூறினார்கள். அப்போது நான் ''நாளை, நீங்கள் வழக்கம் போல கணேச தேவர் வீட்டு புகையிலைக் கொல்லை வேலைக்குப் போகிறீர்கள்; இடையில் கூலி வேண்டுமென கேளுங்கள்; அவர் வழக்கம் போல உங்களை அடிக்க வருவார்; அய்யோ கொய்யோ என ஓடிவந்து விடுங்கள்; அதனால் அவருக்கு பெரும் இழப்பு ஏற்படும்'' என கருத்து கூறினேன். எல்லோரும் இது நல்ல யோசனை என ஏற்றுக் கொண்டார்கள்.

வேதாரணியம் பகுதியில் புகையிலைச் சாகுபடி மிகவும் முக்கியமான ஒன்று. புகையிலையால் தான் அனைத்து மக்களும் பிழைக்க வேண்டும்.

பண்ணையார் கணேச தேவருக்கு புகையிலைச் சாகுபடி முக்கிய வருவாயைத் தரும் ஒன்றாகும். அவர் ஒரு புகையிலை வியாபாரியும் கூட. வேதாரணியம் பகுதியிலுள்ள புகையிலையை புதுக்கோட்டை மொத்த வியாபாரிகள் வாங்குவார்கள். அதற்காக முன்பணம் கொடுப்பார்கள்.

புகையிலை பதப்படுத்துதல் மிகவும் நுட்பமான முறையாகும். காலை வெயிலில் புகையிலையைப் பரப்பிக் காய விடுவார்கள். சிறிது நேரத்தில் திருப்பிப் போடவேண்டும். அடுத்த சிறிது நேரத்தில் ஒன்றாக அடுக்கி பனைமட்டைகளை போட்டு மூடிவிட வேண்டும். காற்றுப் போகாதபடி மூட வேண்டும். காற்றுப் பட்டால் புகையிலை கெட்டு விடும். அந்த வகையில் புகையிலையை மிகவும் நுட்பமான முறையில் பதப்படுத்த வேண்டும்.

மறுநாள் காலையில் தலித் தோழர்கள் வழக்கம் போல பண்ணையார் வீட்டிற்கு வேலைக்குச் சென்றார்கள். புகையிலை மூட்டத்தைப் பிரித்துக் காய விட்டார்கள். சிறிது நேரத்தில் திருப்பிப் போட்டார்கள். கொஞ்ச நேரம் ஓய்வெடுப்பது வழக்கம். அந்த நேரத்தில் ''முதலாளி கூலி வேண்டுமெனக் கேட்டார்கள்.

''இப்போ என்னடா கூலிக்கு அவசரம் ?'' என பண்ணையார் கணேச தேவர் கர்ஜனை செய்தார். ஏர் நுகத்தடியை எடுத்து ஓங்கி அடிப்பதற்கு வந்தார்.

உடனே தலித் வேலையாட்கள் ''அய்யகோ, முதலாளி அடிக்க வர்ராங்கோ'' எனக் கூச்சலிட்டுக் கொண்டு ஓடி வந்துவிட்டார்கள். எல்லோரும் மற்ற ஊர்களிலுள்ள தங்களது உறவினர்களின் வீடுகளுக்குச் சென்று தலைமறைவாகி விட்டார்கள்.

பண்ணையாரின் பல லட்சம் ரூபாய் மதிப்புள்ள புகையிலை காய்ந்து கருகி நாசமாகிவிட்டது.

அடுத்து ஆண்டு எள் தெளித்தார்கள். அது புயலில் அடித்துச் செல்லப்பட்டது. மறு ஆண்டு சணல் தெளித்தார்கள். அது மழை வெள்ளத்தில் அழுகி அழிந்து போனது.

''அல்லற்பட் டாற்றா தழுதகண் ணீர்அன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை'' (குறள் 555)

என்ற குறள்தான் இந்த இடத்தில் எனக்கு நினைவிற்கு வருகிறது.

ஆதித் திராவிடர்கள் இல்லாமல் பண்ணையார் புகையிலை மற்றும் நெல் சாகுபடி சரியாகச் செய்ய முடியவில்லை.

இது எனது முதல் போராட்டத்திற்குக் கிடைத்த வெற்றியாகும்.

நான் இளைஞனானதும் நேரடியாகவே எதிர்க்க ஆரம்பித்தேன். பிற்காலத்தில் கருப்பம் புலம் அய்யா பி.வி. தேவர் அவர்கள் தலைமையில் நான் சமுதாய விடுதலைக்காகப் போராடிக் கொண்டிருந்த போது கணேச தேவர் அவர்கள் என்னை அழைத்து நாற்காலியில் உட்கார வைத்து கூட்டங்களுக்கு நன்கொடை கொடுத்து உதவினார். என்னுடைய பணியை வெகுவாகப் பாராட்டினார். பண்ணையார் திருந்தியதற்கு சேப்பான் தான் காரணம் என ஊரிலுள்ளவர்கள் என்னை வெகுவாகப் பாராட்டினார்கள்.

இங்கு நன்றியுடன் நினைவுகூர வேண்டியவர்கள் அகரம் திரு. கோவிந்தசாமி தேவர், பண்ணையார் சிங்கப்பூர் சுப்பையா தேவர், திரு. இராமாமிர்த தேவர், அகரம் திரு. பாலகிருஷ்ண தேவர் போன்ற தேவர் இனப் பெருமக்களேயாவர். நான் பண்ணையார் கணேச தேவரை எதிர்த்த போது எனக்குத் துணையாக நின்று ஊக்கமளித்தவர்கள் இப்படிப்பட்ட தேவர் இனச் சான்றோர்களே யாவர்.

நான் சிறுவனாக இருந்தபோது கணேச தேவர் எனது மாமாவைச் சித்திரவதை செய்து என்னை அதிர்ச்சியடையச் செய்தார். எங்கள் ஊரிலுள்ள ஆதித் திராவிடர்களை சித்திரவதை செய்து கொடுமைப் படுத்தினார். எனவே, நாங்கள் அவரை எதிர்க்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

எனது இந்த முதல் போராட்டத்தில் ஜமீன்தார் கணேச தேவரை எதிர்த்து வெற்றி பெற்றேன்.

10. அந்த ஒரே இரவு பணக்காரனானேன்

எனக்குப் பன்னிரண்டு வயது இருக்கும். அதுவரை எனது தந்தையார் எங்கு இருக்கிறார், எப்படி இருப்பார் எனத் தெரியாது.

ஒருநாள் இரவு ஒரு மணியளவில் பேண்ட் சூட்டுடன் ஒரு மாட்டு வண்டி நிறைய சாமான்களை ஏற்றிக் கொண்டு வந்த ஒருவர் தூங்கிக் கொண்டிருந்த எங்களை எழுப்பினார். அவர்தான் என்னுடைய தந்தை அஞ்சப்பன்.

சிங்கப்பூரிலிருந்து வந்திருக்கிறார். என்னை எழுப்பி முத்தமிட்டு ஆனந்தமடைந்தார். விதவிதமான உடுப்புகளை எனக்கு அணிவித்து மகிழ்ந்தார். மறுநாள் முதலியார் குத்தகை பண்ணையாரைச் சந்தித்து அவரிடம் நிலம் விலைக்கு வாங்கினார். அந்த நிலத்தில் வீடு கட்டினார். தேவர்களை விட அதிக அளவில் நிலம் வாங்க வேண்டும் என்பது எனது தந்தையின் ஆதங்கம். மலையான் குத்தகை, பிராந்தியாங்கரை, மூலக்கரை ஆகிய ஊர்களில் காவிரி டெல்ட்டாவில் ஏகப்பட்ட நிலங்களை வாங்கினார். எங்கள் ஊரில் மற்றவர்களுக்கு சமமான பணக்கார குடும்பமாக எங்கள் குடும்பம் மதிக்கப்பட்டது.

ஆதித் திராவிடர்களில் முதன்முதல் சிங்கப்பூர் செக்கின் எனது தகப்பனார்தான் வைத்திருந்தார். புகையிலை சாகுபடிக்காக எங்கள் ஊர் பறையர்களில் நாங்கள்தான் கிணறு தோண்டினோம். எனது தகப்பனார்தான் முதன்முதலில் மாட்டு வண்டி வைத்திருந்தார். எனது தகப்பனார் பலமுறை சிங்கப்பூர் போய் வந்து கொண்டிருந்தார். எனது தங்கை இரண்டு தம்பிகள் பிறந்தார்கள். பறையர்களில் ஒரு ஜமீன்தார் போன்று எனது தந்தையார் வாழ்ந்தார். எங்கள் வீட்டில் பாத்திரங்கள் முதல் ஆடை அணிகலங்கள் வரை சிங்கப்பூர் பொருட்களாகவே இருந்தன. நிறைய ஆடுமாடுகள் இருந்தன. அவைகளை நிர்வகிக்க எனது தாயார் மிகவும் சிரமப்பட்டார்.

எனது தந்தை உயிரோடு இருக்கும் போது, ''என்னை இந்து சுடுகாட்டில் அடக்கம் செய்யாதே; நமது நிலத்திலேயே என்னை அடக்கம் செய்துவிடு'' என்று கேட்டுக் கொண்டார். அவர் இறந்த பின்பு அவருடைய விருப்பத்திற்கிணங்க வீட்டிற் கருகிலுள்ள எங்கள் நிலத்திலேயே அவரது உடலை அடக்கம் செய்தோம். இன்று ஆயக்காரன்புலம், பழையகரத்தில் அவருடைய கல்லறை (சமாதி) இருக்கிறது.

எனது தாய் தங்கம்மாள் சென்னையில் காலமானார். அவரது உடலை பெசன்ட் நகர் மின்சார எரியூட்டியில் எரித்து சாம்பலை (அஸ்தியை) எனது தகப்பனாரின் சமாதிக்கருகில் வைத்து நினைவு மேடை அமைத்துள்ளோம்.

11. தீண்டாமை கொடுமைகள்

இந்திய நாட்டில் சாதி இந்துக்கள் தீண்டாமை பாராட்டுவது ஆண்டவனுக்குச் செய்யும் தொண்டாகவே கருதுகிறார்கள். அதனால் ஆதித் திராவிடர்கள் தீண்டாமை பாராட்டும் சாதி இந்துக்களை எதிர்ப்பது ஆண்டவனுக்கே அடுக்காத செயலாக எண்ணி மனம் கொதிக்கிறார்கள். ஆதித் திராவிடர்கள் தங்களோடு சமத்துவம் கொண்டாடுவதை மனம் பொறுக்க முடியாதவர்களாக இருக்கிறார்கள். ஆதித் திராவிடர்கள் தீண்டப்படாதவர்களாகப் பிறந்து, தீண்டப்படாதவர்களாக வாழ்ந்து, தீண்டப் படாதவர்களாகவே செத்து மடியும் சூழ்நிலைதான் நாட்டில் இன்றும் நிலவி வருகிறது. இதன் பின்னணியில் நான் இதுவரை அனுபவித்த தீண்டாமைக் கொடுமைகளைப் பற்றிச் சொல்லி வந்தேன். மேலும் சில நிகழ்ச்சிகளையும் இந்தப் பகுதியில் சொல்ல விரும்புகிறேன்.

தேநீர்க்கடை தீட்டாகி விட்டது

வேதாரணியம் பகுதியில் எல்லா தேநீர்க் கடைகளிலும் தலித் மக்களுக்காக தனியாக தேநீர்க்குவளை வைக்கப்பட்டிருக்கும். ஆயக்காரன்புலத்திலும் அப்படிப்பட்ட குவளையொன்று ஒரு தேநீர்க் கடையில் ஊஞ்சலாடிக் கொண்டிருந்தது. விவரம் தெரிந்த நாள் முதல் பசி எடுத்தாலும், நான் தனியாக வைக்கப்பட்டிருக்கும் தேநீர்க் குவளையில் தேநீர் அருந்துவதில்லை. பல ஆண்டுகள் போராடியும் உள்ளே நுழைய முடியவில்லை. காரணம், எனக்கு முன்பு தலித் மக்களுக்கு நடுவில் எழுச்சியூட்டும் தலைவர்கள் யாரும் தோன்றவில்லை.

ஆயக்காரன்புலம் பள்ளியில் படிக்கும் போது ஒருநாள் ஒரு தேநீர்க் கடையின் உள்ளே அமர்ந்து தேநீர் அருந்திக் கொண்டிருந்தேன். அந்தத் தேநீர்க்கடை உரிமையாளர் தேவராக இருப்பினும் மிகவும் நல்லவர். சிறிது நேரத்தில் மற்றொரு தேவர் உள்ளே நுழைந்தார்.

அவர் என்னைக் கண்டதும் தேநீர்க் கடைக்காரரிடம் சீறிப் பாய்ந்தார். ''இவன் யார்? என்ன அநியாயம்? பறைப்பயலை உள்ளே வைத்து தேநீர்க் கொடுக்கலாமா? உன்னுடைய கடை தீட்டாகிவிட்டது. இனிமேல் நாங்கள் யாரும் உனது தேநீர்க் கடைக்கு வரமாட்டோம்'' என கர்ச்சனை செய்தார்.

அன்று முதல் பெரும்பாலான தேவர்கள் அந்தத் தேநீர்க் கடைக்கு வருவதில்லை.

என்னால் அந்தத் தேநீர்க் கடை தீட்டாகிவிட்டதாம். என்னால் அந்தத் தேநீர்க் கடை தேவர் கடனாளியாகி விட்டார் என்பதை அறிந்து பெரிதும் வருந்தினேன்.

சாலை தீட்டாகி விட்டது

நான் சிறுவனாக இருந்த போது நானும் எனது பெரியம்மா மகன் அண்ணன் கலிதீர்த்தான் அவர்களும் கடினல் வயல் என்ற கிராமத்திலுள்ள உறவினர் வீட்டு திருமணத்திற்குச் சென்று விட்டு திரும்பி வந்து கொண்டிருந்தோம். சனிச் சந்தை அருகில் ஒரு பண்ணையார் வீடு இருந்தது. அங்கு தலித் மக்கள் யாரும் தவறு செய்து விட்டால் கிராமபோன் ஊசிகளை நகக் கண்ணில் குத்துவது வழக்கம் எனக் கேள்விப் பட்டிருக்கிறோம்.

நாங்கள் இருவரும் சாலையில் வந்து கொண்டிருந்தோம். மடப்புரம் பண்ணையாரைத் தொட்டுவிட வில்லை. கொஞ்சம் அருகில் வந்து விட்டோம். நாங்கள் சேரியில் நடைபெற்ற திருமணத்திற்குச் சென்றுவிட்டு வந்ததால் எங்களுடைய சாதியை நன்றாகத் தெரிந்து கொண்டார் போலும்.

''டேய்! நீங்க எந்த ஊர்? என்ன சாதி?'' என்றார்.

''நாங்கள் ஆயக்காரன்புலம் தேவர் சாதி'' என சாதியை மறைத்து பதில் சொன்னோம்.

''சேரியிலிருந்து வர்ற பறைப் பசங்களா, இப்படி வெள்ளையும் சள்ளையுமாய் எங்களைத் தொடுவதுபோல் வருவதா? ஏண்டா இந்த சாலை வழியா வந்தீங்க? வயல்காட்டு பக்கமா போவது தானே?'' என்றார்.

''டேய் இவங்களைப் பிடித்து மரத்துல கட்டுங்கடா. ஊசி குத்தணும்'' என தன்னோடு வந்த ஆட்களிடம் கூறினார்.

நாங்கள் நடுநடுங்கிப் போனோம்.

''அய்யா, இனிமேல் இந்தப் பக்கமே வரமாட்டோம். எங்களை மன்னித்து விட்டுவிடுங்க'' எனக் கெஞ்சினோம்.

"இனிமேல் இந்த சாலையில் வந்தால் தோலைப் பிய்த்து விடுவேன். திருப்பிப் பார்க்காமல் சனிச் சந்தைவரை ஓட்டமா ஓடணும்'' என்றார்.

ஓடினோம்! ஓடினோம்! மூச்சு வாங்க ஓடி வந்து தப்பித்தோம், பிழைத்தோம் என சனிச் சந்தை மணலில் விழுந்தோம். நீண்ட நேரம் மூச்சுத் திணறிக் கொண்டு படுத்திருந்தோம்.

"தம்பி, இந்த நாட்டில் பிறந்ததே நமக்குத் தண்டனை! நான் சிங்கப்பூர் போகப் போகிறேன். செத்தாலும் மீண்டும் நான் இந்தக் கொடுமையான இந்திய மண்ணில் அடியெடுத்து வைக்கமாட்டேன். நீயும் அம்மாவை அழைத்துக் கொண்டு சிங்கப்பூர் வந்துவிடு'' என அண்ணன் கூறினார்.

கொஞ்ச நாட்களில் அண்ணன் சிங்கப்பூர் சென்று விட்டார். சில ஆண்டுகளில் அங்கேயே அவர் இறந்து சிங்கப்பூர் சிலேட்டரில் அடக்கம் செய்யப்பட்டார்.

இந்தக் கொடுமை பல ஆண்டுகளுக்கு முன் நடந்தது. ஆனால் இன்றும் இறந்த பின்பு கூட மயானத்திற்கு எடுத்துச் செல்ல இந்துக்கள் வழிவிட மறுக்கிறார்கள்.

என்னய்யா நாடு இது?

என்னய்யா இந்து மதம்?

எப்போதய்யா இவர்கள் திருந்துவார்கள்?

கேடு கெட்ட இந்து மதத்தில் தலித் மக்கள் இனிமேலும் ஒட்டிக் கொண்டிருப்பது பெரும் கேவலமல்லவா?

முகத்தில் இட்லி சாம்பார்

வேதாரணியம் இராஜாஜி பூங்காவிற்கு அருகில் ஒரு சிற்றுண்டி உணவகம் (ஓட்டல்) இருந்தது. சாதாரணமாக அந்தக் காலத்தில் தலித் மக்கள் வெளியில் நின்றுதான் சாப்பிட வேண்டும். நான் சிறுவனாக இருந்த போது ஒருநாள் நான் மட்டும் அந்த உணவகத்தின் உள்ளே அமர்ந்து இட்டலி, வடை சாப்பிட்டுக் கொண்டு இருந்தேன். இதற்குச் சில நாட்களுக்கு முன் நான் உறவினர்களுடன் வெளியில் நின்று தேநீர் குடித்ததை அந்த உணவக உரிமையாளர் நினைவில் வைத்திருப்பார் என நான் எதிர்பார்க்கவில்லை.

"தம்பி எந்த ஊர்?'' என்று விசாரித்தார் உணவக உரிமையாளர்.

நான் ''ஆயக்காரன்புலம்'' என்றேன்.

''தம்பி என்ன சாதி'' என்றார்.

நான் ''தேவர் சாதி'' என்று சாதியை மறைத்துக் கூறினேன்.

"பறை நாயே தேவர் சாதியாடா நீ?'' என ஆவேசமாக கூறியவாறு இட்டலி சாம்பாருடன் தட்டை எடுத்து என் முகத்தில் வீசினார்.

முகத்தைத் துடைத்துக் கொண்டு வெளியே ஓடி அருகிலுள்ள குளத்தில் கழுவுவதற்காக வேகமாகப் போய்க் கொண்டு இருந்தேன்.

இஸ்லாமியப் பெரியவர்

அந்த உணவகத்தில் சாப்பிட்டுக் கொண்டிருந்த ஒரு இஸ்லாமியப் பெரியவர் என்னைப் பின்தொடர்ந்து "தம்பி, பையா, கொஞ்சம் நில்லு, நில்லு'' எனக் கூறிக் கொண்டே வந்தார். இவரும் என்னை அடிக்க வருகிறார் எனக் கருதி வேகமாக ஓட ஆரம்பித்தேன். அவர் விடுவதாக இல்லை.

சரி, கிழவர்தானே! எதிர்த்து அடித்துப் போட்டு விடலாம் என எண்ணி நின்றுவிட்டேன்.

''என்ன பாய், ஏன் என்னை விரட்டிக்கிட்டு வர்றீங்க?'' எனக் கேட்டேன்.

"உன்னை விரட்டலப்பா; பசியுடன் சாப்பிட்டுக் கொண்டிருந்த உன்ன அந்த ஓட்டல்கார பாவி இப்படி அடித்தானே, அதை என்னால் சகித்துக் கொள்ள முடியவில்லை. நான் டீ சாப்பிடாமல் அப்படியே வைத்து விட்டு வந்து விட்டேன். நீ நல்ல அழகான பையன். வாயப்பா பக்கத்திலே நம்ம வீடு இருக்கு, போகலாம்'' என அழைத்தார்.

நான் எவ்வளவோ மறுத்தும் அவர் விடுவதாக இல்லை. சரி என்று அவருடன் சென்றேன்.

முகம் கழுவுவதற்கு தண்ணீர் கொடுத்தார். துண்டு கொடுத்து முகத்தைத் துடைத்துக் கொள்ளச் சொன்னார்.

உள்ளே அழைத்தார்.

''பாய், நான் உள்ளே வந்தால் வீடு தீட்டாகி விடாதா?'' என்றேன்.

''அதெல்லாம் எங்க இஸ்லாத்தில் இல்லையப்பா. எங்களுக்கு தீட்டு இல்லை. எல்லோரும் மனிதர்கள் தானே!'' என்றார்.

எனக்கு அப்போது இஸ்லாத்தைப் பற்றி அணு அளவு கூடத் தெரியாது. உள்ளே சென்றேன். தட்டு நிறைய இட்லி கொண்டு வந்து வைத்தார். வேண்டாம் எனக் கூறியும் அவர் விடுவதாக இல்லை.

நான் முடிந்தவரை சாப்பிட்டேன். இட்டலி மீதமாகி விட்டது. வெளியில் கொட்டுவதற்குச் சென்றேன். உடனே அந்த இஸ்லாமியப் பெரியவர் திடீரென்று தட்டைப் பிடுங்கி மீதமுள்ள இட்டலியை லபக் லபக்கென்று விழுங்கினார்.

எனக்கு ஒன்றுமே புரியவில்லை. இவர் உண்மையில் மந்திரவாதிதான். பிள்ளை பிடிப்பவர். மந்திரம் செய்து என்னை ஏதோ சாமிக்குப் பலி கொடுக்கப் போகிறார் என எண்ணி நடுநடுங்கிப் போனேன்.

''பையா, இது உன் வீடு மாதிரி. நீ அடிக்கடி இங்கே வரணும்'' என்றார்.

நானும் சரி என்று கூறி விட்டு வந்து விட்டேன்.

இஸ்லாமியர்கள் எப்படி மனித நேயத்துடன் நடந்து கொள்வார்கள் என்பது அப்போது எனக்குத் தெரியாது. உண்மையில் இவர் மந்திரவாதி தான். என்னை வசியப்படுத்த இப்படி செய்கிறார் எனத் தவறாக கருதிக் கொண்டு பிறகு அந்தப் பக்கமே போவதில்லை.

இந்த நிகழ்ச்சி நான் சிறுவனாக இருந்தபோது நடந்தது. ஆனால் இந்தியா சுதந்திரமடைந்து 60 ஆண்டுகள் கடந்த பின்பும் இன்னும் பல கிராமங்களில் இரட்டை டம்ளர் முறை இருப்பது பற்றி அறிவு ஜீவிகள் கவலைப்படாவிட்டாலும் வெட்கப்பட வேண்டாமா?

என்னடா நாடு இது? நாய் கூட உள்ளே நின்று சாப்பிடுகிறது. தலித் மக்கள் நாயை விட கேவலமானவர்களா?

''நாமெல்லாம் இந்து! நாமெல்லாம் ஒன்று! எனக் கூச்சலிடும் கும்பலுக்கு தான் இந்த இழி நிலையை ஒழிப்பதற்கு சிந்தனை இல்லை எனில் சுவரெல்லாம் மின்னிக் கொண்டிருக்கும் பலநூறு தலித் தலைவர்களுக்கு இரட்டை டம்ளரை வீசி எறியும் துணிவு எப்போது வரும்? நமக்கு சூடு சொரணை இல்லையா? சுயமரியாதை இல்லையா? பரிகாரம் காண புறப்பட வேண்டாமா?

12. பார்ப்பனர் வீட்டில் சாப்பிடக் கூடாதாம்

நான் சிறுவனாக இருக்கும் போது எங்கள் ஊர் குருக்கள் வீட்டு மாடு ஒருநாள் கட்டவிழ்த்துக் கொண்டதால் ஓடியது. குருக்கள் வீட்டு பெரியம்மா, ''சேப்பா, அந்த மாட்டைக் கொஞ்சம் பிடித்துக் கொடேன்'' என்றார்கள். மாட்டைப் பிடித்துக் கட்டினேன். பெரியம்மா என்னை அன்புடன் நடத்துவார்கள்.

பெரியம்மா என்னை நல்ல குழந்தை எனக் கூறிப் புகழ்ந்து விட்டு வீட்டிற்குள் சென்று ஒரு சுண்ணாம்புக் கலையத்தைச் சுத்தம் செய்து அதில் பச்சரிசியைக் கொண்டு வந்து கொடுத்தார்கள். நான் அதை வாங்கி அரிசியை சுவைத்துத் தின்று கொண்டு வீட்டிற்கு வந்தேன்.

எனது தாத்தாவும், தாயும் ஏது உனக்கிந்த அரிசி எனக் கேட்டார்கள். குருக்கள் அய்யா வீட்டு பெரியம்மா கொடுத்தார்கள் என்றேன்.

''அப்பாவி, பாப்பான் வீட்டு அரிசியை நாம் சாப்பிடக் கூடாதப்பா. நமக்கு அது ஆகாது. நீ என்ன பட்டினியாகவா கிடக்கிறாய். நம்ம வீட்டில் அரிசி இல்லையா? உடனே கொண்டு போய் அந்தப் பார்ப்பான் வீட்டு வாசலில் எறிந்து விட்டு வா'' என்று குச்சியை எடுத்துக் கொண்டு விரட்டினார்கள். அரிசியைக் குருக்கள் வீட்டு மிளகாய்ச் செடிக்குள் வீசி விட்டு வந்துவிட்டேன்.

இது என்ன அய்தீகம் என எனக்குப் புரியவில்லை. பாப்பான் வீட்டுப் பொருட்களை சாப்பிடவும் கூடாதாம், கொண்டு வரவும் கூடாதாம். இப்படி அய்தீகம் தலித் மக்கள் மத்தியில் நிலவியது. காரணம் புரியவில்லை.

13. எனது சமுதாயப் பணி

நான் சிறுவனாக இருந்தபோது எனது தகப்பனார் அனுபவித்த கொடுமைகள் மற்றும் எனது மாமன் பொன்னன் என்பவரை பண்ணையார் கணேச தேவர் சித்திரவதை செய்தது போன்ற அதிர்ச்சி தரும் நிகழ்ச்சிகள் என்றும் எனது இதயத்தில் கொழுந்து விட்டு எரிந்து கொண்டிருந்தன.

பண்ணையார் கணேச தேவரை எதிர்த்து ஓரளவு வெற்றி பெற்றோம். அந்தப் போராட்ட வெற்றி என்னை மேலும் ஊக்குவித்தது.

எங்கள் ஊரில் அடிக்கடி நாடகங்கள் நடத்துவார்கள். பெரியார் ஈ.வே.ரா. அவர்களுடைய கொள்கைகளை விளக்கி நாடகங்கள் நடைபெறும். அவைகளைப் பார்த்தபின் சமுதாயக் கொடுமைகளை மையப்படுத்தி ஒரு நாடகம் எழுதினேன். அப்போது நான் பள்ளியில் படித்துக் கொண்டிருந்தேன்.

மாடு மேய்க்கும் பையன்கள் எங்கள் வீட்டில் வந்து தங்குவார்கள். அவர்களை வைத்துக் கொண்டு நாடகப் பயிற்சியைத் துவங்கினேன். அவர்கள் அனைவரும் படிக்காதவர்கள் என்பதால் வசனங்களைப் புரிந்து கொள்ள முடியவில்லை.

இரவுப் பள்ளிக்கூடம்

அப்போது சிலர் ‘‘முதலில் எங்களுக்கு படிப்பதற்கு சொல்லிக் கொடு, பிறகு நாடகம் நடத்தவா'' என்றனர்.

அதுவும் நல்லதுதான் என முதலில் மாடு மேய்ப்பவர்களுக்கு எங்கள் வீட்டிலேயே இரவு பாடசாலை துவங்கினேன். பிறகு சேரியிலுள்ள பலரும் படிப்பதற்கு வந்து விட்டார்கள். எங்கள் ஊர் சேரியில் என்னிடம் படித்தவர்கள் பலர் ஓரளவு எழுதப் படிக்கக் கற்றுக் கொண்டார்கள். இரவு நான்கு மணி வரை கூட பாடம் நடத்துவேன். நான் சோம்பலோடு இருந்தால் எனது தாயார் ‘‘படிப்பு சொல்லிக் கொடுப்பது நல்ல தருமம்; சிரமம் பாராமல் சொல்லிக்கொடு'' என்று என்னை உற்சாகப்படுத்துவார். என் தாயார் எல்லோருக்கும் இரவில் டீ போட்டுக் கொடுப்பார்.

இரவில் தூக்கம் வரும்போது சிறிது நேரம் சடுகுடு விளையாடுவோம்.

இதையறிந்த பண்ணையார் கணேச தேவர் “சேப்பான் வீட்டில் விடிய விடிய பசங்க ஆட்டம் போடுறாணுங்க. ஒரே கூச்சலாக இருக்கு. ஒரு நாளைக்கு எல்லோரும் உதை வாங்கப் போறாணுங்க.'' என்று திட்டினார்.

அதனால் இரவு பாடசாலை நிறுத்தப்பட்டது.

அகரம் வேதையா தேவர் அவர்கள் கருணை உள்ளத்தோடு முதியோர்களுக்கு இரவில் பாடம் சொல்லிக் கொடுத்தார்கள். அந்தப் பாடசாலையும் மூடப்பட்டது.

துணிகளுக்குப் பெட்டி போடுதல்

தலித் மக்களுடைய துணிகளை ஊரில் சலவைத் தொழிளார்கள் தொடமாட்டார்கள். அதனால் சாதி இந்துக்களைப் போல பெட்டி போட்ட உடைகளை அணிய தலித்துக்களுக்கு வழியில்லை.

எங்கள் ஊரிலிருந்து பர்மா, சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகளுக்குச் சென்ற தலித்துகள் அந்த நாடுகளிலிருந்து உயர்தர ஆடைகளைக் கொண்டு வருவார்கள். ஊரில் அவைகளைச் சலவை செய்ய முடியாததால் அந்தத் துணிகள் பழுப்பு நிறமாகிவிடும். பெட்டி போடாததனால் இதற்கொரு வழி கண்டுபிடித்தேன். எங்களுடைய துணிகளை சோப்பு போட்டு நன்கு துவைத்து, மடித்து அவைகளின் மீது அம்மி, திருகை போன்ற பாறங்கற்களைத் தூக்கி வைத்து விடுவோம். எடை மிகுந்த பாராங் கற்களை வைப்பதால் துணிகளின் சுருக்கம் ஓரளவு நீங்கி விடும்.

இந்த நாடு மண்ணின் மைந்தர்களாகிய தலித்துக்களை நல்ல உடைகளைக் கூட அணிய அனுமதிக்கவில்லை.

தலித்துக்களுக்கு முடிவெட்டினேன்

சவரத் தொழிலாளர்கள் (முடி திருத்துவோர்) தலித்துக்களுக்கு முடி வெட்டமாட்டார்கள். அதனால் தலித்துக்களில் பலர் நீண்ட முடியுடன் காணப்படுவார்கள். பெரும்பாலும் தலித் மக்களே தங்களுக்குள் முடி வெட்டிக் கொள்வார்கள்.

நான் மகாத்மா காந்தி ஆரம்ப பாடசாலையில் படிக்கும் போது தலித் மாணவர்களுக்கு நான்தான் முடிவெட்டுவேன். அதனால் நான் முடி திருத்துவதில் திறமை பெற்றவன் ஆனேன் எனலாம்.

சலவைத் தொழிலாளர்களும் முடிதிருத்துவோரும் சாதி இந்துக்களால் கீழ்ச்சாதியினர் என்றே கருதப்படுகிறார்கள் என்பது உண்மையாகும். அவர்களும் சாதி இந்துக்களின் வீட்டு சாவு நிகழ்ச்சிகளிலும் இந்துக் கோவில் விழா நிகழ்ச்சிகளிலும் இழிதொழில் செய்பவர்களாகவே கருதப் படுகிறார்கள்.

எனவே, அவர்களை பட்டியல் இனத்தவருடன் (செடியூல்டு வகுப்பினர்) சேர்த்து இடஒதுக்கீடு வழங்க வேண்டுமென்று நீண்ட நாட்களாக அரசுக்கு கோரிக்கை விடுத்துப் போராடி வருகின்றார்கள்.

ஆனால், இன்றும் சேரிக்காரனுடைய துணிகளை வெளுப்பதற்கு அவர்கள் தயாராக இல்லை.

சாதி இந்துக்களுக்கு முடி திருத்துவது போல கிராமத்திலுள்ள சேரிக்காரனுக்கு முடி திருத்துவதற்கு முன்வரவில்லை.

14. பெரியாரால் பாராட்டப்பட்டேன்

பெரியாரின் சுயமரியாதை இயக்க கூட்டங்கள் மற்றும் பொதுவுடமைக் கட்சி கூட்டங்கள் எங்கு நடந்தாலும் உ. பக்கிரி எனது அத்தை மகன் தியாகி சின்னான் ஆகியோர்களுடன் செல்வதுண்டு.

திருத்துறைப் பூண்டி, திருவாரூர், மன்னார்குடி ஆகிய தொலை தூரத்திலுள்ள ஊர்களுக்கு ஆயக்காரன்புலத்திலிருந்தே நடந்து சென்றிருக்கிறோம்.

ஒரு கூட்டத்தில் பெரியார் ஈ.வெ.ரா அவர்கள் பேசினார்கள். மேடையிலிருந்த பெரியார் அவர்களிடம் திராவிடர் கழகத் தோழர்கள் என்னை அழைத்துச் சென்றார்கள்.

''தம்பி சேப்பான் ஆதித் திராவிட சமூகத்தைச் சார்ந்தவர். உங்களுடைய தொண்டர்'' என அறிமுகப்படுத்தினார்கள்.

''தம்பியைப் படைத்தது யார்?'' என பெரியார் கேட்டார்.

''எனது அப்பா, அம்மா'' என்று நான் சட்டென கூறினேன்.

''உங்களை கடவுள் படைக்கவில்லையா?'' என பெரியார் கேட்டார்.

''கடவுளே இல்லை அய்யா, கடவுளே இல்லை அய்யா'' என நான் அழுத்தந் திருத்தமாகப் பதில் சட்டெனக் கூறினேன்.

''சபாஷ்'' என பெரியார் அவர்கள் என்னைத் தட்டிக் கொடுத்தார்கள்.

நான் சிறுவனாக இருந்த போது பொதுவுடமை இயக்கத்திற்கும் சுயமரியாதை இயக்கத்திற்குமிடையேயுள்ள வேற்றுமைகள் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. எனவே, பொதுவுடமைக் கட்சிக் கூட்டங்களுக்கும் தவறாது செல்வோம்.

பெரியாரது பகுத்தறிவு கொள்கையின் தாக்கம்

நான் சிறுவனாக இருந்த போதே ஆயக்காரன்புலம் பெரியார் பெருந்தொண்டர் அய்யா மானமிகு க. சுந்தரம், மாவீரன் மாணிக்க தேவர்,

கே.பி. கல்யாணசுந்தரம் அவர்கள் போன்ற பலர் எனக்கு பகுத்தறிவுப் பாலை ஊட்டினார்கள்.

அதனால் எனக்கு கடவுள் நம்பிக்கை இல்லாமல் போய்விட்டது.

காட்டுப் பகுதிகளில் கிராம கோவில்கள் பல இருந்தன. மதிய நேரத்தில் கோவில் மரங்களிலுள்ள பொந்துகளை உடைத்துத் தேன் எடுப்பது எனக்கு விருப்பமான ஒன்று. கிராமங்களில் அரசமரம், வேப்பமரம், ஒதியமரம் போன்ற மரங்களை வாங்குவது அப்போதைய வழக்கம். வீரன், தூண்டிக்காரன், மதுரை வீரன், காளியம்மன், காத்தவராயன் போன்ற சாமிகளின் பயங்கரமான தோற்றத்துடன் கூடிய மண் சிலைகள் இருக்கும். அந்தச் சிலைகளின் கூண்டுகளில் தேனீக்கள் தேன் கூடு கட்டி இருக்கும். சிலைகளில் ஒட்டை போட்டு தேன் எடுப்பது எனது வழக்கம். அதாவது தேனீக்களிடம் கொட்டுப்படாமல் தேன் எடுப்பதில் நான் சமார்த்தியசாலி.

ஒருநாள் ஒரு கோவில் மரத்தின் பொந்துக்குள் இருந்த தேனை எடுப்பதற்கு மரத்தை வெட்டி ஒட்டை போட்டுக் கொண்டிருந்தேன். கத்தி என்னுடைய கால் பெருவிரலைப் பிளந்துவிட்டது.

கூட இருந்த நண்பர்கள், "நீ சாமி மரத்தை வெட்டியதால் உன் கால் பெருவிரல் வெட்டுப்பட்டது'' என்றனர்.

சாமியே வந்தால் கூட அந்த சாமியையும் வெட்டுவேன் என வெங்காயத்தைத் மென்று ஊதிக் கொண்டு தேன் எடுத்தேன்.

15. கம்யூனிஸ்டு தலைவர்களுடன் தொடர்பு

எங்கள் ஊர் பண்ணையார்கள் இழைத்த கொடுமைகளுக்கு பொது உடைமைக் கட்சியால்தான் (கம்யூனிஸ்டு கட்சி) தீர்வு காணமுடியும் என உ. பக்கிரி மற்றும் முக்கியமானவர்கள் கருதினார்கள். எனவே, கால்நடையாகவே திருத்துறைப்பூண்டிக்கு செல்வோம்.

அடிக்கடி பொதுவுடைமைக் கட்சி அலுவலகத்திற்கு சென்று தாலுக்கா தலைவர் கட்டி மேடுஉசேன் அவர்களைச் சந்திப்போம்.

அவர் பொதுவுடைமைக் கட்சி பெருந் தலைவர்களான பி. இராமமூர்த்தி, அனந்த நம்பியார், சீனிவாச ராவ், ஏ.கே. சுப்பையா போன்ற தலைவர்களை அறிமுகப்படுத்தி அடிக்கடி சந்திக்க ஏற்பாடு செய்தார். பொதுவுடைமைக் கட்சி தலைவர்கள் பலரை காவல் துறையினர் (போலீஸ்) தேடிக் கொண்டு இருந்தார்கள். எனவே, பல தலைவர்கள் எங்கள் வீட்டில் தலைமறைவாக வந்து தங்கி இருந்தார்கள். பல நாட்கள் எங்கள் வீட்டிலேயே சாப்பாடு போட்டோம். இரவு இரண்டு மணிக்குத்தான் அவர்கள் மலங்கழிப்பதற்கும் குளிப்பதற்கும் வெளியே வருவார்கள். பகலெல்லாம் எங்கள் மாட்டுக் கொட்டகையில் மறைந்திருப்பார்கள்.

கோரைப் புதருக்குள் மறைந்திருப்பார்கள்

பிராந்தியங்கரை, மூலக்கரை, மணலி, பாமணி, கட்டிமேடு, தென்பாதி போன்ற ஊர்களில் கம்யூனிஸ்டு தலைவர்கள் பகலெல்லாம் ஆற்றங்கரைக் கோரைப் புதருக்குள் மறைந்திருப்பார்கள். இரவில் கரையில் படுத்து உறங்குவார்கள் என நினைக்கிறேன். அவர்களுக்கு யாராவது சாப்பாடு எடுத்துச் சென்றால் கண்டுபிடித்து விடுவார்கள்.

எனவே நம்பிக்கையான சிறுவர்களை தேர்ந்தெடுத்தார்கள். அவர்களில் ஒருவனாக என்னையும் அழைத்துச் சென்றார்கள்.

மதிய நேரத்தில் துணி மூட்டையில் சாப்பாடு எடுத்துக் கொண்டு சிறுவர்கள் எருமை மாடுகளை ஆற்றுக்கு ஓட்டிச் செல்வோம். எருமை மாடுகளை ஆற்றுக்குள் ஓட்டிவிடுவோம். எங்களைப் பார்த்ததும் கோரைப் புதர்களுக்குள்ளிருக்கும் போராளிகள் தலையை நீட்டுவார்கள். கோரைப்

புதரின் நடுவிலிருந்து ஒளிந்து கொண்டு சாப்பிடுவார்கள். அவர்கள் சாப்பிட்டு முடித்த பின் முக்கிய செய்திகளைக் கூறிவிட்டு எருமை மாடுகளைக் திரும்ப ஓட்டிக் கொண்டு வந்து விடுவோம். போராளிகள் இரவில் ஆற்றங்கரையில் இரகசியக் கூட்டங்கள் நடத்துவார்களாம்.

மணலி கந்தசாமியின் தலைக்கு பல ஆயிரம் ரூபாய் அன்பளிப்பாக அறிவிக்கப்பட்டது. அவரைச் சந்திக்க வேண்டுமென ஆவலுடன் இருந்தேன். அவர் தலைமறைவாக இருந்து கொண்டே சட்டமன்ற தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றார்.

அவருடைய வெற்றிக்காக அயராது பாடுபட்டோம். வெற்றி பெற்ற பின் விடுதலையானார். அதன் பிறகு அவருடன் பல நாட்கள் சுற்றுப் பயணத்தில் கலந்து கொண்டேன்.

அன்றைய தஞ்சை மாவட்டத்தில் (இன்றைய நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர் மாவட்டங்கள்) பெரும்பாலான காவேரி டெல்ட்டா நிலங்கள் ஒரு சில பெரு நிலக்கிழார்கள் (பண்ணையார்கள்) வசமே இருந்தன. அதனால், தஞ்சை மாவட்டத்தில் பொதுவுடைமைக் கட்சியினர் தொடர்ந்து தீவிரமாகப் போராடினார்கள். தலித் மக்களில் 100க்கு 100 பேர்களும் கம்யூனிஸ்டு கட்சிக்காரர்களாகச் செயல்பட்டார்கள். கம்யூனிஸ்டு கட்சியில் உறுப்பினராக இல்லாதவர்கள் வீட்டில் பெண் கொடுக்கவுமாட்டார்கள், பெண் எடுக்கவுமாட்டார்கள். சேரியில் எல்லா வீடுகளிலும் செங்கொடி பறக்கும்.

நான் சிறுவனாக இருந்த போது அனந்த நம்பியார், பி. இராமமூர்த்தி, போன்ற தலைவர்களின் தலைமையில் தஞ்சை மாவட்டத்தில் கம்யூனிஸ்டு கட்சி நெடும்பலம் சாமியப்ப முதலியார், வடபாதி மங்கலம் தியாக ராச முதலியார், குன்னியூர் சாம்பசிவ அய்யர் போன்ற மிகப் பெரும் பெருநிலக் கிழார்களை (ஜமீன்தார் அல்லது பண்ணையார்கள்) எதிர்த்து தீவிரமாகப் போராடி வெற்றிக் கண்டார்கள்.

இராசகோபாலாச்சாரியார் முதலமைச்சராக இருந்தபோது கம்யூனிஸ்டுகளை கொடூரமாகப் பழி வாங்கினார். குறிப்பாக, தலித் மக்களைச் சித்திரவதை செய்தார்கள். மாயவரம், நாகப்பட்டினம், திருவாரூர், திருத்துறைப்பூண்டி, மன்னார்குடி ஆகிய தாலுக்காக்களில் பலநூறு பேர்கள் உயிரிழந்திருப்பார்கள். அவர்கள் சிந்திய இரத்தத்தின் விளைவுதான் இன்றும்

திருத்துறைப்பூண்டி, மன்னார்குடி, திருவாரூர் ஆகிய சட்டமன்றத் தொகுதிகளிலும் கம்யூனிஸ்டு கட்சி தொடர்ந்து வெற்றி பெற்று வருகிறது எனலாம்.

முன்னாள் பாராளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினரான எ.கே. சுப்பையா அவர்களும் மாபெரும் போராளியும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான மணலி கந்தசாமி அவர்களும் தஞ்சை மாவட்ட கம்யூனிஸ்டு கட்சியின் முக்கிய தளபதிகளாக விளங்கினார்கள்.

வேதாரணியம் பகுதியில் காங்கிரசுக் கட்சி வலிமையுள்ளதாக விளங்கியது எனலாம். காரணம் இப்பகுதியில் கருப்பம் புலம் திரு. பி.வி. தேவர் அவர்களும் தென்னாட்டுக் காந்தி சர்தார் வேதரத்தினம் பிள்ளை அவர்களும் காங்கிரசுக் கட்சியைத் தக்க வைத்துக் கொண்டார்கள்.

16. தி.மு.க. தீவிர தொண்டனானேன்

தி.மு.க. தமிழகத்தில் வளர்ந்து கொண்டு வந்தது. வேதாரணியம் பகுதியில் பொதுவுடைமைக் கட்சிக்கு கிளைகள் மிகவும் குறைவு. தேவர் இனத்தவர்களில் பலர் தமிழாசிரியர்களாக இருந்தனர். அவர்கள் அனைவரும் பகுத்தறிவாளர்களாகத் திகழ்ந்தனர்.

கடவுள் மறுப்பு

சாதி ஒழிப்பு

மூட நம்பிக்கை எதிர்ப்பு

...போன்ற கோஷங்களை பகுத்தறிவாளர்கள் எழுப்பினார்கள்.

கம்யூனிஸ்டுக்காரர்கள் "கூலி உயர்வு", ஜமீன்தார் ஒழிப்பு போன்ற கோஷங்களை எழுப்பினார்கள்.

அறிஞர் அண்ணா, டாக்டர் கலைஞர் கருணாநிதி, நாவலர் நெடுஞ்செழியன், கே.ஏ. மதியழகன், கே.கே. நீலமேகம், தஞ்சை இளங்கோ போன்றவர்களின் கூட்டங்களுக்குத் தவறாது செல்வேன். அவர்களுடைய பகுத்தறிவு கருத்துகள் குறிப்பாக பார்ப்பன எதிர்ப்பு, சாதி ஒழிப்பு ஆகிய கொள்கைகள் என்னை வெகுவாகக் கவர்ந்தன.

என்னுடன் பள்ளியில் படித்த பெரும்பாலான மாணவர்கள் தி.மு.க.வை விரும்பினார்கள். எங்கள் பள்ளி தமிழாசிரியர்களின் போதனையே இதற்கான காரணமாகும்.

ஆயக்காரன்புலம் கிராமத்தில் மாணவர்களும் ஆசிரியர்களும் சேர்ந்து தி.மு.க. கிளையை முதன்முதல் துவக்கினோம்.

தமிழ்வாணன் என்ற புனை பெயரில் நான் மாவட்ட உறுப்பினராக (பிரதிநிதி) தேர்ந்தெடுக்கப்பட்டேன்.

தொடக்கத்தில் தி.மு.க. தேர்தலில் போட்டியிடவில்லை. அதனால், திருத்துறைப்பூண்டி, நாகை தொகுதிகளில் கம்யூனிஸ்டு கட்சிக்கே ஆதரவு கொடுத்து வந்தது. அதனால் கம்யூனிஸ்டுக்காரர்களுடனும் தொடர்பு வைத்துக் கொண்டிருந்தேன்.

தி.மு.க.வில் தீவிரமாக ஈடுபடலானேன். அதனால் பல பண்ணையார்களை (அனைவரும் காங்கிரசுக்காரர்கள்) தொடர்ந்து எதிர்த்து வந்தேன்.

அண்ணாவிடம் அறிமுகம்

திருவாரூரில் மாபெரும் மாநாடு நடைபெற்றது. அம்மாநாட்டில் பணியாற்றுமாறு கே.கே. நீலமேகம் அவர்களும் திருத்துறைப்பூண்டி சுப்பிரமணியம் அவர்களும் கேட்டுக் கொண்டார்கள். மாநாட்டுப் பந்தலில் தலைவர்களுக்கு குடிக்க தண்ணீர், சோடா ஆகியவை கொடுத்துக் கொண்டிருந்தேன். அதனால் கலைஞரின் "உதயசூரியன்" நாடகத்தை அருகிலிருந்து பார்ப்பதற்கு எனக்கு வாய்ப்புக் கிடைத்தது.

மாநாடு துவங்குவதற்கு முன்னதாக நாதஸ்வர வித்வான் திருவாடுதுறை இராசரத்தினம் அவர்களின் படத்தை அண்ணா அவர்கள் திறந்து வைத்தார்கள். அப்போது கே.கே. நீலமேகம் அண்ணாவிடம் என்னை அறிமுகம் செய்து வைத்தார். அண்ணா அவர்கள் எனது முதுகில் தட்டிக் கொடுத்து பாராட்டினார்கள்.

17. நேருவைப் பார்த்தேன்

அன்றைய பாரதப் பிரதமர் நேரு அவர்கள் திருச்சி, தஞ்சாவூர், நாகப்பட்டினம் வழியாக, காரைக்கால் வந்தார்கள், பிரஞ்சு நாட்டின் ஆதிக்கத்திலிருந்து சுதந்திரம் பெற்று புதுவை–காரைக்கால் பகுதி இந்தியாவுடன் இணைந்தது. அந்த இணைப்பு விழாவில் கலந்து கொள்வதற்காக நேரு பெருமானார் காரைக்கால் வந்தார்கள்.

எங்களுடைய பள்ளி ஆசிரியர்கள் தலைமை ஆசிரியருடன் நாகப்பட்டினம் போய் நேருவைப் பார்க்கலாம் எனப் புறப்பட்டார்கள். நானும் அவர்களுடன் புறப்பட்டேன்.

உணவகத்தில் பாத்திரம் கழுவுமிடத்தில் சாப்பாடு

நாகையில் மதியம் எல்லோரும் ஒரு பிராமணர் உணவகத்திற்கு சாப்பிடச் சென்றோம். உள்ளே சென்றதும் ஒரு பார்ப்பன ஆசிரியர் ''டேய், சேப்பா, நீ எங்கே உட்கார்ந்து சாப்பிடுவாய்? இதோ, இந்த இடத்தில் உட்கார்ந்து சாப்பிடு'' என உணவகத்தில் பாத்திரம் கழுவுமிடத்திற்கு அருகில் உள்ள வராந்தாவில் ஒரு இடத்தைச் சுட்டிக் காட்டினார்.

எனக்கு தாங்க முடியாத ஆத்திரம். நல்ல வேளையாக அருகிலிருந்த தலைமை ஆசிரியர், ''வேண்டாமையா, நம்மோடு வரட்டும்'' என சாடை காட்டினார்.

எனக்கு தாங்க முடியாத ஆத்திரம். நல்ல வேளையாக, அருகிலிருந்த தலைமை ஆசிரியர், ''வேண்டாமையா, நம்மோடு வரட்டும்'' என சாடை காட்டினார்.

எனக்குப் பார்ப்பன ஆசிரியர் மீது கடுங்கோபம், அரைகுறையாகச் சாப்பிடடு விட்டு வெளியே வந்து அவர்களிடமிருந்து பிரிந்து தனியாகச் சென்றுவிட்டேன்.

காரைக்கால் தடுப்புக் கம்பி அகற்றப்பட்டதால் எல்லோரும் காரைக்காலுக்கு சாரை சாரையாக நடந்து சென்று கொண்டிருந்தார்கள்.

ஆசிரியர்களிடமிருந்து பிரிந்த நான் நாகப்பட்டினத்திலிருந்து காரைக்கால் வரை நடந்தே சென்றேன்.

ஜவகர்லால் நேரு அவர்கள் இரவு காரைக்கால் வந்து சேர்ந்தார். காரைக்காலில் பல ஆயிரக்கணக்கான மக்கள் கூடியிருந்தார்கள். சீக்கிரமாகச் சென்று மேடைக்குச் சற்று அருகில் நின்று கொண்டு நேருவைப் பார்த்து மகிழ்ந்தேன். அதன் பிறகு சென்னையில் பலமுறை நேருவைப் பார்க்க முடிந்தது.

அப்போதெல்லாம் நகரங்களில் கூட தலித் மக்கள் சாதி இந்துக்கள் நடத்தும் உணவகத்திற்குள் சென்று சாப்பிட முடியாத அவல நிலை இருந்தது. ஆனால், சாதியைக் காட்டிக் கொள்ளாமல் சாப்பிடுவது வழக்கம்.

இருப்பினும் கிராமத்தில்தான் சாதிக் கொடுமை எனில், எனது ஆசிரியர் நகரத்திற்கு வந்து கூட தன் சாதிப் புத்தியைக் காட்டி என்னைத் தரையில் அமர்ந்து சாப்பிடச் சொன்னது எனக்குப் பெருத்த அவமானமாக மனதில் உறுத்திக் கொண்டிருந்தது. இந்த நிகழ்ச்சி இன்றும் என் இதயத்தை விட்டு அகலவில்லை.

அய்யகோ! நான் ஏன் பிறந்தேன். இந்த கேடுகெட்ட இந்து சமூகத்தில்!

18. மறக்க முடியாத மாமனிதர் ஆசிரியர் நாகராசன்

நான் ஆயக்கரன்புலம் கழக உயர்நிலைப் பள்ளியில் படித்துக் கொண்டிருந்தபோது அந்தப் பள்ளியில் பீ.ஆர். சீனிவாசன் என்ற பார்ப்பனர் ஆசிரியராக இருந்தார். அவர் பயங்கர சாதி வெறியர். தினமும் என்னை மிகவும் கேவலமாகத் திட்டிக் கொண்டிருப்பார். என்னை ஒரு மாணவன் என்று கூட கருதாமல் ஒரு எதிரியைப் போல நடத்துவார். தேவர் இன மாணவர்களிடம் மிகவும் அன்பாக நடந்து கொள்வார். ஆனால் என்னை தீண்டாமை உணர்வோடு நடத்துவார். பி.ஆர். சீனிவாச அய்யர் சீக்கிம் செத்துத் தொலைய வேண்டும் என மனதிற்குள் எண்ணிக் கொள்வேன். அவர் மாதிரி ஒரு ஆசிரியர் இருக்கவே கூடாது.

எனது வாழ்க்கையில் மறக்க முடியாத மா மனிதர்களில் ஒருவர் கருப்பம்புலம் நாகராச அய்யர். மிகவும் நல்லவர். "என் கடன் பணி செய்து கிடப்பதே'' என்ற உயரிய கொள்கையுடையவர்.

ஆசிரியர் நாகராச அய்யர் இல்லாதிருந்தால் நான் எஸ்.எஸ்.எல்.சி தேர்ச்சி (பாஸ்) யடைந்திருக்க மாட்டேன். பள்ளியிலேயே தங்கிக் கொண்டு எங்களுக்கு உதவிய மாமனிதர் நாகராச அய்யர்.

நான் ஒருநாள் உடல் நலமின்றி வீட்டில் படுத்திருந்தேன். அதைக் கேள்வியுள்ள நாகராச அய்யர் என்னைப் பார்ப்பதற்காக எங்கள் வீட்டிற்கு வந்தார்.

பார்ப்பனர் பறையர் வீட்டிற்குள் நுழைந்திட்டாரே!

ஆசிரியர் நாகராச அய்யர் வீட்டிற்குள் நுழைந்து என்னைத் தொட்டுத் தடவிக் கொடுத்து நலம் விசாரித்தார்.

ஆனால், என்னுடைய உறவினர்கள் "பார்ப்பனர் பறையர் வீட்டிற்குள் நுழைவது கெட்ட சகுனம். பிள்ளை (நான்) உடம்பு சுகமின்றி இருக்கும்போது இந்த பார்ப்பான் வீட்டிற்குள் நுழைந்ததால் பிள்ளைக்கு என்ன ஆபத்து வருமோ? பயமாக இருக்கே. இந்தப் பாவி பார்ப்பான் நம் வீட்டிற்கு ஏன் வரவேண்டும்? அய்யகோ! நமக்கு ஆபத்து வந்து விட்டது!'' என்று வெளியில் நின்று ஆழ்ந்த கவலையுடன் பேசிக் கொண்டனர்.

ஆசிரியர் என்னைப் பார்த்து அன்புடன் நலம் விசாரித்ததும் எனது உடல் முற்றிலும் நலம் பெற்று விட்டதாக எண்ணி மகிழ்ச்சியோடு எழுந்திருந்தேன். அதற்குள் எனது உறவினர்கள் அவருக்குப் பின்னால் ஒரு மண்பானையைப் போட்டு உடைத்து விட்டார்கள்.

"பார்ப்பனர் பறையன் வீட்டிற்குள் நுழைந்தால் அவர் திரும்பிப் போகும் போது அவருக்குப் பின்னால் ஒரு மண்பானையைப் போட்டு உடைத்தால் தான் பார்ப்பனர் வருகையால் ஏற்பட இருந்த ஆபத்து தீரும்'' என எங்கள் ஊர் பறையர்கள் நெடுங்காலமாக கடைப்பிடித்து வந்த மூட நம்பிக்கைக்கு ஏதோ ஒரு காரணம் இருக்க வேண்டும்.

ஆனால் என்னுடைய ஆசிரியரை அவமதித்த எனது உறவினர்கள் மீது எனக்கு தாங்க முடியாத ஆத்திரம். எல்லோரையும் திட்டினேன். நல்ல வேளையாக சவுக்கை மரக்காட்டு வழியாக சென்றதால் அவருக்குப் பின்னால் பழைய மண்பானை உடைக்கப்பட்டதை அவர் கவனித்திருக்க மாட்டார்.

19. பள்ளியில் அவமானம்

நான் ஆயக்காரன்புலம் உயர்நிலைப் பள்ளியில் படிக்கும்போது தேவர் வீட்டு பிள்ளைகளில் சிலர் இழிவாகப் பேசுவார்கள். நான் "மாடு தின்னும் பறையன்'' என்றும் "ஊம். மாட்டுக்கறி நாற்றம்'' என்றும் பறையடிப் பதைப்போ ''டெண்டனக்–டெண்டனக்'' என்றும் தேவர் இன மாணவர்களுள் சிலர் என் காதில் விழுமாறு கிண்டல் செய்து பேசுவார்கள்.

நான் உயர்நிலைப் பள்ளியில் படிக்கும்போது மாட்டு இறைச்சி சாப்பிடுவதை நிறுத்தி விட்டேன். பறையடிப்பது மில்லை. இருப்பினும் எனது சாதியினர் இழிதொழில் செய்வதால் என்னைச் சுட்டிக் காட்டி இழிவாகப் பேசுவார்கள்.

எனக்கு தாங்க முடியாத ஆத்திரம்; வேதனை மறுபக்கம் "ஏண்டா இந்த சாதியில் பிறந்தோம்'' என எண்ணி மனதிற்குள் கண்ணீர் விட்டு அழுதேன்.

தலைமையாசிரியர் வீட்டில் பாம்பு

சீனிவாசராகவன் என்ற பார்ப்பனர் உயர்நிலைப் பள்ளியில் தலைமை ஆசிரியராக இருந்தார். அவர் அடிக்கடி என்னை "பஞ்சமப் பயல்'' என கேவலமாகப் பேசுவார். அவருடைய வீடு பள்ளிக்கு அருகிலேயே இருந்தது. என்னை மட்டும் வீட்டிற்கு வெளியே நிற்க வைத்துப் பேசுவார்.

ஒருநாள் அருகிலுள்ள குளத்திலிருந்து தண்ணீர் பாம்பு ஒன்றை பிடித்து வந்து சன்னல் வழியாக அவருடைய வீட்டிற்குள் விட்டு விட்டேன். அடுத்த நாள் பாம்பு அவருடைய வீட்டிற்குள் உலா வருவதைக் கண்டு கூச்சல் போட்டார். உள்ளே சென்று பாம்பைப் பிடிப்பதற்கு யாருக்கும் துணிவு இல்லை.

அவருடைய பார்வை என்மீது விழுந்தது.

"டேய் சேப்பா, நீ தாண்டா துணிச்சல்காரன். வாடா பாம்பை பிடியடா'' என்றார்.

"சார், பாம்பை நான் பிடித்து விடுவேன். ஆனால் நான் உள்ளே வந்தால் உங்கள் வீடு தீட்டாகி விடுமே! தீட்டு பாம்பை விட கொடியது என்று

சொல்கிறார்களே'' என்றேன்.

"என்னடா தீட்டு? எந்தமடையண்டா தீட்டுன்னு சொன்னான்? நீயும் மனுசன் தானேடா!'' என்றார்.

"சார் நீங்கள் தானே என்னை வராதே! வீடு தீட்டாகி விடும்!'' என கூறினீர்கள் என்றேன்.

''சேப்பா அதெல்லாம் தமாஷாகச் சொன்னேன். தீட்டுன்னு ஒண்ணுமில்லை. நீ உள்ளே வாடா'' என்றார்.

உள்ளே சென்று ஒரே அடியாக பாம்பை அடித்து நசுக்கி வெளியில் போட்டேன்.

அய்யர் எனக்குக் கைகொடுத்துப் பாராட்டினார்.

அன்று முதல் தலைமையாசிரியர் என்மீது தனியாக அன்பு செலுத்தினார். நான் நன்றாகப் படிப்பதற்கு உதவினார். என்னை பஞ்சமன் என்று கூறுவதை மறந்து விட்டார்.

அய்யரின் விசுவாசம்

ஒருநாள் எங்கள் உறவினர்கள் வீரன் கோவிலுக்கு ஆடு, கோழி ஆகியவைகளைப் பலியிட்டு பூசை நடத்தினார்கள். காவல்துறையினர் வந்து எல்லோரையும் கைது செய்து வாய்மேடு காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்றார்கள். நான் யாரையும் அடித்துத் துன்புறுத்த வேண்டாமென்று காவல் துறையினரிடம் சண்டை போட்டேன். காவல்துறையினர் என்னையும் லத்தியால் அடித்து இழுத்துச் சென்றார்கள். உயர்நிலைப் பள்ளி வழியாகச் செல்லும் போது தலைமையாசிரியர் பார்த்து விட்டார். வெளியே ஓடிவந்து, போலீசுக்காரரிடம் "சேப்பன் மிகவும் நல்ல பையன், வகுப்பு லீடர் (மானிட்டர்); அவனை விட்டு விடுங்கள் என வேண்டினார்.

சுமார் ஏழு கி.மீ. தூரத்திலுள்ள வாய்மேடு காவல்நிலையம் வரை எங்களை அழைத்துச் சென்றார்கள். என்னை உள்ளே அடைக்காமல் எனது தகப்பனார் அழைத்து வந்து விட்டார். மற்றவர்களை உள்ளே அடைத்து விட்டார்கள். வழக்கு பல ஆண்டுகள் நடந்தது.

20. கோவில் சத்திரம் தீட்டாகி விடுமாம்?

1959ஆம் ஆண்டு மார்ச் திங்கள் எஸ்.எஸ்.எல்.சி தேர்வு எழுத நாங்கள் வேதாரணியம் உயர்நிலைப் பள்ளிக்கு செல்ல வேண்டியிருந்தது. ஏனென்றால் நாங்கள் படித்த ஆயக்காரன்புலம் பள்ளியிலேயே தேர்வு எழுத அப்போது அரசு அனுமதிக்கவில்லை.

எனவே தேர்வுக்கு முதல் நாள் ஆசிரியர் நாகராச அய்யர் தேர்வு எழுத வேண்டிய எல்லா மாணவர்களையும் வேதாரணியம் அழைத்துச் சென்றார்.

அங்கு மாணவர்கள் வழக்கமாகத் தங்கும் வேதாரணியம் கோவில் மடம் ஒன்றிற்கு எல்லோரையும் அழைத்துச் சென்றார்.

இங்கு இந்துமத சம்பிரதாய வெட்கக்கேடு ஒன்று நடந்ததை என்னால் மறக்கவே முடியவில்லை.

அதாவது அந்த மடத்தில் ''அரிசன மாணவர்கள் உள்ளே வரக் கூடாது'' என தடை விதித்தார்கள். நாங்கள் அய்ந்து அரிசன மாணவர்கள் இருந்தோம்.

நாங்கள் உள்ளே சென்றால் மற்றவர்களுக்கு இடம் கிடைக்காதாம்.

நல்ல வேளையாக அந்த வேதாரணியம் பள்ளியில் முதலியார் சாதியைச் சேர்ந்த எங்களுக்குத் தெரிந்த ஆசிரியர் ஒருவர் இருந்தார். அவர் தக்க சமயத்தில் வந்து எங்களுக்கு கைகொடுத்து உதவினார். அவர் ஒரு கட்டிடத்தில் வாடகைக்கு அறை எடுத்து தங்கி இருந்தார்.

எங்களுடைய பெட்டிகளை அவருடைய அறையில் வைத்து விட்டு இரவு 10.00 மணிக்குமேல் வந்து வராந்தாவில் படுத்துக் கொள்ள வேண்டும் எனக் கூறினார். வேறு வழி இல்லாமல் நாங்கள் ஒத்துக் கொண்டோம்.

மறக்க முடியாத முதல் நாள்

முதல் நாள் காலை 5 மணிக்கே எழுந்து காலைக் கடன்களை முடிப்பதற்காக புறப்பட்டோம். பொழுது விடிந்தால் குளத்தில் குளிப்பதற்குக் கூட அனுமதிக்க மாட்டார்கள். வேதாரணியம் நகரத்திற்கு வெளிப்புறம் எங்களுக்குப் பழக்கமானது அல்ல!

நகரத்திற்கு வெளியிலுள்ள கிராமத்திற்கு (புறநகர்ப் பகுதி) சென்றோம். அப்பகுதி மரங்கள் நிறைந்த காட்டுப் பகுதி மலங்கழித்துக் கொண்டு தேர்விற்கான கேள்வி பதில்களைப் பற்றி பேசிக் கொண்டிருந்தோம். எங்களுடைய சந்தேகங்களுக்கு நண்பர் ஆறுமுகம் பதில் கூறிக் கொண்டு இருந்தார். நாங்கள் சத்தம் போட்டு (உரக்க) பேசிக் கொண்டிருந்தோம்.

சிறிது நேரத்தில் ''யாரடா திருட்டு பசங்களா?'' என்ற கூச்சல் கேட்டது. அரை குறையாக மலங்கழித்ததோடு எழுந்து ஓட ஆரம்பித்தோம்.

அப்போதுதான் தெரிந்தது அதிகாலை இருட்டில் மரம் செடி கொடிகளுக்கு நடுவில் நாங்கள் ஒரு குடிசை வீட்டின் முற்றத்தில் மலங் கழித்துக் கொண்டிருந்தோம் என்பது.

அந்தக் குடிசை வீட்டிலிருந்தவர்கள் திருடன் வந்து விட்டதாகக் கருதி தடிகளுடன் எங்களை விரட்ட ஆரம்பித்தார்கள்.

மேலும் வீட்டு முற்றத்தில் நாங்கள் மலங்கழித்து விட்டதால் மலத்தை மிதித்து விட்டார்கள் போலும்.

''அடப் பாவிகளா, காட்டு மாடு மாதிரி வந்து எங்கள் வீட்டு வாசலில் இப்படி பேண்டு வைத்துவிட்டீர்களே! நீங்கள் நாசமாய்ப் போகணும்!'' என அந்தக் குடிசை வீட்டுக்கார அம்மா கூச்சலிட்டுத் திட்டிக் கொண்டிருந்தார்.

''தலை பிழைத்தது தம்பிரான் செயல்'' என ஓடினோம்–ஓடினோம்–ஓடிப்போய் பள்ளிக்கு அருகில் இருந்த குளத்தில் குதித்து விழுந்தோம்.

இருட்டு நேரத்தில் மரங்களுக்கு நடுவில் குடிசை வீடுகள் இருந்தது. எங்களுக்குத் தெரியாது. எனவேதான் இந்த விபரீதம் நடந்தது.

நல்ல வேளையாக ஊர் மக்களிடம் மாட்டிக் கொள்ளாமல் மரம் செடி கொடிகளுக்கு இடையில் நுழைந்து மறைந்து மறைந்து ஓடி தப்பித்து வந்து விட்டோம்.

பகலில் மரங்களின் நிழல், வேதாரணியம் கடற்கரை நாலுகால் மண்டபம் ஆகிய இடங்களில் படித்தோம். இரவில் தெரு விளக்கின் வெளிச்சத்தில் படித்தோம். இரவு 10 மணிக்கு ஆசிரியர் தங்கியிருந்த

கட்டடத்தின் வராந்தாவில் போய் படுத்துக் கொள்வோம். அதிகாலை 5 மணிக்கு யாருக்கும் தெரியாமல் எழுந்து வந்து விடுவோம்.

இப்படியாக தேர்வு எழுதி முடித்தோம். தீண்டப்படாத வகுப்பு மாணவர்களாகிய நாங்கள் பட்டபாடு வேதனைக்குரியது என்பதை மனித நேயமற்ற இந்து வெறியர்கள் உணரவே மாட்டார்கள்.

பல்வேறு இடர்பாடுகளிடையே நான் மருத்துவராகி விட்டேன். நண்பர் ஆறுமுகம் மாநிலத்தில் எஸ்.எஸ்.எல்.சி தேர்வில் எஸ்.சி. மாணவர்களில் முதல் மதிப்பெண் எடுத்து தங்கமெடல் பெற்றார். பிற்காலத்தில் பி.இ. பட்டம் பெற்று தமிழ்நாடு மின்சார வாரியத்தில் டிவிஷனல் எஞ்சினியராக பணியாற்றி ஓய்வு பெற்றார். மற்றொரு நண்பர் இரயில்வே எஞ்சினியராக பதவி வகித்தார். இன்னொரு நண்பர் இரயில்வே ஸ்டேஷன் மாஸ்டராக பணியாற்றினார். அடுத்தவோர் நண்பர் ஆசிரியராகி விட்டார்.

படிக்க இடமின்றி படாதபாடு பட்டு நாங்கள் வேதாரணியத்தில் ஒரு வார காலம் தேர்வு எழுதியதை இன்றும் நினைத்துப் பார்க்கிறேன்.

நாங்கள் தீண்டத்தகாதவர்கள் என கருதப்பட்டோம். ஆனால் மற்றவர்களைவிட சிறந்த திறமைசாலிகள் என்பதை மெய்ப்பித்து விட்டோம். இதைச் சொல்லி எங்கள் ஆசிரியர்கள் எங்களைப் பாராட்டினார்கள்.

21. அய்யர் வீட்டில் சாப்பிட்டதால் ஆபத்து!

நானும் எனது நண்பர் ஆறுமுகம் அவர்களும் (பின்னாளில் தமிழ்நாடு மின்சார வாரியத்தில் டிவிஷனல் எஞ்சினியர்) எஸ்.எஸ்.எல்.சி. தேர்வில் தேர்ச்சியடைந்து விட்டோம் என்பதை எங்களுடைய அன்பு ஆசிரியர் நாகராச அய்யர் அவர்களிடம் தெரிவித்து நன்றி கூறுவதற்காக கருப்பம் புலம் என்ற பக்கத்து கிராமத்திலுள்ள அவருடைய வீட்டிற்குச் சென்றோம்.

அவர் மிகவும் மகிழ்ச்சியடைந்து எங்களை அன்புடன் அவருடைய வீட்டிற்குள் அழைத்துச் சென்றார்.

உடனே அவர் காரஅடை தயார் செய்து கொடுத்தார். காப்பியும் அவரே போட்டுக் கொடுத்தார். அவருக்கு நன்றி கூறிவிட்டு சினிமா பார்ப்பதற்காக வேதாரணியம் நடந்தே சென்றோம்.

சினிமா பார்த்து விட்டு இரவு 10 மணிக்குமேல் நடந்தே ஊருக்கு வந்து கொண்டிருந்தோம். ஊர்வர சுமார் 8 கல் தூரத்தை நாங்கள் கடக்க வேண்டும். வழியில் எனக்கு வாந்தியும் வயிற்றுப் போக்கும் ஏற்பட்டது. மிகவும் தளர்ந்து போய்விட்டேன். நண்பர் ஆறுமுகம் தனது தோள் மீது என்னைத் தாங்கிக் கொண்டு வந்து ஆயக்காரன்புலம் எங்கள் பள்ளியின் வராந்தாவில் கிடத்தினார்.

காலையில் எழுந்து வீட்டிற்குப் போய்ச் சேர்ந்தோம். “பார்ப்பான் வீட்டில் சாப்பிட்டதால் சேப்பானுக்கு காலரா வந்துவிட்டது'' என உறவினர்கள் கூச்சல் போட்டு அழ ஆரம்பித்து விட்டார்கள்.

எனக்கு ஒன்றும் புரியவில்லை. பறையர்கள் பார்ப்பனர் வீட்டில் சாப்பிடுவதை வெறுக்கிறார்களா? அல்லது பயப்படுகிறார்களா? உண்மை எதுவெனப் புரியவில்லை.

நான் முதன் முதல் பார்ப்பனர் வீட்டினுள்ளே சென்றதும் சாப்பிட்டதும் ஆசிரியர் நாகராச அய்யர் வீட்டில் தான். 1958 ஜூன் திங்கள் இந்த நிகழ்ச்சி நடந்தது.

22. கல்லூரியில் சேர்ந்தேன்

நான் 1958 மார்ச் திங்கள் நடைபெற்ற எஸ்.எஸ்.எல்.சி. தேர்வில் தேர்ச்சி பெற்று கும்பகோணம் அரசினர் கலைக் கல்லூரியில் பி.யு.சி. வகுப்பில் சேர்ந்தேன். நான் எனது நண்பர் ஆறுமுகம் (பிற்காலத்தில் மின்சார வாரிய டிவிஷனல் எஞ்சினியர்) மணவாளன் (பிற்காலத்தில் இன்கம்டாக்ஸ் ஆபீஸர்) ஆகிய மூவரும் கும்பகோணம் விக்டோரியா மாணவர் விடுதியில் 7ஆம் எண் அறையில் தங்கி இருந்தோம். கிராமத்திலிருந்து வந்து நகரத்தில் தங்கி படிப்பது ஒரு புது வாழ்க்கையாகவே தெரிந்தது. ஆதித் திராவிட மற்றும் மலைவாழ் பழங்குடி இன மாணவர்கள் விடுதிக்கும் கல்லூரிக்கும் பணம் கட்டாமல் அரசு உதவித் தொகையின் மூலம் இலவசமாகப் படிப்பதும் உண்பதும் மற்ற மாணவர்களுக்குப் பொறாமையாக இருந்தது. அதனால் மறைமுகமாக எங்களை இகழ்ந்தும் பழித்தும் கூறியதுதான். எங்களுக்கு வேதனையைக் கொடுத்தது.

ஆனால் பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் முதலில் பணம் கட்டினாலும் பிறகு அரசு உதவித் தொகை (ஸ்காலர்ஷிப்) மூலம் ஒரு பெருந்தொகையைப் பெற்றுக் கொள்வார்கள்.

செத்துப் பிழைத்தேன்

கும்பகோணம் கல்லூரியில் படிக்கும் போது எனக்கு டைபாய்டு காய்ச்சல் ஏற்பட்டது. மிகவும் மோசமான நிலையில் அரசு மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டேன்.

கடும் காய்ச்சலின் விளைவால் நிதானமின்றி இருந்தேன். டி.ஐ.எல். (D.I.L.) பட்டியலில் போட்டிருந்தார்கள். ஒருநாள் காய்ச்சல் அதிகமாகப் போகவே நடுஇரவில் சுய நினைவின்றி மருத்துவமனையிலிருந்து வெளியே ஓடிவிட்டேன். கும்பகோணத்திலிருந்து வலங்கைமான் வழியாக பாபநாசம் அருகிலுள்ள கோவிந்தகுடி என்ற கிராமம் வரை சென்று விட்டேன். யாரோ ஒரு பைத்தியம் போவதாக வழியிலுள்ளவர்கள் நினைத்திருப்பார்கள்.

மதியம் ஒரு ஆற்றுக்குள் விழுந்து விட்டேன். தண்ணீரில் மூழ்கியதும் காய்ச்சல் குறைந்து விட்டது. கோரைப் புல்லைப் பிடித்துக் கொண்டு கரையில் வந்து நிதானமின்றி உறங்கி விட்டேன். என்னுடைய பாட்டி வந்து எழுப்புவது

போல் கனவு கண்டேன் என நினைக்கிறேன். அப்போது கால்பங்கு நிதானம் தெரிந்தது. சிறு அரைக்கால் சட்டையுடன் போவது அப்போதுதான் கூச்சமாகத் தெரிந்தது. கோவிந்தகுடி சாலையில் தள்ளாடி–தள்ளாடி போகும் போது ஒரு பேருந்துக்கு முன்னால் சென்று அடிபடுவதற்கு இருந்திருக்கிறேன். நல்ல வேளையாக பேருந்துவை நிறுத்தி விட்டதால் அடிபடாமல் தப்பித்தேன்.

உடனே அந்த ஊர்மக்கள் என்னைப் பிடித்து ஒரு திண்ணையில் படுக்க வைத்து பாலும் வாழைப் பழமும் கொடுத்தார்கள்.

என்னை யார் என்று விசாரித்தார்கள். கும்பகோணம் கல்லூரியில் படிப்பதாகத் தட்டுத் தடுமாறி கூறினேன். என்ன சாதி என்றார்கள். அரை நிதானத்திலிருந்தாலும் நல்ல வேளையாக ''நான் தேவர்'' சாதி எனக் கூறிவிட்டேன்.

பறையன் என்று தெரிந்திருந்தால் என்னைத் தொட்டு உதவியிருக்க மாட்டார்கள்.

அந்த ஊர் மக்கள் அனைவரும் குயவர் இனத்தவர்கள் என்பதை பல திங்களுக்குப் பிறகு அந்த ஊருக்குப் போகும் போது தெரிந்து கொண்டேன்.

அந்தக் கிராமத்திலுள்ளவர்கள், கும்பகோணம் கல்லூரியில் என்னை அழைத்துக் கொண்டு போய்விட, இருசப்பன் என்பவரை என்னுடன் அனுப்பி வைத்தார்கள். அவர் பத்திரமாக என்னை அழைத்து வந்து விடுதியில் சேர்த்தார். மறுநாள் தான் எனக்கு முழுமையான சுயநினைவு திரும்பியது.

சேப்பனைக் காணோம்! -எங்கோ மாயமாக மறைந்தார்!

நான் மருத்துவமனையிலிருந்து ஓடியதும் என்னைக் காணவில்லை என விடுதிக்குத் தகவல் கொடுத்திருக்கிறார்கள். பத்திரிகைக்கும் செய்தி கொடுத்திருக்கிறார்கள். எல்லா காவல் நிலையங்களுக்கும் தகவல் அறிவித்திருக்கிறார்கள். மருத்துவமனைக்கும் கல்லூரிக்குமிடையில் காவிரி ஆறு ஓடுகிறது. அதில் விழுந்திருப்பேன் என ஆற்றுத் தடுப்பை இறக்கி ஆற்றை மூடிவிட்டார்கள். மாணவர்கள் கல்லூரி போட்கிளப் படகுகள் மூலம் ஆற்றில் பிணம் இருக்கிறதா என தேடி இருக்கிறார்கள்.

நான் காவிரியில் விழுந்து இறந்து விட்டதாக கல்லூரிக்கு ஒருநாள் விடுமுறை விட்டு இரங்கல் தெரிவித்தார்களாம்.

மறுநாள் அகரம் கோவிந்தசாமி தேவர் வந்து என்னை ஊருக்கு அழைத்துச் சென்றார்கள். உடல் நலம் பெற்று மீண்டும் கல்லூரிக்கு வந்தபின் எல்லோரும் என்னை வியப்புடன் பார்த்தார்கள்.

செத்துப் போனவன் எப்படி உயிருடன் வந்தான் என விசாரிக்கலானார்கள்

எனது பேராசிரியர் குருமூர்த்தி அய்யர் அவர்களும் பேராசிரியர் ஏமாவதி (ஹேமாவதி) அவர்களும் அவர்களுடைய வீட்டிற்கு அழைத்து எனக்கு தனியாக பாடம் கற்பித்தார்கள்.

இந்தி எதிர்ப்புப் போராட்டம்

கும்பகோணத்தில் தி.மு.க. சார்பில் இந்தி எதிர்ப்புப் போராட்டம் நடைபெற்றது. அந்தப் போராட்டத்தில் நான் தீவிரமாக ஈடுபட்டேன்.

வானொலியில் ஆகாஷ்வாணி

வானொலியில் ''ஆகாஷ்வாணி'' என்ற வார்த்தைப் பயன்படுத்தப் பட்டது. அதை அகற்ற வேண்டும் எனப் போராட்டம் நடத்தினோம்.

''ஆகாஷ் வாணியை அகற்றா விட்டால் வானொலிப் பெட்டியை உடைத்தே தீருவோம்'' என நான் முழக்கமிட்டேன்.

குடந்தை வீதிகளில் மாபெரும் பேரணி உலா வந்தது. பாணாதுறையிலுள்ள ஒரு பூங்காவில் பேரணி முடிவுற்றது.

நான் குள்ளமாக இருந்ததால் என்னை ஒரு சுவர் மீது தூக்கி நிற்க வைத்துப் பேசுமாறு செய்தார்கள்.

விளைந்த காட்டுக் குருவி

குடந்தையில் படிக்கும் போது தி.மு.க.வின் முதுபெரும் தலைவர் கே.கே. நீலமேகம், சின்னத்தம்பி பிள்ளை ஆகியோரை அடிக்கடி சந்திப்பேன். அவர்கள் என்னைப் பாராட்டி ஊக்குவித்தார்கள்.

திராவிட முன்னேற்ற கழகம் சென்னை மாநகராட்சி தேர்தலில் மாபெரும் வெற்றி பெற்றது. அ.பொ. அரசு மேயராகவும் பி. சிவசங்கரன் துணை மேயராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். அவர்களுக்கு கும்பகோணத்தில் பாராட்டு விழா நடத்துவதற்கு ஏற்பாடாயிற்று. அதற்கான பணிகளை தீவிரமாக கவனிக்குமாறு அண்ணன் கே.கே. நீலமேகம் அவர்கள் என்னைப் பணித்தார்கள். சென்னை மேயர் அ.பொ.அரசு துணை மேயர் சிவங்கரன் (பிறகு பாராளுமன்ற உறுப்பினரானார்) ஆகியோருக்கு கும்பகோணத்தில் பாராட்டு விழா நடைபெற்றது. அறிஞர் அண்ணா, டாக்டர் கலைஞர், கே.ஏ. மதியழகன் மற்றும் பல முக்கிய தலைவர்கள் கலந்து கொண்டார்கள். அனைவருக்கும் கே.கே. நீலமேகம் அவர்கள் என்னை அறிமுகம் செய்து வைத்தார்.

அண்ணா பேசினார்

மேயர்களைப் பாராட்டிப் பேசிய அறிஞர் அண்ணா அவர்கள்.

"இன்று சென்னை மாநகரைப் பிடித்துள்ளோம். நாளை தமிழகத்தை நாம் தான் ஆளப் போகிறோம். அப்போது நான், நாவலர், தம்பி கலைஞர், தம்பி மதியழகன் ஆகியோர் ஆட்சி பீடத்தில் இருப்போம். நாங்கள் ஆட்சியை கவனிக்க வேண்டியிருக்கும். அப்போது சில ''விளைந்த காட்டுக் குருவிகள்'' நமது இயக்கத்தில் புகுந்து விடுவார்கள். அப்படிப்பட்டவர்கள் புகுந்து விடாமல் பார்த்துக் கொள்ள வேண்டியது தம்பிகளாகிய உங்களுடைய பொறுப்பாகும். இதில் நீங்கள் கவனமாக இருக்க வேண்டும் என அண்ணா அவர்கள் அவருடைய பாணியில் பேசியதை இன்றும் என்னால் மறக்க முடியவில்லை.

விளைந்த காட்டுக் குருவிகள்

விளைந்த காட்டுக் குருவிகள் (பறவைகள்) என்றால் கம்பு, சோளம், தினை, நெல் ஆகிய தானியங்கள் விளைந்திருக்கும். வயல்களில் அமர்ந்து அந்தத் தானியங்களைத் தின்னும் குருவிகளாகும். அந்த வயல்களில் தானியங்கள் குறைந்ததும் வளமாக விளைந்திருக்கும் வேறு வயல்களுக்கு அந்தக் குருவிகள் பறந்து சென்று விடும். இவ்வாறு விளைந்திருக்கும் வயல்களை நோக்கியே அந்தக் குருவிகள் முடிவின்றி பறந்து கொண்டே இருக்கும். அத்தகைய குருவிகளுக்குத் தான் ''விளைந்த காட்டுக் குருவிகள்'' எனப் பெயர்.

அண்ணா ஒரு தீர்க்கதரிசி

அண்ணா அவர்கள் ஆட்சிக்கு வந்த கொஞ்ச நாட்களில் உடல் நலக் குறைவு ஏற்பட்டு இயற்கை எய்தினார்கள்.

மறுநாளே, தி.மு.க.வில் திடீரென பல விளைந்த காட்டுக் குருவிகள் நுழைந்து விட்டார்கள் என்பதை நான் கூறினால் யாரும் என்னைத் தவறாக நினைக்க மாட்டார்கள் என முழுமையாக நம்புகிறேன்.

விளைந்த காட்டுக் குருவிகள் யாருடைய வயல் எனப் பார்ப்பதில்லை. விளைந்த வயல்களில் தானியங்களை உண்டு வளமாக விளைந்திருக்கும் அடுத்த வயலைக் கண்டால் இந்தக் குருவிகள் அங்கு பறந்து போய்விடும்.

அதைப் போல இந்திய அரசியலில் பதவிக்காக, கட்சி விட்டு கட்சி பறந்து செல்பவர்களையும் அடிக்கடி கூட்டணி மாறுபவர்களையும் காண்கிறோம்.

ஆம்! அண்ணா அவர்கள் ஒரு தீர்க்கதரிசி என்றே கூறவேண்டும். இன்று நடப்பதை அவர் 1959ஆம் ஆண்டிலேயே கும்பகோணத்தில் கூறினார்.

23. டாக்டர் கலைஞரின் அறிவுரை

நான் கதை, கட்டுரைகள் எழுதுவது வழக்கம். கவிஞர் கண்ணதாசனின் 'தென்றல்' நாவலரின் 'மன்றம்' போன்ற பல இதழ்களுக்கு கட்டுரை எழுதியுள்ளேன்.

அண்ணா, நாவலர், கலைஞர் ஆகியோரின் படங்களை முன்னால் வைத்துக் கொண்டு எழுத ஆரம்பித்தால் என்னை அறியாது எழும் உணர்வில் இரவு முழுவதும் கதை, கவிதை, கட்டுரை, நாடகம் எதுவாயினும் நன்றாகவே எழுதுவேன்.

என்னுடைய திறமையை திருத்துறைப்பூண்டி செல்வம் சோடா தயாரிப்பகம் (பாக்டரி) உரிமையாளர் அண்ணன் சுப்பிரமணியம் (தாலுகா தி.மு.க. செயலாளர்) கலைஞரின் நண்பர் முஸ்தாபா ஆகியோர் வெகுவாகப் பாராட்டினார்கள்.

இருவரும் "கலைஞரை சென்று பார்த்தால் சினிமா உலகில் முன்னுக்கு வர உனக்கு உதவி செய்வதார்'' என கூறினார்கள்.

அண்ணன் முஸ்தாபா திருவாரூர் வந்திருந்த கலைஞர் கருணாநிதி அவர்களைச் சந்திப்பதற்கு என்னை அழைத்துச் சென்றார்; கலைஞர் அவர்களிடம் அறிமுகம் செய்து வைத்தார். கலைஞரைச் சந்திப்பதில் பெரிதும் மகிழ்ச்சியடைந்தேன்.

"உனக்கு என்ன செய்ய வேண்டும்?'' என கலைஞர் அவர்கள் கேட்டார்கள்.''

"நான் நன்றாக கதை, வசனம் எழுதுவேன். சினிமா உலகில் முன்னுக்கு வருவதற்கு எனக்கு வழிகாட்ட வேண்டும்'' என கேட்டுக் கொண்டேன்.

"ஏணியில் ஏற்றிவிட்டால் பிறகு இறங்கத் தெரியாமல் விழுந்து விடுவாய். நீயாக முயற்சித்து ஏறினால்தான் இறங்க முடியும். ஆகவே நீயாகவே முயற்சிப்பது தான் நல்லது. இப்போது போய் நன்றாகப் படி. கடிகார முள்போன்று செயல்படுவது அவசியம்'' என கலைஞர் அவர்கள் அறிவுரை கூறி அனுப்பி வைத்தார்கள்.

டாக்டர் கலைஞர் அவர்கள் அரசியல் வாழ்க்கையில் எவ்வளவோ இடர்பாடுகள் வந்த நேரங்களிலும் எதையும் எதிர்கொண்டு சமாளிக்கும் சமார்த்தியசாலி எனலாம். அவரே ஒரு கடிகார முள். இந்த முதிர்ந்த வயதிலும் கடிகார முள் போன்றே செயல்படுகிறார்.

ஆம். உழைப்பினால் உயர்ந்தவர் கலைஞர்.

என்னுடைய வாழ்க்கையில் எத்தனையோ இடர்பாடுகள் வந்த போதெல்லாம் கலைஞரின் அறிவுரையையும் திருவள்ளுவரின் திருக்குறளையும் நினைவுப்படுத்திக் கொண்டு செயல்படுவதுண்டு.

மறக்க முடியாத வேதனை

நான் என்றும் வருத்தப்படும் படியாக பிற்காலத்தில் நடந்த சில நிகழ்ச்சிகளை என்னால் சொல்லவும் முடியவில்லை; சொல்லாமல் மறக்கவும் முடியவில்லை.

அதாவது, டாக்டர் கலைஞர் அவர்கள் ஒரு பிறவிப் பகுத்தறிவாளர். "கலைஞர் எங்கள் ஊர்க்காரர்; எங்கள் மாவட்டத்தவர்'' என நான் அடிக்கடி கூறி பெருமிதப்படுவதுண்டு. பெரியாரின் பகுத்தறிவுப் பாசறையில் வளர்ந்தவர். உண்மையான பகுத்தறிவாளர் என்பதை யாரும் மறுக்க முடியாது. மறக்கவும் இயலாது.

ஆனால், பிற்காலத்தில் கலைஞர் ஆட்சியில் அரசியல் காரணமாக, பி.ஜே.பி. மற்றும் ஆர்.எஸ்.எஸ். காரர்களைத் திருப்திப்படுத்துவதற்காகத் தான் என நான் கருதுகிறேன். தாம்பரத்தில் நடைபெற்ற மிலாது நபி விழாவில் நானும் சகோதரர் பழநிபாபா அவர்களும் சங்கராச்சாரியாரையும் இந்து மதத்தையும் தாக்கிப் பேசினோம் என்பதற்காக எங்கள் மீது வழக்கு தொடரப்பட்டது. 1990 முதல் 1996 வரை இந்த வழக்கு நடைபெற்று ஆறு ஆண்டுகள் வாரம் ஒரு முறை மாதம் இரு முறை என தாம்பரம் நீதிமன்றத்திற்கு அலைய வேண்டி இருந்தது.

மேலும் ஒரு கொடுமை என்னவென்றால் ஒருநாள் இரவு 11 மணியளவில் எனது மருத்துவமனைக்கு பவானி என்ற பெண் குழந்தையை மிகவும் மோசமான நிலையில் கொண்டு வந்தார்கள். அந்தப் பெண் குழந்தைக்கு சிகிச்சை அளித்துக் கொண்டிருந்தேன். குளுக்கோஸ் ஐ.வி. ஓடிக் கொண்டிருந்தது. அப்போது காவல் துறையினர் என்னைக் கைது செய்து ஐ.ஜி. அலுவலகத்திற்குப் போக வேண்டுமென்றார்கள். "நோயாளிக் குழந்தை மிகவும் சீரியசாக இருக்கிறது. கொஞ்ச நேரம் பொறுங்கள். சிகிச்சை முடித்து அனுப்பி விட்டு வருகிறேன்'' எனக் கெஞ்சினேன். அவர்கள் விடவில்லை. டி.ஐ.சி. திரு. இராஜேந்திரன் காத்துக் கொண்டிருக்கிறார். உடனே புறப்படுங்கள்'' என்று பிடிவாதமாக என்னைக் கைது செய்து ஐ.ஜி. அலுவலகத்திற்கு அழைத்துச் சென்றார்கள். எனது சகோதரனிடம் நோயாளிக் குழந்தையைக் கவனித்துக் கொள்ளுமாறு கூறிவிட்டு புறப்பட்டேன்.

ஐ.ஜி. அலுவலகத்திற்கு அழைத்துச் சென்று என்னிடம் விசாரணை நடத்தி டேப்பில் பதிவு செய்து கொண்டார்கள். பிறகு ஜாமீனில் விடுவதாக என்னைத் திருப்பி அனுப்பி வைத்தார்கள். மருத்துவமனைக்கு மீண்டும் ஒடோடி வந்து ஆபத்தான நிலையில் நான் விட்டுச் சென்ற அந்தப் பெண் குழந்தைக்குத் தொடர்ந்து சிகிச்சையளித்தேன். நல்ல வேளையாக குழந்தை பிழைத்துக் கொண்டது.

தென் மாவட்டங்களில் நடைபெற்ற சாதிக் கலவரங்களையும் மேலவளவு ஊராட்சி மன்றத் தலைவர் முருகேசன் படுகொலை செய்யப் பட்டதையும் கண்டித்து கண்டனப் பேரணி நடத்துவதற்காகத்தான் தலித் தலைவர்கள் ஒன்று கூடி முடிவு செய்தோம். பேரணி புதிய தமிழகம் கட்சித் தலைவர் டாக்டர் கிருஷ்ணசாமி தலைமையில் ஆளுனர் மாளிகை நோக்கி நடைபெற்றது. இதில் ஒரு வேடிக்கை என்னவென்றால் பேரணிக்குத் தடை விதிக்கப்படவுமில்லை. அதற்குத் தலைமை ஏற்று நடத்திய டாக்டர் கிருஷ்ணசாமி கைது செய்யப்படவுமில்லை. ஆனால், என்னையும் தலைவர் சக்திதாசன் மற்றும் கிட்டத்தட்ட ஆயிரக்கணக்கான தொண்டர்களையும் முன்னெரிச்சரிக்கை நடவடிக்கையாகக் கைது செய்து சென்னை மத்திய சிறையில் அடைத்தனர். இது டாக்டர் கலைஞர் அவர்களின் ஆட்சியில் நடைபெற்றது. பலமுறை கைது செய்து காவல் நிலையத்திலேயே வைத்திருந்து விடுதலை செய்தார்கள்.

1998ஆம் ஆண்டு தலைவர் சுந்தரராசன் இறந்தபோது சென்னை பெரியமேட்டில் நடைபெற்ற இரங்கல் கூட்டத்தில் நான் இந்து மதத்தைத் தாழ்த்தி பேசினேன் என் என்மீதும் தம்பி சாத்தை பாக்கியராஜ் மீதும் வழக்கு

தொடரப்பட சென்னை எழும்பூர் நீதி மன்றத்தில் ஆறு ஆண்டுகளுக்கு மேல் இந்த வழக்க நடைபெற்றது. 2005ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 19ஆம் நாள் இந்த வழக்கிலிருந்து விடுதலையானேன்.

ஆகவே, என் மீதுள்ள தனிப்பட்ட கோபத்தில் கலைஞர் ஆட்சியில் இருந்தபோதெல்லாம் என் மீது வழக்கு தொடர்ந்து சிறையிலடைப்பதும் வழக்கமாகி வருகிறது. பின்வரும் பகுதிகளில் அதன் காரணம் புரிந்து கொள்ள இயலும்.

என்னை இரண்டு முறை சிறையிலடைத்தது பலமுறை என் மீது வழக்கு தொடர்ந்தது ஆகியவைகளினால்

அதெல்லாம் கூட எனக்குப் பெரிதாகப் படவில்லை. ஒரு பகுத்தறிவாளரின் ஆட்சியில் அவருடைய தொடக்ககால தொண்டனாகிய நான் பழிவாங்கப்பட்டது தான் எனக்கு மறக்க முடியாத மனவேதனையாக உள்ளது.

ஆனால் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். மற்றும் செல்வி ஜெயலலிதா ஆகியோரின் ஆட்சியில் எத்தனையோ போராட்டங்கள் நடத்தியுள்ளேன். ஒரு முறைகூட சிறையில் அடைக்கவுமில்லை, வழக்கு தொடரவுமில்லை.

24. காஞ்சி சென்று அண்ணாவைச் சந்தித்தேன்

அண்ணா அவர்கள் இராஜாஜி அவர்களுடன் நட்பு வைத்திருப்பது எனக்குப் பிடிக்கவே இல்லை. 1959ஆம் ஆண்டு ஒருநாள், ஒரே மேடையில் அண்ணாவும், இராஜாஜியும் அமர்ந்திருந்த படத்தை பத்திரிகையில் பார்த்தேன். எனக்கு தாங்க முடியாத ஆத்திரம் வந்தது. பத்திரிகையை எடுத்துக் கொண்டு அண்ணன் கே.கே. நீலமேகம் அவர்களிடம் சென்றேன்.

''இது என்ன அநியாயம்? அண்ணா ஒரு பார்ப்பனருடன் அமர்ந்திருக்கிறாரே?'' என ஆவேசமாகக் கேட்டேன்.

தம்பி, நீ கும்பகோணத்தில் இருக்கிறாய். அதனால் பார்ப்பனர்களின் அட்டூழியத்தை இங்கு நீ கண்கூடாகக் காண்பவன். அதனால் தான், நீ பார்ப்பன எதிர்ப்பு என்ற கண்ணோட்டத்தில் ஆத்திரப்படுகிறாய். ஆனால் அண்ணா அரசியல் கண்ணோட்டத்தில் இராஜாஜியுடன் அமர்ந்துள்ளார். இதில் தப்பு ஏதுமில்லை'' என்றார். என்னால் சமாதானமடைய முடியவில்லை. அங்கிருந்து புறப்பட்டு விட்டேன்.

நான் தி.மு.க.வின் சிறுபிள்ளைத்தனமான வெறிப்பிடித்த தொண்டனாக செயல்பட்டவன். அதனால் பைத்தியக்காரத்தனமாக அன்று இரவு இரயிலில் காஞ்சிபுரம் புறப்பட்டேன். மறுநாள் அண்ணா அவர்களை காஞ்சியில் சந்தித்தேன். அண்ணா அவர்கள் என்னை அன்புடன் அழைத்து அமரச் செய்தார்கள். ''தம்பி, தாகத்திற்கு தண்ணீர் குடியுங்களேன்'' என்றார். நான் வேணாமென்றேன். ''தம்பி காப்பி சாப்பிடுங்களேன்'' என்றார். அதுவும் வேண்டாம் என்றேன்.

''அண்ணா உங்கள் மீதும் நமது இயக்கத்தின் மீதும் நான் என் உயிரையே வைத்துள்ளேன். தாங்கள் இப்போது இராஜாஜியுடன் தொடர்பு வைத்துள்ளதை அறிந்து மிகவும் வேதனைப்படுகிறேன். அதனால் தான் தங்களிடம் கேட்பதற்காக கும்பகோணத்திலிருந்து இங்கு வந்தேன்'' என்றேன்.

அண்ணா அவர்கள் எனது உணர்வை நன்றாக புரிந்து கொண்டார்கள். நீண்ட நேரம் பலவிளக்கங்களைக் கூறி என்னை

சமாதானப்படுத்தினார்கள். ஆனால் பாதியளவுதான் என்னால் சமாதானமடைய முடிந்தது. அண்ணாவிடமிருந்து விடை பெற்றேன்.

"தம்பி இதெல்லாம் வேண்டாம். போய் நன்றாகப படியுங்கள். படிப்பு முடிந்த பின் அரசியலில் ஈடுபடலாம். பத்திரமாகப் போய் எனக்குக் கடிதம் எழுதுங்கள். நீலமேகம் மற்றும் நமது இயக்கத்தவர்களை நான் விசாரித்ததாகக் கூறுங்கள்'' என அன்புடன் கூறி என்னை வழியனுப்பி வைத்தார்கள்.

நான் சிறுபிள்ளைத் தனமாக அண்ணா அவர்களிடம் சென்று கேள்வி கேட்டேன். ஆனால் அறிஞர் பெருமகனார் என்னிடம் அன்பாகப் பேசினார்.

இன்றும் அந்த நாளை நினைத்தால் எனக்குக் கண்ணீர்தான் வருகிறது.

25. காங்கிரசில் சேர்ந்தேன்

அண்ணாவை சந்தித்துவிட்டு வரும் போது ஒரே குழப்பத்தில் அழுது கொண்டே வந்து கும்பகோணம் சேர்ந்தேன். ஊருக்குச் செல்லலாமென புறப்பட்டேன். வழியில் அண்ணன் கே.வி. லிங்கம் அவர்களைப் பார்த்து ஆறுதல் அடையலாமென மன்னார்குடியில் இறங்கினேன்.

தியாகி லிங்கம்

கே.வி. லிங்கம் அவர்கள் சீர்காழியைச் சேர்ந்தவர். மாவீரன் கே.பி.எஸ். மணி அவர்களும், கே.வி. லிங்கம் அவர்களும் சீர்காழி, மயிலாடுதுறைப் பகுதியில் இணைந்து சமுதாயப் பணியாற்றியவர்கள். அண்ணன் கே.வி. லிங்கம் தமிழில் புலமை பெற்றவர். இராணுவத்தில் பணியாற்றியவர். எனவே இந்தி, ஆங்கிலம் சரளமாகப் பேசுவார். அவர் தஞ்சை மாவட்டத்தில் பாராட்டத்தக்க வகையில் சமுதாயப் பணியாற்றி வந்தார். எனவே கக்கன்ஜி அவர்கள் அண்ணன் கே.வி. லிங்கம் அவர்களை "அரிசன நல சேவக்'' பணியில் அமர்த்தினார். அதைப் பயன்படுத்திக் கொண்டு தஞ்சை மாவட்டத்திலுள்ள பல ஊர்களில் இரட்டை டம்ளர் முறையை ஒழித்தார். தீண்டாமை ஒழிப்புச் சட்டப்படி வழக்குகள் பல தொடர்ந்தார். நான் தி.மு.க.வில் இருந்தாலும் தலித் சமுதாய விடுதலைக்காகப் போராடுபவன் என்பதால் அண்ணன் கே.வி. லிங்கம் அவர்கள் எனக்கு வழிகாட்டியாக இருந்து உதவினார்.

அறிஞர் அண்ணா அவர்கள் இராஜாஜியை ஆதரிப்பதால் சாதி ஒழிப்பு, கடவுள் மறுப்பு, பார்ப்பன எதிர்ப்பு ஆகிய தி.மு.க.வின் கொள்கைகள் காற்றில் பறக்க விடப்படும் என அஞ்சினேன். ஆகவே குழப்பம் அடைந்த நிலையில் அண்ணன் கே.வி. லிங்கம் அவர்களை சந்திப்பதற்காக மன்னார்குடியில் இறங்கினேன்.

நல்ல வேளையாக பேருந்து நிலையம் அருகிலேயே அவரைச் சந்தித்தேன். பின்பு இருவரும் அவருடைய இல்லத்திற்குச் சென்றோம். உணவருந்தி விட்டு இரவு முழுவதும் எனக்கு உபதேசம் செய்தார். இருவரும் காங்கிரசுத் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கோபாலசாமி தென்கொண்டார், நாகை மைனர் ஆகியோரைச் சந்திப்பதற்காகப்

புறப்பட்டோம். தென்கொண்டார் மற்றும் நாகை மன்னர் இருவருக்கும் அண்ணன் லிங்கம் என்னை அறிமுகம் செய்து வைத்தார். நான் அவர்கள் முன்னிலையில் காங்கிரசுக் கட்சியில் இணைந்து விடுவதாகக் கூறினேன். தென்கொண்டார் அவர்கள் எனக்கு ஒரு சால்வை போர்த்தி பாராட்டி வரவேற்றார். பிறகு ஊருக்குப் புறப்பட்டேன். கே.வி. லிங்கம் அவர்களும் என்னுடன் புறப்பட்டார்கள். நான் காங்கிரசுக் கட்சியில் சேர்ந்ததை மனிதநேயக் காப்பாளர் அய்யா பி.வி. தேவர் அவர்களிடம் தெரிவித்தார். அவர் பெரிதும் மகிழ்ந்தார்.

தாழ்த்தப்பட்டோர் லீக் தொடங்கினோம்.

1959ல் கரும்புலம் பள்ளியில் திருத்துறைப் பூண்டி–வேதாரணியம் பகுதியிலுள்ள தலித் மக்களைக் கூட்டி "தாலுகா தாழ்த்தப்பட்டோர் லீக் அமைத்தோம்'' வேதாரணியம் தியாகி அஞ்சப்பன் அவர்கள் தலைவராகவும் நான் செயலாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டோம். எனது அத்தை மகன் தியாகி சின்னான் அவர்கள் பொருளாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இக் கூட்டத்திற்கு அய்யா பி.வி. தேவர் அவர்கள் தலைமை தாங்கினார்கள். கே.வி. லிங்கம் அவர்கள் முன்னிலை வகித்தார்கள். அடுத்த கூட்டம் ஆயக்கரன்புலம் முதல் சேத்தி மாரியம்மன் கோவில் அருகினில் நடத்தினோம்.

நான் காங்கிரசுக் கட்சியில் சேர்ந்ததை அறிந்து தி.மு.க. நண்பர்கள் பெரும் அதிர்ச்சியடைந்தார்கள். காங்கிரசுக்காரர்கள் பாராட்டினார்கள். தியாகி அப்பாதுரை தேவர், தியாகி ப. சின்னான், தியாகி அஞ்சப்பன், நான் ஆகியோர் பல கிராமங்களுக்குச் சென்று தாழ்த்தப்பட்டோர் லீக் கிளையைத் துவக்கினோம். தியாகி அப்பாதுரை தேவர் கௌரவ தலைவராகப் பணியாற்றினார். பறையடித்தல், பிணம் சுடுதல், செத்த மாட்டைத் தூக்குதல் போன்ற இழிதொழில்களை ஒழிப்பதற்குப் பிரச்சாரம் (பரப்புரை) செய்தோம். டீ ஓட்டல்களில் இரட்டை டம்ளர் முறையை ஒழிக்கப் போராடினோம். எங்களுடைய போராட்டத்திற்கு கருப்பம் புலம் பெருந்தகை அய்யா பி. வெங்கடாசல தேவர் அவர்கள் உறுதுணையாக இருந்தார்கள். பி.வி. தேவர் அவர்கள் இல்லை என்றால் என்னை எலியை நசுக்குவது போல அடித்து நசுக்கி இருப்பார்கள். அய்யா பி.வி. தேவர் அவர்கள் வேதாரணியம் ஊராட்சி ஒன்றியத் தலைவராக வெற்றி பெற்றார்கள். தமிழக மேலவை (M.L.C.) உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

வேதாரணியம் பகுதியில் பி.வி. தேவர் அவர்கள் முடிசூடா மன்னராகத் திகழ்ந்தார்.

சாதி வேற்றுமை,
தீண்டாமை,
கடவுள் நம்பிக்கை
மூட நம்பிக்கை

ஆகியவைகளுக்கு அப்பாற்பட்ட பகுத்தறிவுப் பெரியாராகவும் மனித நேயத்தோடு செயல்பட்ட மாமனிதராகவும் பி.வி. தேவர் அவர்கள் இருந்தார்கள் என்பதை அனுபவ ரீதியாக நான் உணர்ந்தேன்.

அய்யா பி.வி. தேவர் அவர்களுடன் சாப்பிடும்போது

கருப்பம்புலம் பண்ணை அய்யா பி. வெங்கடசால தேவர் அவர்கள் வீட்டில் காலையில் யார் சென்றாலும் காலை உணவு சாப்பிட்டாக வேண்டும். அதைப் போலவே மதியம் மற்றும் இரவு சாப்பாட்டு வேளையில் அங்கு வந்திருப்பவர்கள் யாராக இருந்தாலும் உணவருந்தியாக வேண்டும். அதன் பின்புதான் அய்யா அவர்களைச் சந்திக்க முடியும்.

ஒரு நாள் மதியம் என்னைச் சாப்பிட அழைத்தார்கள். அதுவும் பி.வி. தேவர் அவர்களுடன் அமர்ந்து சாப்பிட வேண்டுமாம். பி.வி. தேவர் அவர்களும் வேதாரணியம் பஞ்சாயத்து யூனியன் கமிஷனர் மேலக்கால் வீரபத்திரன் (அவர் ஒரு தலித்) அவர்களும் மேஜையின் ஒரு பக்கமும் நான் அதே மேஜையின் எதிர்ப் பக்கத்திலும் அமர்ந்து சாப்பிட்டோம்.

நான் தயக்கத்துடன் சாப்பிடுவதை அய்யா அவர்கள் கவனித்தார்கள் போலும் "சேப்பன், என்ன தயக்கத்துடன் சாப்பிடுகின்றீர்? முதலாளியுடன் அமர்ந்து சாப்பிடுகின்றோமே என்ற அச்சமா?'' என்றார்கள். "இல்லங்க அய்யா'' என மழுப்பலுடன் கூறினேன்.

"சேப்பன், இன்று முதல் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள். நான் நல்லவனோ, கெட்டவனோ அதைப் பற்றி எனக்குக் கவலை இல்லை. ஆனால், தீண்டாமை, சாதி வேற்றுமை, மூட நம்பிக்கை, கடவுள் நம்பிக்கை ஆகியவைகளில் எனக்கு அணுவளவும் நம்பிக்கை இல்லை.

"எனது தகப்பனார் இறந்தபோது அவருக்குக் கருமாதி செய்வதற்காக

பல ஊர்களிலுமிருந்து உறவினர்கள் வந்திருந்தார்கள்.

ஒரு பார்ப்பன புரோகிதரும் வந்திருந்தார். பார்ப்பன புரோகிதரின் சிண்டை நறுக்கி கிராப்பு வெட்டச் செய்தேன். காலனியிலுள்ள தாழ்த்தப்பட்ட மக்கள் அனைவரையும் உள்ளே அழைத்து விருந்து சாப்பிடச் செய்தேன்.

உடனே வெளியூரிலிருந்து வந்திருந்த உறவினர்கள் அனைவரும் சிற்றமடைந்து எழுந்து போய் விட்டார்கள். இது பல ஆண்டுகளுக்கு முன் நான் செய்தது. இப்போது எனக்கு முன் அமர்ந்து சாப்பிடுவதற்கு நீங்கள் தயங்கக் கூடாது'' என்றார். அந்தச் சீர்திருத்த செம்மல்.

நான் முதன்முதல் சாப்பிட்ட பார்ப்பனர் வீடு எனது ஆசிரியர் கருப்பம்புலம் நாகராச அய்யர் அவர்கள் வீடாகும்.

நான் முதன்முதல் உள்ளே அமர்ந்து சாப்பிட்ட அதுவும் பி.வி. தேவர் அவர்களுடன் சமமாக ஒரே மேசையில் அமர்ந்து சாப்பிட்ட தேவர் வீடு அய்யா அவர்களுடைய வீடுதான்.

அந்தக் காலத்தில் இது சாதாரணகாரியமல்ல.

அய்யா பி.வி. தேவர், வேதாரணியம் ஊராட்சி ஒன்றிய கமிஷனர் மேலக்கால் வீரபத்திரன், அண்ணன் கே.வி. லிங்கம், தொண்டு வ. வீராசாமி, சீர்காழி மாவீரன், கே.பி.எஸ். மணி, அன்றைய நாகப்பட்டினம் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் அய்யாக்கண்ணு, மன்னார்குடி பாராளுமன்ற உறுப்பினராக இருந்த கோபாலசாமி தென்கொண்டார் ஆகியோரை அழைத்து தியாகி அப்பாதுரை தேவர், தலைவர் எம். அஞ்சப்பன், தியாகி ப. சின்னான், நான் ஆகியோர் பல கிராமங்களில் தாழ்த்தப்பட்டோர் லீக் கூட்டங்கள் நடத்தி தலித் மக்களை விழிப்படையச் செய்தோம்.

26. மாநிலக் கல்லூரியில் சேர்ந்தேன்

1960ஆம் ஆண்டு சென்னை மாநிலக் கல்லூரியில் பி.ஏ. (அரசியல்) வகுப்பில் சேர்ந்தேன். அப்போது எம்.பி.பி.எஸ். படிக்கவும் விண்ணப்பத்திருந்தேன். இண்டர்வியூ (நேர்முகத் தேர்வு அழைப்பு) வந்தது. ஆனால் நான் போகவில்லை.

நான் மாநிலக் கல்லூரியில் படிக்கும் போது மாணவர் காங்கிரசு மாநில அமைப்பாளர் கோ. மாசிலாமணி, குப்புசாமி, தெய்வசிகாமணி, சீனிவாசன், தலைவர் முத்துசாமி ஆகியோரும் மாநிலக் கல்லூரியில் படித்தார்கள். அதனால் நான் மாணவர் காங்கிரசில் அதிக ஈடுபாடு கொண்டிருந்தேன். மாணவர் காங்கிரஸ் சென்னை மாவட்ட அமைப்பாளர்களில் ஒருவராக நியமிக்கப்பட்டேன்.

எஸ்.என்.ஏ. அஸீஸ், எஸ்.எல். கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் காங்கிரசு மாநில செயலாளர்கள். அவர்களோடு நெருக்கமாக பழகும் வாய்ப்பு கிடைத்தது. அதன் காரணமாக, பெருந்தலைவர் தமிழக முதலமைச்சர் காமராஜ் அவர்களை அடிக்கடி சந்திக்க முடிந்தது. பெருந் தலைவர் காமராஜ் அவர்களுடன் பழக்கம் ஏற்பட்டது.

மேலும் தேனாம்பேட்டை காங்கிரஸ் கட்டடத்தில் சென்னை மாகாண தாழ்த்தப்பட்டோர் லீக் அலுவலகம் இருந்தது. தாத்தா ரெட்டமலை சீனிவாசன் அவர்களுடைய பேரன் முன்னாள் அமைச்சர் பரமேசுவரன் அவர்கள் மாகண தாழ்த்தப்பட்டோர் லீக் தலைவராக இருந்தார்கள். ராவ்பகதூர் எம்.சி. ராசா அவர்களின் மருமகன் சரவணம் பிள்ளை அலுவலக மேனஜராகப் பணியாற்றினார்கள். அவர்களோடு பழகி பணியாற்றக் கூடிய வாய்ப்பு கிடைத்தது. தலைவர் பி. பரமேசுவரன் டி.பி. ஏழுமலை ஆகியோர் சென்னை நகரில் சேரிகள் தோறும் கூட்டம் நடத்துவார்கள். அக் கூட்டங்களில் என்னையும் பேசும்படிச் செய்வார்கள்.

தந்தை சிவராஜ்-மீனாம்பாள் சிவராஜ்

1960ல் அன்னை மீனாம்பாள் சிவராஜ் அவர்களைச் சந்திக்குமாறு அண்ணன் தொண்டு வீராசாமி அவர்கள் அறிமுகக் கடிதம் கொடுத்தார்கள். அக் கடிதத்துடன் மைலாப்பூரிலிருந்த அன்னை மீனாம்பாள் சிவராஜ் அவர்களை சந்தித்தேன். அம்மா என்னை அன்புடன் வரவேற்றார்கள்.

தந்தை சிவராஜ் அவர்களிடம் என்னை அம்மா அவர்கள் அறிமுகம் செய்து வைத்தார்கள். நான் கல்லூரி மாணவன் என்பதால் அவர் என்னிடம் கடுமையான ஆங்கிலத்தில் பேசினார். நான் கிராமத்திலிருந்து வந்தவன். அவருடைய ஆங்கிலத்தை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. அதிலிருந்து அவர்கள் வீட்டிற்கு செல்லும் போதெல்லாம் அம்மாவை மட்டும் சந்தித்துப் பேசிவிட்டு அய்யாவிடம் பேசாமல் தப்பித்து வந்து விடுவேன்.

காமராசர், கக்கன்ஜி இருவருடனும் பழகும் வாய்ப்பு

பெருந்தலைவர் காமராசர் மற்றும் கக்கன்ஜி ஆகியோருடன் பல கூட்டங்களில் கலந்து கொண்டு சொற்பொழிவாற்றியுள்ளேன்.

டிபி. ஏழுமலை, லீக் முனுசாமி, லீக் கருப்பன், பரமானந்தம், சுப்பிரமணிய பிள்ளை, சைதை தேவராஜ் போன்ற தலைவர்கள் என்னை தன் சகோதரன் போல நடத்தினார்கள்.

காஞ்சிபுரத்தில் நடைபெற்ற மாணவர் காங்கிரசு மாநாட்டில் பெருந்தலைவர் காமராசர் அவர்கள் முன்னிலையில் உரையாற்றி அவருடைய பாராட்டுதலைப் பெற்றேன்.

கற்கள் (மைல்கள்) தூரம் நடந்தேன்

திருத்துறைப்பூண்டி தாலுகாவில் எல்லா கிராமங்களிலும் இரவு பகலாக தியாகி அப்பாதுரை தேவர், தியாகி ப. சின்னான், தலைவர் எம். அஞ்சப்பன் நான் உள்பட அனைவரும் நடை பயணமாகச் சென்று கூட்டம் போட்டு தலித் மக்களைத் தட்டி எழுப்பினோம்.

வேதாரணியத்தில் மாநாடு நடத்துவது பற்றி கே.வி. லிங்கம் அவர்களையும் கோபால்சாமி தென்கொண்டார் அவர்களையும் சந்தித்து ஆலோசனை நடத்துவதற்காக மன்னார்குடிக்குச் சென்றேன்.

அவர்கள் இருவரும் ஊரில் இல்லை. கடைசிப் பேருந்து மாலை 7.30 மணிக்குப் புறப்பட்டது. அதில் திரும்பிக் கொண்டு இருக்கும் போது சேரி என்ற ஊரில் கே.வி. லிங்கம் இருப்பதாகக் கேள்விப்பட்டு பேருந்திலிருந்து இறங்கி விட்டேன். அங்கும் கே.வி. லிங்கம் அவர்கள் இல்லை. அதன் பிறகு திருத்துறைப்பூண்டிக்கு பேருந்து கிடையாது. எனவே இரவு முழுவதும் நடந்தேன். இரவு உணவுமில்லை.

வழியில் நாய்கள் தொல்லை. கடியாச்சேரி அடுத்துள்ள ஊரில் கிறித்தவர்கள் கல்லறைகள் சாலை ஓரமாக இருந்தன.

வெள்ளை ஆடை உடுத்திய உருவங்கள் போல கல்லறை மேல் தெரிந்தன. பேயென்று பயந்து நடுநடுங்கிப் போனேன். பேய்களிடம் மாட்டிக் கொண்டோம். இனி தப்பிக்க முடியாது என எண்ணினேன். ஒரு வழியாகக் கல்லரையைக் கடந்து வந்து விட்டேன்.

திருத்துறைப்பூண்டியை அடைந்ததும் தொடர்ந்து கால் நடையாகவே இரயில் பாதை வழியாக புறப்பட்டேன். வயல்களில் தண்ணீர் நிரம்பி இருந்த காலம். தண்ணீர் பாம்புகள் இரயில் பாதையில் துள்ளி ஓடின. வழி நெடுகிலும் பாம்புகளை கற்களால் அடித்து விரட்டிக் கொண்டு ஒரு வழியாக எங்கள் ஊர் வந்து சேர்ந்தேன்.

ஆயக்காரன்புலத்தில் எனது வீட்டில் குளித்துவிட்டு மீண்டும் தொடர்ந்து கால்நடையாகவே வேதாரணியம் சென்றேன். மொத்தத்தில் மன்னார்குடிக்கும் வேதாரணியத்திற்கும் ஏறக்குறைய 38 கல் தொலைவு.

27. ஊராட்சி மன்றத்தில் தீண்டாமை

வேதாரணியம் ஒன்றியத்தைச் சேர்ந்த ஆயக்காரன்புலம் 3ஆவது சேத்தி ஊராட்சி மன்றத்தில் இரண்டு பேர்கள் தாழ்த்தப்பட்ட உறுப்பினர்கள். பாபா சாகேப் அம்பேத்கர் அவர்களின் கடும் உழைப்பால் இரண்டு உறுப்பினர்கள் தீண்டப்படாத வகுப்பிலிருந்து வரமுடிந்தது. ஆனால் இந்துமத சாத்திர சம்பிரதாயங்களின்படி அந்த இரு உறுப்பினர்களும் ஊராட்சி மன்றத்தின் உள்ளே சென்று அமர முடியவில்லை.

மன்றத்தின் எடுபிடி ஆட்களைப் போலவே அவர்கள் நடத்தப்பட்டார்கள். மன்றக் கூட்டங்கள் நடைபெறும்போது இந்தத் தனித் தொகுதி உறுப்பினர்கள் மன்றத்தின் வெளியே நின்று கொண்டிருப்பார்கள். அல்லது அருகிலுள்ள மரத்தடி நிழலில் அமர்ந்திருப்பார்கள். மன்றக் கூட்டம் நடந்து முடிந்ததும் மன்ற செயற் குறிப்புப் புத்தகத்தை வெளியே கொண்டு வந்து இருவரிடமும் கையெழுத்து வாங்கிக் கொள்வார்கள். இவ்வாறு இரண்டு உறுப்பினர்கள் பன்னிரண்டு ஆண்டுகள் மன்றத்திற்கு வெளியிலேயே நின்று கையெழுத்து போட்டார்கள்.

இந்த ஆயக்காரன்புலம் 3ஆவது சேத்தியில்தான் சக்கரவர்த்தி இராச கோபாலாச்சாரியார் அவர்கள் உப்புச் சத்தியாக்கிரகம் செய்து விட்டு ஒரு கோவிலில் இரவு தங்கினார்.

தென்னாட்டுக் காந்தி எனப் புகழப்பட்ட சர்தார் வேதரத்தினம் பிள்ளையவர்கள் இரண்டாவது முறையாக இத்தொகுதியின் சட்டமன்ற உறுப்பினராக இருந்தார்.

இந்தக் கிராமத்தில் பெரும்பாலானவர்கள் தேவர் இனத்தைச் சேர்ந்த காங்கிரசுக்காரர்கள். அவர்களை தெற்குப் பண்ணை, வடக்குப் பண்ணை, பெரிய பண்ணை, நடுப் பண்ணை, சின்னப் பண்ணை என அழைப்பதுண்டு. எனவே, அவர்களை எதிர்ப்பது அவ்வளவு எளிதான காரியமல்ல. எனது தகப்பனாரைச் சித்திரவதை செய்தவர்கள் இந்தப் பண்ணையார்கள்தான். எனவே பழிக்குப் பழி வாங்குவதற்கு எனக்கொரு வாய்ப்புக் கிடைத்தது என்றே நான் கருதினேன்.

அன்றைய ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர் அய்யா பி.வி. தேவர்

அவர்களிடம் இந்தப் பிரச்சனையைப் (சிக்கலை) கொண்டு சென்றேன். ஊராட்சி ஒன்றிய கமிஷனர் அய்யா மேலக்கால் வீரபத்திரன் (தற்போது மேலக்கான் முகமது பிலால் அவர்கள்) எனக்குத் துணையாக இருந்தார்கள். பல இடங்களில் கூட்டம் போட்டு நானும் தியாகி அப்பாதுரை அவர்களும் ஆயக்காரன்புலம் 3ஆவது சேத்தி ஊராட்சி மன்றத்தில் கடைப்பிடிக்கப்படும் தீண்டாமைக் கொடுமைகளைக் கண்டித்துப் பேசினோம்.

யாரும் எதிர்பார்க்காத அளவிற்குப் புரட்சி தோன்றியது. ஊராட்சி மன்றத் தலைவர் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள் மிகவும் நல்லவர். இருப்பினும் மற்ற பண்ணையார்களை அவரால் சமாளிக்க முடியவில்லை. ஆனால் நான் சும்மா விடுவதாக இல்லை. தாழ்த்தப்பட்ட உறுப்பினர்களை உள்ளே அமரச் செய்யும்வரை நான் போராடுவேன் என சவால் விட்டுக் கொண்டிருந்தேன்.

சர்தார் வீட்டில் என்னை மிரட்டினார்கள்

தகட்டூர் தாயுமான தேவர் பெரும் பணக்காரர். அவரை யாராலும் எதிர்க்க முடியாது. பிரபல காங்கிரசுத் தலைவர். சர்தார் வேதரத்தினம் பிள்ளையின் வலது கரமாகச் செயல்பட்டவர். எனக்கு அய்யா பி.வி. தேவர் அவர்கள் ஆதரவளித்து வருவதால் தாயுமானதேவர் அவர்கள் என்னை ஒழித்துக்கட்ட வேண்டுமெனத் திட்டமிட்டிருந்தார்.

ஒருநாள் மாநாடு பற்றி ஆலோசனை நடத்துவதற்காக சட்டமன்ற உறுப்பினரான சர்தார் வேதரத்தினம் பிள்ளை அவர்களின் வீட்டிற்குச் சென்றிருந்தேன்.

அங்கு சர்தார்ஜி அவர்களுடன் தனித்தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வி. வேதையன் மற்றும் தகட்டூர் தாயுமான தேவர் இருந்தனர்.

''நீ காங்கிரசுக்காரன் எனக் கூறிக் கொண்டு காங்கிரசுக்காரர் களையே திட்டி பழிவாங்குகிறாய். சேப்பா இதோ பார், இந்தத் துப்பாக்கி மணலி கந்தசாமியைச் (கம்யூனிஸ்ட்டுத் தலைவர்) சுட்டு வீழ்த்துவதற்காக வாங்கினேன். இப்போது இந்தத் துப்பாக்கியால் உன்னைச் சுட்டு வீழ்த்தி விடுவேன்'' என்று தாயுமான தேவர் அவர்கள் என்னை மிரட்டினார்.

அகிம்சா மூர்த்தி எனப் பெயர் பெற்ற சர்தார் வேதரத்தினம் பிள்ளை அவர்கள் தனது வெள்ளிப் பற்கள் தெரியும் வண்ணம் சிரித்துக்

கொண்டிருந்தார். "ஆமாம் சேப்பா, நீ மிகவும் தீவிரமாகப் போய்க் கொண்டிருப்பது தவறுதான்'' என சட்டமன்ற உறுப்பினர் அண்ணன் வேதையன் அவர்கள் கூறினார்கள்.

"அய்யா, என்னைத் துப்பாக்கியால் சுட்டாலும் சரி; கண்டம் துண்டமாக வெட்டினாலும் சரி; நான் எனது சமுதாயத்திற்கு இழைக்கப்படும் கொடுமைகளைக் கண்டிக்காமல் சும்மா இருக்க முடியாது. வேண்டுமானால் என்னை இதே இடத்தில் சுட்டுத் தள்ளுங்கள்!'' என எனது மார்பைக் காட்டினேன்.

அப்போதும் சர்தார் சிரித்துக் கொண்டே இருந்தார். நான் வெளியே வந்து விட்டேன்.

நடந்ததை அய்யா பி.வி. தேவர் அவர்களிடம் கூறினேன். சென்னைக்குச் சென்றிருந்த போது அய்யா கக்கன்ஜி அவர்களிடமும் பெருந்தலைவர் காமராசர் அவர்களிடமும் விளக்கிக் கூறினேன்.

அன்றைய பாராளுமன்ற உறுப்பினர்கள் அண்ணன் எம். அய்யாக் கண்ணு அவர்களிடமும் கோபாலசாமி தென் கொண்டார் அவர்களிடமும் முறையிட்டேன்.

வேதாரணியத்தில் மாநாடு

வேதாரணியத்தில் 1961ஆம் ஆண்டு திருத்துறைப்பூண்டி தாலுகா "தாழ்த்தப்பட்டோர் லீக்–தாழ்த்தப்பட்டோர் இழிவு ஒழிப்பு முதல் மாநாடு'' வேலைகள் மும்முரமாக நடைபெற்று வந்தன.

மாநாட்டிற்கு அமைச்சர் கக்கன்ஜி அவர்கள் வருவதாக ஒப்புக் கொண்டார்கள்.

மாநாடு வேதாரணியம் இராஜாஜி பூங்காவில் துவங்கியது. அய்யா பி. வெங்கடாசல தேவர் அவர்கள் தலைமை தாங்கினார்கள்.

கொட்டும் பனிக் குளிரில் இரவு 12 மணிவரை மக்கள் காத்துக் கொண்டிருந்தார்கள். அமைச்சர் வந்து சேரவில்லை.

இரவு 12 மணிக்கு அமைச்சர் கக்கன்ஜி அவர்களும் சர்தார் வேதரத்தினம் பிள்ளை அவர்களும் வந்து சேர்ந்தார்கள்.

நான் ஆயக்காரன்புலம் 3ஆவது சேத்தி ஊராட்சி மன்ற பிரச்சனையை மாநாட்டில் தீர்மானமாக அமைச்சர் முன் வைக்கப் போகிறேன் என்பதை

எதிர்பார்த்து சர்தார் அவர்களும் தாயுமான தேவர் அவர்களும் திட்டமிட்டு வழிநெடுக 18 இடங்களில் அமைச்சரை வைத்து கொடியேற்றி இருக்கிறார்கள்.

மேலும் ஆயக்காரன்புலம் 3ஆவது சேத்தி ஊராட்சி மன்றத் தலைவர் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள் ஒரு மருத்துவமனைக்கு அடிக்கல் நாட்டு விழா நடத்தி அவர்களுடைய வீட்டில் மந்திரி கக்கன்ஜி அவர்களுக்கு சிறப்பான விருந்தளித்துள்ளார்கள்.

இவ்வாறு நேரம் கடத்தி மாநாடு சிறப்பாக நடைபெறாமலிருப்பதற்கு சதி செய்துள்ளார்கள்.

இரவு 12 மணிக்கு மாநாடு துவங்கியதும் நான் வரவேற்புரை நிகழ்த்தினேன்.

வரவேற்புரையில் இப்பகுதியில் நடைபெறும் தீண்டாமைக் கொடுமைகளை விளக்கிக் கூறினேன்.

"ஆயக்காரன்புலம் பஞ்சாயத்து போர்டில் 12 ஆண்டுகளாக இரண்டு தாழ்த்தப்பட்ட உறுப்பினர்கள் வெளியில் நின்று கையெழுத்துப் போட்டு விட்டு வருகின்றார்கள். அந்தப் பஞ்சாயத்துப் போர்டு தலைவர் வீட்டில் கனம் அமைச்சர் அவர்கள் பதினெட்டு வகையான சுவைமிகு விருந்து சாப்பிட்டு வந்ததாகக் கேள்விப்பட்டேன். எனவே கனம் அமைச்சர் அவர்களே வருக! வருக! வென வரவேற்கிறேன்'' என நான் கூறியதும் அமைச்சருக்குத் தாங்கொணா கோபம் வந்துவிட்டது.

அமைச்சர் பேசுவதற்கு எழுந்தார், 34 கிராமங்களிலிருந்து மாலை அணிவிக்கப்பட்டது.

அமைச்சர் கக்கன்ஜி அவர்கள் பேசினார்கள். "12 ஆண்டுகளாக பஞ்சாயத்து உறுப்பினர்கள் வெளியில் நிற்பதை ஏன் என் கவனத்திற்குக் கொண்டு வரவில்லை. ஏனையா சேப்பன், என்னை அடிக்கடி சென்னையில் சந்தித்தீர்கள். இதுபற்றி என்னிடம் ஏன் கூறவில்லை? அந்தப் பஞ்சாயத்துத் தலைவர் வீட்டில் நான் விருந்து சாப்பிட்டது இப்போது வாந்தி வருவது போலிருக்கிறது'' என ஆவேசமாகப் பேசினார்கள்.

நான் பயந்து போய்விட்டேன். மாநாட்டுப் பந்தலுக்கு அருகிலிருந்த சாலையில் தாசில்தார், ஆர்.டி.ஓ. ஆகியோர் ஜீப்பில் அமர்ந்தவாறு கவனித்துக் கொண்டிருந்தார்கள். அமைச்சர் அவர்களை அழைக்குமாறு கட்டளை யிட்டார்கள். அவர்களும் மேடைக்கு அருகில் ஓடிவந்தார்கள்.

"அந்தப் பஞ்சாயத்துப் போர்டு உறுப்பினர்கள் உள்ளே அமர்வதற்கு உடனே ஏற்பாடு செய்யுங்கள். இல்லாவிட்டால் உடனடியாக அந்தப் பஞ்சாயத்துப் போர்டு ஒரு வாரத்திற்குள் டிஸ்மிஸ் செய்து எனக்குத் தகவல் கொடுக்க வேண்டும். இது எனது உத்தரவு'' எனக் கூறினார்.

அதிகாரிகள் வணக்கம் கூறி அகன்றார்கள்.

சட்டமன்ற உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் முக்கிய தலைவர்கள் அமைச்சருக்கு இவ்வளவு கோபம் வரும் என எதிர்பார்க்கவில்லை. எல்லோரும் மௌனமாகி விட்டார்கள்.

''இந்தப் பொடியன் சேப்பன் அமைச்சருக்கு ஆத்திர மூட்டி விட்டானே'' என முணுமுணுத்துக் கொண்டு என்னையே நோக்கினார்கள்.

மாநாட்டில் பேசியவர்கள் யாரும் பஞ்சாயத்துப் போர்டு உறுப்பினர் விவகாரத்தைத் தொடவில்லை. சட்டமன்ற உறுப்பினர் சர்தார் அவர்களும் அதற்குப் பதில் கூறவில்லை.

தியாகி அப்பாதுரை, தொண்டு வீராசாமி, பாராளுமன்ற உறுப்பினர்களான எம். அய்யாக்கண்ணு மற்றும் கோபாலசாமி தென்கொண்டார், சர்தார் வேதரத்தினம் பிள்ளை, கே.பி.எஸ். மணி, கே.வி. லிங்கம், தஞ்சை வீராங்கனை பட்டம்மாள், சட்டமன்ற உறுப்பினர் வி. வேதையன் ஆகியோர் சுருக்கமாகப் பேசி முடித்தார்கள். அய்யா பி.வி. தேவர் அவர்கள் தனது துவக்க உரையைச் சுருக்கமாக முடித்துக் கொண்டார்கள். தலைவர் எம். அஞ்சப்பன் அவர்களும் சில நிமிடம் பேசி அமர்ந்தார்.

கன்னிகா குருகுல வரவேற்பில் கலந்து கொள்ள மறுப்பு

மாநாடு முடிந்ததும் சர்தார் வேதரத்தினம் பிள்ளை அவர்கள் நடத்தி வரும் கன்னிகா குருகுலத்தில் அமைச்சருக்கு வரவேற்பும் விருந்தும் ஏற்பாடாகி இருந்தது. சர்தார் ஜீ மீதுள்ள கோபத்தின் காரணமாக அமைச்சர் அவர்கள் அதில் கலந்து கொள்ள மறுத்து விட்டார்கள்.

தியாகி சர்தார் வேதரத்தினம் பிள்ளை அவர்களும் தியாகி கக்கன் ஜீ அவர்களும் நெருங்கிய நண்பர்கள். இருப்பினும் ஆயக்காரன்புலம் 3ஆவது சேத்தி பஞ்சாயத்து போர்டு விவகாரத்தை முன்னிட்டு சட்டமன்ற உறுப்பினரான சர்தார்ஜீ மீது கக்கன் ஜீ அவர்களுக்கு தாங்க முடியாத கோபம் வந்ததால் குருகுலத்திற்கு வர மறுத்து திரும்பிச் சென்று விட்டார்கள்.

ஆகவே, சர்தார்ஜீ அவர்கள் என்னை அழைத்து, "சேப்பான், நூறு பேர்களுக்கு குருகுலத்தில் சாப்பாடு தயாராகியுள்ளது. மந்திரி திரும்பிப் போய் விட்டார் நீங்களாவது எல்லோரையும் அழைத்துப் போய் சாப்பிடுங்கள்'' எனக் கேட்டுக் கொண்டார்.

எல்லோருக்குமே நல்ல பசி. இராஜாஜி பூங்காவிலிருந்து குருகுலம் வரை தொண்டு வீராசாமி, பட்டம்மாள், அஞ்சப்பன் மற்றும் பிறரும் நடந்தே சென்றோம். சர்தார்ஜி அவர்களுடைய புதல்வர் அப்பாகுட்டி அவர்கள் எங்களை அன்புடன் வரவேற்று விருந்தளித்தார்கள்.

தாரை தப்பட்டைகளைக் கொளுத்தினோம்

தாழ்த்தப்பட்ட மக்களின் இழி நிலைக்குக் காரணமான தாரை தப்பட்டைகளை மாநாடு நடக்குமிடத்தில் தீயிட்டுக் கொளுத்துவதாக அறிவித்திருந்தோம். ஆட்டு மாட்டுத் தோல்களால் செய்யப்பட்ட தப்புகளைத் தீயிட்டு எரிக்கும்போது நகரெங்கும் நாற்றம் வீசும். ஆதலால் அவைகளை நகருக்குள் எரிப்பதைத் தவிர்க்குமாறு பலர் கேட்டுக் கொண்டார்கள். அதனால் பாடையில் கொண்டு வரப்பட்ட தாரை தப்பட்டைகளை நகருக்கு வெளியே வரும் வழியில் தீயிட்டுக் கொளுத்தப்பட்டன.

வேதாரணியம் மாநாட்டின் முக்கிய நோக்கம் ஆயக்காரன்புலம் 3ஆவது சேத்தி ஊராட்சி மன்றத்தில் நிலவும் தீண்டாமை, பறையடித்தல், பிணம் சுடுதல், செத்த மாட்டைத் தூக்கி வருதல், பிணக்குழி தோண்டுதல், துக்கச் செய்தி கொண்டு செல்லுதல் போன்ற இழிதொழில் ஆகியவைகளை ஒழித்தலேயாகும்.

வேதாரணியம் ''ஸ்வஸ்திக்'' புகையிலைக் கம்பெனியில் தாழ்த்தப்பட்ட மக்கள் பழிவாங்கப்படுவதால் அதன் உரிமையாளர் அனந்தராஜ் முதலியார் அவர்களையும் தாழ்த்தப்பட்ட மக்களைத் துன்புறுத்தி வந்த சுப்பையா பிள்ளை ஆகியோரையும் வன்மையாகக் கண்டித்துத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இந்த மாநாடு தஞ்சை மாவட்டத்தில் நடந்த முதல் "இழிவு ஒழிப்பு மாநாடு'' என்று கூறலாம்.

மாநாடு சிறப்பாக நடைபெற்றாலும், மறுநாள் காலையில், மாநாட்டுக்கு வந்தவர்களை இரயிலில் ஊருக்கு அனுப்பி வைப்பதற்குப் பணமில்லாமல் அங்குமிங்கும் ஓடி பணம் சேர்ப்பதற்குள் எனக்கு வியர்த்துக் கொட்டி மூச்சுத் திணற ஆரம்பித்தது.

28. எனது போராட்டத்திற்குக் கிடைத்த வெற்றி

வேதாரணியம் மாநாடு நடந்து முடிந்த சில நாட்களுக்குப் பிறகு ஆயக்காரன்புலத்தில் ஒருநாள் ஒரு கூட்டம் நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் சர்தார் வேதஇரத்தினம் பிள்ளை அவர்களும் ஆயக்காரன்புலம் 3ஆவது சேத்தி பஞ்சாயத்துத் தலைவர் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்களும் கலந்து கொண்டார்கள்.

தியாகி அப்பாதுரை, தலைவர் எம். அஞ்சப்பன், ப. சின்னான் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

தீண்டாமைக் கொடுமைகளை விளக்கி நான் ஒன்றரை மணிநேரம் பேசினேன்.

அடுத்து பேசிய மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் அனைவருடைய உள்ளத்தையும் தொடும் வண்ணம் பேசினார்கள்.

"நான் இதுநாள் வரை இருண்ட உலகத்தில் வாழ்ந்து விட்டேன்! இன்று சகோதரர் சேப்பன் அவர்கள் எனது இதயக் கண்களைத் திறந்து விட்டார். நான் இதுவரை தீண்டாமை பாராட்டியதற்காக மிகவும் வருத்தப்படுகிறேன். வேதனையடைகிறேன். அதற்காக இன்று அரிசன மக்களிடம் மன்னிப்புக் கோருகின்றேன்!'' என மிகவும் உருக்கமாக உரையாற்றினார். இதை நான் எதிர்பார்க்கவே இல்லை.

அவர் மேலும் கூறுகையில், "மந்திரி கக்கன்ஜி அவர்களுக்கு எனது வீட்டில் விருந்தளித்தது பெரும் பாக்கியம் என்றே கருதினேன். அது வீணாகி விட்டது. அமைச்சரின் மனதை நான் புண்படுத்தி விட்டேன் என்பதற்காக பெரிதும் வருந்துகின்றேன்'' என்று தெரிவித்தார்.

வேதாரணியம் மாநாட்டில் ஆயக்காரன்புலம் 3ஆவது சேத்தி பஞ்சாயத்து போர்டு பிரச்சனை பெரிதாகி ஊர் முழுவதும் அதே பேச்சாகி விட்டது.

ஊராட்சி மன்றத் தலைவர் பண்ணையார் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள் மன்றத்தைக் கூட்டினார்கள். இரண்டு அரிசன உறுப்பினர்களைத் தவிர மற்றபடி, ஊராட்சி மன்றத் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் அனைவருமே தேவர் இனத்தவர்கள் அவர்கள் மன்றத் தலைவர் தீர்மானத்தை ஏற்றுக் கொள்ளவில்லை.

அவர்கள் "இங்கிருந்து ஒரு பறையன் (சேப்பன்) கூறினான் என்பதற்காக சென்னையிலிருந்து வந்த பறையன் (கக்கன்ஜி) பேசினான். அதற்காக நாம் நமது பாரம்பரிய கௌரவத்தை விட்டுவிடக் கூடாது. பறையர்களை உள்ளே அழைப்பது நமக்குப் பெரும் கேவலம்'' என வாதிட்டார்கள்.

ஊராட்சி மன்றத் தலைவர் மீனாட்சிசுந்தரம் பிள்ளை (தேவர்) அவர்கள் ஆத்திரமடைந்தார்கள்.

"அரிசன உறுப்பினர்களும் நம்மைப் போல மனிதர்கள் தான். அவர்களை உள்ளே அழைப்பதில் தவறில்லை. அப்படி அவர்களை உள்ளே அழைக்கவில்லை எனில் நமது மன்றம் டிஸ்மிஸ் செய்யப்படும். அப்படி டிஸ்மிஸ் ஆனால் அது எனக்குப் பெரும் அவமானமாகும். அந்த அவமானத்தை என்னால் தாங்கிக் கொள்ள முடியாது. எனவே, நான் எனது தலைவர் பதவியை இன்று இராஜினாமா செய்கிறேன்'' என உருக்கமாகக் கூறினார்.

தலைவர் இந்த ஊரில் பெரும் பண்ணையார். மரியாதைக்குரிய காங்கிரசுக்காரர். அவர் தனது பதவியை இராஜினாமா செய்வதை உறுப்பினர்கள் யாரும் விரும்பவில்லை. எனவே அரிசன உறுப்பினர்களை உள்ளே அழைப்பதற்கு ஒத்துக் கொண்டார்கள்.

இரண்டு அரிசன உறுப்பினர்களையும் கையைப் பிடித்து உள்ளே அழைத்து வந்தார்கள்.

மாபெரும் வெற்றி!

இது 1961இல் எமது போராட்டத்திற்கு கிடைத்த மாபெரும் வெற்றியாகும்.

வேதாரணியம் பகுதியிலுள்ள தேவர்கள் மற்ற சாதி இந்துக்களை விட மிகவும் நல்லவர்கள்தான். ஆனால் இந்துமத சாத்திர சம்பிரதாயங்களின்படி கவுரவம் பார்ப்பவர்கள் பலர் இருந்தனர். எல்லாவற்றிற்கும் இந்து மதமும் இந்துமத சாத்திரங்களுமே தான் மூல காரணம் எனலாம்.

கக்கன்ஜீ கண்ணீர்விட்டார்கள்

நான் சென்னைக்குச் சென்றதும் அமைச்சர் கக்கன்ஜீ அவர்களைச் சந்தித்து நன்றி கூறுவதற்குச் சென்றிருந்தேன்.

நான் உள்ளே சென்றதும் "உங்கள் ஊர் பஞ்சாயத்து என்ன ஆயிற்று" என விசாரித்தார். "அய்யா மிக்க நன்றி. அரிசன உறுப்பினர்களை உள்ளே அனுமதித்து விட்டார்கள்" என்றேன்.

அமைச்சர் மகிழ்ச்சியடைந்தார். ஆனால் சிறிதுநேரம் அமைதியாக இருந்துவிட்டு கண்கலங்கினார்.

நான் பதறிப்போய் "என்னங்க அய்யா" என்றேன். "ஒன்றுமில்லை தம்பி, சுதந்திர நாட்டில் நமது மக்கள் இன்னும் மிருகத்தை விட கேவலமாக நடத்தப்படுகின்றார்கள். மிகவும் துன்பப்பட்டு சுதந்திரம் பெற்றோம். ஆனால், நமது மக்களுக்கு இன்னும் முழு சுதந்திரம் கிடைக்கவில்லை. என்பதை எண்ணி வருந்துகிறேன்" என்றார்கள்.

"அய்யா அதையெல்லாம் நாங்கள் பார்த்துக் கொள்கிறோம், நீங்கள் வருந்தாதீர்கள்" என்றேன்.

கக்கன்ஜீ அவர்களைப் பார்க்கும் போதெல்லாம் "உங்கள் ஊர் பஞ்சாயத்து உறுப்பினர்கள் எப்படி நடத்தப்படுகிறார்கள்?" என முதலில் விசாரிப்பார்கள்.

அய்யா அவர்கள் இறப்பதற்கு சில நாட்களுக்கு முன்பு கூட சி.ஐ.டி. நகரில் அவர்கள் அரை நிதானத்தில் படுத்திருந்த போதுகூட சந்தித்தேன். அப்போதும் ஆயக்காரன்புலம் பஞ்சாயத்து போர்டு பற்றி விசாரித்தார்கள். அப்போதும் கண்ணீர் விட்டார்கள்.

"சந்திக்கும் போதெல்லாம் கண்ணீர் விடுகின்றார். அவர்களுடைய உள்ளத்தில் சமுதாய மக்களைப் பற்றி ஏதோ தாங்க முடியாத துயரம் இருந்து கொண்டிருக்கிறது. அவரைச் சந்தித்து வீணாகத் துயரம் அடையச் செய்யக் கூடாது" என எண்ணி அடிக்கடி அவரைச் சந்திப்பதை நிறுத்தி விட்டேன்.

இறுதியில் அவருடைய இறுதிப் பயணத்தின் போது நான் கண்ணீர் வடித்தேன்.

(கக்கன்ஜீ அவர்களைப் பற்றி "மறக்க முடியாத மாமனிதர்கள்" என்ற நூலில் விளக்கமாக எழுதியுள்ளேன்)

29. வேதாளம் மீண்டும் முருங்கைமரம் ஏறியது

ஊராட்சி மன்றத்தில் ஒழிக்கப்பட்ட தீண்டாமை கோவில்களில் ஒழியாமல் அடம் பிடித்தது.

வேதாரணியத்தில் நடைபெற்ற மாநாட்டிற்குப் பின் சர்தார் வேதரத்தினம் பிள்ளை என் மீதிருந்த விரோத மனப்பான்மையை மாற்றிக் கொண்டார் எனக் கருதுகிறேன்.

தஞ்சை மாவட்டத்திலுள்ள கிராம இந்துக் கோவிலுக்குள் தாழ்த்தப்பட்ட மக்கள் அனுமதிக்கப்படாததை நான் பல இடங்களில் கண்டித்துப் பேசினேன். சர்தார்ஜியும் நானும் பல கூட்டங்களில் ஒன்றாகக் கலந்து கொண்டோம். செல்லுமிடமெல்லாம் அவருடைய காரிலேயே என்னை அழைத்துச் செல்வார்.

ஒருநாள் தியாகி அப்பாதுரை தேவர் அவர்கள் ஆயக்காரன்புலம் 4ஆவது சேத்தி கோவில்குளம் கிராமத்தில் பெயர் பெற்ற (பிரசித்தி பெற்ற) சிவன் கோவிலுக்குள் ஆலயப் பிரவேசம் செய்ய வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார்.

கோவில்குளம் எனது தகப்பனாரின் பூர்வீகக் கிராமம்.

1961ஆம் ஆண்டு தென்னாட்டு காந்தி சட்டமன்ற உறுப்பினர் தியாகி சர்தார் வேத இரத்தினம் பிள்ளை அவர்கள் தலைமையில் தியாகி அப்பாதுரை தேவர் அவர்கள் முன்னிலையில் சேப்பனும் மற்ற தாழ்த்தப்பட்ட மக்களும் கோவில்குளம் சிவன் கோவில் ஆலயப் பிரவேசம் செய்வார்கள் என விளரம்பரம் செய்யப்பட்டது.

எனது தகப்பனாரும் எங்கள் முன்னோர்களும் உள்ளே செல்ல அனுமதிக்கப்படாத கோவில் குளம் சிவன் கோவிலுக்குள் நூற்றுக்கணக்கான தாழ்த்தப்பட்ட மக்களுடன் உள்ளே சென்றோம்.

எங்களை சர்தார்ஜீ அவர்கள் முன்நின்று அழைத்துச் சென்றார்கள். பூசை நடைபெற்றது. கோவில் குளம் எனது பூர்வீக கிராமம் என்பதை நான் விளக்கிப் பேசினேன். சாமி கும்பிடாத சேப்பன் கோவிலுக்குள் வந்து சாமி கும்பிட்டதை சர்தார் அவர்கள் பாராட்டிப் பேசினார்கள்.

சர்தார் அவர்கள் கூட இருந்து ஆலயப் பிரவேசம் செய்ததால் சாதி இந்துக்கள் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை.

ஆனால் பறையர்கள் கோவிலுக்குள் நுழைந்ததால் கோவில் தீட்டாகி விட்டது என்று மறுநாள் கடல் நீரைக் கொண்டு வந்து கோவிலைப் புனிதப்படுத்தித் தீட்டுக் கழித்தார்கள்.

இது எவ்வளவு அயோக்கியத்தனம்?

"நாமெல்லாம் இந்து! நாமெல்லாம் ஒன்று!" எனக் கூச்சலிடும் கூட்டத்தார்கள் நான் அவமதிக்கப்பட்டதற்கு பதில் கூற இயலுமா?

நான் சாதாரண பறையன். பரவாயில்லை. ஆனால் இந்தியாவின் மிகப் பெரிய மனிதர்களில் பாபு ஜெகஜீவன்ராம் அவர்கள் இந்திய துணைப் பிரதமராக இருந்தபோது ஒரு இந்து கோவில் சிலையை திறந்து வைத்தார் என்பதால் கோவில் தீட்டாகி விட்டது என்று கங்கை, யமுனை நதிகளிலிருந்து தண்ணீர் கொண்டு வந்து கோவிலை புனிதப்படுத்தினார்கள் என்பதை இந்த நாடே அறியும். இதைவிட கேவலம் இந்து சமுதாயத்திற்கும் இந்துமதத்திற்கும் என்ன இருக்கிறது.

இதை எல்லாம் நான் கண்டித்தால் இந்துமதத் தலைவர்கள் என்மீது வீண்பழி சுமத்துகிறார்கள்.

அய்யகோ! நெஞ்சு பொறுக்குதில்லையே! நீதியற்ற இந்த இந்து சமுதாயத்தை நினைத்து விட்டால்.

கோவில் குளம் சிவன் கோவிலுக்குள் நான் சென்றதால் கோவில் தீட்டாகிவிட்டது என்று தீட்டுக் கழிக்கப்பட்டதை அய்யா பி.வி. தேவர் அவர்களிடம் தெரிவித்தேன்.

அய்யா அவர்கள் "கோவிலில் கடவுளே இல்லை! அங்கு நீங்கள் ஏன் போகவேண்டும்? கல்லை கடவுள் என வணங்குவது முட்டாள்தனம் என்பது உங்களுக்குத் தெரியாதா? கடவுள் இருந்திருந்தால் கோவிலில் தீட்டுக் கழித்ததைத் தடுத்திருப்பார் அல்லவா" என என்னைக் கண்டித்தார்கள்.

நான் வெட்கி தலை குனிந்தேன்!

இன்னும் இதைவிட பெரும் வெட்கக்கேடு, இந்த நவநாகரீக காலத்தில் சிவகங்கை மாவட்டம் அண்டதேவியிலுள்ள இந்து கடவுளின் தேரை தலித்துக்கள் இழுப்பதை இந்துக்கள் தடுப்பது ஆகும்.

தலித் தலைவர் டாக்டர் கிருஷ்ணசாமி இதை எதிர்த்து கடுமையாகப் போராடி வருகிறார்.

இதில் வெட்கித் தலைகுனிய வேண்டியது

கடவுளா?

இந்துக்களா?

தலித்துக்களா?

மனச்சாட்சி உள்ளவர்களே சிந்தியுங்கள்!

மதமாற்றத்திற்குத் தடைவிதிக்கக்கோரும் அறிவு ஜீவிகள் தலித் மக்களும் இந்துக்களே எனில் அண்ட தேவியில் எல்லா இந்துக்களும் ஒற்றுமையாக தேர் இழுக்க ஆவன செய்வது தானே?

கடவுளுக்கு காவல்துறையினர்தான் பாதுகாப்பளிக்க வேண்டுமா?

30. மருத்துவக் கல்லூரியில் சேர்ந்தேன்

1960ஆம் ஆண்டு மருத்துவக் கல்லூரியில் சேர்வதற்கு விண்ணப்பம் செய்திருந்தேன். நேர்காணல் அழைப்பு வந்தது. ஆனால் அதை வேண்டாம் என புறக்கணித்து சென்னை மாநிலக் கல்லூரியில் பி.ஏ. (அரசியல்) வகுப்பில் சேர்ந்தேன். விக்டோரியா மாணவர் விடுதியில் தங்கிப் படித்தேன்.

மருத்துவப் படிப்பு

1961ல் நான் மருத்துவக் கல்லூரியில் சேர வேண்டுமென கருப்பம்புலம் அய்யா பி.வி. தேவர் அவர்கள் என்னைப் பிடிவாதம் செய்தார்கள். அதன் காரணமாக கடைசி நாளில் விண்ணப்பம் சேர்க்க வேண்டியிருந்தது. கருப்பம்புலத்திலிருந்து ஆயக்காரன்புலத்திற்கு நடந்து வந்து கொண்டிருந்தேன். வழியில் ஆயக்காரன்புலம் முதற் சேத்தி கணக்கப் பிள்ளை கிருஷ்ணமூர்த்தி அய்யர் அவர்களைச் சந்தித்தேன்.

''என்ன சேப்பா, எங்கே போகிறாய்'' என அய்யர் அவர்கள் கேட்டார்கள். "சாமி, மருத்துவ கல்லூரிக்கு விண்ணப்பிக்க நாளை கடைசி நாள். சென்னைக்குச் செல்வதற்குப் பணம் இல்லை'' எனக் கூறினேன்.

"அப்படியா, நீ வீட்டிற்குப் போய் சாப்பிட்டு விட்டு பயணத்தோடு என் வீட்டிற்கு வா. நான் செலவிற்குப் பணம் தருகிறேன்'' என்றார்.

அவர் கூறியபடியே ஓட்டமாக வீட்டிற்குச் சென்று விட்டு கணக்கப் பிள்ளை கிருஷ்ணமூர்த்தி அய்யர் வீட்டிற்குச் சென்றேன்.

அவர் தனது துணைவியார் கையில் ரூபாய் 50/- கொடுத்து ஆசீர்வதித்துக் கொடுக்குமாறு கூறினார்.

அய்யர் அம்மா என்னை வாழ்த்தி "நல்ல களையான முகம்; உனக்கு கடவுள் உதவி செய்வார். நல்லபடியாக இருக்கணும் என்று ஆசீர்வதித்து 50 ரூபாயைக் கொடுத்தார்கள். அதை வைத்துக் கொண்டு சென்னைக்குப் புறப்பட்டேன். மாநிலக் கல்லூரியிலிருந்து சான்றிதழ்களைப் பெற்று மாலை 5 மணிக்கு கடைசி நேரத்தில் விண்ணப்பத்தைச் சேர்த்தேன்.

பெருந்தலைவர் காமராசரின் ஆணை

மருத்துவக் கல்லூரி நேர்காணல் தேர்வுக்கு முதல் நாள் மாயவரத்தில் காங்கிரசுக் கூட்டம் நடைபெற்றது. அந்தக் கூட்டத்திற்குச் செல்வதற்காக அய்யா பி.வி. தேவர் அவர்கள் தனது காரில் என்னை மாயவரம் அழைத்துச் சென்றார்.

அங்கு என்னை பெருந்தலைவர் காமராசரிடம் மாட்டிவிடுவார்கள் என்பதை நான் எதிர்பாக்கவில்லை.

"சேப்பன் சென்ற ஆண்டு மருத்துவக் கல்லூரியில் சேரவில்லை. இந்த ஆண்டும் இண்டர்விபூ வந்துள்ளது. இவர் போவதாக இல்லை'' என்று தேவர் அவர்கள் காமராசர் அவர்களிடம் கூறினார்கள்.

"என்னலே, ஏன் எம்.பி.பி.எஸ். படிக்க செல்லவில்லை ?'' என பெருந் தலைவர் கேட்டார்கள்.

"அய்யா, நான் வக்கீலுக்குப் படிக்க விரும்புகிறேன்'' என்றேன்.

"போய்யா, வக்கிலுக்குப் படித்தால் அய்ந்து வருடங்களுக்குப் பணத்தைப் பார்க்க முடியாது. டாக்டரானால் எங்கேயாவது ஒரு போர்டு மாட்டி வைத்துப் பிழைத்துக் கொள்ளலாம்'' எனக் கூறினார்கள்.

அந்தத் தீர்க்கதரிசியிடம் அதற்குமேல் என்னால் எதுவும் பேச முடியவில்லை.

"சரிங்க அய்ய இந்த வருடம் சேர்ந்து விடுகிறேன்'' என்றேன்.

"நாளை போய் இண்டர்விபூ அட்டன் பண்ணிட்டு என்னை வந்து பார். இல்லாவிட்டால் என்னிடம் வரவே கூடாது'' என கண்டிப்பாகக் கூறினார்கள்.

அன்று இரவு கருப்பம்புலம் பி.வி. தேவர் அவர்கள் தனது காரில் மூன்று ஆட்களுடன் மாயவரம் இரயில் நிலையத்திற்கு அனுப்பி "சேப்பன் எங்கும் ஒடிவிடாமல் இரயிலில் ஏற்றி வண்டி புறப்பட்ட பின் வரவேண்டும்'' என அவர்களுக்கு கட்டளையிட்டார்கள்.

வழிநெடுக ஒரே குழப்பத்தில் ஆழ்ந்தேன். எம்.பி.பி.எஸ். படித்தால் சமுதாய விடுதலைக்காகப் போராட முடியாதே! வழக்கறிஞராக வந்தால்

திறமையாகப் போராடலாம். ஆனால் இந்தத் தலைவர்கள் பிடிவாதமாக மருத்துவக்கல்லூரிக்குப் போக வேண்டும் என்கிறார்களே, என்ன செய்வது ? என சிந்தித்துக் கொண்டே வந்தேன். மாநிலக் கல்லூரி மற்றும் விக்டோரியா மாணவர் விடுதி நண்பர்களை எப்படி விடுப் பிரிவது என்ற கவலை உள்ளத்தை வருத்திக் கொண்டே இருந்தது.

மறுநாள் காலை கல்லூரி மற்றும் விடுதி நண்பர்கள் என்னை உற்சாகப்படுத்தி இண்டர்வியூவிற்கு அனுப்பி வைத்தார்கள்.

தேனாம்பேட்டையில் உள்ள மருத்துவ இலாக்கா இயக்குனர் அலுவலகத்தில் நேர்முகத் தேர்வு நடைபெற்றுக் கொண்டிருந்தது. அப்போதெல்லாம் எண்டரன்சுத் தேர்வு கிடையாது. நேர்முகத் தேர்வு மட்டும் தான். அதுவும் தாழ்த்தப்பட்ட மற்றும் மலைவாழ் இன (எஸ்.ஸி. மற்றும் எஸ்.டி.) மாணவர்கள் நேர்முகத் தேர்விற்கு சென்று வந்தாலே போதும், இடம் கிடைத்து விடும்.

தேனாம்பேட்டை காங்கிரசுக் கட்டடத்தில் தாத்தா இரட்டைமலை சீனுவாசன் அவர்களுடைய பேரன் அய்யா பி. பரமேசுவரன், எம்.சி. ராசா அவர்களுடைய மருமகன் சரவணம் பிள்ளை, காங்கிரசுக் கமிட்டி மாநில செயலாளர் அண்ணன் எஸ்.என்.ஏ. அலீஸ் ஆகியோர் என்னை எதிர்பார்த்திருந்தார்கள். நான் சென்றதும் டி.எம்.எஸ். அலுவலக வாயில் வரை என்னை அழைத்து வந்து வாழ்த்தி உள்ளே அனுப்பி வைத்தார்கள்.

ஆனால் எனக்குப் பிடிக்காத எம்.பி.பி.எஸ். படிப்பில் ஏன் எல்லோரும் என்னை வலுக்கட்டாயமாகச் சேர்த்து விடுகின்றார்கள் என்ற சீற்றம் என்னுள் பொங்கிக் கொண்டு இருந்து வந்தது. அவர்களுடைய நல்ல மனதை என்னால் உணரமுடியவில்லை. மேலும் என்னுடைய உள்ளக் கிடக்கைக்கு என்னால் பதில் கூற முடியவில்லை.

நேர்காணலில் கலந்து கொண்டு வந்துவிட்டேன். எல்லோரும் என்னை வாழ்த்தினார்கள்.

தஞ்சை மருத்துவக் கல்லூரியில் சேர்வதற்கு கடிதம் வந்தது. நான் நண்பர்களிடம் பிரியாவிடை பெற்று தஞ்சாவூர் புறப்பட்டேன். அப்போது தான் தஞ்சாவூரில் மருத்துவக் கல்லூரி துவங்கப்பட்டது. கல்லூரியில் சேர்ந்தேன். கல்லூரி கட்டணம் அப்போது ரூபாய் 27/– (இருபத்தேழு ரூபாய்) மட்டுமே.

இது பாபாசாகேப் அம்பேத்கர் அவர்களுடைய உழைப்பின் பலன் என்பதை நான் மட்டுமே உணர்ந்தேன்.

தஞ்சையில் மாணவர் காங்கிரஸ்

சில மாதங்கள் கழித்து அரசியல் பைத்தியம் பிடித்தது. தஞ்சாவூரில் தஞ்சை மாவட்ட மாணவர் காங்கிரசு கிளையைத் துவக்கினேன். மாணவர் காங்கிரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றேன். சரோபோஜி கல்லூரி மாணவர் பிச்சாண்டி செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

துவக்க விழா தியாகிகள் இல்லத்தில் நடைபெற்றது. அன்றைய தமிழக அமைச்சர் (பின்நாளில் இந்திய குடியரசுத் தலைவர்) வெங்கட்டராமன், பெரிய வாண்டையார், பரிசுத்த நாடார், தஞ்சை இராமமூர்த்தி, தமிழ்நாடு மாணவர் காங்கிரஸ் அமைப்பாளர் ஜீ. மாசிலாமணி (தற்போதைய சென்னை உயர்நீதி மன்ற சீனியர் அட்வகேட்) ஆகியோர் கலந்து கொண்டனர். எல்லோரும் என்னை வெகுவாகப் பாராட்டி நட்பைக் கழட்டி விட்டார்கள்.

அது தேர்தல் நேரம். சட்டமன்ற தேர்தலில் காங்கிரசுக் கட்சி சார்பில் பரிசுத்த நாடார் அவர்களும், தி.மு.க. வேட்பாளராக கலைஞர் கருணாநிதியும் போட்டியிட்டார்கள். கடுமையான போட்டியாக இருந்தது. தஞ்சை திலகர் திடலில் மாபெரும் தேர்தல் பிரச்சார கூட்டத்திற்கு ஏற்பாடு செய்திருந்தோம். பெருந்தலைவர் காமராசர் அவர்கள் கலந்து கொண்டு பேசினார்கள். நானும் அந்த கூட்டத்தில் கலந்து கொண்டேன்.

அடுத்து யாகப்பா திடலில் தந்தை பெரியார் அவர்கள் பேசினார்கள். அதுவும் ஒரு மாபெரும் பொதுக் கூட்டமாக இருந்தது. அதிலும் நான் கலந்து கொண்டேன். மாணவர்களைக் கூட்டிக் கொண்டு தஞ்சை தொகுதியில் தீவிரமாகப் பிரச்சாரம் செய்தேன். அப்போதெல்லாம் பெரும்பாலான ஆசிரியர்கள் தி.மு.க. ஆதரவாளராகவே இருந்தார்கள். நான் காங்கிரசுக்காரன் என்பது விளம்பரமாகி விட்டது. எப்படியும் என்னை பழி வாங்க திட்டம் தீட்டினார்கள்.

தேர்தலில் கலைஞர் வெற்றி பெற்றார். காங்கிரசு வேட்பாளர் தோல்வியடைந்தார். அதனால் நான் மனமுடைந்து, சோர்ந்து போனேன். பல நாட்கள் சரியாக உணவருந்துவதில்லை. அமைதியாகப் படிக்கவும் முடியவில்லை.

தி.மு.க.வினர் என்னை பழிவாங்க வேண்டும் என்பதற்காக ஒரு குழுவையே அமைத்திருந்தார்கள் என்பதை பிற்காலத்தில் அறிந்தேன். எம்.பி.பி.எஸ். முதலாண்டு தேர்வில் மூன்று முறையும் தோல்வியடைந்தேன். அன்றைய விதிமுறைப்படி மூன்று முறையும் தோல்வியுற்றால் படிப்பை விட்டு அனுப்பி விடுவார்கள். அதன்படி நான் எம்.பி.பி.எஸ். படிப்பை இழந்தேன். அதன் காரணமாக நெருங்கிய நண்பர்களாக இருந்த பூண்டி பெரிய வாண்டையார், பரிசுத்த நாடார் போன்ற காங்கிரசுத் தலைவர்களை கடைசி வரை சந்திக்கவே இல்லை.

வாழ்க்கையே வெறுத்துப் போனது

படிப்பு போனதும் யாரையும் சந்திப்பதில்லை. வாழ்க்கையின் கடை கோடிக்குத் தள்ளப்பட்டதாக உணர்ந்தேன். நிலைகுலைந்து போனேன். கடற்கரையிலமர்ந்து கண்ணீர் விட்டவாறு நாளெல்லாம் வருந்தினேன். அப்போது சென்னையிலுள்ள எனது மாமன் எஸ்.ஆர். இராமசாமி பிள்ளை வீட்டில் தங்கியிருந்தேன்.

அப்போது ஒருநாள் தினத்தந்தி நாளிதழில் "சோப் சேல்ஸ்மேன்'' தேவை என்ற விளம்பரத்தைப் பார்த்தேன். வாடகை சைக்கிள் எடுத்துக் கொண்டு செனாய் நகரிலுள்ள சோப்புக் கம்பெனிக்குச் சென்றேன். பத்து சதவிகித (விழுக்காடு) கமிஷன் தருவதாகச் சொன்னார்கள். சோப்புப் பெட்டியை சைக்கிளில் கட்டிக் கொண்டு சென்னை நகரில் சோப்பு விற்றுக் கொண்டு இருந்தேன். சில மாதங்கள் கழித்து அந்தக் கம்பெனிக்கு மானேஜராக பதவி உயர்வு பெற்றேன். சோப்பு தயாரிப்பதில் நல்ல அனுபவம் பெற்றேன்.

கடை வியாபாரம்

பிறகு, தியாகராய நகர் கண்ணம்மாபேட்டை சித்தி விநாயகர் கோவில் தெருவில் காய்கறி மற்றும் சிறு மளிகைக் கடை ஆரம்பித்தேன்.

விமான நிலையத்தில் வேலை

நீண்ட நாட்களுக்குப் பிறகு தலைவர் பி. பரமேசுவரன் பிள்ளை அவர்களைச் சந்தித்தேன். "படிக்கும்போதே அரசியலில் ஈடுபடாதே என்று அப்போதே கூறினேன். நீ கேட்கவில்லை. இப்போது படிப்பை இழந்து,

நிற்கிறாய். சரி, சென்னை விமான நிலையத்தில் டெலிபோன் ஆபரேட்டர் பணியில் சேர்த்து விடுகிறேன். போய் சேர்ந்து கொள்'' என அவர் கூறினார்.

தாத்தா ரெட்டைமலை சீனிவாசன் அவர்களுடைய பேரன் அய்யா பி. பரமேசுவரன் அவர்களும் எம்.சி. ராசா அவர்களுடைய மருமகன் சரவணம் பிள்ளை அவர்களும் முயற்சித்து விமான நிலையத்தில் டெலிபோன் ஆபரேட்டர் வேலையில் சேர்த்தார்கள். எம்.சி. ராசா அவர்களுடைய இளைய மருமகன் ஆபரேட்டர் வேலையைக் கற்றுக் கொடுத்தார். விமான நிலையத்தில் சிவில் ஏவியேஷன் டிபார்ட்மெண்டில் ஐந்து ஆண்டுகள் பணியாற்றினேன்.

31. எனது திருமணம்

எனது மாமன் மகளை திருமணம் செய்து கொள்வதற்கு ஒப்புக் கொண்டேன். ஆனால் என் மாமியார் கிறித்தவர். ஆகவே, நான் கிறித்தவ மதத்திற்கு மாற வேண்டுமென பிடிவாதமாக இருந்தார்கள். நான் மறுத்து விட்டேன்.

இந்தச் சூழ்நிலையில், எனது மாமன் மகளை ஆயக்காரன்புலத்திற்கு அழைத்துச் சென்று, அண்ணன் கே.வி. லிங்கம் அவர்கள் முயற்சியால் மூன்றே நாளில் அழைப்பிதழ் அச்சிட்டு, உறவினர்கள் அனைவரையும் கூட்டி இரண்டு மேளக் கச்சேரிகளுடன் திருமணம் நடந்தது. பாபா சாகேப் அம்பேத்கர் அவர்களின் திருவுருவப் படத்தை வைத்து வணங்கி பவுத்த முறைப்படி, பஞ்சசீலம் கூறி அண்ணன் கே.வி. லிங்கம் அவர்கள் தலைமையில் என்னுடைய திருமணம் சரியான இராகு .காலத்தில் நடைபெற்றது.

பிறகு, அடுத்த சில தினங்களில் எனது மாமனார் எஸ்.ஆர். இராமசாமிப் பிள்ளை அவர்கள் ஊருக்கு வந்து எங்களை சென்னைக்கு கூட்டி வந்தார். என்னுடைய திருமணம் பெரும் போராட்டங்களுக்கிடையே நடைபெற்றது. பல நாட்கள் கிறித்தவர்கள் தொல்லை கொடுத்துக் கொண்டிருந்தார்கள். இருப்பினும் எல்லோரையும் சமாளித்து விட்டேன்.

32. மீண்டும் மருத்துவக் கல்லூரியில் சேர்ந்தேன்

வழக்கறிஞராகக் கனவு கண்டு, மருத்துவப் படிப்பில் வலுக்கட்டாய மாகச் சேர்க்கப்பட்டு, முதலாம் ஆண்டு மருத்துவப் படிப்பில் மூன்று முறையும் தோல்வி கண்டு, படிப்பிலிருந்து வெளியேற்றப்பட்டு, திருமணமாகி, குழந்தையும் பெற்றுக் கொண்டு, உருப்படியான வேலையும் இன்றி இருண்டு போன எதிர்காலத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்த எனக்கு ஒருநாள் எனது வாழ்விற்கு வழிகாட்ட மின்னலொளியொன்று எனது வீட்டினுள் புகுந்தது.

உயிர் கொடுத்த மகான்

நான் சென்னை விமான நிலையத்தில் பணியாற்றிக் கொண்டிருந்த போது எனது நண்பர் இ. சுப்பிரமணியம் ஒருநாள் எனது வீட்டிற்கு வந்தார்.

தவழ்ந்து கொண்டிருந்த எனது மகளிடம் ''உனது அப்பனை டாக்டராக்கி விடுகிறேன். அதற்காகத்தான் இங்கு வந்தேன்'' என்றார்.

''ஏனையா குழந்தையை ஏமாற்றுகிறீர்? இது நடக்கக்கூடிய காரியமா?'' என்றேன்.

''உன்னை டாக்டராக்காவிட்டால் என் மீசையில் பாதியை எடுத்துக் கொள்கிறேன் பார்'' என சபதமிட்டார்.

எனக்கு ஒன்றும் புரியவில்லை.

இ. சுப்பிரமணியம் அவர்கள் பாபாசாகேப் அம்பேத்கர் அவர்களைச் சந்தித்து கை குலுக்கியவர்.

அவர் என்னுடன் மாநிலக் கல்லூரியில் பி.ஏ. படித்தவர். இருவரும் விக்டோரியா மாணவர் விடுதியில் தங்கிப் படித்தோம். இருவரும் வகுப்பு நண்பர்கள்.

நான் எம்.பி.பி.எஸ். படிப்பை விட்டு வெளியேற்றப்பட்டபின் அவர் இரண்டாண்டுகள் கழித்து தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரியில் சேர்ந்தார். அவரும் மூன்று முறை தோல்வியடைந்து வெளியே வந்து விட்டார் என்பதும் அவர் எனது வீட்டிற்கு வந்த பிறகுதான் தெரியும்.

மீண்டும் மருத்துவக் கல்லூரிக்குள் நுழைவது பற்றி விளக்கிக் கூறினார்.

1960க்கு முன் மருத்துவக் கல்லூரியில் சேர்ந்த யாரும் வெளியேற்றப் படுவதில்லை.

பெருந்தலைவர் காமராசர் முதலமைச்சராக இருந்தபோது மருத்துவக் கல்லூரி இடங்களில் எஸ்.சி., எஸ்.டி. மாணவர்கள் சதவிகிதத்தை 12 சதவிகிதத்திலிருந்து 14 சதவிதமாக உயர்த்தினார்.

இது மேட்டுக் குடியினருக்குப் பொறாமையாக இருந்தது. அதனால் அவர்கள் ஆத்திரமடைந்தார்கள். எனவே, அமைச்சர் பக்தவச்சல முதலியார் அவர்கள் எம்.பி.பி.எஸ். முதலாம் ஆண்டு தேர்வு மூன்று முறை மட்டுமே எழுதலாம். மூன்று முறைக்கு தேர்வடையா விட்டால் மருத்துவப் படிப்பை விட்டு வெளியேற வேண்டும் என்ற விதிமுறையை அமுல்படுத்தினார்.

1960க்குப் பின் சேர்ந்தவர்களில் நூறு தாழ்த்தப்பட்ட மாணவர்களில் ஆண்டு தோறும் 60 பேர்கள் வரை வெளியேற்றப்பட்டார்கள்.

தாழ்த்தப்பட்ட மாணவர்கள் மட்டுமே பாதிக்கப்பட்டார்கள். தாழ்த்தப்பட்ட மாணவர்கள் எளிதில் மருத்துவக் கல்லூரியில் சேர்ந்து விடுகிறார்கள். மேலும் கட்டணமின்றி ஒசியில் படிக்கிறார்கள் என ஆசிரியர்களும் மற்ற மாணவர்களும் பொறாமையுடன் பேசிக் கொள்வார்கள். சில பேராசிரியர்கள் வெளிப்படையாகவே பேசுவார்கள்.

மூன்று முறை மட்டுமே தேர்வு எழுத அனுமதித்த விதிமுறை தாழ்த்தப்பட்ட மாணவர்களை பழிவாங்குவதற்கு அவர்களுக்கு நல்ல வாய்ப்பாக அமைந்தது.

எனவே, ஆண்டு தோறும் தமிழகத்திலுள்ள மருத்துவக் கல்லூரிகளில் 60 சதவிகித தாழ்த்தப்பட்ட மாணவர்கள் கொல்லைப் புறமாக வெளியே அனுப்பப்பட்டார்கள்.

இதற்கு ஒரு முடிவு கட்டாவிட்டால் தாழ்த்தப்பட்ட மாணவர்களில் 60 விழுக்காட்டினர் டாக்டர் படிப்பை இழக்க வேண்டிய அவல நிலை ஏற்படும்.

மேலும் தொழிற்கல்வியில் பொறியியல், விவசாயம், மிருக வைத்தியம்

ஆகியவற்றிலும் இந்த விதிமுறை பயன்படுத்தப்பட்டாலும் மருத்துவக் கல்வியில் மட்டும் கடுமையாக இந்தப் பழிவாங்கும் முறை அமுல்படுத்தப்பட்டது.

தேர்வின் போது சில தேர்வாளர்கள் சாதியைக் கேட்டே மதிப்பெண் போடுவார்கள். இந்தக் கொடுமையைப் பற்றி யாரும் சிந்திக்கவே இல்லை.

நண்பர் இ. சுப்பிரமணியம் இதை விரிவாக அலசி ஆராய்ந்து இந்த விதிமுறைகளை மாற்றுவோம் என என்னிடம் விளக்கிக் கூறினார்.

எனக்கு நம்பிக்கை இல்லை. இருப்பினும் முயற்சிப்போம் என செயலில் இறங்கினோம்.

மனு தயாரித்தோம். அமைச்சர்கள், அதிகாரிகள், சட்டமன்ற உறுப்பினர்கள் முதலானோரைச் சந்தித்து முறையிட்டோம்.

அன்றைய சென்னை பல்கலைக்கழக துணைவேந்தர் டாக்டர் லட்சுமணசாமி முதலியார் அவர்களை நேரில் சந்தித்து முறையிட்டோம். அவர் முடியவே முடியாது; உயிருடன் விளையாடதீர்கள் என கூறிவிட்டார்.

எல்லா புகழும் அம்பேத்கருக்கே

பாபாசாகேப் அம்பேத்கர் அவர்களின் கைகளைப் பிடித்துக் குலுக்கி வணங்கியவர் நண்பர் இ. சுப்பிரமணியம். அவர் என்னை ஒரு மாமனிதரைச் சந்திக்க அழைத்துச் சென்றார். அவர்தான் மேதகு நீதியரசர் புஷ்பராஜ் அவர்கள். பாபாசாகேப் அம்பேத்கர் அவர்கள் இந்திய அரசியல் சட்டம் எழுதும் போது தனக்கு ஒரு வழக்கறிஞர் (Advocate) வேண்டுமென இராஜாஜி அவர்களிடம் கேட்டுக் கொண்டார்கள். இராஜாஜி சென்னையிலிருந்து சட்டம் படித்த புஷ்பராஜ் அவர்களை அனுப்பினார். புஷ்பராஜ் அவர்கள் பாபா சாகேப் இந்திய அரசியல் சட்டம் எழுதும் போது அவருக்கு உதவியாளராக பணிபுரிந்திருந்தார். பின்னாளில் அவர் சென்னையில் நீதிபதியாகவும் சிறந்த வழக்கறிஞராகவும் பணியாற்றினார்.

நண்பர் சுப்பிரமணியம் அவரை அணுகி விளக்கிக் கூறினார். நீதியரசர் புஷ்பராஜ் அவர்கள் மனு ஒன்றைத் தயாரித்துக் கொடுத்தார். அந்த மனுவில் பாபா சாகேப் அம்பேத்கர் அவர்களின் அறிவுத்திறன் மிளிர்ந்து கொண்டிருந்தது எனலாம்.

மீண்டும் நீதியரசர் புஷ்பராஜ் அவர்கள் தயாரித்துக் கொடுத்த மனுவை துணைவேந்தர் அவரிகளிடம் சமர்ப்பித்த போது அவரால் மறுப்புக் கூற முடியவில்லை.

"ABSOLUTELY CORRECT. BUT IT IS NOT IN MY HAND. YOU BETTER APPROACH THE GOVERNMENT"

"இது முற்றிலும் சரியானது. ஆனால் இது என் கையில் இல்லை. நீங்கள் அரசாங்கத்தை அணுகுங்கள்" என்று கூறினார்.

அந்த அளவிற்கு நீதியரசர் புஷ்பராஜ் அவர்களால் அந்த விண்ணப்பம் (பெட்டிஷன்) தயாரிக்கப்பட்டிருந்தது.

சட்டமன்றத்தில் பல உறுப்பினர்கள் இதுபற்றிப் பேசினார்கள். கே.பி.எஸ். மணி அவர்கள் சட்டமன்றத்தில் இது தொடர்பாக மிகவும் விளக்கமாகப் பேசினார்.

ஆனால், மருத்துவத்துறை அமைச்சராக இருந்த ஜோதி வெங்கடாசலம், "மருத்துவக் கல்வி மனித உயிரைக் காப்பாற்றுவது. அதைத் தளர்த்த முடியாது" என கண்டிப்பாகக் கூறிவிட்டார்.

பெருந்தலைவர் காமராசர் அவர்களிடம் விளக்கிக் கூறி முறையிட்டோம். அவர் மிகவும் வேதனையடைந்தார். உடனே தொலைபேசியில் அதிகாரிகள் மற்றும் அமைச்சர்களைத் திட்டினார்.

அதன்பின் காங்கிரசு ஆட்சி முடிவு பெறும் தருவாயில், "இதுகாறும் எம்.பி.பி.எஸ். மூன்று முறை தோல்வியடைந்தவர்கள் மேலும் ஒரு முறை நான்காவது முறையாகத் தேர்வு எழுதலாம்" என வாய்ப்பளிக்கப்பட்டது.

அதைப் பயன்படுத்தி பலர் மீண்டும் மருத்துவக் கல்லூரியில் சேர முடிந்தது. பலர் பல்வேறு அரசுப் பணிகளில் சேர்ந்து விட்டார்கள். அவர்கள் இருக்குமிடம் தெரியாததினால் தொடர்பு கொள்ள இயலவில்லை.

நான் விமான நிலையத்தில் பணியாற்றிக் கொண்டு தேர்ச்சியடையாத ஒரே பாடமாகிய இரசாயனத்தில் தேர்வு எழுதி தேர்வடைந்து விட்டேன்.

1968ல் விமான நிலைய வேலையை விட்டு விலகி மீண்டும் தஞ்சை மருத்துவக் கல்லூரியில் இரண்டாம் ஆண்டு வகுப்பில் சேர்ந்தேன்.

இரண்டாம் முறை செத்துப் பிழைத்தேன்

கும்பகோணம் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தபோது டைபாய்டு காய்ச்சல் கண்டு முதல் முறையாகச் செத்துப் பிழைத்ததைப் பற்றி முன்பே கூறியுள்ளேன்.

தஞ்சை மருத்துவக் கல்லூரியில் எம்.பி.பி.எஸ். முதலாண்டு தேர்வில் மூன்று முறையும் தோல்வியடைந்ததால் படிப்பிலிருந்து வெளியேற்றப்பட்டு எதிர்காலமே இருண்டு போய் நடைப்பிணமாய்க் கிடந்த நான் மீண்டும் எம்.பி.பி.எஸ். இரண்டாம் ஆண்டு வகுப்பில் சேர்ந்து இரண்டாவது முறை உயிர் பிழைத்தேன்.

நான் டாக்டராக வேண்டும் என்று கருப்பம்புலம் அய்யா பி. வெங்கடாசல தேவர், பெருந்தலைவர் காமராசர், பி. பரமேசுவரன், சரவணம் பிள்ளை, எஸ்.என்.எஸ். அஸீஸ், டி.பி. ஏழுமலை முதலானோர் உளமார விரும்பினார்கள். அவர்களுடைய நல்லெண்ணத்திற்கு மாறாக நான் படிப்பை கோட்டை விட்டேன். எனவே அந்தப் பெருமக்களைப் பார்ப்பதற்கே எனக்குக் கூச்சமாக இருந்தது.

இந்த நேரத்தில் தான் எனது தெய்வம் பாபா சாகேப் அம்பேத்கர் அவர்கள், நண்பர் சுப்பிரமணியம் அவர்களின் உருவில் வந்து நீதியரசர் புஷ்பராஜ் அவர்களிடம் தனது அறிவைச் செலுத்தி நான் மீண்டும் எம்.பி.பி.எஸ். வகுப்பில் சேருவதற்கு உதவினார்.

எனவே, இம்முறை நான் அரசியல் பற்றி அணுவளவும் சிந்திக்கவில்லை. அன்றாட நாளிதழ்களைக் கூடப் படிப்பதில்லை. அரசியல்வாதிகளைச் சந்திப்பதுமில்லை.

இரவு பகலாகப் படித்தேன். நூலகம் மூடும் வரை படித்தேன். பாடபுத்தகங்கள் வாங்குவதற்கு என்னிடம் பணமில்லை. எனவே, நண்பர்களிடம் வாங்கினால் இரவு முழுதும் படித்து குறிப்பு எடுத்துக் கொண்டு காலையில் திருப்பிக் கொடுத்து விடுவேன்.

கல்லூரி வகுப்பறையில் சன்னல் கதவுகளைத் திறந்து கொண்டு உள்ளே சென்று இரவு முழுவதும் படிப்பேன்.

தஞ்சாவூரில் சோழ மன்னர்கள் காலத்தில் மன்னரும் இராணியும்

உல்லாசமாக இருப்பதற்கு மலர்த் தோட்டமிருந்தது. அது பிற்காலத்தில் இராசா தோட்டம் என அழைக்கப்பட்டது. மருத்துவக் கல்லூரிக்குச் செல்லும் வழியில் அந்தத் தோட்டம் மாந்தோப்புக் காடாக இருந்தது.

நானும் எனது நண்பர் தங்கராசு என்பவரும் குடிக்கத் தண்ணீர், தெர்மாசுக் குடுவையில் தேநீர், சிற்றுண்டி, ரொட்டிப் பொட்டலம் ஆகியவை களுடன் யாருக்கும் தெரியாமல் காலையிலேயே இராசா தோட்டத்திற்குச் சென்று விடுவோம். மாலையில் சூரிய வெளிச்சம் மறையும் வரை அந்தக் காட்டிலேயே படிப்போம்.

சாதி வேற்றுமை

பிசியாலஜி பேராசிரியராக ஒரு சாதி வெறிப்பிடித்த பார்ப்பனர்–டாக்டர் சுப்பிரமணிய அய்யர் தஞ்சை மருத்துவக் கல்லூரிக்கு வந்து விட்டார். அவர் வெளிப்படையாகவே பிராமணர்கள் தான் புத்திசாலிகள் எனக் கூறுவார். அவருக்கு எனது சாதி நன்கு தெரிந்து விட்டது. எனக்கு தேர்வளிக்க (பாஸ்) முடியாது என நேரிடையாகவே கூறினார். விடுதிக்குப் பணம் கட்டவில்லை என விடுதியைக் காலி செய்யுமாறு கூறிவிட்டார். வார்டனாக இருந்த டாக்டர் ஜமால் மகம்மதுவும் என்னை விடுதியை விட்டு காலி செய்ய பிடிவாதப்படுத்தினார்.

மனிதநேயர் டாக்டர் சிவராசன்

வேறு வழியின்றி கல்லூரிக்கு எதிரில் ஏழு ரூபாய் வாடகையில் ஒரு அறை எடுத்துக் கொண்டு அதில் நானே சமைத்து சாப்பிட்டேன். பல நாட்கள் இரவு சாப்பாடு இன்றி தண்ணீரை மட்டும் குடித்துக் கொண்டு படித்தேன்.

ஒருநாள் பசியோடு வந்து கொண்டு இருந்தேன். கல்லூரி முதல்வர் டாக்டர் சிவராசன் அவர்கள் காரில் வந்து கொண்டிருந்தார். காரை எனக்கு அருகில் நிறுத்தினார். எனக்கு ஒன்றும் புரியவில்லை.

''என்ன சேப்பா, வெயிலில் சோர்வாய் போய்க் கொண்டிருக்கிறாய்'' என்றார்.

எனக்கு ஸ்காலர்ஷிப் வரவில்லை. அதனால் மாணவர் விடுதியில் சாப்பிடக் கூடாது என்று வெளியேற்றி விட்டார்கள். எதிரே ஒரு வீடு வாடகைக்கு எடுத்துக் கொண்டு சமைத்துச் சாப்பிட்டு வருகிறேன் என்றேன்.

அவருடைய அறைக்கு வருமாறு கூறினார். நான் வார்டன் ஜமால் முகம்மதுவை அழைத்து ''சேப்பனிடம் பணம் வாங்கக் கூடாது. அவன் பணம் கட்டவில்லையெனில் நான் பணம் கொடுக்கிறேன்'' என உத்தரவிட்டார்.

அன்று முதல் விடுதியில் சாப்பிட முடிந்தது. கல்லூரி முதல்வர் டாக்டர் சிவராசன் அவர்கள் மதுரை தியாகி வைத்தியநாத அய்யரின் பேரன் என்பது அவர் அன்று கூறித்தான் எனக்குத் தெரியும்.

மறக்க முடியாத மாமனிதர் கலெக்டர் மலையப்பன்

முன்னாள் மாவட்ட ஆட்சியர் (கலெக்டர்) மலையப்பன் அவர்கள் தஞ்சாவூர் ராசப்பா நகரில் வசித்து வந்தார்கள். அவர் சிந்தனையிலும் செயலிலும் இயற்கையாகவே பெரியார் போன்றவர். அண்ணன் தொண்டு வீராசாமி அவர்கள் அய்யா மலையப்பன் அவர்களை அறிமுகப்படுத்தினார்கள். திருச்சி மாவட்ட ஆட்சியராகவும் ஆதித் திராவிட நலத்துறை இயக்குனராகவும் பணியாற்றி தாழ்த்தப்பட்ட மக்களின் முன்னேற்றத்திற்கு அரிய பணியாற்றியவர் மகான் அய்யா மலையப்பன் அவர்கள். அவரை கலெக்டர் மலையப்பன் என்றே அழைப்பது வழக்கம்.

தஞ்சை மாவட்டத்தில் ஒரத்த நாடு வட்டம் கண்ணுந்தான் குடியில் பிறந்து ஒரு தலைசிறந்த பகுத்தறிவாளராகத் திகழ்ந்தவர். முக்குலத்தோர் இனத்தின் கள்ளர் சமுதாயத்தைச் சேர்ந்த அய்யா அவர்கள் தாழ்த்தப்பட்ட மக்களுக்காக அரும்பாடுபட்டு அம்மக்களோடு ஒன்றிவிட்டார். ஆகவே, மற்ற மாவட்டங்களிலுள்ளவர்கள் அவர் தாழ்த்தப்பட்ட இனத்தைச் சார்ந்தவர் என நம்பி இருந்தார்கள்.

பணியிலிருந்து ஓய்வு பெற்றபின் தஞ்சை ராசப்பா நகரில் ஒரு சாதாரண வீட்டில் எளிமையாக வசித்து வந்தார். அவருடைய மகள் ''செல்வராஜ் உயர்நிலைப் பள்ளி'' என்ற கல்வி நிறுவனத்தை நடத்திக் கொண்டிருந்தார்கள்.

அய்யா மலையப்பன் அவர்கள் கருப்பம்புலம் அய்யா பி. வெங்கடாசல தேவர் அவர்களைப் போல அணுவளவும் மூட நம்பிக்கையும் கடவுள் நம்பிக்கையுமற்றவர். உண்மையான பகுத்தறிவாளர்.

துரதிர்ஷ்டவசமாக (கெட்ட காலமாக) அவருடைய இரண்டு கண்களும் பார்வை இழந்தன.

ஏழை நரிக்குறவர் இன மாணவர்களுக்கு உதவும் வகையில் அவர்களுக்காக தன் வீட்டிலேயே மாணவர் விடுதி நடத்திக் கொண்டிருந்தார். நரிக்குறவர் இன மாணவர்கள் தான் அய்யா அவர்களுக்கு உணவு பரிமாறுவார்கள். அய்யா அவர்களுக்கான அனைத்துப் பணிகளையும் நரிக்குறவர் இன மாணவர்களே கவனித்து வந்தார்கள்.

நான் அடிக்கடி அய்யா அவர்களைச் சந்தித்து வந்தேன். கடிதங்களை அய்யா கூறுகின்றபடி நான் எழுதி அவர் கையைப் பிடித்து வைத்து கையொப்பம் (கையெழுத்து) வாங்கி அஞ்சலில் அனுப்புவேன்.

நரிக்குறவர் மாணவர்கள்தான் அய்யா அவர்களுக்கு உணவு ஊட்டி விடுவார்கள். நான் ஊட்டி விடுகிறேன் என்றால் அனுமதிக்க மாட்டார்கள்.

லோன் ஸ்காலர்ஷிப் (கடனுதவி)

எஸ்.சி. மற்றும் எஸ்.டி. மாணவர்கள் ஒருமுறை தேர்வில் தோல்வியுற்றால் அடுத்த ஆண்டுக்கான அரசு உதவித் தொகை (ஸ்காலர் ஷிப்) கிடைக்காது. இதனால், பலர் மேற்கொண்டு படிப்பைத் தொடர முடியாத அவல நிலை ஏற்பட்டது. இதை அய்யா மலையப்பன் அவர்களிடம் கூறினேன்.

அய்யா அவர்கள் ''நான் ஏற்கனவே இந்தப் பிரச்சனையை மகாபலிபுரத்தில் நடைபெற்ற கமிட்டி கூட்டத்தில் கூறியுள்ளேன். நல்ல வேளையாக நினைவூட்டினீர்கள்.

அந்தக் கமிட்டிக் கூட்டத்தில் 'பெயிலான மாணவர்கள் அடுத்து பாஸ் பண்ணும் வரையில் ஸ்காலர்ஷிப் பெற முடியாது. ஆகவே அவர்களுக்கு லோன் ஸ்காலர்ஷிப் கொடுக்கலாம். படிப்பு முடிந்து அவர்கள் சம்பாதிக்கும் போது தவணை முறையில் வட்டி இன்றி அந்தக் கடனை அடைக்கலாம். அதற்கு ஆவண செய்வோம்' எனக் கூறியுள்ளனர்'' என்றார்கள்.

அதுபற்றி நாங்கள் இருவரும் நீண்ட நேரம் ஆலோசனை நடத்தினோம்.

உடனே அய்யா அவர்கள் அன்றைய ஆதித்திராவிட நலத்துறை அமைச்சர் டாக்டர் சத்தியவாணி முத்து அவர்களுக்கு ஒரு கடிதம் எழுதுமாறு கூறினார்கள். அய்யா சொல்லச் சொல்ல நான் எழுதினேன். அய்யாவிடம் கையெழுத்து வாங்கினேன்.

"நீங்களே சென்னைக்குச் சென்று அமைச்சரிடம் நான் கொடுத்ததாக நேரில் கொடுங்கள்'' என்றார்கள்.

மறுநாளே நான் சென்னைக்குப் புறப்பட்டுச் சென்று அமைச்சர் அன்னை டாக்டர் சத்தியவாணி முத்து அவர்களை அவருடைய இல்லத்தில் சந்தித்து கடிதத்தைக் கொடுத்தேன்.

'நமக்காக வேறு சாதிக்காரர் பாடுபடுகிறார். நம்மவர்களுக்கு இதுபற்றி ஆலோசனை கூட கூறத் தெரியவில்லை. தம்பி, கண்டிப்பாக நான் இதை நிறைவேற்றுகிறேன். முதலில் நீங்கள் இந்த கடன் தொகையைப் பெற வேண்டும்'' என்றார் அமைச்சர் அன்னை சத்தியவாணிமுத்து அவர்கள்.

"சரிங்க அம்மா. மிக்க நன்றி! என கூறிவிட்டு விடை பெற்றேன். சில மாதங்களில் முதன்முதலில் நானும் மற்ற நண்பர்களும் இந்தக் கடன் தொகையைப் பெற்றோம்.

அய்யா மறைந்தார்

நாங்கள் லோன் ஸ்காலர் ஷிப் பெறுவதற்குள் அய்யா மலையப்பன் அவர்கள் இயற்கை எய்தினார்கள். தஞ்சை மருத்துவக் கல்லூரி தாழ்த்தப் பட்ட மாணவர்கள் மாலை அணிவித்து அய்யா அவர்களுக்கு இறுதி அஞ்சலி செலுத்தினோம். அய்யா அவர்களின் இறுதி ஊர்வலத்தில் அணிவகுத்துச் சென்று மயானத்தில் நன்றி செலுத்தினோம்.

பன்மொழிப் புலவர் ஏ.பி. பொன்னுசாமி

மாநிலக் கல்லூரியில் எனக்குப் பொருளாதார பேராசிரியராக இருந்த ஏ.பி. பொன்னுசாமி அவர்கள் தனது பேராசிரியர் பதவியை விட்டு விலகி டெபுடி கலெக்டராகி தஞ்சை மாவட்ட செட்டில்மெண்ட் அதிகாரியாக பணியாற்றினார்.

சமுதாய உணர்வுமிக்க அண்ணன் ஏ.பி. பொன்னுசாமி அவர்கள், அதிகாரியாக இருப்பினும், தனது உணர்வுகளை அடக்கிக் கொள்ள இயலாமல் என்னிடம் வந்து தஞ்சையில் ஒவ்வொரு மாதம் கல்ச்சுரல் மீட் (Cultural Meet) நடத்துவோம் எனக் கேட்டார்.

வாழ்க்கையில் செத்துப் பிழைத்து மீண்டும் படிக்கும் போது இந்த வம்பு

வேண்டாம் என்றேன். அவர் விடுவதாக இல்லை. எனவே, செல்வராஜ் பள்ளியில் அய்யா கலெக்டர் மலையப்பன் அவர்களின் தலைமையில் அய்யா உயிரோடு இருக்கும் வரை திங்கள்தோறும் "கலச்சரல் மீட்" கூட்டம் நடத்தினோம்.

அய்யா கலெக்டர் மலையப்பன் அவர்கள் முக்குலத்தோர் இனத்தைச் சேர்ந்தவராக இருப்பினும் தாழ்த்தப்பட்ட மக்களுக்காக தன்னை அர்ப்பணித்துக் கொண்ட மாமனிதராவார். எனவே, அய்யா, கலெக்டர் மலையப்பன் அவர்களுக்கு தஞ்சாவூரில் சிலை அமைக்க வேண்டுமெனத் திட்டமிட்டிருந்தேன். எனது பல்வேறு போராட்டங்கள், மருத்துவத் தொழில் பொருளாதார நெருக்கடி போன்ற காரணங்களால் இத்திட்டத்தை நிறைவேற்ற என்னால் இயலாமல் போனதை எண்ணி அடிக்கடி பெரிதும் வேதனையடைகிறேன்.

கரை ஏறினேன்

மூன்றாம் ஆண்டு படிக்கும் போது மிகவும் சிரமப்பட்டு பேராசிரியர் அய்யா டாக்டர் கோபாலகிருஷ்ணன் அவர்கள் உதவியுடன் செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரிக்கு மாற்றுதல் பெற்றேன்.

விடுமுறை நாட்களில் பல உணவகங்களில் வேலை செய்தேன். பெரிய மேட்டிலிருந்த எவரெஸ்டு ஓட்டலில் டெலிபோன் ஆபரேட்டர், வரவேற்பாளர், அக்கவுண்ட்டெண்ட் போன்ற பணியாளராகவும் பல விடுமுறை நாட்களில் வேலை பார்த்தேன்.

சிலசமயம் முக்கிய கூட்டங்கள் நடைபெறும் இடங்களில் மலையாள நண்பர் ஒருவருடன் டீ விற்றேன்.

1975ல் செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரியில் எம்.பி.பி.எஸ். படிப்பை முடித்தேன்.

இடையில் எனது மாமானரும் காலமானார். எனது தந்தையும் காலமானார். எனவே, எவ்வளவோ இன்னல்களை அனுபவிக்க நேர்ந்தது.

செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரியில் படிக்கும்போது விடுதியில் மாணவர்களுக்கான கடை ஒன்றை ஏலம் எடுத்து நானே நடத்தினேன்.

அதற்கு பிரின்சிபால் பேராசிரியர் டாக்டர் ஜெயவேல் அவர்களும் வார்டன் பேராசிரியர் டாக்டர் இராமச்சந்திரன் ஆகியோரும் பெரிதும் உதவினார்கள்.

எம்.பி.பி.எஸ். முடித்து பயிற்சி டாக்டராக பணியாற்றிபோது கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரிக்கு மாற்றுதல் பெற்றேன். கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி–இராயப்பேட்டை மருத்துவமனையில் பயிற்சி மருத்துவர் பணியை முடித்தேன். கொஞ்ச நாட்கள் இராயப்பேட்டை மருத்துவமனையில் சீனியர் பயிற்சி டாக்டராகவும் பணியாற்றினேன்.

1976–ல் ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியில் டி.ஜி.ஓ. படிப்பில் சேர்ந்தேன். ஆர்.எஸ்.ஆர்.எம். மருத்துவமனையில் டி.ஜி.ஓ. முடித்தேன்.

ஆர்.எஸ்.ஆர்.எம். மருத்துவமனை சூப்ரண்டென்டென்ட் பேராசிரியர் டாக்டர் (திருமதி) காலீன் சீனிவாசன் அவர்களின் மாணவனாக இருந்தேன். அம்மா அவர்கள் "சேப்பன் எனது பிள்ளை" எனக் கூறுவார்கள். என்னை பாசத்துடன் செல்லப் பிள்ளையாக நடத்தினார்கள். நான் ஒருவனே மாணவன் (ஆண்மாணவன்) என்பதால் எல்லோரும் என்னை சகோதரனாக அன்புடன் நடத்தியதை நன்றியுணர்வோடு என்றும் மறவாமல் எண்ணுகிறேன்.

பாபா சாகேப் அம்பேத்காரைப் போன்று நிறைய படித்து பட்டங்கள் பெற வேண்டும் என்பது எனது பேரவா. ஆனால் எம்.பி.பி.எஸ்., டி.ஜி.ஓ. மற்றும் அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் எம்.ஏ. (வரலாறு) மட்டுமே பெற முடிந்தது. மதுரை பல்கலைக் கழகத்தில் எம்.ஏ. (அரசியல்) இரண்டு ஆண்டுகள் முடித்து தேர்வு எழுதும் போது சமுதாய போராட்டத்தின் காரணமாக சிறையில் அடைக்கப்பட்டேன். அதனால் தேர்வு எழுத முடியவில்லை. இருப்பினும் இன்றுவரை படித்துக் கொண்டே இருக்கிறேன்.

33. மீண்டும் அரசியல்

முதலில் மருத்துவக் கல்லூரியிலிருந்து வெளியேற்றப்பட்டதால் வாழ்வின் கடைக்கோடிக்குத் தள்ளப்பட்ட மாமிச பிண்டமாகி விட்டோம் என வருந்திக் கொண்டிருந்தேன்.

எதிர்பாராத விதமாக மாமனிதர் சுப்பிரமணியம் அவர்கள் எனது வாழ்க்கையில் ஒளிவீசும் மாற்றத்தை ஏற்படுத்தினார். மீண்டும் எம்.பி.பி.எஸ். சேர்ந்தது முதல், முடித்த பின்பும்–டி.ஜி.ஒ. முடிக்கும் வரை சாதாரண பத்திரிகை கூட படிப்பதில்லை. அரசியல் தலைவர்கள் யாரையும் சந்திப்பதில்லை. யாராவது அரசியல் பேசினால் எழுந்து போய் விடுவேன்.

படிக்கும்போது மாணவர்கள் அரசியலில் ஈடுபட்டால் பிறகு எவ்வளவு இழப்புகளும் இன்னல்களும் அனுபவிக்க நேரிடுகின்றது என்பதை அனுபவ ரீதியாக உணர்ந்தேன்.

ஆகவே தான், இப்போது நான் நடத்தும் போராட்டங்கள், மாநாடுகள், கூட்டங்கள் ஆகியவை எதிலுமே படிக்கிற மாணவர்கள் கலந்து கொள்ள அனுமதிப்பதில்லை.

1976ஆம் ஆண்டு முதல் மருத்துவத் தொழிலை ஆரம்பித்து நடத்திக் கொண்டிருக்கிறேன்.

இடையில் அன்றைய தமிழக முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்கள் எஸ்.எம். துரைராஜ் அவர்களுக்கு துணை அமைச்சர் பதவி அளித்தார்கள். எனவே அவருக்கு பாராட்டு விழா நடத்த வேண்டும் என நண்பர் வி.எல். நாதன் அவர்கள் கூறினார். ஆகவே, எனது தலைமையில் எல்.எல்.ஏ. கட்டடத்தில் எஸ்.எம். துரைராஜ் அவர்களுக்கு பாராட்டு விழா நடத்தினோம். அதிலிருந்து பழைய அரசியல் நண்பர்கள் என்னை மீண்டும் கண்டுபிடித்து விட்டார்கள். அவர்களிடம் மாட்டிக் கொள்வதைத் தவிர வேறு வழியே இல்லை. எம்.டி (M.D.) படிப்பில் சேர வேண்டுமென விரும்பினேன். மீண்டும் அரசியல் வாதிகளிடம் சிக்கிக் கொண்டதால் M.D. படிக்க இயலாமல் போய்விட்டது.

லீக் முனுசாமி, பரமானந்தம், எழும்பூர் லீக் கருப்பன், தேவராஜ் போன்ற பழைய நண்பர்கள் காங்கிரசுக் கட்சியில் என்னை ஈடுபடுத்தி விட்டார்கள்.

தென் சென்னை மாவட்ட பொருளாளர் பதவி கொடுக்கப்பட்டேன்.

இடையில் நண்பர்கள் வி.எல். நாதன், கருணானந்தம், கருணாகரன், எம். முனுசாமி போன்ற நண்பர்கள் எனது மருத்துவமனையில் அமர்ந்து பாபா சாகேப் அம்பேத்கர் அவர்களைப் பற்றி பேசிக் கொண்டிருப்போம். அதன் விளைவாக "அண்ணல் அம்பேத்கர் திருச்சபை'' துவங்கப்பட்டது.

அண்ணல் அம்பேத்கர் திருச்சபை

1978ஆம் ஆண்டு முன்னாள் சென்னை பல்கலைக் கழக துணை வேந்தர் தாமரைச் செல்வர் நெ.து. சுந்தரவடிவேலு அவர்கள் அண்ணல் அம்பேத்கர் திருச்சபையை துவக்கி வைத்தார்கள். அவரே திருச்சபையின் காப்பாளராகவும் இருந்தார்கள் என்பது தனிச்சிறப்பாகும்.

திருச்சபை ஒவ்வொரு வாரமும் ஞாயிற்றுக்கிழமை தேவநேயப் பாவாணர் நூலகக் கட்டடத்தில் நடத்தப்பட்டது.

அய்யா நெ.து. சுந்தரவடிவேலு அவர்கள் அடிக்கடி சிறப்புக் கூட்டங்களில் கலந்து கொண்டார்கள்.

அன்னை மீனாம்பாள் சிவராஜ் அவர்களின் பிறந்த நாள் விழா திருச்சபை சார்பில் நடத்தப்பட்டது.

அம்மா அவர்கள் உணர்வு பத்திரிகையை வெளியிட்டார்கள்.

கலந்து கொண்டவர்களில் தவத்திரு. குன்றக்குடி அடிகளார், மலேசிய தமிழ் அறிஞர் இராமதாசர், கர்னாடகா முன்னாள் அமைச்சர் பசவலிங்கப்பா, கே.பி.எஸ். மணி, எல். இளையபெருமாள், பேராசிரியர் கணபதி, அன்னை மரகதம் சந்திரசேகர், அன்னை டாக்டர் சத்தியவாணி முத்து, வி.பி. முருகையன், பௌத்த பெரியார் மு. சுந்தரராசனார், சொல்லின் செல்வர் ஆ. சக்திதாசன், ஆ. ஜெகநாதன், அய்யா ஜெயராஜ் போன்றவர்கள் முக்கியமானவர்கள்.

107 கூட்டங்கள் நடத்தியபின் இடையில் நடத்த இயலாமல் தடைப்பட்டது. மீண்டும் 2004ல் மே திங்கள் 108வது கூட்டத்தை நடத்தினோம்.

சென்னையில் வாரந்தோறும் அண்ணல் அம்பேத்கர் திருச்சபை கூட்டம் நடத்தி தலித் மக்களிடையே ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தினோம். இத் திருச்சபையின் கூட்டங்களுக்குத் தான் முதன் முதல் பெரிய அளவில் விளம்பர சுவரொட்டிகளை அச்சிட்டு ஒட்டினேன்.

34. இந்தியக் குடியரசுக் கட்சியில் இணைந்தேன்

திருச்சபை தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருந்தது. 107 கூட்டங்களுக்கும் யாரும் ஒரு பைசா செலவுக்குக் கொடுக்கவில்லை. என்னுடைய சொந்த செலவிலேயே நடத்தினேன் என்பதை எல்லோரும் நன்கு அறிவார்கள்.

1978ஆம் ஆண்டு சென்னை புரசைவாக்கத்திலுள்ள திருமண மண்டபத்தில் குடியரசுக் கட்சியின் பழம்பெரும் தலைவர் கௌரிதாஸ் அவர்கள் "சமுதாய எழுச்சி'' மாநாடு நடத்தினார். அம்மாநாட்டில் அகில இந்திய குடியரசுக் கட்சித் தலைவர் பாரிஸ்டர் கோபரா கடே அவர்கள் கலந்து கொண்டார்கள். பெரும்பாலான குடியரசுக் கட்சிக்காரர்கள் கலந்து கொண்டார்கள். அவர்களுக்கிருந்த அம்பேத்கர் உணர்வைப் பார்த்து நான் பூரித்துப் போனேன்.

எங்கே பாபா சாகேப் அம்பேத்கர் அவர்களின் உண்மையான தொண்டர்கள் இருக்கிறார்களோ அங்கே நானும் இருப்பதுதான் முறையானது எனக் கருதினேன்.

ஆகவே பாரிஸ்டர் கோபராகடே முன்னிலையில் நான் இந்திய குடியரசுக் கட்சியில் இணைந்தேன்.

மாநிலத் தலைவர் வி.பி. முருகையன் அவர்கள் என்னை சென்னை மாவட்ட தலைவராக நியமித்தார்கள். நான் குடியரசுக் கட்சியின் சென்னை மாவட்ட தலைவராகவும் தளபதி தயாளன் அவர்கள் மாவட்ட செயலாளராகவும் சுந்தரமூர்த்தி துணைச் செயலாளராகவும் செயல்பட்டோம். மாவட்டத் தலைவர் பொறுப்பேற்றதும் நானும் தம்பி சாந்த மூர்த்தியும் காலை 6 மணிக்கு எனது ஸ்கூட்டரில் புறப்பட்டு தினம் ஒரு டிவிஷனிலுள்ள கிளைகளுக்குச் செல்வோம். கட்சிக்காரர்களைப் பார்த்து அறிமுகம் செய்து கொண்டோம்.

சில நாட்களில் இரவு 9 மணிக்கு எனது மருத்துவமனையை மூடிவிட்டு ஒரு டிவிஷனுக்குச் சென்று கட்சிக்காரர்களைச் சந்தித்து வருவோம்.

பாரிஸ்டர் கோபராகடே பலமுறை சென்னைக்கு வந்துள்ளார்கள்.

"நான் முன்பு சென்னைக்கு வந்த போதெல்லாம் வயதானவர்களை மட்டும் தான் கண்டேன். டாக்டர் சேப்பன் நமது கட்சிக்கு வந்தபின் நிறைய இளைஞர்களைப் பார்க்கிறேன்'' என்று என்னை வெகுவாகப் பாராட்டினார்கள்.

1981 அக்டோபர் 14 அன்று மதமாற்றம்

குடியரசுக் கட்சியின் மாநில செயற்குழுவில் "நாம் பவுத்த நெறியை ஏற்று மதமாற்றம் செய்வது'' என தீர்மானிக்கப்பட்டது. அதன்படி விளம்பரங்கள் செய்யப்பட்டன. இந்த மதமாற்றத்திற்கு நானும் தம்பி சாந்த மூர்த்தியும் அயராது உழைத்தோம்.

தென்னாட்டு அம்பேத்கர் புத்த பெரியார் தொண்டு வீராசாமி அவர்கள் தலைமையில் சென்னை எழும்பூர் புத்த விகாரில் ஆயிரக்கணக்கானோர் வெள்ளாடை அணிந்து மதமாற்றத்தில் கலந்து கொண்டார்கள். வணக்கத்திற்குரிய நந்தீசுவர தேரோ அவர்கள் அனைவருக்கும் தீட்சையளித்தார்கள். சொல்லின் செல்வர் ஆ. சக்திதாசன் மற்றும் ஆயிரக் கணக்கானோர் அன்று முதல் பவுத்த புத்தர்களானோம்.

அதைத் தொடர்ந்து அடுத்த மதமாற்றம் வேலூரில் நடந்தது.

ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் சென்னை நகரில் பல்வேறு பகுதிகளில் பவுத்த நெறி விளக்கக் கூட்டங்கள் நடத்தினோம்.

சென்னை நகரில் அடிக்கடி பொதுக் கூட்டங்கள், ஆர்ப்பாட்டம், உண்ணாவிரதம், பேரணி ஆகியவை நடந்து கொண்டே இருக்கும்.

இந்தியக் குடியரசுக் கட்சியின் சென்னை மாவட்ட தலைவரானதும் ஆயிரம் விளக்கு மாடல் பாடசாலையில் வண்ண வண்ண போஸ்ட்டர் போட்டு மாபெரும் பொதுக் கூட்டம் நடத்தினோம். இந்தியக் குடியரசு கட்சி சார்பில் பெரிய அளவில் போஸ்டர் போட்டு நடத்தப்பட்ட முதல் பொதுக்கூட்டம் இதுவேயாகும்.

1982ஆம் ஆண்டு சென்னையை நோக்கி நடைப்பயணம்

வடஆற்காடு மாவட்டம் அரக்கோணம் அருகே மின்னல் கிராமத்தில்

ஆதித்திராவிடர்களின் வீடுகளுக்கு தீயிட்டு இரண்டு தலித் ஆசிரியர்களை உயிரோடு அதில் தூக்கிப் போட்டு சாகடித்தார்கள்.

இந்தக் கொடுமையைக் கண்டித்து இந்திய குடியரசுக் கட்சி சார்பில் மாபெரும் போராட்டம் நடத்தப்பட்டது. மாநிலத் தலைவர் வி.பி. முருகையன் தலைமையில் நூற்றுக்கணக்கானோர் அரக்கோணத்திலிருந்து சென்னையை நோக்கி நடைப் பயணம் (March to Madras) மேற்கொண்டோம். அதற்கு "மார்ச் டு மெட்ராஸ்'' என விளம்பரம் செய்யப்பட்டது. அன்றைய தமிழக முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களிடம் முறையிட்டு நீதி கோருவதற்காக இந்த நடைப் பயணம் மேற்கொள்ளப்பட்டது.

குடிக்கத் தண்ணீர் இல்லை

கடும் வெயிலாக இருந்தது. வழியில் குடிப்பதற்கு தண்ணீர் இல்லை. திருவாலங்காடு அருகில் வரும்போது ஒரு அழகான கிணறு இருப்பதைக் கண்டு அதற்குள் சென்று தண்ணீர் குடித்துத் தாகம் தீர்த்துக் கொள்ள நானும் சில இளைஞர்களும் மகிழ்ச்சியுடன் இறங்கினோம். மிகவும் அகலமான கிணறு. தண்ணீர் கொஞ்சமாக இருந்தது. தண்ணீரை கையில் அள்ளிக் கொண்டு பக்கத்தில் பார்த்தோம். யாரோ மலம் கழித்துக் கொண்டிருப்பதைக் கண்டு அதிர்ச்சியடைந்தோம். நல்ல வேளையாக தண்ணீரை குடிக்கவில்லை. இதை நினைத்தால் இன்னும்கூட வாந்தி வருவது போல இருக்கிறது.

கொஞ்ச தூரம் வந்ததும் திருவாலங்காட்டில் ஒரு கடலைக் கொல்லைக்கு பம்புசெட்டு மூலம் தண்ணீர் இறைத்துக் கொண்டு இருந்தார்கள். வாய்க்காலில் வந்த தண்ணீரை வாரி வாரி வயிறு நிறைய குடித்து தாகத்தைத் தீர்த்துக் கொண்டோம். தொடந்து நடக்கலானோம்.

திருவலங்காடு கடந்து வரும்போது எனது கால்கள் இரண்டும் இழுக்கத் தொடங்கின. அப்படியே விழுந்து விட்டேன். சிறிது நேரம் எனது கால்களை உருவி விட்டார்கள். அதன்பின் மிகவும் சிரமத்துடன் பயணத்தைத் தொடர்ந்தோம். அன்று இரவு வெள்ளவேடு தளபதி ஏழுமலை அவர்களின் இல்லத்தில் தங்கி உணவருந்திவிட்டு மறுநாள் பயணம் தொடர்ந்தது.

மாலை சுமார் நான்கு மணியளவில் வி.பி. முருகையன் மயங்கி விழுந்தார். கொஞ்ச தூரத்தில் சொல்லின் செல்வர் ஆ. சக்திதாசன் மயங்கி

விழுந்தார். அடுத்து இலட்சு இராஜேந்திரன் மயங்கி விழுந்தார்.

அவர்களை எல்லாம் சென்னை அரச பொது மருத்துவமனையில் சேர்த்தோம். பிறகு என்னுடைய தலைமையில் நடைப்பயணம் கோட்டை நோக்கிச் சென்றது.

நானும் சில முக்கியத் தலைவர்களும் போலீஸ் வேனில் கோட்டைக்கு அழைத்துச் செல்லப்பட்டோம். இது வரலாற்றுச் சிறப்புமிக்க போராட்டம் எனலாம்.

தலித்ஸ்தான் பிரகடனம்

இந்திய அரசியல் சட்டம் எல்லா குடிமக்களும் சமம் என அறிவித்த போதும் இந்துமதம் ஆதித் திராவிடர்களை இழி பிறவிகளாகவே நடத்துகிறது. இந்துமதம் இருக்கும்வரை ஆதித் திராவிடர்களுக்கு முழு சுதந்திரம் கிடைப்பதற்கு வாய்ப்பே இல்லை என்பதுதான் யதார்த்தமான உண்மையாகும். பட்டியல் சாதி (எஸ்.சி.) மக்கள் முழு சுதந்திரத்தை அனுபவிக்க அவர்களுக்கென தனி மாநிலம் அமைப்பது ஒன்றே சரியான தீர்வு என உணரப்பட்டது. எனவே, பட்டியல் சாதி மக்களுக்கு "தலித்ஸ்தான்'' என்ற தனி மாநிலம் அல்லது மாநிலங்கள் கொடுக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை வைத்து போராட்டம் துவங்கப்பட்டது.

விவேகி வி.எம்.எஸ். மணி அவர்கள் தலைமையில் சென்னை இரங்கூன் தெருவில் மாபெரும் பொதுக் கூட்டம் நடத்தி "தலித்ஸ்தான்'' பிரகடனப்படுத்தப்பட்டது. அதைத் தொடர்ந்து சுவரொட்டி விளம்பரங்கள் செய்யப்பட்டன. பொதுக் கூட்டங்கள் நடத்தப்பட்டன.

பாபாசாகேப் அம்பேத்கர் பிறந்தநாள் விழா

பாபா சாகேப் அம்பேத்கர் அவர்களின் 92ஆம் ஆண்டு பிறந்த நாள் விழா ஊர்வலம் 92 அலங்கார ஊர்திகளுடன் வள்ளுவர் கோட்டம் அருகிலிருந்து நேரு ஸ்டேடியம் வரை சென்றது. தளபதிகள் குதிரைகள் மீது கொடி பிடித்து வந்தார்கள். ஊர்வலம் தலைவர் வி.பி. முருகையன் தலைமையில் நடைபெற்றது.

சென்னை மாநகரில் இதற்கு முன்பும் பின்பும் இன்றுவரை இம்மாதிரியான மாபெரும் ஊர்வலம் நடைபெற்றதில்லை. மறுநாள், அம்பேத்கர் இளைஞர் இயக்கம் சார்பில் டாக்டர் எம். நாகப்பன் அவர்களின் தலைமையில் பெரியார் திடலில் மாநாடு நடந்தது.

35. குடியரசு கட்சியில் குழப்பம்

கட்சியின் மூத்த தலைவர்கள் சிலர் சொல்லின் செல்வர் சக்திதாசன் அவர்களுக்கும் எனக்கும் எதிர்ப்பாகச் செயல்பட்டார்கள். அப்போது சென்னைக்கு வந்திருந்த பாரிஸ்டர் கோபராகடே அவர்கள் சென்ட்ரல் இரயில்வே ஸ்டேஷன் ஒய்வு அறையின் தங்கி இருந்தார்கள். அவரை எல்லோரும் சந்தித்தார்கள்.

பிறகு கோபராகடேயுடன் சென்று அன்னை மீனாம்பாள் சிவராஜ் அவர்களைச் சந்தித்தோம். அன்னை மீனாம்பாள் சிவராஜ் அவர்கள் அவருடைய மருமகன் வருமானவரித்துறை அலுவலர் (இன்கம்டாக்ஸ் அதிகாரி) விஜயரங்கம் அவர்களை கட்சிக்குக் கொடுத்தார்கள். விஜயரங்கம் ஒருநாள் முழுவதும் கோபராகடே அவர்களுடன் இருந்தார்கள்.

கோபராகடே அவர்கள் இரயில் ஏறும் முன்பாக எங்களுக்கும் சிலருக்கும் சென்ட்ரல் இரயிலடியில் பெரும் மோதல் ஏற்பட்டது.

ஆனால் பாரிஸ்டர் கோபராகடே கண்டுகொள்ளவே இல்லை. அவர் இரயிலில் டெல்லிக்கும் புறப்பட்டார். இதுவே தலைவர் கோபராகடே அவர்கள் தமிழ்நாட்டிற்கு வந்த கடைசிப் பயணம்.

நான் குடியரசுக் கட்சியில் தீவிரமாக ஈடுபட்டதால் பொறாமை உணர்வுடன் எதிர்க்கத் துவங்கினார்கள்.

எனது பொருள், உழைப்பு, நேரம் ஆகிய அனைத்தையும் குடியரசுக் கட்சிக்காக நான் செலவிட்டிருந்த போதும் சிலர் என்னை எதிர்த்ததால் நான் பெரிதும் மனவேதனையடைந்தேன்.

ராவ்பகதூர் தந்தை சிவராஜ் அவர்களின் காலத்தில் தமிழ்நாட்டில் குடியரசு கட்சிக்கு தனி அலுவலகம் இருந்ததோ இல்லையோ எனக்குத் தெரியாது.

ஆரிய சங்காரன், கே.பி.எஸ். மணி, மு. சுந்தரராசன் போன்றவர்களின் காலம் முதல் கட்சிக்கென்று தனி அலுவலகம் கிடையாது என்பது எனக்கு நன்றாகத் தெரியும்.

ஆயிரம்விளக்கு அஸிஸ் முல்க் 5ஆவது தெருவில் ''தேவி பிரிண்டர்ஸ்'' என்ற அச்சகம் ஒன்றை நடத்திக் கொண்டிருந்தேன். அச்சகத்தின் இயந்திரங்களை விற்றுவிட்டு ''அண்ணல் அம்பேத்கர் திருச்சபை'' அலுவலகமாக மாற்றினேன். பிறகு நான் குடியரசுக் கட்சியில் இணைந்து சென்னை மாவட்டத் தலைவரானதும் திருச்சபையின் அலுவலகத்தை "குடியரசு கட்சி'' அலுவலகமாக மாற்றினேன்.

மாநிலத் தலைவர் வி.பி. முருகையன், மாநில செயலாளர் ஆ. சக்திதாசன், விவேகி வி.எம்.எஸ். மணி போன்ற தலைவர்கள் தினந்தோறும் கட்சி அலுவலகத்திற்கு வருகை தந்து கட்சியின் பணிகளைக் கவனித்து வந்தார்கள்.

அன்று முதல் இன்று வரை அஸிஸ் முல்க் 5ஆவது தெருவில் குடியரசு கட்சி அலுவலகம் செயல்பட்டு வருகின்றது.

இதை குடியரசு கட்சியினர் நன்றியுணர்வுடன் சிந்திப்பார்கள் என நம்புகிறேன்.

என்னால் விளம்பரமான சிலர் மவுனம் சாதித்தார்கள்.

"பறையன் நம்பத் தகுந்தவனுமல்ல; நம்பிக்கைக்கு உரியவனுமல்ல'' என்பதை பல ஆண்டுகளுக்குப் பின்பு "அறிவு வழி'' என்ற பத்திரிகையில் எழுதினேன். எந்த பறையனும் அதற்கு இன்று வரை பதில் கூற முடியவில்லை.

மும்பாய் (பம்பாய்) சென்றேன்

தமிழ்நாட்டில் குடியரசுக் கட்சியிலுள்ள குழப்பம் பற்றி முறையிடுவதற்காக மும்பாய்க்குச் சென்றேன். அட்வகேட் கோக்ரே மற்றும் பல தலைவர்கள், தொண்டர்கள் ஆகியோரைச் சந்தித்தேன். என்னுடைய தலைமையில் தனியாக ஒரு குடியரசுக் கட்சியை ஆரம்பிக்கலாம் என சகோதரர்கள் வற்புறுத்தினார்கள். அதற்கு நான் உடன்படவில்லை. எல்லோருமாகச் சேர்ந்து எனக்காக தலைவர் பாரிஸ்டர் கோபராகடே அவர்களிடம் சண்டை போட்டார்கள்.

தலைவர் கவாய் அணியில் சேர்ந்தேன்

1983ல் மும்பாயிலிருந்து சென்னை திரும்பியதும் தம்பி சாந்தமூர்த்தி

மற்றும் ஆதரவாளர்களுடன் ஆலோசித்து தலைவர் கவாய் தலைமை ஏற்று நடத்தும் குடியரசுக் கட்சியில் இணைவது என முடிவெடுத்தோம். அன்றைய சட்டமன்ற உறுப்பினர் ஜீ. மூர்த்தி கவாய் அணியின் மாநில பொதுச் செயலாளராக இருந்தார். அசோகா ஓட்டலில் மூர்த்தியின் முன்னிலையில் கவாய் அணியில் சேர்ந்தோம்.

தலைவர்களைச் சந்தித்தல்

சோலாப்பூரில் தேசிய செயற்குழு கூடியது. அங்கு தலைவர் ஆர்.எஸ். கவாய், தேசிய பொதுச் செயலாளர் சி.எம். ஆறுமுகம் ஆகியோரிடம் அறிமுகப்படுத்தப்பட்டோம். சோலாப்பூரில் வரலாற்றுச் சிறப்புமிக்க இடத்தில் செயற்குழு நடைபெற்றது.

மராட்டிய மாநிலம் சோலாப்பூரில் முதன் முதலாக ஒரு பள்ளியை பாபா சாகேப் அம்பேத்கர் அவர்கள் பல ஏக்கர் நிலத்தில் ஆரம்பித்தார்கள். அந்தப் பள்ளிக் கூடத்தில்தான் செயற்குழு கூட்டம் நடந்தது. தமிழ்நாட்டிலிருந்து நானும் ஜீ. மூர்த்தி, சாந்தமூர்த்தி, பூபாலன், சி.எல். புனிதமணி, தசரதன் முதலானோரும் கலந்து கொண்டோம்.

கண்ணீர் மல்கினோம்

மதியம் உணவருந்தும் போது ஒரு பெரியவர் உணவு பரிமாறிக் கொண்டு இருந்தார். அப்போது திடீரென்று கண்ணீர் விட்டார்.

"நான் இந்தப் பள்ளியில் மாணவனாக இருந்தபோது பாபாசாகேப் அம்பேத்கர், ராவ்பகதூர் என் சிவராஜ், தாதா சாகேப் கெய்க்வார்ட் போன்ற தலைவர்களுக்கு உணவு பரிமாறினேன்.

இன்று அந்தத் தலைவர்கள் இல்லை. இன்றைய தலைவர்களாக வந்திருக்கும் உங்களுக்கு உணவு பரிமாறுகின்றேன். நிரம்ப மகிழ்ச்சி யடைகின்றேன். இன்று இரவு உங்களுக்கு நல்ல பிரியாணி தயாராகின்றது. நீங்கள் வயிறார உண்ண வேண்டும்'' என்று அவர் மராத்திய மொழியில் கண்ணீர் விட்டுக் கொண்டே கூறியது எங்களையும் கண்ணீர் மல்கச் செய்தது.

இந்தக் கமிட்டிக் கூட்டத்தில் என்னை அகில இந்திய செயற்குழு உறுப்பினராக அறிவித்தார்கள்.

அடுத்து பம்பாய், நாக்பூர் போன்ற இடங்களில் நடைபெற்ற செயற்குழு கூட்டங்களில் கலந்து கொண்டேன்.

பிறகு சென்னையில் செயற்குழுக் கூட்டம் நடைபெற்றது. அன்று அகில இந்திய செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் தளபதி சி.எம். ஆறுமுகம் ஆகியோர்களுக்கு எனது இல்லத்தில் மதிய விருந்து அளிக்கப்பட்டது.

மறுநாள் (21.8.1983) வேலூர் கோட்டை மைதானத்தில் மாபெரும் மாநில மாநாடு நடைபெற்றது.

இந்த மாநாட்டில் தலைவர் ஆர்.எஸ். கவாய் அவர்களும் பொதுச் செயலாளர் சி.எம். ஆறுமுகம் அவர்களும் என்னை மாநில இணைப் பொதுச் செயலாளராக அறிவித்தார்கள்.

"தலைவர்கள் விருப்பத்திற்கு தமிழ் நாட்டில் டாக்டர் சேப்பனுக்கு தமிழ்நாட்டில் பதவி கொடுப்பதா?'' என ஜீ. மூர்த்தி மற்றும் சில வேலூர் பிரமுகர்கள் ஆத்திரம் அடைந்தார்கள். மாநாட்டில் நிறைய பேர்கள் உரையாற்றினார்கள். ஆனால் என்னை பேசவிடவில்லை. தலைவர்கள் பலமுறை டாக்டர் சேப்பன் பேசட்டும் எனக் கூறியும் வேலூர்க்காரர்கள் என்னை பேசவிடவில்லை. குடியரசுக் கட்சியில் இது எனக்கு இரண்டாவது அனுபவம்.

ஜீ. மூர்த்தியை வைத்து சென்னையில் பல பொதுக் கூட்டங்கள் நடத்தினேன். பாபா சாகேப் பிறந்த நாளன்றும் இறந்த நாளன்றும் சென்னையில் எல்லா வட்டங்களிலும் ஜீ. மூர்த்தியை வைத்து கொடியேற்றிச் சிறப்பித்தேன்.

தென் மாவட்டங்களில் தூத்துக்குடி தலைவர் எம்.என். ராஜ், சங்கரன் கோவில் துரைசாமியாபுரம் தலைவர் முத்தரசு ஆகியோர்களுடன் சுற்றுப் பயணம் செய்து கட்சியை வளர்த்தேன்.

ஜீ. மூர்த்தி நீக்கப்பட்டார்

மாநில பொதுச் செயலாளர் ஜீ. மூர்த்தி, அ.இ.அ.தி.மு.க. கூட்டணியில் பேர்ணாம்பட்டு தொகுதியிலிருந்து சட்டமன்ற உறுப்பினரானவர். அவர் முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்களுக்கு மட்டும் ஆதரவாக செயல்படுகிறார்

என மாநிலத் தலைவர் கோபால் மற்றும் சில வேலூர் தலைவர்கள் போர்க் கொடி உயர்த்தினார்கள்.

ஜீ. மூர்த்தி உண்மையான கட்சிக்காரர், அப்பழுக்கற்ற பாபாசாகேப் தொண்டர், கொள்கையை விட்டுப் பிறழமாட்டார்; கடைபடாத கரங்களைக் கொண்டவர்; நல்ல செயல்வீரர்; கட்சிக்காகவே தன் முழுநேரத்தையும் செலவிட்டவர். எளிமையானவர்; அடக்கமானவர்; அன்பானவர்; இருப்பினும், வேலூர் தலைவர்கள் அவர் மீது புகார் கூற ஆரம்பித்தார்கள்.

மும்பாயில் பாபா சாகேப் சமாதி அருகில் கடற்கரையில் அகில இந்திய செயற்குழு நடைபெற்றது. பல இடங்களில் பொதுக் கூட்டங்களும் நடைபெற்றன. இந்தச் செயற்குழு கூட்டத்தில் மூர்த்தி கலந்து கொள்ளவில்லை. இதை தலைவர் கோபால் மற்றும் வேலூர் தலைவர்கள் பயன்படுத்திக் கொண்டார்கள். மூர்த்தியைக் கட்சியை விட்டு நீக்க வேண்டும் என வற்புறுத்தினார்கள். நமது கட்சியிலுள்ள ஒரு சட்டமன்ற உறுப்பினரை நீக்கக் கூடாது என நான் வாதாடிப் பார்த்தேன். ஆனால் வேலூர் தலைவர்கள் நீண்ட கால (சீனியர்) அனுபவமுடையவர்கள் என்பதால் எனது வேண்டுகோளை ஏற்கப்படவில்லை.

மும்பாயிலிருந்து வந்ததும் மாநிலத் தலைவர் கோபால் அவர்கள் தலைமையில் வேலூர் தலைவர்கள் தங்கவயல் சென்று தளபதி சி.எம். ஆறுமுகம் அவர்களைச் சந்தித்து ஜீ. மூர்த்தி கட்சியை விட்டு நீக்கப்பட்டதாக அங்கீகாரம் பெற்றுவிட்டார்கள்.

மூர்த்திக்குப் பதில் என்னை மாநில பொதுச் செயலாளராக நியமித்திருப்பதாக தளபதி சி.எம். ஆறுமுகம் அவர்கள் தொலைபேசி மூலம் தெரிவித்தார்கள்.

வேலூர் செண்பாக்கத்தில் மாநில செயற்குழு கூட்டப்பட்டது. மூர்த்தி நீக்கப்பட்டதை எதிர்த்து சிலர் (தகராறு) கலவரம் செய்தார்கள். பெரும் கலாட்டா நடந்தது. ஒரு வழியாக அனைவரையும் சமாதானப்படுத்தினேன்.

நான் மாநில பொதுச் செயலாளரானதும் தொடர்ந்து வடஆற்காடு, தருமபுரி, சேலம், தென்னாற்காடு, திருச்சி, மதுரை, திருநெல்வேலி, கோவை ஆகிய மாவட்டங்களில் அடிக்கடி சுற்றுப் பயணம் செய்து கட்சி வளர்ச்சிக்காக செயல்பட்டேன். தொடர்ந்து பல போராட்டங்கள் நடைபெற்றன.

36. எம்.ஜி.ஆர். அவர்களுக்குக் கருப்புக் கொடி

''அம்பேத்கர் மாவட்டம்'' அமைக்க வேண்டுமென போராடிக் கொண்டிருந்தோம். வேலூரில் காட்பாடியிலிருந்து அப்போது கோட்டையிலிருந்த மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் வரை மாபெரும் பேரணி நடைபெற்றது. பல ஊர்களில் பேரணியும் கோரிக்கை கூட்டங்களும் நடைபெற்றன.

சட்டமன்றத்தில் பேசிய மாண்புமிகு முதலமைச்சர் எம்.ஜி.ஆர் அவர்கள் ''ஒரு மாவட்டத்திற்குப் பெயர் வைப்பதாக இருந்தால் அம்பேத்கர் பெயரைவிட தியாகி கக்கன் அல்லது தில்லையாடி வள்ளியம்மை பெயரைத் தான் சூட்டுவேன்'' என கூறினார்.

இது தலித் மக்களுடைய உள்ளத்தைப் புண்படுத்தியது. தியாகி கக்கனையும் தில்லையாடி வள்ளியம்மையையும் அம்பேத்கரை விட உயர்வுபடுத்தியதோடு அவரைக் கொச்சைப்படுத்தியதாகவும் கருதப்பட்டது.

எனவே, மாநிலத் தலைவர் கோபால் அவர்கள் தலைமையில் முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்களுக்கு கருப்புக் கொடி காட்டுவதென தீர்மானிக்கப்பட்டது.

அத்தீர்மானத்தின்படி வடஆற்காடு மாவட்டத்திற்கு ''அம்பேத்கர் மாவட்டம்'' என பெயர் சூட்டக் கோரியும் சட்டமன்றத்தில் அம்பேத்கர் அவர்களை தாழ்மைப்படுத்தும் வகையில் பேசியதற்கு கண்டனம் தெரிவித்தும் சென்னை எழிலகம் அருகில் தலைவர் கோபால் தலைமையில் மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களுக்குக் கருப்புக் கொடி காட்டினோம்.

தலைவர் கோபால், வீராங்கனை பத்மா அரசு பணி, சாந்த மூர்த்தி, துரையரசன் மற்றும் நான் உள்பட நூற்றுக்கணக்கான குடியரசுக் கட்சித் தொண்டர்கள் கைது செய்யப்பட்டோம்.

எங்களைக் கைது செய்து சென்னை போலீஸ் கமிஷனர் அலுவலக வளாகத்தில் அடைத்து விட்டார்கள்.

எம்.ஜி.ஆர். அவர்களின் மனிதாபிமானம்

நாங்கள் கருப்புக் கொடி காட்டுவதாக நகரெங்கும் சுவரொட்டி விளம்பரங்கள் செய்திருந்தோம். போலீஸ் கமிஷனர் அவர்களுக்கும் தெரிவித்திருந்தோம்.

ஆனால் எங்களை முன்னெச்சரிக்கையாக கைது செய்யவில்லை. நாங்கள் கருப்புக் கொடி காட்டும் போதுதான் கைது செய்யப்பட்டோம்.

நாங்கள் கருப்புக் கொடி காட்டியதைக் கவனித்துச் சென்ற புரட்சித் தலைவர் அவர்கள் சிறிது தூரம் சென்றதும் காரை நிறுத்தி, ''எதற்காக கருப்புக் கொடி காட்டுகிறார்கள்?'' என வினவியிருக்கிறார்.

''அம்பேத்கர் மாவட்டம் அமைக்கக் கோரி கருப்புக் கொடி காட்டுகிறார்கள்'' என அவருக்கு சொல்லப்பட்டதாம்.

நாங்கள் கமிஷனர் அலுவலகத்தில் அடைக்கப்பட்டதும் அடிக்கடி இனிப்பு, காரம், தேனீர், காபி ஆகியவைகளை கொடுத்துக் கொண்டே இருந்தார்கள். மதியம் அறுசுவை உணவு (சாப்பாடு) வழங்கினார்கள்.

எங்களுக்கு ஒன்றும் புரியவில்லை. பத்மா அரசுமணி இதய நோயாளி அவர் இரத்த வாந்தி எடுத்தார். தலைவர் கோபால் மயங்கி படுத்துவிட்டார். இருப்பினும் அவர்களை வற்புறுத்தி சாப்பிட வைத்தார்கள்.

''நாங்கள் கைது செய்யப்பட்டிருக்கிறோம். எங்களுக்கு விருந்தளித்து உபசரிக்க என்ன காரணம்?'' என போலீஸ் அதிகாரிகளைக் கேட்டோம்.

முதலமைச்சர் விருந்து

''இன்று நீங்கள் முதலமைச்சரின் விருந்தாளிகள். உங்களுக்கு நல்ல விருந்தளிக்க வேண்டுமென்பது முதலமைச்சரின் ஆணை. தயவுசெய்து நீங்கள் எல்லோரும் வயிறார உணவருந்துங்கள்'' என காவல்துறை அதிகாரிகள் கூறினார்கள்.

கருப்புக் கொடி கட்டி கூச்சல் போட்டவர்களுக்கு முதலமைச்சர் விருந்தளிப்பது யாது காரணத்தாலோ என வியந்தோம்.

மாலை செய்தித் தாளில் அம்பேத்கர் மாவட்டம் அறிவித்து விடுவார் என ஆவலுடன் எதிர்பார்த்தோம்.

''சென்னையில் எம்.ஜி.ஆருக்கு கருப்புக் கொடி'' என்ற செய்தி மட்டுமே வந்திருந்தது.

''கைது செய்யப்பட்ட நமக்கு நல்ல விருந்தளித்தார். ஆனால் அம்பேத்கர் மாவட்டம் அறிவிக்காமல் ஏமாற்றி விட்டாரே'' என வேதனை யடைந்தோம்.

மாலையில் அனைவரும் விடுதலை செய்யப்பட்டோம்.

மனிதநேயர்! அவரன்றோ முதல்வர்!

மறுநாள் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஈரோடு சென்றிருந்தார். அங்கு ''தமிழகத்தில் நான்கு புதிய மாவட்டங்கள்

அம்பேத்கர், இராஜாஜி, வீரமா முனிவர், காயிதே மில்லத் ஆகியோரின் பெயரில் அமைக்கப்படும்'' என புரட்சித்தலைவர் மனிதநேய காப்பாளர் எம்.ஜி.ஆர். அவர்கள் அறிவித்தார்கள்.

நாங்கள் உடலெல்லாம் புல்லரித்துப் போனோம். அந்த மாமனிதருக்கு உளமார நன்றி கூறினோம்.

அம்பேத்கர் மாவட்டம் அறிவித்த மாமனிதர் கெட்ட வேளையாக (துரதிர்ஷ்டமாக) அடுத்த சில நாட்களில் உடல் நலமின்றி மருத்துவமனைக்குச் சென்று விட்டார். அமெரிக்கா கொண்டு சென்று மருத்துவ சிகிச்சை செய்யப்பட்டு உடல் நலமுற்று தாயகம் திரும்பினார்.

அம்பேத்கர் மாவட்டம் அமைக்கக்கோரி நினைவுப்படுத்தினோம். என்ன காரணத்தினாலோ அவரால் புதிய மாவட்டம் அமைக்க இயலவில்லை.

அவருக்குப் பின் முதலமைச்சராக வந்த டாக்டர் கருணாநிதி காலத்தில் மீண்டும் போராட்டத்தைத் துவக்கினோம்.

கலைஞர் வேலூர் மாவட்டத்திற்கு அம்பேத்கர் மாவட்டம் என பெயர் சூட்டினார்.

''கொடுத்தவனே எடுத்துக் கொண்டானடி'' என்பது போல மீண்டும் ஆட்சிக்கு வந்த கலைஞர் அவர்கள் தலைவர்கள் பெயரில் அமைக்கப்பட்ட மாவட்டங்களின் பெயரை எடுத்து விட்டார்.

ஏனெனில், சாதித் தலைவர்களின் பெயரில் மாவட்டங்கள் கூடாது என

விளக்கமளித்தார். மாவட்டங்கள் மட்டுமல்லாமல் தலைவர்களின் பெயரில் இருந்த போக்குவரத்துக் கழகங்களின் பெயர்கள் கூட அகற்றப்பட்டன.

தி.மு.க. கூட்டணி

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். மருத்துவ மனையில் இருந்தபோது (1985ஆம் ஆண்டு) பொதுத் தேர்தல் நடைபெற்றது. அப்போது இந்திய குடியரசு கட்சி கவாய் பிரிவிற்கு கோபால் அவர்கள் மாநிலத் தலைவராகவும் நான் பொதுச் செயலாளராகவும் செயல்பட்டு வந்தோம். எங்களது அணியில் வேலூர் எம். தாமோதரம், வி.கே. தாமோதரம், பூபாலன், வி.இ. சோழன், வானூர் கனகராஜ், சாந்தமூர்த்தி, சி.எல். புனிதமணி, ஏ.பி. இராமசாமி, பத்மா அரசு மணி, செங்கம் ஜெகநாதன், தருமபுரி சென்ன மூர்த்தி போன்ற பல முக்கிய தலைவர்கள் இடம் பெற்றிருந்தார்கள்.

மாநில செயற்குழு தி.மு.க. கூட்டணியில் இணைந்து செயல்படுவதற்கு முடிவு செய்தது. அதன் அடிப்படையில் தி.மு.க. கூட்டணியில் இணைந்து செயல்பட்டோம். விலைவாசி உயர்வைக் கண்டித்து தி.மு.க. நடத்திய போராட்டத்தில் கலந்து கொண்டோம். இந்தப் போராட்டத்தில் நான், சாந்தமூர்த்தி மற்றும் பல நூற்றுக்கணக்கான குடியரசுக் கட்சிக்காரர்கள் கைது செய்யப்பட்டோம்.

சென்னை, தேனாம்பேட்டையில் ஆற்காடு வீராசாமி (தி.மு.க.) தலைமையில் நடைபெற்ற சாலை மறியல் போராட்டத்திலும் நான், சாந்தமூர்த்தி மற்றும் பல குடியரசுக் கட்சித் தொண்டர்கள் கலந்து கொண்டு கைது செய்யப்பட்டோம். தேர்தலின் முன்பு குடியரசுக் கட்சிக்கு இட ஒதுக்கீடு (சீட் ஒதுக்கீடு) பற்றி பேசப்பட்டது. தி.மு.க.வினர் கடைசிவரை இழுத்தடித்து இறுதியில் கை விரித்து விட்டனர்.

அதனால், ஆத்திரமடைந்தோம். உடனே குடியரசுக் கட்சியின் (கவாய்) மாநில செயற்குழு ஆயிரம் விளக்கில் கூடியது. 1985ஆம் ஆண்டு தேர்தலில் தனித்து போட்டியிடுவது என முடிவு செய்யப்பட்டது. என்னை, ஆயிரம்விளக்கு சட்டமன்ற தொகுதியில் போட்டியிட, எல்லோரும் வற்புறுத்தினார்கள்.

இந்திய குடியரசுக் கட்சி 16 இடங்களில் தேர்தலில் நிற்க முடிவு செய்து போட்டியிட்டது.

37. குடியரசுக் கட்சியில் மீண்டும் குழப்பம்

1984ஆம் ஆண்டு சட்டமன்ற தேர்தலில் இந்திய குடியரசு கட்சி தனித்துப் போட்டியிட்டது. நான் ஆயிரம்விளக்குத் தொகுதியில் போட்டியிட்டேன். அ.இ.அ.தி.மு.க. சார்பில் கே.ஏ. கிருஷ்ணசாமி, தி.மு.க. சார்பில் மு.க. ஸ்டாலின் மற்றும் குடியரசுக் கட்சி சார்பில் நான் இப்படி மும்முனைப் போட்டி மிகவும் கடுமையாக இருந்தது.

என்னை போட்டியிலிருந்து வாபஸ் பெறுமாறு பல முனைகளிலிருந்தும் வற்புறுத்தினார்கள்.

கே.ஏ. கிருஷ்ணசாமி சார்பிலும் பலர் வற்புறுத்தினார்கள்.

கலைஞர் அவர்களின் தூதுவர்களாக அம்பேத்கர் இளைஞர் இயக்க தலைவர் டாக்டர் எம். நாகப்பன், சிதம்பரம் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் மாயவன், செங்கம் சப்பார் முதலானோர் என்னைச் சந்தித்து வாபஸ் வாங்குமாறு வற்புறுத்தினார்கள்.

"வாபஸ் வாங்குவது எனது வரலாற்றில் இல்லை'' என கண்டிப்பாக கூறிவிட்டேன்.

எனவே, திரு. ஆற்காடு வீராசாமி, திரு. துரைமுருகன் ஆகிய தி.மு.க தலைவர்கள் வேலூரிலிருந்து மாநிலத் தலைவர் கோபால், வி.இ. சோழன், எம். தாமோதரம், வி.கே. தாமோதரம் ஆகியவர்களுடன் பேசியிருக்கிறார்கள். அதனால் வேலூர் தலைவர்கள் போட்டியிலிருந்து வாபஸ் வாங்கிக் கொண்டு தி.மு.க.வை ஆதரிப்பது என முடிவு செய்தார்கள்.

பிறகு தலைவர் கோபால், வி.கி. சோழன் ஆகியோர் என்னிடம் வந்து வாபஸ் வாங்கிக் கொண்டு தி.மு.க.வை ஆதரிக்குமாறு வற்புறுத்தினார்கள்.

நான் தலைவர் ஆர்.எஸ். கவாய், தளபதி சி.எம். ஆறுமுகம் ஆகியோருடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசினேன். தளபதி என்னை வாபஸ் வாங்க வேண்டாமென கூறினார்கள். மேலும் தி.மு.க. வை ஆதரிப்பவர்களை கட்சியிலிருந்து நீக்குவதாகவும் கூறினார்கள்.

எனவே, நான் வாபஸ் வாங்க மறுத்து விட்டேன்.

தளபதி சி.எம். ஆறுமுகம் அவர்கள் தங்கவயலிலிருந்து எனது பிரச்சாரத்திற்காக ஒரு ஜீப் வண்டியை அனுப்பினார்கள். சகோதரர்கள் எஸ்.பி. முகிலன், குடியரசு மற்றும் பலரும் தங்கவயலிலிருந்து வந்து என்னை ஆதரித்துப் பிரச்சாரம் செய்தார்கள்.

குடியரசுக் கட்சியினரே என்னை எதிர்த்தார்கள்

இந்திய குடியரசுக் கட்சி கோபராகடே பிரிவினர் அ.இ.அ.தி.மு.க. கூட்டணியில் இருந்தார்கள். நான் போட்டியிலிருந்து வாபஸ் பெற மறுத்ததால் அ.இ.அ.தி.மு.க.வினர் கோபராகடே அணியைச் சேர்ந்தவர்களை (வி.பி. முருகையன்) பயன்படுத்திக் கொண்டார்கள்.

குடியரசுக் கட்சிக்கு பாபாசாகேப் அம்பேத்கர் அவர்களே ஏகத் தலைவர் அவர் கொடுத்த நீலக் கொடியையே எல்லா அணியினரும் பயன்படுத்துகின்றனர்.

ஆகவே, கோபராகடே அணி குடியரசுக்காரர்களுக்கு ஒரே நாளில் ஆயிரக்கணக்கில் பணம் செலவிடப்பட்டதாகக் கேள்விப்பட்டேன். ஆயிரக்கணக்கான குடியரசுக் கட்சியின் நீலக் கொடிகள் அ.இ.அ.தி.மு.க. பேரணியில் பறந்தன. என்னால் அவ்வளவு கொடிகளைப் பயன்படுத்தவே இயலவில்லை.

தேர்தல் இறுதி நாட்களில் நான் வாபஸ் வாங்கிக் கொண்டு அ.இ.அ.தி.மு.க.வை ஆதரிப்பதாகத் தவறான பிரச்சாரம் செய்து விட்டார்கள். மேலும் நான் மிகவும் சிரமப்பட்டு கடன் வாங்கி அச்சிட்ட சுவரொட்டிகளை ஒட்டுபவர்களிடம் பணம் கொடுத்து வாங்கி எரித்துவிட்டார்கள் என கேள்விப்பட்டு வேதனையடைந்தேன்.

அ.இ.அ.தி.மு.க. பேரணியில் குடியரசுக் கட்சியின் நீலக்கொடி ஆயிரக்கணக்கில் பறந்ததை டாக்டர் கலைஞர் கருணாநிதி அவர்கள் கூட தவறாக கருதி விட்டார் என்பதை பின்னாளில் தெரிந்து கொண்டேன்.

குடியரசுக் கட்சி கோபாரகடே அணியினர் (வி.பி. முருகையன் அணியினர்) தீவிரமாக என்னை எதிர்த்தார்கள்.

அய்யகோ! கடைசி நாட்களில் என்னால் ஒன்றுமே செய்ய முடியவில்லை. இருப்பினும் சமாளித்தேன்.

எனது சின்னமாகிய யானையின் உருவத்தை பெரிய அளவில் செய்து வண்டியில் வைத்து ஊர்வலமாக இழுத்துச் சென்றோம். திறந்த ஜீப்பில் போக்கஸ் லைட்டுடன் நான் நின்று கொண்டிருந்தேன். தம்பி சாந்தமூர்த்தி பேரணியை வழிநடத்திக் கொண்டிருந்தார்.

தேர்தல் நடந்து முடிவு வெளியானது. அ.இ.அ.தி.மு.க. வேட்பாளர் கே.ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் தேர்தலில் வெற்றி பெற்றார் என அறிவிக்கப்பட்டது.

டாக்டர் கலைஞரின் கோபம்

சில ஆண்டுகள் கழித்து தங்கவயலில் போட்டியிட்ட தளபதி அய்யா சி.எம். ஆறுமுகம் அவர்களுக்கு ஆதரவு கோரி கலைஞர் அவர்களைச் சந்தித்தேன். தன் மகன் ஸ்டாலின் தோல்வியடைந்ததற்கு நான் தான் காரணமென தனது கோபத்தை வெளிப்படுத்தினார். அவர் தவறாகப் புரிந்து கொண்டுள்ளார் என்பதை விளக்கிக் கூறியும் அவர் ஏற்றுக் கொள்ள தயாராக இல்லை. தங்கவயல் தேர்தலில் ஆதரவு கொடுக்கவும் மறுத்து விட்டார். அவசரம் அவசரமாக அன்று மாலையிலேயே தங்கவயலில் கம்யூனிஸ்டு கட்சிக்கு ஆதரவு கொடுப்பதாக பத்திரிகையில் அறிக்கையும் வெளியிட்டார். கலைஞர் என் மீதுள்ள கோபத்தின் காரணமாத தங்கவயலில் எனது தங்கத் தலைவர் அய்யா சி.எம். ஆறுமுகம் அவர்களுக்கு ஆதரவு கொடுக்கவில்லை.

38. குடியரசுக் கட்சியின் மாநிலத் தலைவரானேன்

சட்டமன்ற தேர்தலில் வேலூர் தலைவர்கள் தி.மு.க.வை ஆதரித்ததால் அவர்களை கட்சியை விட்டு நீக்குமாறு அகில இந்திய தலைவர் ஆர்.எஸ். கவாய் அவர்களும், தளபதி அய்யா சி.எம். ஆறுமுகம் அவர்களும் கூறினார்கள்.

அடுத்து சில நாட்களில் அய்யா சி.எம். ஆறுமுகம் அவர்கள் சென்னைக்கு வந்தார்கள். மாநிலத் தலைவர் சி. கோபால், எம். தாமோதரம், வி.இ. சோழன் ஆகியோரை கட்சியிலிருந்து நீக்கினார்கள்.

அடுத்து சில நாட்களில் தென்னாற்காடு மாவட்டம் உளுந்தூர் பேட்டையில் ஏ.பி. இராமசாமி அவர்கள் இல்லத்தில் மாநில செயற்குழு கூடியது. அக்கூட்டத்தில் நான் மாநிலத் தலைவராகவும் வி.கே. தாமோதரம் அவர்கள் பொதுச் செயலாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டோம். அத் தீர்மானத்தை அகில இந்தியத் தலைவர்கள் அங்கீகரித்தார்கள்.

1985ஆம் ஆண்டு நான் மாநிலத் தலைவரானதும் பல முக்கிய போராட்டங்களில் ஈடுபட்டேன்.

நாகமரை போராட்டம்

தருமபுரி மாவட்டம் பொன்னாகரம் வட்டம், நாகமரை என்ற ஊர் ஒகேனக்கல் காவிரிப் பகுதிக்கு அருகிலுள்ளது. இந்த ஊரில் நடைபெற்ற ஒரு கூத்து நிகழ்ச்சியில் தலித் இளைஞர்கள் கலாட்டா செய்தார்கள் என கூறப்பட்டது.

இந்தப் பகுதியில் தலித் மக்களுக்கு தேனீர்க் கடைகளில் மூங்கில் குழாய்களிலும் தேங்காய் கொட்டங்கச்சியிலும் தேனீர் கொடுப்பது வழக்கம்.

நெருப்பூர் கிராமத்தில் மணி என்ற தலித் இளைஞருக்கு தேங்காய் கொட்டாங்கச்சியில் தேனீர் கொடுத்தார்கள். தேனீர் அருந்தி விட்டு கொட்டாங்கச்சியைக் கழுவி வைக்கும்போது கோபத்துடன் வீசியிருக்கிறார். அதனால் கொட்டாங்கச்சி தண்ணீர் வன்னியர்கள் மீது பட்டுவிட்டது.

உடனே மணியைப் பிடித்து மரத்தில் கட்டி வைத்து அடித்தார்கள்.

மறுநாள் மணி தருமபுரி சென்று தீண்டாமை ஒழிப்புச் சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும் என காவல்துறையில் புகார் கொடுத்தார். அதன் காரணமாக நெருப்பூர் ஓட்டல் உரிமையாளர் மீது பி.சி.ஆர். சட்டப்படி வழக்கு தொடரப்பட்டது.

இந்த வழக்கைத் திரும்பப் பெறுமாறு மணியை மிரட்டினார்கள். நாகமரைப் பகுதியில் அப்போது அதிகம் படித்தவர்–அதாவது அய்ந்தாம் வகுப்பு வரை படித்தவர் மணி ஒருவர்தான். அவர் வழக்கை வாபஸ் பெறுவதற்கு மறுத்து விட்டார்.

எனவே, பொன்னாகரம் வட்டாரத்தைச் சேர்ந்த பல ஊர்களிலுள்ள வன்னியர்கள் டிராக்டர்களிலும் லாரிகளிலும் ஆட்களைத் திரட்டிக் கொண்டு வந்து நாகமரை காலனியைத் தாக்கினார்கள். பகல் இரண்டு மணியளவில் காலனிக்குள் புகுந்து தகப்பனுக்கு முன்னால் மகளை, கணவனுக்கு முன்னால் மனைவியை, சகோதரனுக்கு முன்னால் சகோதரியை மானபங்கப்படுத்தினார்கள். காலனியிலுள்ள கிழவிகளைக் கூட விட்டு வைக்கவில்லை.

தலித் ஆண்களின் கழுத்தில் மாட்டு வண்டி நுகத்தடியை வைத்து அவர்களுடைய கைகளை நுகத்தடியில் சேர்த்துப் பதிய வைத்து ஆணி அடித்தார்கள். மாட்டு வண்டியின் மீது ஏறிக் கொண்டு சாட்டையால் அடித்து வண்டியை இழுக்கச் செய்தார்கள்.

"வண்டி வருகுது ஓரம்போ–ஓரம்போ" என்ற பாட்டுப்பாடி களியாட்டம் ஆடினார்கள். மலைப் பகுதியில் ஓடி ஒளிந்தவர்களை கல்பாறை மீது போட்டு இழுத்து வந்து சித்திரவதை செய்தார்கள். வீடுகளை இடித்தார்கள். வீட்டிலுள்ள பொருட்களை சூறையாடினார்கள்.

பகல் இரண்டு மணி முதல் மாலை வரை இந்தக் கொடுஞ்செயல்கள் நடைபெற்றன.

பாதிக்கப்பட்டவர்கள் தருமபுரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்கள். நாகமரை தலித் மக்கள் அனைவரும் மருத்துவமனையில் இருந்தார்கள். இதை அறிந்த தருமபுரி ஆதித்திராவிட இன அரசு ஊழியர்களும் சென்னா மூர்த்தி தலைமையில் குடியரசுக் கட்சித் தொண்டர்களும் பாதிக்கப்பட்டவர்களுக்கு உணவளித்தார்கள்.

குடியரசுக் கட்சித் தலைவர் சென்னா மூர்த்தி எனக்குத் தொலைபேசி மூலம் தகவல் கொடுத்தார்கள். உடனே தருமபுரி சென்றேன். மருத்துவமனையில் இருந்தவர்களைப் பார்த்துவிட்டு நாகமரை கிராமத்திற்குச் சென்றோம். பாதிக்கப்பட்ட மக்களைப் பார்த்து ஆறுதல் கூறினோம்.

அடுத்து மாவட்ட ஆட்சித் தலைவர், மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் ஆகியோரைச் சந்தித்து முறையிட்டோம்.

மறுநாள் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் எதிரில் இந்தியக் குடியரசுக் கட்சி சார்பில் மாவட்ட தலைவர் கே.ஏ. தீர்த்தான் அவர்கள் தலைமையில் மாபெரும் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தி மாவட்ட ஆட்சித் தலைவரிடம் முறையிட்டோம்.

அடுத்து சென்னைக்கு வந்து காவல்துறை மேலதிகாரிகளிடமும் அன்றைய தமிழக அரசு தலைமைச் செயலாளர் அய்யா ஏ. பத்மநாபன் அவர்களிடமும் முறையிட்டேன்.

தலைமைச் செயலரும் ஆவேசமடைந்து யாருக்கோ தொலைபேசியில் பேசி ஆணை பிறப்பித்தார். அப்படியும் தருமபுரி மாவட்ட ஆட்சியர் அசைவதாக இல்லை.

காரணம், வன்னியர்கள் தலித் மக்களைத் தாக்குவதற்குத் துணையாக இருந்தவரே வன்னிய சங்கத் தலைவர் வன்னிய அடிகளார் என்பவரேயாவார். காவி உடையணிந்து துறவி வேடம் பூண்டு கொண்டிருந்த வன்னிய அடிகளார் தலித் மக்கள் பழிவாங்கப்படுவதற்குத் துணைபுரிந்தார் என்பதை பிறகு தெரிந்து கொண்டோம். வன்னிய அடிகளாரும் தருமபுரியிலுள்ள பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்களும் தலித் மக்களுக்கு எதிராகவும் வன்னியர்களுக்கு ஆதரவாகவும் செயல்பட்டதை மாவட்ட ஆட்சியர் நன்கு அறிவார். இருப்பினும் அவர்களுக்குப் பயந்து போய் அவர்களுக்கு ஆதரவாகவே செயல்பட்டுள்ளார். தலித் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளை மாவட்ட ஆட்சியர் கண்டுகொள்ளவே இல்லை.

மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் ஜெகநாதன் (எஸ்.பி.) அவர்களும், துணை கண்காணிப்பாளர் முத்தழகு அவர்களும் நேரடியாகவே எங்களை எதிர்த்தார்கள்.

''உங்களைப் பழி வாங்கவில்லை எனில் நான் என் அப்பன் அஞ்சப்பனுக்கு பிறக்கவில்லை என்று எண்ணிக் கொள்ளுங்கள்'' என நானும் கூட்டம் போட்டு ஒலி பெருக்கியில் சவால் விட்டேன்.

அகில இந்தியக் குடியரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் தளபதி அய்யா சி.எம். ஆறுமுகம் அவர்கள் தருமபுரி மாவட்டம் முழுவதும் சுற்றுப் பயணம் செய்து அவருக்கே உரிய பாணியில் கர்ஜனை செய்தார். பொன்னாகரத்தில் கொளுத்தும் வெயிலில் கண்டனக் கூட்டம் நடந்தது. அய்யா சி.எம். ஆறுமுகம் அவர்கள் பயங்கரமாக எச்சரிக்கை விட்டுப் பேசினார்கள்.

மத்திய அரசுக்கும் அகில இந்திய தலைவர்கள் பலருக்கும் நாகமரை சாதி வெறித் தாக்குதல் பற்றி தெரிவிக்கப்பட்டது.

நாகமரையில் நடைபெற்ற கொடூரமான சாதிவெறித் தாக்குதலை எதிர்த்து அப்போது என்னை தமிழ் மாநிலத் தலைவராகக் கொண்ட இந்திய குடியரசு கட்சி (கவாய் பிரிவு) மட்டுமே தீவிரமாகப் போராடியது. மற்ற எந்த தலித் அமைப்புகளும் தலித் தலைவர்களும் அதுபற்றி கண்டுகொள்ளவே இல்லை.

“கீழ்ச்சாதி பெண்ணை மேல் சாதியினர் விரும்பலாம். ஆனால் கீழ்ச் சாதியினர் மேல்சாதி பெண்ணை விரும்பக் கூடாது'' என வன்னிய சங்கத் தலைவர் வன்னிய அடிகளார் கூறினார். என்னால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. அவருக்குச் சூடான பதில் கொடுத்தேன்.

பல ஊர்களில் கண்டனக் கூட்டங்கள் நடத்தினோம். இறுதியில் நாகமரை தலித் மக்களோடு ஆலோசனை நடத்தினேன்.

மதமாற்றம்

எந்த இந்து மதத் தலைவர்களும் இக்கொடுஞ் செயலைக் கண்டு கொள்ளவே இல்லை. “இந்துக்களாக வாழும் நம்மை இந்துக்களே இப்படிக் கொடுமைப்படுத்துகிறார்கள். எனவே நம்மை இழிவுபடுத்தும் இந்து மதத்தை விட்டு சுயமரியாதையுடன் வாழ இஸ்லாம் மார்க்கத்தைத் தழுவுவோம்'' என சகோதரர்கள் முடிவெடுத்தார்கள்.

தருமபுரி நகரில் நடைபெற்ற மாபெரும் கண்டனக் கூட்டத்தில் இந்த மதமாற்றம் பிரகடனப்படுத்தப்பட்டது.

மதமாற்றம் செய்வதற்கு நாகமரையைச் சேர்ந்த சுமார் 60 சகோதரர்கள் தர்மபுரிக்கு வந்தார்கள். ஒவ்வொரு பள்ளி வாசலாகச் சென்று இஸ்லாம் மார்க்கத்தை தழுவுவதற்கு வந்திருப்பதாக விளக்கிக் கூறினோம். ஆனால் அங்குள்ள இமாம்கள் தங்களை இந்துக்கள் தாக்குவார்கள் என பயந்து கொண்டு கலிமா ஓதுவதற்கு மறுத்து விட்டார்கள்.

அத்தனை பேர்களையும் சென்னைக்கு அழைத்து வர பணவசதி இல்லை. அய்ந்து பேர்கள் மட்டும் சென்னைக்கு வந்து முதன்மை ஆதி (ஹாதி) அவர்களிடம் கலிமா ஓதி இஸ்லாமியர்களாகி விட்டார்கள். அவர்கள் ஊருக்குச் சென்றதும் நாகமரை காலனி மக்கள் அனைவரும் இஸ்லாம் தழுவுவது என முடிவெடுத்தார்கள். இந்த முடிவு அரசுக்குத் தெரிந்தது.

நாகமரைக்கு வரமாட்டேன் என்று பிடிவாதம் செய்த தருமபுரி மாவட்ட ஆட்சியர் வர்கீஸ் அவர்கள் மறுநாளே நாகமரை காலனிக்கு ஓடிச் சென்றார். அவர்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்றுவதாக ஒப்புக் கொண்டார்.

எங்களது போராட்டத்தின் விளைவாக காலனி மக்களை பென்னாகரத்தில் குடியேற்ற வேண்டும் என்ற கோரிக்கையை அரசு ஏற்றுக் கொண்டது. அதுபற்றி ஆய்வு செய்வதற்காக ஆதித் திராவிட நல அமைச்சர் பென்னாகரம் வந்திருந்தார்.

ஆனால், அந்த மாவட்டத்திலுள்ள அ.இ.அ.தி.மு.க. பிரமுகர்கள் உயர் சாதியினர் என்பதால் எமது கோரிக்கையை நிறைவேற்ற விடாமல் தடுத்து விட்டார்கள். நாகமரை தலித் மக்களை ஏமாற்றி விட்டார்கள்.

எமது போராட்டத்தின் விளைவாக மாவட்ட ஆட்சித் தலைவர் ஜான்வர்கீஸ் மாற்றப்பட்டார். எஸ்.பியும், டி.எஸ்.பியும் மாற்றப்பட்டார்கள்.

பறையடித்தலை ஒழித்தல்

பறையர்கள் தமிழ்நாட்டின் தொல் குடியினராவர். ஒரு காலத்தில் இவர்கள் மிகவும் உயர்ந்த நிலையில் வாழ்ந்திருந்ததற்கான ஆதாரங்கள் ஏராளமுள்ளன. இன்று சாதி இந்துக்களின் வீடுகளில் நடக்கும் நல்ல அல்லது கெட்ட நிகழ்ச்சிகளில் இவர்கள் பறையடிக்கும்படி கட்டாயப்படுத்தப்படுகின்றனர். ஆனால் சாதி இந்துக்களால் பறையடிக்கும் தொழில் இழிவானதாகக் கருதப்படுகிறது. இதனால், சாதி இந்துக்கள் பறையர்களை அடிமைகள் போல நடத்துகிறார்கள். சாதி இந்துக்களிடம் அடிமைகளாகக் கிடக்கச் செய்யும் இந்தத் தொழிலை எதிர்த்து நான் சிறுவயது முதலே போராடி வந்துள்ளேன். படிக்கும் இளம் வயதிலேயே வேதாரணியத்தில் மாநாடு நடத்தி தாரை, தப்பட்டைகளை நெருப்பிலிட்டுக் கொளுத்தியதை முன்பே விவரித்துள்ளேன். பறையர்கள் சாதி இந்துக்களின் வீடுகளுக்குச் சென்று பறையடிக்கும் வழக்கத்தை ஒழிக்க நான் தொடர்ந்து போராடி வருகிறேன். நான் குடியரசுக் கட்சியின் மாநிலத் தலைவரான பிறகு தருமபுரி மாவட்டத்தில் தாரை, தப்பட்டை விழா நடக்க இருந்ததை தடுத்து நிறுத்தியது பற்றி இங்கு கூறுகிறேன்.

தர்மபுரியில் தாரை-தப்பட்டை விழா தடுக்கப்பட்டது

1987ஆம் ஆண்டு தருமபுரி மாவட்டத்தில் பெருமதிப்பிற்குரிய தம்பிதுரை அவர்கள் அ.இ.அ.தி.மு.க. பாராளுமன்ற உறுப்பினராகவும் டெல்லி மக்களவை துணை சபாநாயகராகவும் இருந்தார். அவர் கிராமியக் கலையில் பட்டம் பெற்றவர் எனத் தெரிகிறது.

எனவே, பொங்கல் விழாவினை முன்னிட்டு தருமபுரியில் ஆதித் திராவிடர்களை ஊக்குவிக்கும் வகையில் தாரை–தப்பட்டை விழா நடத்தப் போவதாக அறிவித்தார். முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்கள் பரிசு வழங்குவார் என்றும் அறிவித்திருந்தார்.

நான் தருமபுரி சென்றிருந்த போது சகோதரர் சென்னா மூர்த்தி மற்றும் சில சகோதரர்கள் இதை என்னிடம் தெரிவித்தார்கள்.

“இதைக் கண்டிப்பாக நிறுத்தியே திருவோம்'' என நான் உறுதியளித்து விட்டு சென்னை திரும்பியதும் தருமபுரியில் ஆதித் திராவிடர்களை இழிவுபடுத்தும் வகையில் தாரை–தப்பட்டை (பறையடித்து ஆடுதல்) விழா நடத்தக் கூடாது என அறிக்கை வெளியிட்டேன். மாண்புமிகு முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்களுக்கும் வணக்கமாகக் கடிதம் எழுதினேன்.

தாரை–தப்பட்டை விழா நடத்தி ஆதித் திராவிடர்களை இழிவுபடுத்த வேண்டாம் என தருமபுரி மாவட்டத்தில் பல இடங்களில் கண்டன பொதுக் கூட்டங்கள் நடத்தினோம்.

தளபதி அய்யா சி.எம். ஆறுமுகம் அவர்கள் தருமபுரியிலும் ஆரூரிலும் நடைபெற்ற மாபெரும் கண்டனக் கூட்டங்களில் தம்பிதுரை அவர்களை கடுமையாக எச்சரிக்கை செய்தார்.

அப்போது, குடியரசுக் கட்சி கவாய் அணியைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான இளைஞர்கள் கொதித்தெழுந்தார்கள். உயிர்த் தியாகம் செய்தாவது தாரை–தப்பட்டை விழாவைத் தடுப்பதற்குத் தயாரானார்கள்.

''தாரை–தப்பட்டை விழா நடத்தியே தீருவோம்'' என எதிர்தரப்பிலிருந்து எனக்குச் சவால் விட்டார்கள்.

''தாரை–தப்பட்டை விழாவை நடத்தவிடமாட்டோம்'' என நான் திருப்பிச் சவால் விட்டேன்.

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆரின் மனிதநேயம்

விழாநாளன்று தருமபுரியில் பல இடங்களிலும் குடியரசுக் கட்சித் தொண்டர்கள் தாரை–தப்பட்டை (பறை) கொண்டு வரப்படுகின்றதா என கண்காணித்துக் கொண்டிருந்தார்கள். நான் சாதாரண ஆட்டோ ரிக்ஷாவில் சென்று தொண்டர்களை கண்காணித்துக் கொண்டிருந்தேன். காவல்துறையினர் பல இடங்களில் என்னைப் பின் தொடர்வதையும் கவனித்தேன்.

இதற்கிடையில் முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்கள் சேலம் வழியாக வரும்போது, சேலத்தில் திருவாளர்கள் தங்கராஜ் மற்றும் சக்திவேல் ஆகியோரின் தலைமையில் ஏராளமான குடியரசுக் கட்சித் தொண்டர்கள் முதலமைச்சருக்குக் கருப்புக் கொடி காட்டினார்கள். அவர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டார்கள்.

சிறிது தூரம் கடந்ததும் "எதற்காக கருப்புக் கொடி காட்டினார்கள்'' என புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் வினவியிருக்கிறார்கள்.

"தருமபுரியில் தாரை–தப்பட்டை விழா நடைபெறுவதற்கு கண்டனம் தெரிவித்து குடியரசு கட்சிக்காரர்கள் கருப்புக் கொடி காட்டுகிறார்கள்'' என தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

கைது செய்யப்பட்டவர்கள் உடனே விடுதலை செய்யப்பட்டார்கள்.

புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் தருமபுரி வந்தடைந்தார்கள். நேரே மேடைக்குச் சென்று சில நிமிடங்கள் உரையாற்றி விட்டு கிருஷ்ணகிரிக்குப் புறப்பட்டு விட்டார்கள்.

இந்த விழாவிற்கு தாரை–தப்பட்டைகள் கொண்டு வரப்படவில்லை. அதைப் பற்றிய பேச்சே எழவில்லை.

தலித் மக்களின் மானம் காப்பாற்றப்பட்டதாக எல்லோரும் வந்து எங்களைப் பாராட்டினார்கள். இந்தப் போராட்டத்தில் என்னோடு இணைந்து கடமை வீரர் சென்னா மூர்த்தி, மாவட்ட தலைவர் கே.ஏ. தீர்த்தான், கவிஞர் நந்திக் கண்ணன், நந்தி கேசவன், மருதிப்பட்டி குப்புசாமி பன்னீர், ராசாராம் போன்ற பல தியாகிகள் அயராது போராடினார்கள்.

வெற்றி! வெற்றி!! பெரும் வெற்றி பெற்றோம்!!!

''எல்லாப் புகழும் வெற்றியும் தந்தை பாபாசாகேப் அம்பேத்கர் அவர்களுக்கே'' என கோஷங்கள் எழுந்தன.

இங்கே புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களை உளமாற பாராட்ட வேண்டும்.

சேலத்தில் கைது செய்யப்பட்டவர்களை உடனடியாக விடுதலை செய்ததோடு தருமபுரியில் தொடர்ந்து போராடிக் கொண்டிருந்த எங்களை முன்னெரிச்சைக்கையாகவோ அல்லது போராட்டம் நடத்தும் போதோ கைது செய்ய அனுமதிக்கவே இல்லை.

நாங்கள் சென்றவிடமெல்லாம் காவல்துறையினர் ஜீப்பிலும் மோட்டார் சைக்கிளிலும் எங்களைப் பின் தொடர்ந்து வந்தனர். ஒருவேளை எங்களுக்குப் பாதுகாப்பு கொடுப்பதற்காகக் கூட இருக்கலாம் என எண்ணுகிறேன்.

தாரை–தப்பட்டை பற்றிய பேச்சே எழவில்லை.

இதுவன்றோ புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் மனிதநேயம் அவர் மனித நேயர்! மக்கள் தலைவர்!

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் முதலமைச்சராக இருந்த போது எவ்வளவோ போராட்டங்கள் நடத்தியுள்ளோம். கைது செய்யப்பட்ட போதெல்லாம் அன்று மாலையே விடுதலை செய்து விடுவார்கள்.

அவர் புகழ் வாழ்க!

39. பட்டதாரி பாண்டியன் படுகொலை

ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட்டு திங்கள் 15ஆம் நாள் “சுதந்திர இந்திய நாட்டில் தலித் மக்களுக்கு சுதந்திரம்” இல்லை என்று வருத்தம் தெரிவித்து குடியரசுக் கட்சி (கவாய்ப்பிரிவு) சார்பில் கருப்புக் கொடி ஏந்தி போராட்டம் நடத்துவது வழக்கம்.

1988, ஆகஸ்ட்டு, 15ஆம் நாள் கருப்புக் கொடி ஏற்றியதால் நான் கைது செய்யப்பட்டேன்.

அன்று, தென்னாற்காடு மாவட்டம் காட்டு மன்னார்குடி வட்டத்தில் மாபெரும் புரட்சி வெடித்தது.

பூவிருந்த நல்லூரில் வன்னியர்கள் பறையடித்து விழா நடத்துவதற்கு ஆதித் திராவிடர்களை அழைத்தார்கள். அவர்கள் மறுத்து விடவே அரியலூரிலிருந்து மேளம் அடிப்பவர்களை கொண்டு வந்து விழா நடத்தினார்கள்.

அதைத் தடுத்து நிறுத்துவதற்காக பூவிருந்த நல்லூரில் ஆதித் திராவிடர்கள் ஒன்றுகூடி வன்னியர்கள் தெருவிற்கும் படை எடுத்தார்கள்.

இரண்டு தெருவிற்குமிடையில் வீராணம் ஏரி கிளை ஆறு ஒன்று ஓடுகிறது. அதைத் தாண்டிச் செல்லும் போது காவல்துறையினர் கண்மூடித் தனமாக தலித் மக்கள் மீது துப்பாக்கி சூடு நடத்தினார்கள். பலர் படுகாயமடைந்தார்கள்.

ஒரு தாய்க்கு ஒரே மகன் பட்டதாரி பாண்டியன் என்ற இளைஞர் அதே இடத்தில் துப்பாக்கி சூட்டிற்குப் பலியானார்.

காட்டு மன்னார்குடி தலித் மக்கள் கொதித்தெழுந்தார்கள். அப்பகுதி போர்க்களமாகக் காட்சியளித்தது. பல ஊர்களில் வன்னியர்களால் தலித் மக்கள் தாக்கப்பட்டார்கள். தலித் மக்களின் வீடுகளுக்குத் தீயிட்டார்கள். அதனால் நூற்றுக்கணக்கான தலித் மக்கள் வீடு வாசலின்றி காட்டு மன்னார்குடியருகே ஒரு கிராமத்திலுள்ள மண்டபத்தில் தங்கியிருந்தார்கள்.

ஆகஸ்ட்டு 15ஆம் நாளன்று நான் சென்னையில் கருப்புக் கொடி ஏற்றி கைது செய்யப்பட்டிருந்த போது காட்டுமன்னார் குடியிலிருந்து துப்பாக்கி சூடு பற்றி எனது வீட்டிற்கு தகவல் தெரிவித்ததாக என்னிடம் கூறினார்கள்.

நான் சென்னையில் காவல்துறையினரால் கைது செய்யப் பட்டிருப்பதால் விடுதலையடைந்த உடன் வருவேன் என்று பதில் அனுப்பச் சொன்னேன்.

விடுதலையாகி, ஆகஸ்டு 16ஆம் நாள் காலை நான் மட்டும் தனியாக சிதம்பரம் வழியாக காட்டுமன்னார்குடி போய்ச் சேர்ந்தேன். அந்த ஊர் மிகவும் அமைதியாகக் காட்சியளித்தது. கடைகள் அனைத்தும் அடைக்கப்பட்டிரந்தன. தெரிந்தவர்கள் யாரையும் பார்க்க முடியவில்லை.

கருப்பு நிறத்திலுள்ளவர்கள் தலித் மக்களாக இருப்பார்கள் எனக் கருதி அவர்களிடம் தலைவர் இளைய பெருமாள் வீடு எங்குள்ளது எனக் கேட்டால் அவர்கள் என்னைப் பார்த்து முறைக்கிறார்கள். சிவப்பாக உள்ளவர்கள் வேறு சாதியினராக இருப்பார்கள் எனக் கருதி அவர்களைப் பார்த்து நான் ஒதுங்கிப் போகிறேன். இவ்வாறு நீண்ட நேரம் காட்டுமன்னார் கோயில் பேருந்து நிலையத்தில் சுற்றிக் கொண்டிருந்தேன். இரவு ஏழு மணியைத் தாண்டிவிட்டது. மீண்டும் பேருந்தில் ஏறி சிதம்பரம் வந்து சேர்ந்தேன்.

மறுநாள் அரியலூரில் தலைவர் இரத்தினம் ஏற்பாடு செய்திருந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்ள வேண்டும். ஆகவே அரியலூர் செல்வதற்காக விருத்தாசலம் பேருந்தில் ஏறினேன். நடு இரவு விருத்தாசலம் போய்ச் சேர்ந்தேன். அப்போது அரியலூருக்கு பேருந்து இல்லை. அதிகாலை வரை பேருந்து நிலையத்திலிருந்த ஒரு டீக்கடை அருகே அமர்ந்து கொண்டு அடிக்கடி டீ குடித்துக் கொண்டு நேரத்தைக் கழித்தேன். என்னுடைய பிறந்த நாள் ஒரே அலைச்சலாகக் கழிந்ததோடு என்னைத் தனிமைப்படுத்தி முடிந்தது. அந்த நாள் இரவு விருத்தாசலம் பேருந்து நிலையத்தில் கொசுக் கடியில் பட்ட வேதனை மறக்கவே முடியாத இரவாகிவிட்டது.

அதிகாலையில் அரியலூர் பேருந்து வந்தது. ஒரு வழியாக அரியலூர் போய்ச் சேர்ந்தேன்.

மீண்டும் காட்டுமன்னார்குடி பயணம்

அடுத்து சில தினங்கள் கழித்து தலைவர் சிதம்பரம் சின்னையன் அவர்களுக்கு தகவல் கொடுத்து விட்டு நான், தம்பி சாந்தமூர்த்தி, பொதுச் செயலாளர் வி.கே. தாமோதரம் ஆகிய மூவரும் காட்டுமன்னார்குடி புறப்பட்டோம்.

சிதம்பரம் பேருந்து நிலையத்தில் தலைவர் சின்னையனைச் சந்தித்தோம். அங்கிருந்து நால்வரும் காட்டுமன்னார்குடி போனோம். காட்டு மன்னார்குடியிலுள்ளவர்கள் தலைவர் சின்னையனுக்கு நன்கு அறிமுகமானவர்கள்.

நான் முதல் தடவை சென்றபோது சிவப்பாக இருந்தவர்களைப் பார்த்து அவர்கள் வேறு இனத்தவராக இருக்கலாமெனக் கருதி அவர்களிடம் ஏதுவும் விசாரிக்காமல் ஒதுங்கிச் சென்றதாகச் சொன்னேன் அல்லவா! அவர்களே, இந்தத் தடவை சென்ற போது சின்னையன் அவர்களை வரவேற்றார்கள். தலைவர் இளைய பெருமாள் உடல் நலக் குறைவாக கடலூரில் இருப்பதாகத் தெரிவித்தார்கள். இருப்பினும், மனித உரிமைக் கட்சிக்காரர்கள் எங்களுக்கு வாடகை சைக்கிள் எடுத்துக் கொடுத்து கூடவே ஒரு இளைஞரையும் அனுப்பி பூவிருந்த நல்லூர் செல்ல உதவினார்கள்.

பூவிருந்த நல்லூரில் பாதிக்கப்பட்ட மக்களைக் கண்டு ஆறுதல் கூறினோம். தொடர்ந்து பாதிக்கப்பட்ட கிராமங்களுக்குச் சென்றோம். ஒரு மண்டபத்தில் தங்கி இருந்தவர்களையும் கண்டு ஆறுதல் கூறினோம். இப்படியாக, சைக்கிளில் காட்டுமன்னார்குடி பகுதிகளைச் சுற்றி விட்டு அன்றைய சட்டமன்ற உறுப்பினர் இராஜேந்திரன் அவர்களைச் சந்தித்து மேலும் விவரமறிந்தோம்.

பிறகு சிதம்பரம் வந்து அரசு அதிகாரிகளைச் சந்தித்து பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடியாக சாப்பாடு கொடுப்பதற்கு ஆவண செய்யுமாறு கேட்டுக் கொண்டு பயணிகள் விடுதியில் தங்கியிருந்த முன்னாள் அமைச்சர் அண்ணன் இராசலிங்கம் அவர்களைச் சந்தித்து ஆலோசனை நடத்தினோம்.

சென்னையில் கண்டனக் கூட்டம்

சென்னை வந்ததும் கடலூரிலிருந்த தலைவர் இளைய பெருமாள் அவர்களுடன் தொடர்பு கொண்டேன். அவர் விரைவில் சென்னைக்கு வருவதாகக் கூறினார்.

சென்னை நுங்கம்பாக்கம் காமராசபுரத்தில் குடியரசுக் கட்சி செயலாளர் செயல்வீரர் சி.எஸ். புனிதமணி அவர்கள் கண்டனக் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்தார்.

புனிதமணி தலைமையில் தலைவர்கள் மு. சுந்தரராசன், சொல்லின் செல்வர் ஆ. சக்திதாசன், பாவலர் வை. பாலசுந்தரம், நான் ஆகியோர் கலந்து கொண்டோம்.

தலித் தலைவர்கள் அனைவரும் மனமொத்து ஒரே மேடையில் பேசுவது இதுவே முதல் கூட்டம் எனலாம்.

அடுத்து எழும்பூர் வைகை ஓட்டலில் கூடிப் பேசினோம்.

ஆதித்திராவிட (எஸ்.சி.) இனவிடுதலை கூட்டமைப்பு

வைகை ஓட்டலில் நடைபெற்ற கூட்டத்தில் ''ஷெடியூல்டு இன விடுதலை கூட்டமைப்பு'' என்ற பெயரில் அய்ந்து தலைவர்களும் இணைந்து சமுதாயத்திற்காக போராடுவது எனத் தீர்மானிக்கப்பட்டது.

பாவலர் வை. பாலசுந்தரம் அவர்கள் தலைவராகவும், ஆ. சக்திதாசன் அவர்கள் செயலாளராகவும் நான் பொருளாளராகவும் மு. சுந்தரராசனும் இளைய பெருமாளும் ஆலோசகராகவும் பொறுப்பேற்றுக் கொண்டோம்.

இந்தக் கூட்டமைப்பின் முதல் கூட்டம் சென்னை ஆந்திர மகிளா சபா அரங்கில் சிறப்பாக நடைபெற்றது. பல ஆயிரக்கணக்கான தலித் மக்கள் மிக்க ஆர்வத்துடன் கலந்து கொண்டார்கள்.

காட்டு மன்னார்குடி கலவரத்திற்கு முன்னாள் தி.மு.க. எம்.எல்.ஏ. முட்டம் கிருஷ்ணமூர்த்தி என்ற வன்னியர்தான் முக்கிய காரணமென தெரியவந்தது.

காட்டு மன்னார்குடியில் தான் முதன் முதலாக வன்னியர்கள் தலித் மக்களின் வீடுகளுக்குத் தீயிட்டார்கள்.

அதைத் தொடர்ந்து டாக்டர் இராமதாஸ் தலைமையிலான வன்னியர் சங்கத்திற்கும் தலித் மக்களுக்கும் போர் மூண்டது.

40. வன்னியர்–ஆதித்திராவிடர் மோதல்கள்

டாக்டர் இராமதாஸ் தலைமையிலான வன்னியர் சங்கம் இடஒதுக்கீடு கோரி சாலை மறியல் போராட்டம் அறிவித்திருந்தது.

அதற்கு முதல்நாள் அண்ணா அறிவாலயத்தில் தி.மு.க. கூட்டம் நடைபெற்றது. அக்கூட்டத்திற்கு தென் மாவட்டங்களிலிருந்து தி.மு.க. தொண்டர்கள் வண்டிகளில் வந்தார்கள். அவர்கள் திரும்பிச் செல்லும் போது வன்னியர்கள் சாலை மறியலில் ஈடுபட்டார்கள். அதன் காரணமாக தி.மு.க. தொண்டர்கள் சென்ற வேன்கள் தாக்கப்பட்டன.

தாக்குதலிலிருந்து தப்பிப்பிப்பதற்காக தி.மு.க. தொண்டர்கள் திண்டிவனம், விக்கிரவாண்டி, முண்டியம்பாக்கம் போன்ற ஊர்களிலுள்ள ஆதித் திராவிடர்களின் காலனிக்குள் ஓடி தஞ்சம் புகுந்தார்கள். மனிதாபிமானத்தோடு தலித் மக்கள் தி.மு.க. தொண்டர்களுக்கு பாதுகாப்பு கொடுத்தார்கள். அதனால் வன்னியர்களுக்கும் ஆதித் திராவிடர்களுக்கும் மோதல் ஏற்பட்டது. வன்னியர்கள் ஆதித் திராவிடர்களின் வீடுகளுக்குத் தீ வைத்ததால் இந்தக் கலவரம் தென்னாற்காடு மாவட்டம் முழுவதும் பரவியது.

வன்னியர்களின் சாலை மறியல் போராட்டம் வன்னியர்–ஆதித் திராவிடர்களின் சாதிக் கலவரமாக மாறியது. தென்னாற்காடு மாவட்டத்தில் (இன்றைய பெரம்பலூர் மாவட்டம்) பெரம்பலூர், அரியலூர், ஜெயங்கொண்டான், உடையார் பாளையம், ஆண்டிமடம் பகுதிகளிலும் செங்கல்பட்டு மாவட்டத்தில் பல இடங்களிலும் தொடர்ந்து பலநாட்கள் கலவரம் நடந்தது. ஆதித் திராவிட இன (எஸ்.சி.) அம்பெரும் தலைவர்களாகிய பாவலர் வை. பாலசுந்தரம், மு. சுந்தரராசன், சொல்லின் செல்வர் சக்திதாசன், எல். இளையபெருமாள் மற்றும் நான் அடிக்கடி கூடிப் பேசி தலித் மக்களின் பாதுகாப்பிற்கு ஆவன செய்தோம். ஐவரும் பலமுறை பாதிக்கப்பட்ட பகுதிகளுக்குச் சென்று ஆறுதல் கூறினோம்.

ஆதித்திராவிட (எஸ்.சி.) இன மக்கள் வெகுவாக பாதிக்கப்பட்டிருந்தார்கள்.

திண்டிவனம், விழுப்புரம், விக்கிரவாண்டி, கடலூர், சிதம்பரம், காட்டு மன்னார்குடி, விருத்தாசலம், உளுந்தூர்பேட்டை, ஜெயங்கொண்டான்,

அரியலூர், கள்ளக்குறிச்சி, திருச்சி, திருவள்ளூர், திருப்பனந்தாள் போன்ற ஊர்களில் தொடர்ந்து கண்டனக் கூட்டங்கள் நடைபெற்றன. ஐம் பெரும் தலைவர்கள் அனைத்து ஊர்களிலும் கலந்து கொண்டோம். எல்லா ஊர்களிலும் பல ஆயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டார்கள். பல ஊர்களில் மாபெரும் பேரணிகளும் நடைபெற்றன.

தலைவர்கள் ஒன்று சேர்ந்தால் தலித் மக்கள் உறுதியாக ஒன்று சேர்வார்கள் என்பதை "ஷெடியூல்டு இன விடுதலை கூட்டமைப்பு'' மூலம் அறிந்தோம்.

தலித் மக்களின் ஒற்றுமையைக் கெடுப்பவர்கள் தலித் தலைவர்கள் தான் என்பதை மறுக்க முடியாது.

இந்த "ஷெடியூல்டு இன கூட்டமைப்பு'' இரண்டு ஆண்டுகள் மிக எழுச்சியுடன் செயல்பட்டது. இதன் மூலம் பல்வேறு சிக்கல்களுக்கு (பிரச்சனைகள்) தீர்வு கண்டோம்.

இந்தக் கூட்டமைப்பின் வாயிலாக பல போராட்டங்களும் நடத்தினோம். இதன் சார்பில் நடைபெற்ற இரயில் நிறுத்தப் போராட்டம் வரலாற்றுச் சிறப்புமிக்கதாகும். ஒவ்வொரு முக்கிய ஊரிலும் தலைவர்கள் இரயில் நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டார்கள்.

நான் எழும்பூர் இரயில் நிலையத்தில் மறியல் செய்தபோது கைது செய்யப்பட்டேன்.

பாரதப் பிரதமரிடம் முறையீடு

வடமாவட்டங்களில் பல ஊர்களில் வன்னியர்கள் தலித் மக்களின் வீடுகளுக்கு தீ வைத்துக் கொண்டிருந்தார்கள். கலவரம் தொடர்ந்து நடந்து கொண்டிருந்தது. அப்போது நாவலர் நெடுஞ்செழியன் தற்காலிக முதலமைச்சராக இருந்தார். அவரால் கலவரத்தை அடக்க இயலவில்லை. புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் அமெரிக்கா சென்று அங்குள்ள மருத்துவமனையொன்றில் சிகிச்சை பெற்றுக் கொண்டிருந்த நேரம்.

எனவே, டெல்லி சென்று அன்றைய பாரதப் பிரதமர் இராஜீவ்காந்தி அவர்களையும் உள்துறை அமைச்சர் பூட்டாசிங் அவர்களையும் பலமுறை

சந்தித்து முறையிட்டேன். தலித் மக்களுக்கு பாதுகாப்பளிப்பதாக உறுதி கூறினார்கள்.

"வன்னியர்களுக்கு இடஒதுக்கீடு கொடுத்து விட்டால் கலவரம் அடங்கி விடுமா?'' என கேட்டார்கள்.

"ஆம்'' என்றேன்.

"வன்னியர்களுக்கு இடஒதுக்கீடு கொடுப்பதில் தலித் தலைவர்களாகிய உங்களுக்கு ஆட்சேபனை உண்டா'' என கேட்டார்கள்.

"இல்லை. காரணம், வன்னியர்களுக்கு இடஒதுக்கீடு கொடுப்பதால் செடியூல்டு இனத்தவர்களுக்கு எந்த பாதிப்புமில்லை. அவர்களும் சில இடங்களில் தலித் மக்களைப் போலவே ஏழ்மை நிலையில் உள்ளார்கள். அவர்களுக்கு இட ஒதுக்கீடு கொடுப்பதில் எங்களுக்கு எந்த பாதிப்புமில்லை'' என கூறினேன்.

எனது பதிலைக் கேட்டதும் மாண்புமிகு பாரதப் பிரதமர் ராஜீவ்காந்தி அவர்கள் "வெரிகுட்'' (மிக நன்று) என கூறினார்கள்.

இது தொடர்பாக பூட்டாசிங், அருணாசலம், சங்கரானந் ஆகியோருடன் கலந்து பேசி முடிவெடுப்பதாக எனக்கு ஆறுதல் கூறி இராஜீவ்காந்தி அவர்கள் என்னை அனுப்பி வைத்தார்கள்.

பூட்டாசிங் சென்னைக்கு வந்தார்

அதன்படி மாண்புமிகு பாரதப் பிரதமர் இராஜீவ்காந்தி அவர்கள் இந்திய உட்துறை அமைச்சர் பூட்டாசிங் அவர்கள் தலைவர்களைச் சந்தித்து கருத்தறிய சென்னைக்கு அனுப்பினார்கள். அவர் சென்னை வந்து கவர்னர் மாளிகையில் தங்கியிருந்தார்.

தலித் தலைவர்கள் உடனே கவர்னர் மாளிகைக்கு வரவேண்டுமென அதிகாரிகள் எங்களுக்குத் தெரிவித்தார்கள்.

பாவலர் வை. பாலசுந்தரம், ஆ. சக்திதாசன், செ.கு. தமிழரசன், நான் மற்றும் சிலர் கிண்டி ஆளுநர் மாளிகைக்குச் சென்றிருந்தோம். பூட்டாசிங் அவர்கள் எங்களுக்கு மதியம் விருந்தளித்தார்கள்.

பிறகு, வன்னியர்களுக்கு இட ஒதுக்கீடு கொடுப்பது பற்றி எங்களோடு ஆலோசனை நடத்தினார்கள்.

"வன்னியர்களுக்கு இடஒதுக்கீடு கொடுப்பது பற்றி முடிவு செய்வதற்காக பிரதமர் என்னை சென்னைக்கு அனுப்பியுள்ளார். நான் வன்னியர்களுக்கு இடஒதுக்கீடு கொடுப்பதால் நாளை செடியூல்டு இனமக்கள் நமது சாதிக்காரன் சதி செய்துவிட்டான் என்று என்மீது பழி சுமத்தக்கூடாது. எனவே, உங்களுடன் ஆலோசனை நடத்தியபின் முடிவெடுக்க விரும்புகிறேன்'' என்று பூட்டாசிங் அவர்கள் கூறினார்கள்.

வன்னியர்களுக்கு இடஒதுக்கீடு அளித்து பிரச்சனையைத் தீர்க்க வேண்டும். வன்னியர்களுக்கு இடஒதுக்கீடு அளித்து விட்டால் வன்னியர் ஆதித்திராவிட மக்களிடையே தகராறு இருக்காது; மேலும் சட்டமன்ற தேர்தலுக்கும் நல்லதாக அமையும் எனக் கருதி பாரதப் பிரதமர் இராஜீவ்காந்தி அவர்கள் வன்னியருக்கு இட ஒதுக்கீடு அளிப்பதற்கு முடிவு எடுத்துவிட்டார்கள்.

இராஜீவ்காந்தி, பூட்டாசிங், சங்கரானந், அருணாசலம் ஆகியோர் கலந்து பேசி இந்த முடிவெடுத்துள்ளார்கள் என்பதை நான் டெல்லி சென்றிருந்த போதே தெரிந்து கொண்டேன்.

ஆகவேதான், வன்னியர்களுடன் கலந்து பேசி அவர்களுக்கு இடஒதுக்கீடு வழங்குவதற்காக உள்துறை அமைச்சர் பூட்டாசிங் அவர்களை சென்னைக்கு அனுப்பி வைத்தார்கள்.

ஆனால், பேச்சுவார்த்தைக்கு வன்னியர்களுக்கு அழைப்பு விடுத்திருந்தும் பூட்டாசிங் ஒரு தலித் என்பதால், அவர் வன்னியருக்கு நல்லது செய்யமாட்டார் என வன்னிய தலைவர்கள் தவறாகப் புரிந்து கொண்டு பூட்டாசிங் அவர்களைச் சந்திப்பதற்கு மறுத்து விட்டார்கள்.

பூட்டாசிங் அவர்கள் வன்னியர் தலைவர் வருவார்கள் என எதிர்பார்த்திருந்து அவர்கள் வராததால் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்று விட்டார்கள்.

நரசிம்மராவ் வந்தார்

"நரசிம்மராவ் வரவேண்டும். அவர் வந்தால்தான் வன்னியர்களுக்கு

இடஒதுக்கீடு கிடைக்கும்'' என வன்னியர் சங்கத் தலைவர்கள் குரல் எழுப்பினார்கள். அன்றைய மத்திய அமைச்சர் நரசிம்மராவ் சென்னைக்கு வந்து அடையார் கேட் ஓட்டலில் தங்கி இருந்தார். சாதி சங்கத் தலைவர்களோடு ஆலோசனை நடத்தினார். எங்களுக்கும் அழைப்பு வந்தது. அடையார்கேட் ஓட்டலில் தனித்தனியாக எங்களை அழைத்து பேசினர்.

"வன்னியர்களுக்கு இடஒதுக்கீடு கொடுப்பதில் தலித் மக்களுக்கு ஆட்சேபனை இல்லை. பெரும்பாலான இடங்களில் வன்னியர்களும் தலித் மக்களைப் போலவே ஏழ்மை நிலையிலுள்ளார்கள். மேலும் வன்னியர்களுக்கு இடஒதுக்கீடு கொடுத்துவிட்டால் போராட்டம் இருக்காது. தலித் மக்களை தாக்கவுமாட்டார்கள். எனவே தயவுசெய்து வன்னியர்களுக்கும் இடஒதுக்கீடு கொடுங்கள்'' என நரசிம்மராவ் அவர்களை மிகவும் கெஞ்சி கேட்டுக்கொண்டேன். பலமுறை "பிளீஸ், பிளீஸ் (தயவுசெய்து, தயவுசெய்து) என கூறினேன். அவர் கோபத்துடன் நோக்கினார்.

''அது எப்படி முடியும்? வன்னியர்கள் மட்டுந்தானா ஏழ்மை நிலையிலுள்ளார்கள்? வேறு சாதிகள் இல்லையா?'' என்றார். மேலும் ஒரு குட்டிக் கதையையும் கூறினார்.

"பூனைக்கு யானை மீது கோபம். ஆனால் யானையை ஒன்றும் செய்ய முடியவில்லை. அதனால் வழியில் வருகிற அப்பாவி எலிகளைக் கொன்று குவிக்கிறது'' என்றார்.

அதாவது, வன்னியர்கள் காங்கிரசுக் கட்சியைப் பலமாக எதிர்க்கிறார்கள். ஆனால் காங்கிரஸ் கட்சியை அவர்களால் ஒன்றும் செய்ய முடியவில்லை. எனவே காங்கிரசு மீதுள்ள கோபத்தில் தலித் மக்களை தாக்குகிறார்கள். என விளக்கம் கூறினார்.

"நீங்கள் பயப்படாதீர்கள். நாங்கள் பார்த்துக் கொள்கிறோம்'' என கூறினார்.

ஒரு பெரிய மத்திய அரசு அமைச்சரிடம் அதற்குமேல் என்னால் வாதிட முடியாமல் வந்து விட்டேன்.

மொத்தத்தில் நரசிம்மராவ் வந்ததினால் வன்னியர்களுக்கு எந்த பயனுமில்லை என்பதை வன்னிய நண்பர்கள் உணர்ந்திருப்பார்கள் என கருதுகின்றேன்.

வன்னியர்-ஆதித்திராவிடரிடையே சமாதானம்

வன்னியர்-ஆதித்திராவிடர்களிடையே மும்முரமாக சண்டை நடந்து கொண்டிருந்தபோது முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்கள் அமெரிக்காவில் மருத்துவ சிகிச்சை பெற்று வந்தார்.

நாவலர் நெடுஞ்செழியன் தற்காலிக முதலமைச்சராக இருந்தபோது பலமுறை சந்தித்து முறையிட்டோம். வன்னியர்களின் சிக்கலை (பிரச்சனையை) தீர்த்து வைப்பதற்கு அவரால் முடியவில்லை.

புரட்சித்தலைவர் அமெரிக்காவிலிருந்து திரும்பியதும் மீண்டும் முதலமைச்சரானார். அப்போதும் கலவரம் நடந்து கொண்டிருந்தது. எம்.ஜி.ஆர். கொஞ்ச நாட்களில் இயற்கை எய்தினார். அ.திமு.க. ஆட்சி கலைக்கப்பட்டது. தமிழகத்தில் குடியரசுத் தலைவர் ஆட்சி கொண்டுவரப் பட்டது.

1988ஆம் ஆண்டு மேதகு அலெக்சாண்டர் அவர்கள் தமிழக ஆளுனராக இருந்தார். அவர் வன்னியர் இன தலைவர்களையும், ஆதித்திராவிடர் இன தலைவர்களையும் அழைத்து சமாதானம் செய்வதற்கு ஆவண செய்தார். ஆளுநரின் ஆலோசகர் இராமகிருஷ்ணா அவர்கள் தலைமையில் கோட்டையில் வன்னியர் ஆதித்திராவிடர் ஒற்றுமை கூட்டத்தை கூட்டினார்.

அந்தக் கூட்டத்தில் தலித் மக்கள் சார்பில் சொல்லின் செல்வர் ஆ. சக்திதாசன், எல். இளைய பெருமாள், மகிழ்வாணன், நான் மற்றும் சிலரும் கலந்து கொண்டோம்.

வன்னியர்கள் சார்பில் டாக்டர் இராமதாஸ், வன்னிய அடிகள், அன்பரசு, பேராசிரியர் தீரன், சுப்பிரமணியம் மற்றும் பலரும் கலந்து கொண்டார்கள்.

மிகவும் கடுமையான வாக்குவாதம் நடைபெற்றுவிட்டது. இறுதியில் சில திட்டங்களின் அடிப்படையில் ஒப்பந்தம் ஏற்பட்டது. இரண்டு சமூகத்தின் தலைவர்களும் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டோம்.

முக்கியமாக ஆதித்திராவிடர்களை பறையடிக்கவோ பிணம் சுடவோ அழைக்கக் கூடாது என்றும், வீடுகளுக்கு தீயிடுபவர்களை குண்டர்

சட்டத்தில் நடவடிக்கை எடுத்து தண்டிக்க வேண்டுமென்றும் நாங்கள் வாதிட்டது ஏற்றுக்கொள்ளப்பட்டது.

''வீடுகளுக்கு தீயிடுபவர்களுக்கு மரண தண்டனை கொடுக்க வேண்டும்'' என இனிய நண்பர் டாக்டர் இராமதாஸ் கூறினார்.

பிறகு இருதரப்பு சமூகத் தலைவர்களும் தனியாகப் பேசினோம். எங்களது பேச்சுவார்த்தைக்குப் பின் தமிழக அரசின் தலைமைச் செயலாளர் இராஜேந்திரன் அவர்களைச் சந்தித்தோம். இதுவரை மோதிக் கொண்டிருந்த இரு சமூகத்தவர்கள் இப்போது நல்ல நண்பர்களாக வருவது கண்டு மிக்க மகிழ்ச்சியடைந்து எல்லோருக்கும் தேனீர் விருந்தளித்தார்.

சில தினங்கள் கழித்து டாக்டர் இராமதாஸ், பேராசிரியர் தீரன், முத்துகுமார், பு.த. இளங்கோவன், ஏ.கே. மூர்த்தி ஆகியோர் என்னுடைய இல்லத்திற்கு வந்திருந்தார்கள். ஆதித் திராவிடர்களின் ஒற்றுமையை எப்படி வளர்ப்பது என்பது பற்றி நீண்ட நேரம் பேசிக் கொண்டிருந்தோம்.

வன்னியர்-ஆதித்திராவிடர் ஒற்றுமை ஏன்?

வடமாவட்டங்களில் வன்னியர்களும் ஆதித் திராவிடர்களும் பெரும் பான்மையினராக உள்ளனர். இவ்விரு சமூகத்தினரின் வாழ்க்கைத் தரம் கிட்டத்தட்ட ஒரே நிலையிலுள்ளது.

என்னதான் இருதரப்பினரும் மோதிக் கொண்டாலும் இரண்டு சமூக மக்களும் அதே ஊரில்தான் வசித்தாக வேண்டும் வாழ்ந்தாக வேண்டும்.

நாட்டு நடப்புகள் அனைத்திலும் ஒருவரையொருவர் சந்தித்தாக வேண்டும்.

தமிழகத்தில் தலித் மக்கள் வன்னியர்கள் மற்றும் முக்குலத்தோர் ஆகிய மூன்று சமூக மக்கள்தான் வெகு மக்களாக உள்ளனர்.

ஆனால் இந்த மூன்று சமூக மக்களும் பல்வேறு அரசியல் கட்சிகளுக்கு கொடி பிடிக்கின்ற நிலையிலுள்ளனரே தவிர இவர்கள் ஏன் முதலமைச்சராக வரமுடியவில்லை?

வெகு மக்களாகிய இம்மூன்று பிரிவினரும் ஒன்று சேர்ந்தால் தமிழகத்தை முறையோடு ஆள முடியும்.

ஆனால் இந்த உண்மையை உணராமல் முக்குலத்தோர், தலித் மக்கள், வன்னியர்கள் ஆகியோர் தேர்தல் காலங்களில் சிதறுண்டு பல்வேறு கட்சிகளில் ஆதரவை நாடவேண்டிய நிலையிலுள்ளனர்.

எனவே, தென்மாவட்டங்களில் முக்குலத்தோரும் வடமாவட்டங்களில் வன்னியரும் இந்துமத அடிப்படையிலுள்ள தீண்டாமை உணர்வை அகற்றிக் கொள்ள வேண்டியது அவசியம்.

சாதிவேற்றுமைகளுக்கும், தீண்டாமை உணர்விற்கும் இந்து மதமே காரணம்.

ஆகவே, இந்து மதத்திலுள்ள மூட நம்பிக்கைகளை அகற்றிவிட்டு பகுத்தறிவோடு வாழ்வார்களேயானால் சாதிச் சண்டைகள் வராது. அதற்கு அந்தந்த சமுதாயத் தலைவர்கள் பகுத்தறிவோடு மக்களை வழி நடத்திச் செல்வது அவசியம்.

எடுத்துக்காட்டாக,

தஞ்சை மாவட்டம் (இன்றைய நாகை) வேதாரணியம் வட்டம் கருப்பம் புலத்தில் அய்யா திரு. பி. வெங்கடாசல தேவர் அவர்கள் ஊராட்சி ஒன்றியத் தலைவராகவும் தமிழக சட்டமன்ற உறுப்பினராகவும் மற்றும் மேலவை (கவுன்சில்) உறுப்பினராகவுமிருந்தார். அவர், சாதி வேற்றுமை, தீண்டாமை, உணர்வு, கடவுள் பக்தி, மூட நம்பிக்கைகள் எதுவுமே அணுவளவும் கடைப் பிடிக்காத பிறவிப் பகுத்தறிவாளராக வாழ்ந்தவர்.

அவர்களைப் போலவே வேதாரணியம் வட்டம் குரவப்புலம் அய்யா மாரிமுத்துக் கவுண்டர் அவர்களும் வாழ்ந்தார்கள்.

அந்த மாமனிதர்களைப் போல தலைவர்கள் உருவானால் சாதிச் சண்டைகள் வராது.

41. 1989 ஆம் ஆண்டு பொதுத் தேர்தல்

1989 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் இந்தியக் குடியரசுக் கட்சி (கவாய்) காங்கிரசுக் கூட்டணியில் சேர வேண்டும் என அன்றைய அமைச்சர் தென்காசி அருணாசலம் அவர்கள் முயற்சி எடுத்து வந்தார்கள்.

என்னை டெல்லிக்கு அழைத்துச் சென்றார்கள். பாரதப் பிரதமர் இராஜீவ்காந்தியுடனும் உள்துறை அமைச்சர் பூட்டாசிங்குடனும் பேச்சுவார்த்தை நடத்தினோம்.

தமிழக சட்டமன்றத் தேர்தலில் இரண்டு தொகுதிகள் கொடுப்பதாக ஒத்துக் கொண்டார்கள். ஆனால், குடியரசுக் கட்சித் தலைவர்களின் ஒத்துழைப்பு இல்லாததனாலும் தமிழக காங்கிரசுத் தலைவர்களின் அடாவடித்தனத்தினாலும் வரகூர் தொகுதி மட்டுமே கிடைத்தது.

நான் வரகூர் தொகுதியில் காங்கிரசுக் கட்சியின் கை சின்னத்தில் போட்டியிட்டேன்.

வேட்பாளர் அறிமுகக் கூட்டம் திருச்சியில் நடைபெற்றது. அன்றைய பாரத பிரதமர் இராஜீவ்காந்தி அவர்கள் வேட்பாளர்களை அறிமுகம் செய்து வைத்தார்கள்.

''குடியரசுக் கட்சி வேட்பாளர் டாக்டர் சேப்பன், வாகூர் தொகுதி'' என்றதும் என்னுடைய கையைப் பிடித்து உயர்த்தி நீண்ட நேரம் கூட்டத்தை நோக்கிப் பார்க்கச் செய்தார்.

காங்கிரசுக்காரர்களின் துரோகம்

தேர்தல் செலவிற்காக காங்கிரசுக் கட்சி கொடுத்த பணத்தை வட்டார காங்கிரசுத் தலைவர் பெரியசாமி உடையார் அபகரித்துக் கொண்டார். ஒரு சில காங்கிரசுக்காரர்கள் இரவு பகலாக என்னை ஆதரித்து தேர்தல் பணியாற்றினார்கள். ஆனால் பெரியசாமி உடையாரும் அவருடைய ஆதரவாளர்களும் காலை வாரிவிட்டார்கள்.

காங்கிரசிலிருந்த வன்னியர்கள் டாக்டர் இராமதாஸ் அவர்களிடம் கடிதம் வாங்கி வந்தால் தான் ஆதரிப்போமென கண்டிப்பாகக் கூறி விட்டார்கள்.

எனவே, திண்டிவனம் சென்று டாக்டர் இராமதாஸ் அவர்களைப் பார்த்து விபரத்தைக் கூறி ஆதரவு கோரினேன். ''நாங்கள் (அப்போது வன்னியர் சங்கம்) தேர்தலை புறக்கணிக்கிறோம். மேலும் காங்கிரசுக் கட்சியைத் தோற்கடிப்பதுதான் எங்கள் குறிக்கோள். காங்கிரசுக் கட்சியைச் சாகடித்து சமாதி கட்டி பால் ஊற்றுவதாக அறிவித்துள்ளோம். நீங்கள் காங்கிரசுக் கட்சியுடன் இணைந்து போட்டியிடுவதால் நாங்கள் ஆதரிப்பது சரியானது அல்ல'' என கூறிவிட்டார்.

பழனி பாபாவிடம் ஆதரவு கோரினேன். அவர் தி.மு.க.வை ஆதரிப்பதாகக் கூறிவிட்டார்.

வரகூர் தொகுதியில் பல ஆண்டுகளாக போராட்டம் நடத்தி இருக்கிறேன். கிராமப்புறங்களிலுள்ள எல்லா தேனீர் கடைகளிலும் தலித் மக்களுக்கு தனி குவளை (டீ கிளாஸ்) ஊஞ்சலாடிக் கொண்டிருந்தது. நான் இதை எதிர்த்துப் போராடினேன்.

எனவே சாதி இந்துக்கள் என்னை அடையாளம் கண்டுபிடித்து விட்டார்கள்.

வன்னியர்கள் பகுதியில் பழைய முறம், செருப்பு, துடைப்பான் முதலியவைகளை ஊர் முனையில் கட்டி தொங்கவிட்டார்கள். என்னை ஊருக்குள் நுழைய விடாமல் தடுத்தார்கள். எனது காரை அடித்து சேதப்படுத்தினார்கள்.

தேர்தலை புறக்கணிப்பதாகக் கூறிய வன்னியர்கள் என்னை கண்டித்து சுவரொட்டிகளை ஒட்டியதோடு தேர்தல் நாளன்று ஒட்டு மொத்தமாக திராவிட முன்னேற்ற கழகத்திற்கு வாக்களித்தார்கள்.

தலித் மக்களின் வாக்குகள் சிதறுண்டு போயின. அ.இ.அ.தி.மு.க.வில் ஜெயலலிதா அணி, ஜானகி அம்மாள் அணி என இரு அணிகள், தி.மு.க. குடியரசு கட்சி இப்படி எல்லா கட்சி வேட்பாளர்களும் தலித்துக்கள் என்பதால் வாக்குகள் சிதறுண்டன. முன்னாள் அமைச்சர் அருணாசலம் ஜானகி அம்மாள் அணியில் போட்டியிட்டார்.

நான் வரகூர் தொகுதியில் போட்டியிட்டபோது காங்கிரசுத் தலைவர் மூப்பனார், மத்திய அமைச்சர் சிதம்பரம் ஆகியோர் என்னை ஆதரித்து தீவிரமாக பிரச்சாரம் செய்தார்கள்.

இருப்பினும் தி.மு.க. வெற்றி பெற்றது.

தலைவர் மூப்பனார் அவர்களின் ஆதரவு

காங்கிரசுத் தலைவர் ஜி.கே. மூப்பனார் அவர்கள் எப்போதும் தலித் அமைப்புகளை ஆதரிப்பவர். தலித் தலைவர்கள் தம்முடன் இருக்கிறார்கள் என்பதைப் பெருமையாகக் கருதுபவர். இதை பலமுறை டெல்லியில் சந்தித்த போதும் தமிழ்நாட்டிலும் உணர்ந்தேன்.

நான் வரகூர் தொகுதியில் தோற்றுப் போனபின் மூப்பனார் அவர்களைச் சந்தித்தேன்.

"கவலைப்படாதீங்க டாக்டர். இந்தத் தேர்தலில் தோற்றாலும் மத்தியில் உங்களை இராஜ்யசபை உறுப்பினராக்குகிறேன்'' என தட்டிக் கொடுத்து ஆறுதல் கூறினார் அந்தப் பெருமகன்.

அடிக்கடி மூப்பனார் அவர்களை நான் சந்திப்பதுண்டு. சிலரைப் பற்றிய இரகசியங்களைக் கூட என்னை தனியே அழைத்து கூறுவார்.

மூப்பனார் வாழைப்பாடியார் சந்திப்பு

பழனி பாராளுமன்ற தேர்தலுக்கு இடைத் தேர்தலுக்குப் பிரச்சாரம் செய்வதற்காக நான் வரவேண்டும் என மூப்பனார் அவர்கள் கூறினார்கள். நானும் சாந்தமூர்த்தியும் பழனிக்குச் சென்றோம். தொகுதி முழுதும் பிரச்சாரம் செய்தோம். வாழைப்பாடியார், மூப்பனார், எஸ்.பி. பாலசுப்பிரமணியம், தண்டாயுதபாணி மற்றும் பல தலைவர்கள் எங்களோடு ஒரே விடுதியில் (ஹோட்டல்) தங்கி இருந்தார்கள். வாழைப்பாடியாரும் மூப்பனாரும் விடுதியில் அடுத்தடுத்த அறைகளில் தங்கியிருந்த போது ஒருவரையொருவர் சந்தித்துப் பேசிக் கொள்ளவில்லை.

கடைசி நாளில் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது. மேடையில் வாழைப்பாடியார் அருகில் நான் அமர்ந்திருந்தேன். சற்று நேரத்தில் மூப்பனார் அவர்கள் மேடைக்கு வந்தார்கள். உடனே நான் எழுந்து மூப்பனார் அவர்களின் கையைப் பிடித்துக் கொண்டு வாழப்பாடியாரின் அருகில் நான் அமர்ந்த நாற்காலியில் உட்கார வைத்தேன்.

நீண்ட நாட்களுக்குப்பின் இப்போது தான் இருவரும் ஒன்றாக

அமர்ந்தார்கள். இருவரும் ஒருவரையொருவர் நலம் விசாரித்துக் கொண்டார்கள்.

கூட்டத்தில் ஒரே கைத்தட்டல்.
"தலைவர் மூப்பனார் வாழ்க!''
"தலைவர் வாழப்பாடியார் வாழக்!

என்று வானதிர முழக்கம் எழுந்தது.

நீண்ட நாட்களுக்குப் பின் இருதுருவங்களாக இருந்த தலைவர்கள் சிரித்துப் பேசிக் கொண்டிருந்ததைப் பார்த்து தொண்டர்கள் மகிழ்ச்சிப் பெருக்கில் இப்படி முழக்கமிட்டார்கள்.

கூட்டம் முடிந்து நான் மேடையை விட்டு இறங்கியதும்,

"சபாஷ் டாக்டர்! தலைவர்கள் இருவரையும் ஒன்றாக உட்கார வைத்து விட்டீர்கள்'' என என்னைப் பாராட்டினார்கள்.

இப்படி பல கூட்டங்களில் மூப்பனார் அவர்களுடன் பேசி அவருடைய பாராட்டுதலைப் பெற்றிருக்கிறேன்.

42. சங்கராச்சாரியார் வழக்கு

1990 ஆம் ஆண்டு தாம்பரத்தில் நடைபெற்ற மிலாதுநபி விழாவில் நானும் பழனி பாபாவும் கலந்து கொண்டு பேசினோம். இந்து மதத்திலுள்ள தீண்டாமைக் கொடுமைகளைப் பற்றி தான் பேசினேன். தீண்டாமை கொடுமைகளை ஒழிப்பதற்கு சங்கராச்சாரியார் போன்ற இந்துமதத் தலைவர்கள் அக்கறை எடுத்துக் கொள்ள வேண்டுமெனக் கேட்டுக்கொண்டேன்.

ஆனால் வேண்டுமென்றே சிவப்பு நாடா பத்திரிகையில் ''அக்டோபர் 5ஆம் நாள் சங்கராச்சாரியாரை பழனிபாபாவும் டாக்டர் சேப்பனும் கொலை செய்யப் போகிறார்கள்'' என அவதூறாக எழுதி விட்டார்கள்.

இந்த அப்பட்டமான பொய்யை சில இந்துமதத் தலைவர்கள் நம்பி விட்டார்கள்.

அப்போது அத்வானி, வாஜ்பாய் ஆகியோருடன் கூடிய கூட்டு மந்திரி சபையில் தி.மு.க. அங்கம் வகித்தது.

மெரினா கடற்கரையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் வாஜ்பாய், அத்வானி, முரளிமனோகர் ஜோஷி ஆகியோருடன் அன்றைய முதல்வர் டாக்டர் கலைஞர் கருணாநிதியும் கலந்து கொண்டார்.

அப்போது ஒரு இந்துமதத் தலைவர், ''பழனி பாபாவும் டாக்டர் சேப்பனும் சங்கராச்சாரியாரை கொலை செய்யப் போகிறார்கள். கலைஞர் சங்கராச்சாரியாரை காப்பாற்ற வேண்டும்'' என கேட்டுக் கொண்டார்.

இதை நம்பிய அத்வானி, முரளி மனோகர் ஜோஷி ஆகியோர் எங்களை வன்மையாகக் கண்டித்துப் பேசியதோடு முதல்வர் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார்கள்.

''வன்முறையைத் தூண்டுபவர்களை இரும்புக்கரம் கொண்டு ஒடுக்குவோம்'' என அக்கூட்டத்தில் கலைஞர் உறுதியளித்தார்.

மறுநாள் இரவு–காந்தி அடிகள் பிறந்த அக்டோபர் 2ஆம் நாள் இரவில் நான் எனது மருத்துவமனையில் நோயாளிகளுக்கு சிகிச்சையளித்துக் கொண்டிருக்கும் என்னை கைது செய்தார்கள்.

பழநி பாபாவை திருப்பூரில் கைது செய்தார்கள்.

இந்த வழக்கு தாம்பரம் நீதிமன்றத்தில் ஆறு ஆண்டுகள் நடைபெற்றது. இது பொய் வழக்கு என மெய்ப்பிக்கப்பட்டு நாங்கள் விடுதலை செய்யப்பட்டோம்.

இது கலைஞரின் ஆட்சியில் நடைபெற்றது.

நடுவண் அரசின் அப்போதைய தலைமை அமைச்சர் வாஜ்பாய் மற்றும் அமைச்சர்கள் அத்வானி, முரளி மனோகர் ஜோஷி ஆகியோரை திருப்தி படுத்த வேண்டும் என்பதற்காக டாக்டர் கலைஞர் அவர்கள் எங்களை பழிவாங்குவதற்குத் திட்டமிட்டார் என்பது உண்மையானது.

மூப்பனார் சமாதானம்

சங்கராச்சாரியாரை யாரோ கொலைச் செய்யப் போகின்றார்களாம் என கேள்விப்பட்டு மூப்பனார் அவர்கள் வந்தவாசியிலிருந்து வரும்போது சங்கராச்சாரியாரை (பெரியவர்) பார்த்து விசாரிப்பதற்காக சென்றிருக்கிறார்.

அப்போது, பழனி பாபாவும் டாக்டர் சேப்பனும் தன்னை அக்டோபர் 5ஆம் நாள் கொலை செய்ய இருப்பதாக சங்கராச்சாரியார் மூப்பனார் அவர்களிடம் கூறியிருக்கிறார்.

மூப்பனார் அவர்கள் தான் பார்த்துக் கொள்வதாக தைரியம் சொல்லியதோடு பிரபல கராத்தே வீரர் ஒருவர் தலைமையில் சங்கராச்சாரியாருக்கு பாதுகாப்பு அளிப்பதற்கும் ஏற்பாடு செய்திருக்கிறார்.

மறுநாள் மூப்பனார் எனக்கு டெலிபோன் செய்து உடனே என்னை அவருடைய இல்லத்திற்கு வருமாறு அழைத்தார். எனக்கு ஒன்றும் புரியவில்லை. உடனே மூப்பனார் அவர்களின் இல்லத்திற்குச் சென்றேன்.

மூப்பனார் அவர்கள் என்னை உள் அறைக்கு அழைத்துச் சென்றார்கள்.

''டாக்டர் பாவம் அந்த சங்கராச்சாரியாரை கொலை செய்து விடாதீர்கள்'' என்றார்.

எனக்கு ஒரே அதிர்ச்சியாக இருந்தது. ஒன்றும் புரியவில்லை. வதந்தியை இப்படி உண்மை என்று நம்பியுள்ளார்களே என்ற வியப்பில்,

"அய்யா என்ன இது ? ஏதோ வதந்தியை தாங்கள் கூட நம்பிவிட்டீர்களே'' என்றேன்.

மீண்டும், "சங்கராச்சாரியரை கொலை செய்வதின் மூலம் ஒரு சமுதாயமே நமக்கு விரோதியாகி விடுமல்லவா'' என்றார்.

பிறகு மூப்பனாரிடம் இந்த வதந்தியைப் பற்றி விளக்கமாக எடுத்துக் கூறினேன்.

"சங்கராச்சாரியாருடன் பேசுவதற்கு நீங்கள் சம்மதிக்கிறீர்களா ?'' என்றார்.

"அய்யா ஏற்கனவே சங்கராச்சாரியார் அவர்களுடைய உறவினரும் உதவியாளருமாகிய ஒருவரை என்னிடம் அனுப்பி வைத்தார்கள். சங்கராச்சாரியாருடன் பேசுவதற்காக என்னை காஞ்சிபுரம் மடத்திற்கு வருமாறு சுவாமிகள் அழைத்ததாகக் கூறினார்கள்.

"நான் வருகிறேன். ஆனால், சங்கராச்சாரியார் சுவாமிகளுடன் பேச்சு வார்த்தை நடத்த வேண்டுமென்றால் நான் மட்டும் தனியாக வரமுடியாது. இன்னும் சில தலித் சமுதாயத் தலைவர்களையும் அழைத்து வருவேன். பத்திரிகையாளர்கள் முன்னிலையில் டேப் ரிக்கார்டு வைத்துக் கொண்டு தான் பேச வேண்டும். அப்படிப் பேசுவது என்றால் நான் வருகிறேன்'' என்று கூறியனுப்பினேன்.

"இப்போது தாங்கள் ஏற்பாடு செய்தாலும் அதே முறையில் சந்திப்பதற்கு நான் தயாராக இருக்கிறேன்'' என்றேன்.

"சரி நான் ஏற்பாடு செய்கிறேன். ஆனால் அவசரப்பட்டு சங்கராச்சாரியாரை கொலை செய்து விடாதீர்கள்'' என மீண்டும் மூப்பனார் அவர்கள் கூறினார்கள்.

" அய்யா, சங்கராச்சியாரை கொலை செய்ய வேண்டிய எண்ணமும் இல்லை; அதற்கான அவசியமும் இல்லை. சிலர் வேண்டுமென்றே புரளியை கிளப்பியுள்ளார்கள்'' எனக் கூறி அவரிடமிருந்து விடை பெற்றேன்.

பிறகு சங்கராச்சாரியாரிடம் பேசுவது பற்றி தலித் தலைவர்கள் பலரிடமும் கூறினேன். சிலர் ஒப்புதல் தெரிவித்தார்கள். ஆனால் குடியரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் ஜீ. மூர்த்தி அவர்கள் "நாம் சங்கராச்சாரியாருடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டிய அவசியமில்லை. அது தேவையற்றது. நாம் ஏன் அவரை சந்திக்க வேண்டும் ? வேண்டாம் டாக்டர்'' என தடுத்துவிட்டார்.

43. பறையடிப்பதை எதிர்த்து போராட்டம்

வடஆற்காடு (வேலூர்) மாவட்டம், பள்ளிகொண்டா பகுதியிலுள்ள திப்பசமுத்திரம், முற்கோடி, குச்சிப்பிடி ஆகிய கிராமங்களில் இந்து கோவிலுக்கு தலித் மக்கள் பறையடிக்க மறுத்துவிட்டார்கள். அதனால் வெளியூர்களிலிருந்து அருந்ததியர்களை அழைத்து பறையடிக்க செய்தார்கள்.

எனவே, இந்திய குடியரசு கட்சி மாவட்டத் தலைவர் டி.இ. செல்வராஜ், செயல்வீரர் அன்பரசு ஆகியோரின் தலைமையில் பறையடிப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்தார்கள். ஆகவே காவல்துறையினர் நூற்றுக்கணக்கான குடியரசுக் கட்சிக்காரர்களை பயங்கரமாகத் தாக்கினார்கள்.

வெட்கக்கேடும் வேதனையும்

காவல்துறையினரால் தலித் மக்கள் கொடூரமாகத் தாக்கப்படுவதற்கு ஆதித்திராவிட இனத்தைச் சேர்ந்த போலீஸ் இன்ஸ்பெக்டர் தான் காரணம்.

போலீஸ் இன்ஸ்பெக்டர் தலித் மக்களை பயங்கரமாக தாக்கியதாக புகார் கூறப்பட்டது.

தலித் மக்களின் டி.வி., ரேடியோ, ஸ்கூட்டர் போன்ற பொருட்களை அடித்து நொறுக்கினார்கள். ஊரிலுள்ள வயோதிகர்கள், பெண்கள் போன்றவர்களையும் தாக்கினார்கள். கைக் குழந்தையுடன் இருந்த தாய் ஒருவரைத் தாக்கி குழந்தையைத் தூக்கி வீசி எறிந்துவிட்டு கைது செய்தார்கள்.

இதற்குக் காரணமானவர்கள் வேலூர் போலீஸ் இன்ஸ்பெக்டர் மற்றும் ஏட்டு இராமகிருஷ்ணன் ஆகியோர்தான் என தெரிய வந்தது.

செய்தியறிந்து உடனே நான் வேலூர் சென்றேன். மாநில பொதுச் செயலாளர் சமுதாயப் போராளி வி.கே. தாமோதரம் அதற்குள்ளாகவே போராட்டத்தை துவங்கி விட்டார். தொடர்ந்து உண்ணாவிரதம், ஆர்ப்பாட்டம், கண்டன கூட்டங்கள் என நடத்தினோம்.

மாவட்ட ஆட்சித் தலைவர் சமாதான கூட்டத்திற்கு ஏற்பாடு செய்தார்.

டி.இ. செல்வராஜ், அன்பரசு மற்றும் பல குடியரசுக் கட்சியினர் சிறையில் அடைக்கப்பட்டிருந்தார்கள். இருப்பினும் எங்களுடைய போராட்டம் தொடர்ந்து நடைபெற்றது.

தலித் மக்களை சித்திரவதை செய்து கொடுமைப்படுத்திய இன்ஸ்பெக்டரை டிஸ்மிஸ் செய்து தண்டிக்க வேண்டும் என தொடர்ந்து போராட்டம் நடத்தினோம்.

வேலூர் கோட்டை மைதானத்தில் எருமை மாடுகள் பேரணி நடத்துவதற்கு ஏற்பாடு செய்தோம். எருமை மாடுகளை போலீசார் கைது செய்து பிடித்துச் சென்று விடுவார்கள் என அஞ்சி மாடுகளை ஓட்டிவர மறுத்துவிட்டார்கள்.

கழுதைகள் பேரணி நடத்துவதற்கும் முயற்சித்தோம். கழுதைகள் கிடைக்கவில்லை.

இந்தியக் குடியரசுக் கட்சி மாநில பொதுச் செயலாளர் போராளி வி.கே. தாமோதரம் அவர்களுக்கு போராட்டம், சிறைவாசம் என்பது சர்க்கரைப் பொங்கல் போன்றதாகும். அவர் போராட்டத்தை மேலும் வலுப்படுத்தினார். நான் வாரத்தில் மூன்று நாட்களுக்கு மேலாக வேலூரில் முகாமிட்டு போராடிக் கொண்டிருந்தேன்.

இன்ஸ்பெக்டர் குணாளன் சென்னைக்கு வந்து சில தலித் தலைவர்களையும் அதிகாரிகளையும் அணுகி என்னை சமாதானப்படுத்த முயற்சித்தார்.

நான், சமுதாய மக்களை சித்திரவதை செய்த இன்ஸ்பெக்டரை மன்னிக்கவே முடியாது என கண்டிப்பாகக் கூறிவிட்டேன்.

இறுதியில் வேலூர் கன்னா ஓட்டலில் அன்றைய போலீஸ் டி.ஐ.ஜி. திரு. அலெக்சாண்டர் மற்றும் மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் என்னையும் மற்றும் வி.கே. தாமோதரம், சாந்தமூர்த்தி, கட்சி முக்கிய நிர்வாகிகள் ஆகியோரையும் அழைத்து பேச்சுவார்த்தை நடத்தினார்கள்.

இன்ஸ்பெக்டரையும் பள்ளிக் கொண்டா காவல்நிலைய ஏட்டு ஆகியோர் மீது நடவடிக்கை எடுப்பதற்கு ஒப்புக் கொண்டனர். அவர்கள் வேறு ஊருக்கு உடனடியாக மாற்றப்பட்டார்கள்.

அடுத்து யாரை இன்ஸ்பெக்டராக அமர்த்துவது என்பதை முடிவு செய்யும் பொறுப்பையும் எங்களிடமே ஒப்படைத்தார்கள். கணேசன் என்பவரை பரிந்துரை செய்தோம்.

நீதிமன்றத்தில் வழக்கு நீண்டநாள் நடைபெற்றது.

வடஆற்காடு மாவட்டத்தைப் பொறுத்தவரை பல்வேறு அணிகளாக குடியரசு கட்சி செயல்படுமே தவிர மற்ற மாவட்டங்களைப் போல அங்கு வேறு தலித் அமைப்புகள் இல்லை. நூற்றுக்கு நூறு பேர்களும் குடியரசுக் கட்சிக்காரன் என்ற உணர்வோடு இருப்பார்கள். மற்ற அரசியல் கட்சிகளில் சிலர் அங்கம் வகித்தாலும் குடியரசு கட்சிதான் நமது கட்சி என்பதை மறுக்க மாட்டார்கள். அது வடஆற்காடு மாவட்டத்தின் தனிச்சிறப்பாகும்.

வடஆற்காடு மாவட்டத்தைச் சார்ந்த தலித் அரசு ஊழியர்கள் அனைவரும் அம்பேத்காரிஸ்ட்டு என்ற பெருமைக்குரியவர்கள்.

வடஆற்காடு மாவட்டத்தில் நானும் தலைவர் வி.கே. தாமோதரனும் நடத்திய போராட்டங்கள் வரலாற்றுச் சிறப்புமிக்கவையாகும்.

ஆனால், பறையடிப்பதைத் தடுக்கும் போராட்டம் நடத்திய குடியரசுக் கட்சிக்காரர்கள் சித்திரவதை செய்யப்பட்ட போது எங்களது போராட்டத்தை குடியரசு கட்சியின் மற்ற பிரிவினர்கள் கண்டுகொள்ளவே இல்லை என்பதைப் பற்றி கூட கவலை இல்லை. சிலர் இன்ஸ்பெக்டர் குணாளனுக்கு ஆதரவளித்து வந்தார்கள் என்பதை அறியும்போது தான் மிகவும் வேதனை யடைந்தேன். என்னே! கேடுகெட்ட சமுதாயம் என வருந்தினேன்!

இந்தச் சமுதாயத்திற்கும் பாரத தேசத்திற்கும் பணியாற்றுவதற்காக பாபசாகேப் அம்பேத்கர் அவர்களும் தந்தை ராவ்பகதூர் என். சிவராஜ் அவர்களும் இந்திய குடியரசுக் கட்சியை உருவாக்கிக் கொடுத்தார்கள்.

ஆனால் குடியரசுக் கட்சிக்கு குடியரசுக்காரன்தான் எதிரி!

வேறு யாராலும் குடியரசுக் கட்சியை எதிர்க்க முடியாது.

குடியரசுக் கட்சிக்காரர்களாலேயே குடியரசுக் கட்சி அழிக்கப்படுகிறது என்பதை யாரும் மறுக்க முடியாது.

பறையடிக்கும் சிலை அகற்றக்கோரி போராட்டம்

தென்னாற்காடு மாவட்டத்தில் பல இடங்களிலும் ஆண்டிமடம், ஜெயங்கொண்டான் ஆகிய பகுதிகளிலும் உள்ள பல கிராமக் கோவில்களில் அக்கோவில்களுக்கு வெளியே கருப்பு வண்ணத்தில் விகாரமான வடிவத்துடன் பறையடித்துக் கொண்டு நிற்பது போல சிலைகள் நிறுவப்பட்டுள்ளன.

உளுந்தூர்பேட்டையிலிருந்து கள்ளக்குறிச்சிக்குப் போகும் வழியில் எளவனாஞ்சூர் கோட்டை அருகே ஒரு கோவிலில் இந்த சிலையைக் காணலாம். சேந்தியார் தோப்பு பேருந்து நிலையம் அருகிலும் விருத்தாசலத்திலிருந்து உளுந்தூர்பேட்டை செல்லும் வழியிலும் இந்தப் பறையடிக்கும் சிலைகளை இன்றும் காணலாம்.

இது ஆதித்திராவிடர்களை அவமானப்படுத்துவது போல உள்ளது என்பதை உணர்ந்து நான் போராட்டத்தை துவங்கினேன்.

விருத்தாசலம் ஆர்.டி.ஓ. அலுவலகம் எதிரில் ஒருநாள் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தினோம். தலைவர் ஏ.பி. இராமசாமி தலைமை தாங்கினார். நானும் பாவலர் வை. பாலசுந்தரம், மு. சுந்தரராசன், ஆ. சக்திதாசன் மற்றும் எல். இளையபெருமாள் ஆகியோரும் கலந்து கொண்டோம்.

இதில் ஒரு வெட்கக்கேடு யாதெனில் சுயமரியாதை உணர்வற்றும் ஒரு விவரமும் புரியாமலும் வாழும் தலித் மக்களே சில ஊர்களில் தங்களுடைய கிராமக் கோவில்களில் பறையடிக்கும் சிலையை வைத்துள்ளார்கள். எவ்வளவுதான் எடுத்துக் கூறியும் அதை அகற்றுவதற்குத் தயாராக இல்லை. இந்த நிலையில் மற்றவர்களின் கோவில்களிலுள்ள சிலைகளை எப்படி அகற்ற முடியும்?

பறையடிக்கும் சிலை பறையர்களின் அவமானச் சின்னம்.

பறையடிப்பது ஒரு இழிதொழில் என்பதை எதிர்காலத்திலாவது சமுதாய போராளியாகிய எனது அருமை சகோதரர்கள் உணர்ந்து பறையடிக்கும் சிலைகளை அகற்றுவதற்கு போராடுவார்கள் என நம்புவதைத் தவிர இனிமேல் எனக்கு வேறு வழியே இல்லை.

44. இளைய பெருமாளிடமே தகராறு

தென்னாற்காடு மாவட்டம் செந்துறை என்ற ஊரிலுள்ள தலித் மக்களை அவ்வூர் வன்னியர்கள் ஊர்க் கட்டுப்பாடு செய்து கொடுமைப் படுத்தினார்கள். ஆகவே அவ்வூர் தலித் மக்கள் ஊரைவிட்டு வெளியூர் போய்விடுவதென முடிவு செய்து தயாரானார்கள்.

இதையறிந்த தலைவர் இளைய பெருமாள் அவர்கள் ரெவின்யூ அதிகாரிகளுடன் செந்துறை சென்றார். காலனி மக்கள் ஊரைவிட்டு வெளியேற தயாரானார்கள். உடனே வன்னியர்கள் ஒன்று கூடி வெளியேற இருந்த தலித் மக்களைத் தடுத்து தகராறு செய்தார்கள்.

தலைவர் இளைய பெருமாள் சென்ற காரை சேதப்படுத்துவதற்கு முயற்சித்தார்கள். அவரிடம் முரட்டுத்தனமாக தகராறு செய்தார்கள்.

இந்தச் செய்தி காட்டுத்தீ போல் பரவியது.

“இளைய பெருமாள் செந்துறையில் கொலை செய்யப்பட்டார்'' என்ற செய்தி பரப்பப்பட்டது. இதைக் கேட்டதும் தென்னாற்காடு, அரியலூர், ஜெயங்கொண்டான் பகுதியிலுள்ள தலித் மக்கள் கொதிப்படைந்து சாலை மறியலில் ஈடுபட்டார்கள்.

அன்று வரகூர் தொகுதி எல்லையில் மாபெரும் பேரணியில் கலந்து கொள்வதற்காக சென்று கொண்டிருந்தேன். விருத்தாசலம் பேருந்து நிலையத்தை அடைந்ததும், “இளைய பெருமாள் கொலை செய்யப்பட்டார். பஸ்கள் ஓடாது'' என கூறினார்கள். நான் பெரும் அதிர்ச்சியடைந்தேன். எங்கும் செல்ல முடியாத நிலை ஏற்பட்டது. சரியான விவரங்களும் கிடைக்கவில்லை.

காட்டுமன்னார்குடி, சிதம்பரம், கடலூர் பகுதி பேருந்துகள் நிறுத்தப்பட்டதால் எங்கும் போக இயலவில்லை.

ஆண்டிமடம் போய் அங்கிருந்து காட்டுமன்னார்குடி போகலாமென ஆண்டிமடம் சென்றோம். சைக்கிள் எடுத்துக் கொண்டு போகலாமென சகோதரர்கள் கூறினார்கள். ஆண்டிமடம் சென்றதும் காட்டுமன்னார்குடி அருகில் பாலம் இடிக்கப்பட்டதால் போக இயலாது எனக் கூறினார்.

பிறகு ஜெயங்கொண்டான் போய் மிகவும் சிரமப்பட்டு அரியலூர் பேருந்து பிடித்தோம்.

ஜெயங்கொண்டானில் ஆபத்து

ஜெயங்கொண்டான் பேருந்து நிலையத்தில் அரியலூர் பேருந்தில் அமர்ந்திருக்கும் போது அங்கிருந்தவர் ''இளைய பெருமானின் கைகள் துண்டிக்கப்பட்டன. இப்போது டாக்டர் சேப்பனைத் தேடுகிறோம். சேப்பன் மற்றும் ஒரு தாடிக்கார தலைவன் (மு. சுந்தரராசன்) ஆகியோரின் தலைகளை டாக்டர் அய்யா இராமதாஸ் அவர்களின் காலடியில் வைத்த பிறகுதான் இந்தக் கலவரம் ஓயும் பஸ்கள் ஓடும்'' என என்னை அடையாளம் தெரியாமல் ஒருவர் என்னிடமே கூறினார்.

என்னுடன் ஏ.கே. தியாகராசன் பட்டிக்குடிகாடு கவிஞர் கதிர்வேலு ஆகியோர் இருந்தார்கள். அவர்கள் தூரத்தில் நின்று கொண்டிருந்தார்கள்.

நான் உடனே கீழே இறங்கி அவர்களுடைய கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு போய் வேறொரு பேருந்தில் ஏறி அரியலூர் அடைந்தோம்.

அங்கிருந்து பல இடங்களுக்குப் போன் செய்து தலைவர் இளைய பெருமாள் நலமுடன் இருப்பதாக அறிந்தோம். அரியலூரிலிருந்து வாடகைக் காரில் வரகூர் தொகுதி எல்லைப் பகுதிக்குச் சென்றோம்.

மாபெரும் பேரணி தயாராக இருந்தது. மாவட்ட செயலாளர் செயல்வீரர் குணாளன் இந்த பேரணிக்கு ஏற்பாடு செய்திருந்தார். நான் அங்கு பேரணியைத் துவக்கி வைக்கும் நேரத்தில் ''தலைவர் இளைய பெருமாள் கொலை செய்யப்பட்டார். அவர் இறந்து விட்டார்'' என செய்தி வந்திருப்பதாக கூறினார்கள்.

நான் ஓ! வென அழ ஆரம்பித்து விட்டேன். துக்கம் தாங்க முடியவில்லை.

உடனே பேரணியை இரத்து செய்துவிட்டு மேற்கொண்டு நடக்க இருப்பது பற்றி கூட்டத்தினரிடையே சிறிது நேரம் பேசிவிட்டு மீண்டும் அரியலூர் புறப்பட்டேன். மறுகணமே சாலை மறியலில் ஈடுபட்டார்கள். திடீர் சாலை மறியல் காரணமாக நடுவழியெல்லாம் வாகனங்கள் நிறுத்தப்பட்டிருந்தன. நான் பயணம் செய்த காரில் கட்சிக் கொடி பறந்ததால் வழிவிட்டு அனுப்பினார்கள்.

அரியலூரிலும் வன்னியர்கள் என்னைத் தேடுவதாகத் தகவல் கிடைத்தது. அரியலூரிலிருந்து மாறுவேடத்தில் இரயில் ஏறி நடு இரவு விருத்தாசலம் வந்து இறங்கி முக்கியமானவர்களுடன் தொடர்பு கொண்டு விசாரித்தேன். அப்போதும் தலைவர் இளைய பெருமாள் நலமுடன் இருக்கிறார் என்ற தகவல் கிடைத்தது.

மீண்டும் இரயில் ஏறி சென்னை வந்து சேர்ந்தேன். தலித் மக்களின் திடீர் சாலை மறியல் வெற்றிகரமாக நடந்தது.

மறுநாள் தலைவர் இளைய பெருமாள் நன்றாக இருப்பதாக பத்திரிகையில் அவருடைய அறிக்கை வெளிவந்தது. அதன் பிறகுதான் தலித் மக்களின் சாலை மறியல் போராட்டம் ஓய்ந்தது.

வன்னியர்–ஆதித் திராவிடர் சாதிக் கலவரத்தின் போது வடமாவட்டங்களில் பல இடங்களில் மயிரிழையில் உயிர் தப்பினேன்.

45. விருத்தாசலத்தில் மாநில மாநாடு

இந்திய குடியரசு கட்சியின் 8ஆவது மாநில மாநாடு விருத்தாசலத்தில் என்னுடைய தலைமையில் நடைபெற்றது. மாவட்டத் தலைவர் முத்துக்குமார், மகளிர் அணித் தலைவி மல்லிகேஸ்வரி முத்துகுமார், மாநில துணைத் தலைவர் பெருந்தகை ஏ.பி. இராமசாமி, கவிஞர் கதிர்வேலு ஆகியோர் முன்னின்று மாநாட்டைச் சிறப்பாக நடத்தினார்கள்.

அகில இந்திய தலைவர் ஆர்.எஸ். கவாய், அகில இந்திய பொதுச் செயலாளர் தங்கவயல் சிங்கம் தளபதி சி.எம். ஆறுமுகம் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

சாந்த மூர்த்தி, மாநில பொதுச் செயலாளர் செயல்வீரர் வி.கே. தாமோதரம், வீராங்கனை பத்மா அரசுமணி, சின்னையன், மாநில துணைத் தலைவர் ஏ.பி. இராமசாமி, வேலூர் டி.இ. செல்வராஜ், பொய்கை பன்னீர் செல்வம், திருமதி நளினா பன்னீர்செல்வம், தென் ஆற்காடு மாவட்டத் தலைவர் முத்துகுமார், திருமதி மல்லிகேஸ்வரி முத்துகுமார், வடலூர் தனகோட்டி, பழனிவேல், கவிஞர் கதிர்வேலு, சென்னா மூர்த்தி, கே.ஏ. தீர்த்தான், பம்பாய் அப்பாசாகிப் காம்ளே, குணாளன், மற்றும் பலர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றினார்கள்.

விருத்தாசலம் மாநாட்டிற்கு வந்தவர்களுக்கு உணவளிக்க முடியாமல் திண்டாடிக் கொண்டிருந்தோம். அந்த இக்கட்டான நேரத்தில் விருத்தாசலம் தொகுதி முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் அண்ணன் வேதமாணிக்கம் அவர்கள் தான் நடத்திக் கொண்டிருந்த மாணவர் விடுதியில் சாப்பாடு தயார் செய்து பொட்டலம் கட்டி மாநாட்டிற்கு வந்தவர்கள் அனைவருக்கும் உணவளித்தார். சமுதாய உணர்வுமிக்க அந்தப் பெருமகனாருக்கு என்றும் நன்றி செலுத்த கடமைப்பட்டுள்ளோம்.

மாநாடு முடிந்து அன்று இரவு தலைவர்கள் செராமிக் விருந்தினர் மாளிகையில் தங்கினார்கள்.

மறுநாள் காலை காரில் புறப்பட்டோம். விருத்தாசலத்திலிருந்து வழி நெடுக தலைவர் கவாய், சி.எம். ஆறுமுகம் ஆகியோர் கொடியேற்றினார்கள். உளுந்தூர்பேட்டையில் தலைவர் ஏ.பி. இராமசாமி சிறப்பான வரவேற்பளித்தார். எனவனாஞ்சூர் கோட்டை பின்னத்தூர், புகைப்பட்டி போன்ற பல இடங்களில் மேடை அமைத்து சிறப்பான வரவேற்பளித்தார்கள்.

திருவண்ணாமலையில் தலைவர் மல்லியநாதன் மேள வாத்தியங்களோடு வரவேற்று ஊர்வலமாக தலைவர்களை அழைத்துச் சென்றார். மதியம் உணவளித்தார்.

மாலையில் செங்கம் போய்ச் சேர்ந்தோம். செங்கம் டி.பி.யில் தங்கினோம்.

அன்று மாலை தியாகி பொன்னுரங்கம் அவர்கள் செங்கம் மேல் புழுதியூரில் பாபாசாகேப் அம்பேத்கர் அவர்களின் திருஉருவச் சிலை திறப்பதற்கு ஏற்பாடு செய்திருந்தார். குடியரசுக் கட்சியின் உண்மையான செயல் வீரர்களில் மேல்புழுதியூர் தம்பி பொன்னுரங்கம் அவர்கள் பாராட்டுதலுக்குரியவர் எனலாம்.

மேல்புழுதியூர் அம்பேத்கர் நகரில் ஆர்.எஸ். கவாய் அவர்கள் பாபா சாகேப் அம்பேத்கர் அவர்களின் திருஉருவச் சிலையைத் திறந்து வைத்தார்கள். தலைவர் சி.எம். ஆறுமுகம் அவர்கள் சிறப்புரையாற்றினார்கள்.

அன்று இரவு செங்கம் டி.பி.யில் தங்கியிருந்து விட்டு மறுநாள் காலை புறப்பட்டேன்.

மேல் செங்கம், சிங்காரப்பேட்டை, ஊத்தங்கரை ஆகிய இடங்களில் சிறப்பான வரவேற்பளித்தார்கள்.

ஊத்தங்ககரையிலிருந்து ஆரூர், மருதிப்பட்டி வரை எல்லா கிராமங்களிலும் சிறப்பான வரவேற்பளித்தார்கள். மொரப்பூரிலிருந்து மருதிப் பட்டிவரை பெரிய ஊர்வலமாகவே முழக்கமிட்டுக் கொண்டு தலைவர்களை வரவேற்று அழைத்துச் சென்றனர்.

மருதிப்பட்டியில் மாபெரும் வரவேற்புக் கூட்டம் நடைபெற்றது. சென்னா மூர்த்தி, போலீஸ் நந்திகேசவன், கே.ஏ. தீர்த்தான், குப்புசாமி ஆகியோர் முன்நின்று நடத்தினார்கள்.

பின்னர் சென்னாமூர்த்தி எல்லோருக்கும் உணவளித்தார்கள்.

ஆரூரிலிருந்து ஆர்.எஸ். கவாய் அவர்களும் சி.எம். ஆறுமுகம் அவர்களும் பெங்களூர் சென்று விட்டார்கள். நாங்கள் சென்னைக்குத் திரும்பிவிட்டோம்.

இந்திய குடியரசுக் கட்சியின் வரலாற்றில் இது மிக முக்கிய பயணமாகும். அதாவது, விருத்தாசலம் முடித்து விட்டு காரிலேயே அங்கிருந்து புறப்பட்டு நூற்றுக்கு மேற்பட்ட இடங்களில் வரவேற்பு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டோம். இந்த மூன்று நாளும் சொல்ல முடியாத மகிழ்ச்சியில் திளைத்தோம். விருத்தாசலத்திலிருந்து தருமபுரி மாவட்டம் ஆரூர், மருதிப்பட்டி வரை சென்றோம்.

46. சாதிக் கொடுமைகளை எதிர்த்துப் போராட்டங்கள்

ஆப்பிரிக்கா கண்டத்தின் ஆதிக்குடிகள் கருப்பர்கள் (நீக்ரோக்கள்) ஆவர். அவர்களைப் போலவே அமெரிக்காவில் செவ்விந்தியர்களும், ஆஸ்திரேலியாவில் ஆதிவாசிகளும் இந்தியாவில் ஆதித் திராவிடர்களும் அவரவர் வாழும் நாட்டின் ஆதிக்குடிமக்கள் (மண்ணின் மைந்தர்கள்) ஆவார் என்பதுதான் அழிக்க முடியாத வரலாற்று உண்மை.

ஆப்பிரிக்காவில் கருப்பர்கள் வந்தேறிகளிடமிருந்து தங்கள் மண்ணை மீட்டு ஆண்டு வருகின்றனர். ஆனால் அமெரிக்கா, ஆஸ்திரேலியா, இந்தியா ஆகிய இடங்களில் மண்ணின் மக்கள் ஆதிக்க வாதிகளால் நாளுக்கு நாள் அழிக்கப்பட்டு வருகின்றனர்.

ஆஸ்திரேலிய ஆதிக்குடிகளுக்கு வரலாற்றுச் சிறப்புமிக்க நாகரிகம் இருந்ததா என்பது தெரியவில்லை.

ஆனால் அமெரிக்காவின் புகழ்பெற்ற பண்டைக்கால மாயன் நாகரிகத்திற்குச் சொந்தக்காரர்கள் செவ்விந்தியர்களாவர்.

இந்தியாவின் தொடக்ககால நாகரிகம் திராவிட நாகரிகமே. வரலாற்று அறிஞர் வின்சண்ட் ஸ்மித் கூறுவது போல இது ஆரிய நாகரிகத்திற்கு முற்பட்டது. இந்தத் திராவிட நாகரிகத்தின் ஒரு பகுதிதான் சிந்துவெறி நாகரிகம்.

வேதங்களில் தமிழ் "திராவிட" என்று குறிப்பிடப்படுவதாக அம்பேத்கர் போன்ற ஆராய்ச்சி வல்லுனர்கள் கூறுகின்றனர். ஆகவே திராவிடர் என்றால் தமிழர் என்றே பொருள்படும். இந்தத் திராவிட நாகரிகத்தை அழித்தொழிக்க ஆரியர்களால் புகுத்தப்பட்ட முறைதான் சாதி அமைப்பு முறை. வடமொழி இலக்கியங்கள் அனைத்தும் இந்தச் சாதி அமைப்பு முறையையே தூக்கிப் பிடிக்கின்றன.

இந்தச் சாதி அமைப்பு முறையை ஏற்றுக் கொண்ட தமிழர்கள் (திராவிடர்கள்) தான் சூத்திரர்கள் (வருணர்கள்).

இந்தச் சாதி அமைப்பு முறையை ஏற்காது போராடி வருபவர்கள் தான் இன்றைய ஆதித்திராவிடர்கள் (வருணர்களுக்கு உட்படாதவர்கள்)

சாதிமுறை ஒழிக்கப்படாவிட்டால் வருங்காலத்தில் அது இந்து மதத்தையும் இந்தியாவையும் அழித்துவிடும் என்பது தான் அப்பட்டமான உண்மை.

''உண்மையே வெல்லும்'' என்று இந்திய தேசிய சின்னத்தில் பொறிக்கப்பட்டிருப்பது இந்த உண்மையைத் தவிர வேறு எதுவாக இருக்க முடியும் ?

சாதிக் கொடுமைகளை எதிர்த்து இந்தியக் குடியரசுக் கட்சி நடத்திய சில போராட்டங்களை இங்கே குறிப்பிடுகிறேன்.

பொய்கையில் தலித் பெண்கள் தாக்கப்பட்டனர்

வேலூர் மாவட்டம் பொய்கை கிராமத்தில் பெங்களூர் நெடுஞ்சாலையில் தலித் ஒருவரை வாகனமொன்று விபத்துக்குள்ளாக்கியது. அதைக் கண்டித்து தலித் பெண்கள் சாலை மறியல் செய்தார்கள். விரிஞ்சபுரம் காவல்நிலைய காவலர்கள் தலித் பெண்களை கேவலமாக எண்ணி பலமாகத் தாக்கினார்கள்.

தகவல் அறிந்ததும் உடனே பொய்கைக்குச் சென்றிருந்தேன். தலித் பெண்களைத் தாக்கிய காவலர்களை பணியினின்றும் அகற்றித் தண்டிக்க வேண்டும் என போராட்டம் துவங்கினோம். வேலூர் கோட்டை முன்பு ஆர்ப்பாட்டம் நடத்தினோம்.

இறுதியாக உயர் போலீஸ் அதிகாரியொருவர் பொய்கை கிராமத்திற்கு வந்து, விரிஞ்சிபுரம் போலீஸ்காரர்களை விசாரித்து, தலித் பெண்களைத் தாக்கிய காவலர்கள் அந்தப் பெண்களுடைய காலில் விழுந்து மன்னிப்புக் கேட்குமாறு ஆணையிட வைத்து தண்டனையை நிறைவேற்றும் அளவிற்கு நடவடிக்கை எடுத்தோம். மேலும் அந்தக் காவலர்களிடம் மன்னிப்புக் கடிதமும் எழுதி வாங்கினோம்.

பொய்கையில் அம்பேத்கர் சிலை நிறுவ எதிர்ப்பு

இந்தப் பொய்கை கிராமத்தில் பொய்கை பன்னீர் செல்வம் என்பவர்

பாபாசாகிப் அம்பேத்கர் சிலையை நிறுவுவதற்கு ஏற்பாடு செய்தார். ஆனால் குறிப்பிட்ட இடத்தில் சிலை வைக்கக் கூடாது என பொய்கை கோவிந்தசாமி என்பவர் தடுத்து மிரட்டிக் கொண்டிருந்தார். அந்த இடத்தில் ஒரு இரும்பு சூலாயுதத்தை நட்டு வைத்தார்.

ஒருநாள் நானும் வி.கே. தாமோதரமும் அரிவாளுடன் அமர்ந்து கொண்டு தடுப்பதற்குத் தைரியம் உள்ளவர்கள் வரட்டும் என சாவலுக்குச் சவால் விட்டோம். சவாலை ஏற்க ஒருவருமே முன்வரவில்லை. அமைதியாக பாபாசாகேப் சிலை நிறுவப்பட்டது.

பிறகு அகில இந்திய தலைவர் ஆர்.எஸ். கவாய் அவர்களும் அகில இந்திய பொதுச் செயலாளர் தளபதி ஆறுமுகம் அவர்களும் வருகை தந்து சிலை திறப்பு விழா நடைபெற்றது.

திருவண்ணாமலையில் அறப்போராட்டம்

திருவண்ணாமலை, தியாகி அண்ணாமலை நகரில் தலித் மக்கள் இந்திய குடியரசுக் கட்சி மாவட்டத் தலைவர் தியாகி மல்லியநாதன் அவர்கள் தலைமையில் சாதிக் கொடுமைகளை எதிர்த்து ஒரு போராட்டம் நடத்திக் கொண்டிருந்தனர். திரு. மல்லியநாதன் சமுதாய உணர்வுமிக்க தலைவராவார்.

ஒரு அமைச்சரின் தூண்டுதலின் பேரில் தியாகி அண்ணாமலை நகர் தலித் மக்களை காவல்துறையினர் கொடூரமாகத் தாக்கினார்கள். தலைவர் மல்லியநாதனின் கை ஒடிந்தது.

இக்கொடுஞ் செயலைக் கண்டித்து ஆர்.டி.ஓ. அலுவலகம் முன்பு ஒருநாள் கண்டனப் போராட்டம் நடத்தினோம். மாண்புமிகு அமைச்சர் நம்மை எதிர்த்ததால் நமக்கு நீதி கிடைக்கவில்லை.

"இன்று நீதி கிடைக்காவிட்டாலும் எதிர்காலத்தில் எனது சமுதாய இளைஞர்கள் தீவிரமாகப் போராடி நீதியைப் பெறுவார்கள் என கூறி முடித்தேன்.

செங்கத்தில் தலித் படுகொலை

திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் வட்டம், பிஞ்சூர் கிராமத்தில்

ஆதித் திராவிடர் ஒருவரை சாதி இந்துக்கள் படுகொலை செய்து விட்டார்கள். அதற்குக் கண்டனம் தெரிவித்து செங்கம் துக்காப்பேட்டையிலுள்ள தலித் மக்கள் சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டார்கள்.

அவர்களை காவல்துறையினர் கொடுமையாகத் தாக்கினார்கள்.

தகவல் கிடைத்ததும் செங்கத்திற்குச் சென்றேன். தலைவர் ஜெகநாதன், போஸ்ட்டு மாஸ்டர் உணர்வுமிகு பக்கிரி, செயல்வீரர் நவமணி ஆகியோருடன் தலித் இளைஞர் படுகொலை செய்யப்பட்ட பிஞ்சூர் கிராமத்திற்குச் சென்றேன்.

பிறகு பயணிகள் விடுதியில் (டி.பி.) கட்சிக்காரர்களுடன் கலந்தாலோசித்து போராட்டம் பற்றி திட்டம் தீட்டினோம். தம்பி நவமணி தீவிரமாக செயல்பட்டார்.

மறுவாரத்தில் செங்கத்தில் எனது தலைமையில் மாபெரும் கண்டனப் பேரணி நடத்தப்பட்டது.

சேலத்தில் போராட்டங்கள்

சேலம் மாவட்டத்தில் அதிகப்படியான சாதிக் கொடுமைகள் நிகழ்ந்துள்ளன.

தற்போதைய நாமக்கல் மாவட்டம் மங்களபுரத்தில் சாதி இந்துக்கள் ஆதித் திராவிடர்களின் வசிப்பிடத்திற்குள் புகுந்து தாக்குதல் நடத்தினார்கள். (ஆண்டு நினைவில் இல்லை.)

குடியரசுக் கட்சி தளபதிகளான தங்கராஜ், அன்னதானப் பட்டி முனுசாமி, பீம்நகர் இராமசாமி, சக்திவேல், செல்வராஜ், காராம் பெரும் பறையனார் ஆகியோருடன் மங்களபுரம் சென்று மக்களைச் சந்தித்து ஆறுதல் கூறியபின் சேலத்தில் மாபெரும் கண்டன உண்ணாவிரதப் போராட்டம் நடத்தினோம்.

இந்தத் தாக்குதலைக் கண்டித்து மங்களபுரத்தில் நடந்த மாபெரும் பொதுக் கூட்டத்திலும் உரை நிகழ்த்தினேன்.

கள்ளச் சாரயத்தை ஒழிப்பதில் தளபதி சக்திவேல் தீவிரமாகச் செயல்படுபவர். பல ஊர்களில் சாராயம் விற்பவர்களையும் அவர்களுக்குத்

துணைப்போகும் காவல்துறையினரையும் எதிர்த்து சக்திவேல் நடத்திய அனைத்து போராட்டங்களிலும் நான் கலந்து கொண்டேன்.

நாமக்கல் உட்பட்ட சேலம் மாவட்டத்திற்கு அடிக்கடி பொதுக் கூட்டங்கள், போராட்டங்கள் ஆகியவைகளுக்கு நான் போய்வருவது அன்றாட வழக்கமாக இருந்தது.

சங்கராச்சாரியாருக்குக் கருப்புக் கொடி

சங்கராச்சாரியார் தான் எழுதிய "தெய்வத்தின் குரல்" என்ற நூலில் தீண்டாமை க்ஷேமகரமானது என்று கூறியிருந்தார். தீண்டாமையை ஆதரித்து வெளிப்படையாகவும் பேசி வந்தார்.

இந்திய அரசியல் சட்டத்தில் தீண்டாமை ஒழிக்கப்பட்டு விட்டது. ஆகவே தீண்டாமையை ஆதரிப்பது சட்டப்படி தண்டனைக்குரிய குற்றமாகும்.

இருப்பினும் சங்கராச்சாரியார் மீது இன்று வரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. ஆகவே காஞ்சி சங்கராச்சாரியாருக்கு கண்டனம் தெரிவித்து வந்தோம்.

காஞ்சி சங்கராச்சாரியார் தருமபுரி வந்திருந்தார். எனது தலைமையிலமைந்த குடியரசுக் கட்சித் தொண்டர்கள் ஒன்று கூடினர். நானும் அவர்களுடன் இணைந்து குடியரசுக் கட்சியின் மாவட்டத் தலைவர் கே.ஏ. தீர்த்தான் அவர்களின் தலைமையில் தர்மபுரி கூட்டு ரோட்டில் சங்கராச்சாரியாருக்கு கருப்புக் கொடி காட்டினோம்.

எல்லோரையும் கைது செய்தார்கள். சங்கராச்சாரியார் தருமபுரி நிகழ்ச்சிகளை இரத்து செய்துவிட்டு நேரே கிருஷ்ணகிரிக்குச் சென்று விட்டார்.

கைது செய்யப்பட்ட அனைவரையும் மாலையில் விடுதலை செய்து விட்டார்கள்.

தருமபுரி மாவட்டம் வேப்பிலைப்பட்டி சாதிக் கலவரம்

தருமபுரி மாவட்டம், ஆரூர் வட்டம், வேப்பிலைப் பட்டியில் பயங்கர சாதிக் கலவரம் நடைபெற்றது. வன்னியர்கள் ஆதித் திராவிடர்களின்

வீடுகளைத் தீயிட்டுக் கொளுத்தினார்கள். உடனடியாக நானும் சென்னா மூர்த்தியும் அந்தக் கிராமத்திற்குச் சென்று பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆறுதல் கூறியபின் அடுத்து சில நாட்களில் தருமபுரி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் முன் ஒருநாள் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தினோம். மாவட்ட ஆட்சித் தலைவரைச் சந்தித்து நீதிகோரி முறையிட்டோம்.

இந்தப் போராட்டத்தில் வேப்பிலைப்பட்டியைச் சேர்ந்த வேப்பிலை செழியன் தீவிரமாகச் செயல்பட்டார்.

வேப்பிலை செழியன் படுகொலை

வேப்பிலை செழியன் தி.மு.க.வைச் சார்ந்தவர். சில ஆண்டுகளுக்குப் பின் தி.மு.க. சார்பில் மொரப்பூர் ஊராட்சி ஒன்றிய தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

ஒருநாள் இரவு கடத்தூருக்கும் புட்டிரெட்டி பட்டிக்குமிடையே ஜீப்பில் சென்றபோது படுகொலை செய்யப்பட்டார். இந்தக் கொடுமையான செய்தியைக் கேட்ட தலித் மக்கள் கொதித்தெழுந்தார்கள். பல இடங்களில் பேருந்துகள் தீயிட்டுக் கொளுத்தப்பட்டன. தலித் இளைஞர்கள் கைது செய்யப்பட்டார்கள். இது விபத்து அல்ல; திட்டமிட்டு செய்யப்பட்ட படுகொலை என தலித் மக்கள் குமுறினார்கள்.

தகவல் அறிந்ததும் நான் தருமபுரிக்கு விரைந்தேன். நான் சகோதரர் சென்னா மூர்த்தி மற்றும் குடியரசுக் கட்சி நிர்வாகிகள் வேப்பிலைப் பட்டிக்குச் சென்று செழியனின் துணைவியாரைச் சந்தித்து ஆறுதல் கூறியபின் படுகொலை நிகழ்ந்த இடத்தைப் பார்வையிட்டோம்.

பிறகு, மாவட்ட ஆட்சித் தலைவர் மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் ஆகியோரைச் சந்தித்து நீதிகோரி முறையிட்டோம்.

அடுத்த கட்டமாக ஒருநாள் தருமபுரி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் முன்பு உண்ணாவிரதப் போராட்டம் நடத்தினோம்.

அப்போது தி.மு.க. ஆளும் கட்சியாக இருந்ததால் வேப்பிலைச் செழியன் படுகொலையில் நீதி கிடைக்கவில்லை என தலித் மக்கள் குமுறினார்கள்.

தருமபுரி மாவட்ட ஆரூரில் சாதிக் கலவரம் (1991)

1991ஆம் ஆண்டில் ஒருநாள் தருமபுரி மாவட்டம் ஆரூர் பேருந்து நிலையம் அருகில் பொதுக் கூட்டம் நடைபெற்றது. அக்கூட்டத்தில் நானும் இஸ்லாமிய தலைவர் பழனி பாபாவும் கலந்து கொண்டோம். சகோதரர் பழனி பாபா உரையைக் கேட்டு வைகுந்தம் என்ற தலித் சகோதரர் அதே மேடையில் தனது குடும்பத்துடன் இஸ்லாம் தழுவினார். பழனி பாபா கலிமா ஓதிக் கொடுத்தார். பலரும் இஸ்லாம் தழுவினார்கள்.

ஊருக்குத் திரும்பிச் செல்லும் போது தலித் இளைஞர்கள் எழுச்சியுடன் குரல் எழுப்பிக் கொண்டு சென்றார்கள்.

இதைத் தாங்கிக் கொள்ள இயலாத வன்னியர்களும் வெள்ளாள கவுண்டர்களும் தலித் மக்களை பரவலாகத் தாக்கினார்கள். இந்த சாதிக் கலவரம் இரண்டு மாத காலம் வரை நடைபெற்றது.

வெள்ளாள கவுண்டர் சங்கத் தலைவர் கோவை செழியன் நேரடியாக வந்து கலவரத்தைத் தூண்டி விட்டு தலித் மக்களை பழிவாங்கினர் என கூறப்பட்டது.

அப்போது தருமபுரி மாவட்டத்தில் ஆட்சித் தலைவராக இருந்தவர் ஒரு இஸ்லாமியர். மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளராக இருந்தவர் ஒரு தலித். இவ்விருவரும் ஆளும் கட்சியாகிய தி.மு.க.விற்குப் பயந்து கொண்டு தலித் மக்களுக்கு சரியான பாதுகாப்பு கொடுக்கவில்லை என தலித் மக்கள் குமுறினார்கள்.

ஆரூரில் இரண்டு மாதங்கள் தொடர்ந்து சாதிக் கலவரம் நடைபெற்றுக் கொண்டிருந்தது.

தருமபுரி மாவட்டத்திற்குள் நுழைய தடை

ஆரூரில் கலவரம் நடைபெற்ற போது தருமபுரி மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் நான் தருமபுரி மாவட்டத்திற்குள் வரக்கூடாது என தடை விதித்தார்.

தருமபுரியில் கர்ப்பவதியாக இருந்த எனது மகளை பார்ப்பதற்குக் கூட அந்நகருக்குள் நுழைய அனுமதி மறுக்கப்பட்டது. நான் எனது மகள் வீட்டிற்கு

வருகிறேனா என்பதை காவல்துறையினர் இரகசியமாகக் கண்காணித்து வந்தார்கள். இருப்பினும் என்னை யாரும் அடையாளம் கண்டுகொள்ள இயலாதவாறு வாரம் இரண்டு முறை ஆரூர் சென்று தலித் இளைஞர்களை சந்தித்து வந்தேன்.

டாக்டர் இராமதாஸ் வந்ததும் கலவரம் ஓய்ந்தது

ஆரூரில் நடைபெற்ற சாதிக் கலவரம் பற்றி பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் இராமதாஸ் அவர்களுக்கு தொலைபேசி மூலம் தெரிவித்தேன். உடனே இராமதாஸ் ஆரூர் சென்றார். அன்றே அங்கு கலவரம் ஓய்ந்தது.

வன்னியர்-ஆதித்திராவிடர் ஒற்றுமை மாநாடு

ஆரூரில் வரலாற்றுச் சிறப்புமிக்க ''வன்னயர்—ஆதித் திராவிடர் ஒற்றுமை மாநாடு'' நடைபெற்றது. பல ஆயிரக்கணக்கான மக்கள் மகிழ்ச்சியுடன் கலந்து கொண்டார்கள். டாக்டர் இராமதாஸ், பேராசிரியர் தீரன், அன்றைய பா.ம.க. பொதுச் செயலாளர் தலித் எழில்மலை ஆகியோரும் குடியரசுக் கட்சி சார்பில் ஜீ. மூர்த்தி, பி.வி. கரியமால் சாந்தமூர்த்தி நான் மற்றும் பலரும் கலந்து கொண்டோம்.

சென்னையிலிருந்து பல வண்டிகளில் அணிதிரண்டு ஆரூர் சென்றோம்.

இது ''வன்னியர்—ஆதித் திராவிடர்'' ஒற்றுமை முதல் மாநாடு ஆகும்.

இரண்டாவது மாநாடு வேலூரில் நடைபெற்றது. வேலூர் மாநாட்டில் பிரகாஷ் அம்பேத்கர் கலந்து கொண்டார்.

ஆம்பூரில் துப்பாக்கிச்சூடு

1991, ஏப்ரல், 14ஆம் நாள் ஜீ. மூர்த்தி, சி.கே. தமிழரசன், சாந்த மூர்த்தி வி.கே. தாமோதரம், நான் ஆகிய அனைவரும் வேலூரில் பாபா சாகேப் அம்பேத்கர் திருவுருவச் சிலைக்கு மாலையணிவித்து விட்டு வேலூர் அம்பேத்கர் நகர், குணவட்டம், விரிஞ்சிபுரம், பள்ளிகொண்டா வழியாக குடியாத்தம் சென்றோம். வழிநெடுக எல்லா ஊர்களிலும் அம்பேத்கர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்தபடியே போய்க்

கொண்டிருந்தோம். குடியாத்தம், பேர்ணாம்பட்டு பகுதிகளில் பல இடங்களில் பாபா சாகேப் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்திவிட்டு பிறந்தநாள் விழாக்களிலும் கலந்து கொண்டோம். பேர்ணாம்பட்டில் மாலை 8 மணி ஆகிவிட்டது. அங்கிருந்து ஆம்பூர் புறப்பட்டோம்.

நாங்கள் ஆம்பூர் போய்ச் சேருவதற்கு நேரமாகி விட்டதால் அங்கே பிறந்தநாள் ஊர்வலத்தைத் துவக்கி விட்டார்கள். ஊர்வலம் முக்கிய வீதியில் போகும்போது ஆர்.எஸ்.எஸ். காரர்கள் கற்களை வீசியதால் கலவரம் ஆரம்பித்தது. ஒரு சினிமா தியேட்டர் தாக்கப்பட்டதாக போலீசார் துப்பாக்கி சூடு நடத்தினார்கள்.

செபஸ்டீன் என்ற வாலிபரும் ஒரு முஸ்லிம் வாலிபரும் அதே இடத்தில் இறந்து விட்டார்கள். பலர் இரத்த வெள்ளத்தில் மிதந்து கொண்டு இருந்தார்கள். எல்லோரையும் ஆம்பூர் அரசு மருத்துவமனையில் சேர்த்துள்ளார்கள். நாங்கள் ஆம்பூர் சென்றதும் செய்தியறிந்து மருத்துவமனைக்குச் சென்றோம். பல பேர்கள் இரத்த வெள்ளத்தில் துடித்துக் கொண்டிருப்பதைக் கண்டு அதிர்ச்சியடைந்தோம். வேலூர் மாவட்ட ஆட்சியர் மற்றும் காவல்துறை கண்காணிப்பாளர் ஆகியோருக்கு தகவல் கொடுத்தோம். சிறிது நேரத்தில் உயர் அதிகாரிகள் ஆம்பூர் வந்து சேர்ந்தார்கள். கடுமையான வாக்குவாதம் நடைபெற்றது.

பள்ளிகொண்டாவில் மாபெரும் விழா நடந்து கொண்டிருந்தது. இரவு இரண்டு மணிக்கு மேலும் எங்களை எதிர்பார்த்து காத்திருந்தார்கள். பள்ளிக் கொண்டா வந்து விழாவில் கலந்து கொண்டோம்.

அன்று இரவு மீண்டும் ஆம்பூர் சென்று சலாமத் ஓட்டலில் தங்கினோம். மறுநாள் துப்பாக்கிச் சூட்டில் இறந்த செபஸ்டீன் வீட்டிற்குச் சென்று இறுதி மரியாதை செலுத்திவிட்டு அவருடைய பெற்றோருக்கு ஆறுதல் கூறினோம்.

இஸ்லாமிய இளைஞர் வீட்டிற்கும் சென்றிருந்தோம்.

வேலூரில் மாபெரும் கண்டன பேரணி

துப்பாக்கி சூடு நடத்திய காவல்துறை அதிகாரிகளை தண்டிக்க வேண்டுமென்ற கோரிக்கையுடன் மாவட்ட ஆட்சித் தலைவரைச் சந்திப்பது என நடந்த மாபெரும் கண்டனப் பேரணியில் ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்டார்கள். நான், ஜீ. மூர்த்தி, சி.கே. தமிழரசன், சாந்த மூர்த்தி, வி.கே. தாமோதரம் மற்றும் ஆயிரக்கணக்கான தொண்டர்கள் கைது செய்யப்பட்டோம்.

அடுத்து வேலூர் மாவட்டத்தில் தொடர்ந்து போராட்டங்கள் நடைபெற்றன.

லீ. பஜார் போராட்டம்

சேலம் நகரத்திலுள்ள லீ. பஜார் தலித் மக்களுக்குரிய இடமாகும். அந்த இடத்தை மீட்பதற்காக குடியரசுக் கட்சியின் சார்பில் பல ஆண்டுகளாக போராட்டம் நடைபெற்றது. அப்போராட்டத்தில் நானும் தளபதிகள் தங்கராஜ், சக்திவேல், முனுசாமி, ஏ.பி. பழனியப்பன், ஆசிரியர் செல்வராஜ், காரம் பெரும் பறையனார் மற்றும் பலர் கலந்து கொண்டார்கள்.

பல பேர்கள் நாங்கள் தொடர்ந்து போராடினோம். 2007ல் நீதிமன்றத்தில் தலித் மக்களுக்கு நீதி கிடைத்தது. வெற்றி பெற்றோம்.

நூறு பசுமாடுகள் பிரியாணி

காஞ்சி சங்கராச்சாரியார் "பசுவதை தடைச் சட்டம்'' கொண்டு வர வேண்டும் என கூறிக் கொண்டு இருந்தார். இது சாதிமத சச்சரவிற்கு வழி வகுத்துவிடும் என கருதப்பட்டது. அதனால், எருமைமாடு, ஆடு, கோழி போன்ற எல்லா பிராணிகளையும் கொல்வதற்கு தடைவிதிக்க வேண்டும் என நாங்கள் கூறினோம். அதைக் கண்டு கொள்ளாமல் பசுவை மட்டும் கொல்லக் கூடாது எனக் கூறிய சங்கராச்சாரியாருக்கு கண்டனம் தெரிவிக்கும் வகையில்,

"காஞ்சிபுரத்தில் நூறு பசு மாடுகளைக் கொன்று பிரியாணி செய்து சாப்பிடப் போகிறோம்'' என நான் அறிவித்திருந்தேன்.

ஆகவே, ஆர்.எஸ்.எஸ்.காரர்கள் மற்றும் இந்து முன்னணியினர் அடிக்கடி எனக்குப் போன் செய்து என்னைக் கொன்று பிரியாணி போடப் போவதாக மிரட்டிக் கொண்டிருந்தார்கள்.

அதற்கு நான் பயப்படவில்லை. ஆனால் நூறு பசுமாடுகள் வாங்குவது கடினமாகத் தெரிந்தது. மேலும் பிரியாணி மட்டும் போதாது சாராயமும் வேண்டும் என கட்சித் தொண்டர்கள் அடம் பிடித்தார்கள். மது அருந்தினால் விபரீதங்கள் ஏற்படக்கூடும். எனவே பசுமாடு பிரியாணி போராட்டம் தள்ளி வைக்கப்பட்டது. பிறகு தேர்தல் நெருங்கியதால் பிரியாணி போராட்டம் நடத்த வாய்ப்பில்லை.

47. குடியரசுக் கட்சிகள் ஒருங்கிணைப்பு

பாபாசாகேப் அம்பேத்கர் அவர்களால் உருவாக்கப்பட்ட இந்திய குடியரசுக் கட்சியின் முதல் தலைவர் ராவ் பகதூர் தந்தை என். சிவராஜ் அவர்களின் காலம் வரை இந்திய குடியரசு கட்சி ஒரே அணியாக சிறப்புடன் திகழ்ந்தது.

குடியரசுக் கட்சி துவங்கப்படுவதற்கு முன்பு பாபாசாகேப் அவர்களின் காலத்தில் செயல்பட்ட செடியூல்டு கேஸ்ட் பெடரேஷனுக்கும் தந்தை சிவராஜ் அவர்கள் தான் தலைவராக இருந்தார்.

தந்தை சிவராஜ் அவர்களின் காலத்தில் பல மாநிலங்களில் பலர் சட்டமன்ற உறுப்பினர்களாகவும் பலர் பாராளுமன்ற உறுப்பினர்களாகவும் திகழ்ந்தார்கள். காரணம், அப்போது இந்தியா முழுமைக்கும் ஒரே இயக்கம் ஒரே தலைவர் என்ற நிலை இருந்தது.

தந்தை சிவராஜ் அவர்களின் மறைவிற்குப் பின் மராட்டிய மாநிலத்தைச் சேர்ந்த தாதாசாகேப் கெய்க்வார்டு அவர்கள் இந்திய குடியரசுக் கட்சியின் அகில இந்தியத் தலைவரானார்.

அதுவரைக்கும் பாரிஸ்டர் கோபராகடே, தங்கவயல் சிங்கம் தளபதி சி.எம். ஆறுமுகம், ஆர்.எஸ். கவாய், அட்வகேட் பாஜீராவ் காம்ப்ளே, மாவீரன் கணார், பி.சி. காம்ப்ளே, ராஜ்போஜ், தலைவர் கட்டி, அன்னை ஈஸ்வரி பாய், அட்வகேட் சூரியகாந்த் டோங்கரே, ஆரிய சங்காரன் மௌரியா, தலைவர் எல். சுப்பிரமணியம், கும்பாரே எம்.பி. சிவராம் மோகா போன்ற பல பெருந்தலைவர்கள் ஒரே அணியாகச் செயல்பட்டார்கள்.

தலைவர் தாதா சாகேப் கெய்க்வார்ட் அவர்களுக்கும் பாரிஸ்டர் கேபராகடே அவர்களுக்கும் ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக பாரிஸ்டர் கோபராகடே அவர்கள் கட்சியை உடைத்தார்கள். அது முதல் இந்திய குடியரசு, கெய்க்வார்ட் அணி என்றும் கோபராகடே அணி என்றும் செயல்பட்டது. இது துரதிர்ஷ்டவசமானதாகும்.

தாதாசாகேப் கெய்க்வார்டு அவர்களின் மரணத்திற்குப்பின் அந்த அணிக்கு ஆர்.எஸ். கவாய் அவர்கள் தலைவரானார்.

பாரிஸ்டர் கோபராகடே அவர்களின் மரணத்திற்குப்பின் தாதாசாகேப் கட்டி அவர்கள் அந்த அணிக்கு தலைவரானார்.

தாதாசாகேப் கட்டி அவர்களின் காலத்தில் இந்திய குடியரசு கட்சிகள், தலித் பேந்தர் அமைப்புகள் மற்றும் சில சிறு அமைப்புகள் ஆகிய ஆறு அமைப்புகள் பம்பாய் ஜிவாஜி பார்க்கில் கூடி "இந்திய குடியரசு கட்சி'' என்ற ஒரே இயக்கமாக செயல்படுவதென உறுதி எடுத்துக் கொண்டார்கள். மகிழ்ச்சியடைந்தோம்.

தாதாசாகேப் கட்டி அவர்கள் தலைவராகவும் ஆர்.எஸ். கவாய் அவர்கள் செயல் தலைவராகவும் சில மாதங்கள் ஒன்றாகச் செயல்பட்டார்கள்.

தாதா சாகேப் கட்டி அவர்களின் மறைவிற்குப் பின் மீண்டும் இந்திய குடியரசு கட்சி கோபராகடே அணிக்கு அன்னை ஈஸ்வரிபாய் அவர்கள் தலைவரானார். அவர் மறைந்த பின் பாரிஸ்டர் கோபராகடே அவர்களின் இளைய சகோதரர் கிரீஸ் கோபராகடே அவர்கள் தலைவரானார். அவரும் மறைந்தார். அதன்பின் கர்நாடக மாநிலம் குல்பர்காவைச் சேர்ந்த சிவராம் மோகா அவர்கள் தலைவரானார்.

மீண்டும் ஒரு இணைப்பு நடைபெற்றது. கோபராகடே அணியைச் சேர்ந்த சிவராம் மோகா, அட்வகேட் சூரியகாந்த் டோங்கரே வீரன் டபள்யூ .பி கணார் போன்றவர்கள் கவாய் அணியில் இணைந்தார்கள்.

1989ஆம் ஆண்டு பெங்களூரில் அகில இந்திய செயற்குழு கூட்டம் கவாய் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அக்கூட்டத்தில் அப்போது தமிழ் மாநில தலைவரும் தேசிய செயலாளராகவுமிருந்த நானும் கலந்து கொண்டேன்.

பாபாசாகேப் அம்பேத்கர் அவர்களின் பேரன் சகோதரர் பிரகாஷ் அம்பேத்கர் அவர்கள் பல பிரிவுகளாகச் செயல்படும் குடியரசு கட்சிகளை இண்ணக்கப் போகிறேன். நீங்களும் அந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ள வேண்டுமென பம்பாயில் நான் அவரைச் சந்தித்த போதும் அவர் சென்னை வந்து இம்பீரியல் ஓட்டலில் தங்கி இருந்தபோதும் என்னிடம் கூறினார்.

"இணைப்பது பற்றி மகிழ்ச்சி. ஆனால், நீங்களும் ஒரு தனிப் பிரிவை உருவாக்கி விடாதீர்கள் என வலியுறுத்திக் கேட்டுக் கொண்டேன்.

பாரத்திய குடியரசுக் கட்சி

ஆனால் பிரகாஷ் அம்பேத்கர் பூனாவில் கூட்டம் நடத்தி "பாரத்திய குடியரசுக் கட்சி'' என்ற புதிய அணியை உருவாக்கி விட்டார்.

இதைக் கண்டித்து நான் கடிதம் எழுதினேன்.

தமிழ்நாட்டில் சட்டமன்ற உறுப்பினராகவும் கவாய் பிரிவு குடியரசுக் குடியரசுக் கட்சியின் பொதுச் செயலாளராகவும் இருந்த ஜீ. மூர்த்தி அவர்கள் கட்சியிலிருந்து நீக்கப்பட்டதும் என்னை 1984ஆம் ஆண்டு தமிழ் மாநில பொதுச் செயலாளராக நியமித்தார்கள்.

அந்தக்கால கட்டத்தில் கவாய் பிரிவிலிருந்து நீக்கப்பட்ட ஜீ. மூர்த்தி அவர்கள் பிரகாஷ் அம்பேத்கர் தலைமையிலான பாரத்திய குடியரசுக் கட்சியில் இணைந்தார். ஆகவே தமிழகத்தில் பாரத்திய குடியரசுக் கட்சி துவக்கப்பட்டது.

மாநிலத் தலைவரானேன்

1985ஆம் ஆண்டு கவாய் பிரிவு மாநிலத் தலைவர் சேனூர் கோபால், வி.கே. சோழன், எம். தாமோதரம் ஆகியோரை சி.எம். ஆறுமுகம் அவர்கள் கட்சியிலிருந்து நீக்கினார்கள். அதன்பின் நான் மாநிலத் தலைவராக நியமிக்கப்பட்டேன்.

1985ஆம் ஆண்டு முதல் நான் மாநிலத் தலைவராக செயல்பட்டேன். செயல்வீரர் வேலூர் வி.கே. தாமோதரம் அவர்கள் மாநில செயலாளராக செயல்பட்டார்.

குடியரசுக் கட்சியை நாசப்படுத்துவது மராட்டியர்களே!

இந்திய குடியரசு கட்சியை நாசப்படுத்துபவர்கள் மராட்டிய தலைவர்கள் தான் எனலாம். பாபாசாகேப் அம்பேத்கர் பிறந்த மண்ணைச் சேர்ந்தவர்கள் என்பதால், நாம் அவர்களை நேசிக்கின்றோம். ஆனால் அவர்கள் பாபாசாகேப் அவர்களால் உருவாக்கப்பட்ட கட்சியை தங்களுடைய சுயநலத்திற்காக பந்தாடுகிறார்கள் என்பதை பலமுறை நான் கமிட்டி கூட்டங்களில் சுட்டிக்காட்டி கண்டனம் தெரிவித்துள்ளேன்.

மீண்டும் இணைப்பு

1990ஆம் ஆண்டு ஆர்.எஸ். கவாய், பிரகாஷ் அம்பேத்கர், இராமதாஸ் அத்வாலே, பேராசிரியர் ஜோகேந்திர கவாடே ஆகியோர் ஒரே அணியாக இணைந்தார்கள். மகிழ்ச்சியடைந்தோம்.

தமிழ்நாட்டில் இணைப்பு

அகில இந்திய ரீதியில் கட்சிகள் ஒரே அணியாகிவிட்டன. தமிழ்நாட்டில் இணைந்து செயல்படுவோம் என ஜி. மூர்த்தி அவர்கள் வலியுறுத்தினார்கள்.

ஆகவே, ஒருநாள் எனது இல்லத்தில் ஜீ மூர்த்தி, சி.கே. தமிழரசன், நான் மற்றும் சிலர் கூடிப் பேசினோம்.

அன்று வரை எனது தலைமையிலான கவாய் பிரிவு குடியரசு கட்சி காங்கிரசுக் கூட்டணியில் அங்கம் வகித்தது.

காங்கிரஸ் தலைவர் திரு. ஜீ.கே. மூப்பனார் அவர்கள் என்னை பாராளுமன்ற இராஜ்யசபா உறுப்பினராக்குவதாக உறுதியளித்தார்.

திரு. சி.கே. தமிழரசன் அவர்கள் அ.இ.அ.தி.மு.க. கூட்டணியில் இருந்தார்.

திரு. மூர்த்தி எந்தக் கூட்டணியிலுமில்லை. ஆகவே, அவர் "எந்தக் கட்சியுடனும் தற்போது கூட்டணி வைத்துக் கொள்ளக் கூடாது. கூட்டணியிலிருந்து விலகிக் கொள்வது'' என தீர்மானம் கொண்டு வந்தார்.

கூட்டணியை விட நமது கட்சிகளின் ஒற்றுமை ஒருங்கிணைப்பு தான் முக்கியம் என ஏற்றுக்கொண்டோம்.

காங்கிரஸ் கூட்டணியிலிருந்து நான் விலகிக் கொண்டேன்.

தருமபுரி மாவட்டம் ஆரூரில் தலைவர் பி.வி. கரியமால், ஜீ. மூர்த்தி, சி.கே. தமிழரசன், எனது அணியைச் சேர்ந்த எஸ். சின்னையன், கே.ஏ. தீர்த்தான் சாந்தமூர்த்தி, ஏ.பி. இராமசாமி, சென்னாமூர்த்தி ஆகியோரும் கலந்து பேசினோம்.

பி.வி. கரியமால் தலைவராகவும், ஜீ. மூர்த்தி பொதுச் செயலாளராகவும், நான் இணைப்புச் செயலாளராகவும், சி.கே. தமிழரசன் அமைப்புச் செயலாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டோம்.

ஆனால் சி.கே. தமிழரசன் இந்த இணைப்பிலிருந்து விலகிக் கொண்டார்.

தலித் மக்கள் இந்த அமைப்பை பெரிதும் பாராட்டி வரவேற்றார்கள்.

வேலூர் ஆசிரியர் இல்லத்தில் மாபெரும் வரவேற்பு விழா சிறப்பாக நடைபெற்றது. வி.கே. தாமோதரம் அவர்களும் கலந்து கொண்டார்கள்.

மீண்டும் உடைந்தது

வழக்கம் போல் சில மாதங்களிலேயே மராட்டியத்தில் இணைந்த குடியரசுக் கட்சித் தலைவர்கள் மீண்டும் தனித்தனியே பிரித்து விட்டார்கள். இருப்பினும் ஒன்றாக இணைந்தவர்கள் தமிழகத்தில் ஒற்றுமையாக செயல்படுவோம் என முடிவெடுத்தோம்.

அகில இந்திய தலைவர் யார்?

மீண்டும் யாரை அகில இந்தியத் தலைவராக ஏற்றுக் கொள்வது என்ற சிக்கல் எழுந்தது. ஜீ. மூர்த்தியும், பி.வி. கரியமாலும், பிரகாஷ் அம்பேத்கரை அகில இந்தியத் தலைவராக ஏற்றுக் கொள்வது என பிடிவாதமாக இருந்தார்கள். வேறு வழியின்றி நானும் ஏற்றுக் கொண்டேன். பிரகாஷ் அம்பேத்கர் வேலூரில் நடைபெற்ற வன்னியர்–ஆதித்திராவிடர் ஒற்றுமை மாநாட்டில் கலந்து கொண்டார்.

ஒன்றாக இணைந்தாலும் ஏற்கனவே கவாய் அணியில் என்னுடன் இருந்தவர்களில் பெரும்பாலானவர்களை கரியமாலும், மூர்த்தியும் ஓரங்கட்டி விட்டார்கள். ஆகவே, அவர்கள் குமுறிக் கொண்டிருக்க வேண்டிய அவல நிலை ஏற்பட்டது.

ஏன் பிரகாஷ் அம்பேத்கருடன் சென்றாய்?

பெங்களூரில் தலைவர் சி.எம். ஆறுமுகம் அவர்களுடைய இல்லத்தில் சி.எம். ஆறுமுகம், ஆர்.எஸ். கவாய் ஆகியோரை சந்தித்தேன். "ஏன் பிரகாஷ் அம்பேத்கருடன் சென்றாய்?'' என தலைவர்கள் என்னைக் கேட்டார்கள்.

எனக்கு அடக்கிக் கொள்ள முடியாத கோபம்.

''மாராட்டியத்திலுள்ள தலைவர்கள் தேசிய நிர்வாகிகளாகிய எங்களைக் கேட்காமல் எப்படிச் சேர்ந்தீர்கள்? சரி, பரவாயில்லை. எப்படியோ ஒன்று சேர்வதை அங்கீகரித்தோம். மீண்டும் ஏன் பிரிந்தீர்கள்? தேசிய நிர்வாகிகளாகிய நாங்கள் இருக்கும் போது யாரைக் கேட்டுக் கொண்டு ஒன்றாகச் சேர்ந்தீர்கள்? யாரைக் கேட்டுக் கொண்டு மீண்டும் பிரிந்தீர்கள்? நாங்கள் கட்சிக்காக தியாகம் செய்து செயல்படுகின்றோம். ஆனால் மராட்டியத்திலுள்ள தலைவர்கள் அடிக்கடி ஒன்று சேர்வதும் நீங்களாகவே பிரிவதும் எப்படி நியாயமாகும்?'' என கத்தினேன் (சப்தமிட்டேன்) தலைவர் கவாய் ஏதோ பல காரணங்களைக் கூறி சமாளித்தார். ஆனால் நான் சமாதானமடையவில்லை.

பிறகு உணவருந்தி விட்டு மூவரும் மாநகராட்சி தேர்தலில் போட்டியிடும் குடியரசுக் கட்சி வேட்பாளர் எம்.ஜி. சாமி அவர்களை ஆதரித்து பிரச்சாரம் செய்யச் சென்று விட்டோம்.

பிரகாஷ் அம்பேத்கர் அணியில் இரு ஆண்டுகள்

இந்திய குடியரசுக் கட்சி பிரகாஷ் அம்பேத்கர் அணியில் இரண்டு ஆண்டுகள் செயல்பட்டேன். ஜீ. மூர்த்தி மிகவும் நல்லவர், நம்பிக்கைக்கு உரியவர் என்பதை மறக்க இயலாது.

1992ஆம் ஆண்டு பொதுத்தேர்தல் நடைபெற்றது. ஜீ. மூர்த்தி வந்தவாசி தொகுதியிலும், ஏ.பி. இராமசாமி உளுந்தூர்பேட்டை தொகுதியிலும், என்.சி. இராஜேந்திரன் சேலம் மாவட்டத்திலும், பி.வி கரியமால் ஆரூர் தொகுதியிலும் இப்படி நான்கு தொகுதிகளில் பாட்டாளி மக்கள் கட்சி சார்பில் போட்டியிட்டார்கள். நான், டாக்டர் இராமதாஸ், பழனி பாபா ஆகியோரும் தீவிரமாக பிரச்சாரம் செய்தோம். இராஜீவ்காந்தி படுகொலை காரணமாக ஏற்பட்ட மாற்றத்தினால் நால்வரும் தோல்வியடைந்தனர்.

நான் பிரகாஷ் அம்பேத்கர் அணியில் இணைந்ததால் வேலூர் வி.கே. தாமோதரம் கவாய் பிரிவிற்கு மாநில தலைவராகி விட்டார்.

மூர்த்தியிடமிருந்து விலகினோம்

எனது ஆதரவாளர்களை ஓரம்கட்டி வேதனையடையச்

செய்ததினாலும் கட்சிக்காரர்கள் சிலரின் நடவடிக்கை பிடிக்காததினாலும் மூர்த்தியை விட்டு விலகி விட்டோம். கவாய் அணிக்கு நானே மாநிலத் தலைவராகி விட்டேன்.

வழக்கம் போல நானே சமுதாயப் போராட்டங்களைத் தொடர்ந்து நடத்தினேன். வ. கருணாகரன் மாநில பொதுச் செயலாளராகச் செயல்பட்டார். நான் மாநிலத் தலைவராகவும் அகில இந்திய செயலாளராகவும் செயல்பட்டு வந்தேன்.

தமிழகம் மட்டுமல்லாது கர்நாடகம், மராட்டியம், டெல்லி ஆகிய இடங்களிலும் நடைபெற்ற போராட்டங்களிலும் கலந்து கொண்டேன். இதில் டெல்லி போட் கிளப் மைதானம், ராம்லீலா மைதானம், கரோல்பாக் ஆகிய இடங்களிலிருந்து நடத்தப்பட்ட மாபெரும் பேரணிகள் வரலாற்றுச் சிறப்புமிக்கவைகளாகும்.

குடியரசுக் கட்சிகள் மீண்டும் ஒருங்கிணைந்தன.

1995 வரை நான் தமிழ் மாநில தலைவராகவும், அகில இந்திய தேசிய செயலாளராகவும் செயல்பட்டு வந்தேன். வ. கருணாகரன் மாநில பொதுச் செயலாளராக இருந்தார். சாந்தமூர்த்தி இணைப் பொதுச் செயலாளராக செயல்பட்டு வந்தார்.

1996ஆம் ஆண்டு எழும்பூர் பாண்டியன் ஓட்டலில் ஒன்று கூடி இணைப்புக் கூட்டம் நடைபெற்றது. அதில் சொல்லின் செல்வர் ஆ. சக்திதாசன் அவர்களை மாநில தலைவர்களாகத் தேர்ந்தெடுத்தோம். ஐ.ஓ.பி. வங்கியில் பணியாற்றிய தம்பி அம்பேத்கர் பிரியன் ''அம்பேத்கர் மன்றங்கள்'' என்ற பெயரில் இயங்கிக் கொண்டு இருந்தார். அவரையும் இணைத்து அவருக்கு மாநில பொதுச் செயலாளர் பதவி கொடுக்கப்பட்டது. கனரா வங்கியில் பணியாற்றிய பூங்கா மனோகரனுக்கு பொருளாளர் பதவி கொடுக்கப்பட்டது.

அம்பேத்கர் பிரியனும் மனோகரனும் திறமையான சமுதாய உணர்வுள்ள வாலிபர்கள். அவர்களை வருங்காலத்தில் அகில இந்திய தலைவர்களாக உருவாக்க திட்டமிட்டிருந்தேன்.

ஆனால் தம்பிகள் இருவரும் தேவையற்ற குற்றச்சாட்டுகளைக் கூறிக் கொண்டு கட்சியிலிருந்து ஒதுங்கி விட்டார்கள்.

தலித் சமுதாயப்பணி என்பது கரடுமுரடானது. அதைத் தாங்கிக் கொண்டு நடைபோடுவது அவ்வளவு எளிதான காரியமல்ல.

திரு. சக்திதாசன் மாநில தலைவரானதும் கட்சி வழக்கம் போல விறுவிறுப்பாகச் செயல்பட்டது.

1996ஆம் ஆண்டு தஞ்சாவூர் திலகர் திடலில் மாநில மாநாடு சிறப்பாக நடைபெற்றது. அகில இந்திய தலைவர் ஆர்.எஸ். கவாய் கலந்து கொண்டார்.

இதே ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் பாட்டாளி மக்கள் கட்சி மற்றும் வாழப்பாடி இராமமூர்த்தி அவர்களின் திவாரி காங்கிரசுக் கட்சி ஆகியவைகளுடன் இந்திய குடியரசுக் கட்சி கூட்டணி அமைத்து போட்டியிடுவதற்கு தீர்மானித்தது.

நான் ஸ்ரீபெரும்புத்தூர் சட்டமன்ற தொகுதியில் போட்டியிட்டேன். டாக்டர் இராமதாஸ்—வாழப்பாடி இராமமூர்த்தி ஆகியோர் என்னை ஆதரித்து பிரச்சாரம் செய்தார்கள். இருப்பினும் தோற்றுப் போய்விட்டேன்.

48. எனது இல்லத் திருமணங்கள்

ஒன்றை ஒன்று அடித்துத் தின்று உயிர் வாழும் விலங்குகளைப் போல மனிதனை மனிதன் சுரண்டிப் பிழைக்க உருவாக்கப்பட்ட அமைப்புதான் இந்து மதம். அடித்தளத்து மக்கள் என்றென்றும் சமூகத்தில் சமத்துவ நிலையை அடைய முடியாதபடி அவர்களின் முதுகெலும்பை அடித்து நொறுக்கி வைத்துள்ளது இந்து மதம். ஆகவே, எல்லா மனித உரிமைகளையும் எண்ணும் சுதந்திரத்தையும் தந்து மனிதன் மனிதனாக வாழ்ந்து பரிநிர்வாண நிலை அடைய இனிய வழிகாட்டுவது பகவான் புத்தனின் நெறி ஒன்றுதான் என்பதால் எனது குடும்பமே அந்த உயர்ந்த நெறியில் நடைபேட்டு வருகிறது. எனது இல்லத்தில் நடந்த எல்லா திருமணங்களிலும் பவுத்த நெறியே பின்பற்றப்பட்டது.

எனது சகோதரியின் திருமணம்

எனது சகோதரி வழக்கறிஞர் கலைச்செல்விக்கும் வழக்கறிஞர் அண்ணாதுரை அவர்களுக்கும் ஆயிரம் விளக்கு ஜெயின் மண்டபத்தில் திருமணம் நடைபெற்றது.

தளபதி சி.எம். ஆறுமுகம், திரு. கருப்பன், அய்.ஏ.எஸ், மு. சுந்தரராசன், சொல்லின் செல்வர் அ. சக்திதாசன், தென்னாட்டு அம்பேத்கர் தொண்டு வீராசாமி வழக்கறிஞர் என். குப்புசாமி ஆகியோர் கலந்து கொண்டார்கள். வி.எம். மௌரியா அவர்கள் புத்தர் வணக்கம் கூறி திருமணத்தை நடத்தி வைத்தார்கள்.

எனது முதல் தம்பி இளங்கோவனின் திருமணம்

எனது முதல் தம்பி இளங்கோவன் எனது மைத்துனி ஸ்டெல்லா ஆகியோரின் திருமணம் சேத்துப்பட்டு சமுதாயக் கூடத்தில் நடைபெற்றது. குடியரசு கட்சியின் அகில இந்தியத் தலைவர் ஆர்.எஸ். கவாய், அகில இந்தியப் பொதுச் செயலாளர் தளபதி சி.எம். ஆறுமுகம் சொல்லின் செல்வர் ஆ. சக்திதாசன் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

ஆர்.எஸ். கவாய் புத்தர் வணக்கம் கூறி திருமணத்தை நடத்தி வைத்தார்கள்.

எனது இரண்டாவது தம்பி குணசேகரன் திருமணம்

எனது இரண்டாவது தம்பி குணசேகரன் திருமணம் தேவநேயப் பாவாணர் நூலகக் கட்டிடத்தில் பாவலர் வை. பாலசுந்தரம் தலைமையில் நடைபெற்றது. மு. சுந்தரராசன், சொல்லில் செல்வர் ஆ. சக்திதாசன், அறிவு வழி ஆசிரியர் பஞ்சாட்சரம் ஆகியோர் கலந்து கொண்டார்கள். சாந்தமூர்த்தி புத்தர் வணக்கம் கூறினார். புத்த தர்ம முறைப்படி திருமணம் நடைபெற்றது.

எனது மகள் ஷீலாவின் திருமணம்

1988ஆம் ஆண்டு எனது மகள் ஷீலாவிற்கும் பகுத்தறிவுச் சுடர் தர்மபுரி மாரியப்பன் அவர்களின் மகன் எஞ்சினியர் மணிவண்ணன் அவர்களுக்கும் சைதாப்பேட்டை ஜவுளிக்கடை வியாபாரிகள் சங்கம் திருமண மண்டபத்தில் திருமணம் நடைபெற்றது.

ஆர்.எஸ். கவாய் தலைமையில் சி.எம். ஆறுமுகம், இலங்கை ஹை கமிஷனர் அவர்களும், செயலர் ரகீம், சொல்லின் செல்வர் ஆ. சக்திதாசன், சாந்தமூர்த்தி ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

மகாபோதி விஹார் புத்த பிக்கு பாந்தே ரத்னபாலா, தாய்லாந்து பிக்குகள் ஆகிய ஐந்து பிக்குகள் புத்தர் வணக்கம் கூறி பவுத்த நெறிப்படி திருமணம் நடத்தி வைத்தார்கள்.

என்னுடைய குடும்பத்தில் நடைபெற்ற எல்லா விழாக்களும் பவுத்த நெறிப்படியே நடந்தது.

எல்லா திருமணங்களுக்கும் இலங்கை கல்வி அமைச்சர் வாழ்த்துச் செய்தி அனுப்பி இருந்தார்கள்.

பௌத்த மாநாடு

எனது மகளின் திருமணம் நடப்பதற்கு முதல் நாள் தேவநேயப் பாவாணர் நூலகக் கட்டிடத்தில் தமிழ்நாடு பௌத்த மாநாடு எனது தலைமையில் நடைபெற்றது.

ஆர்.எஸ். கவாய், சி.எம். ஆறுமுகம், சாந்தமூர்த்தி ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

தலைவர்களின் மாபெரும் சுற்றுப் பயணம்

எனது மகளின் திருமணம் முடிந்த மறுநாளே தலைவர் ஆர்.எஸ். கவாய், சி.எம். ஆறுமுகம், சாந்தமூர்த்தி ஆகியோருடன் நானும் வேலூருக்குப் புறப்பட்டேன். இது ஒருவகையில் கட்சி தொடர்பான சுற்றுப் பயணம் என்றே சொல்லலாம்.

வேலூர் செல்லும் வழியில் நெற்குன்றத்தில் தங்கதுரை என்பவர் தலைமையில் சிறப்பான வரவேற்பளித்தார்கள். அடுத்து காவேரிப்பாக்கத்தில் தலைவர்களுக்கு வரவேற்பளிக்கப்பட்டது. வேலூர் சத்துவாச்சாரியில் வரவேற்பளிக்கப்பட்டது.

வேலூர் பேருந்து நிலையம் அருகிலுள்ள பாபா சாகேப் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்தபின் வேலூர் அம்பேத்கர் நகரில் வி.கே. தாமோதரம் அவர்கள் சிறப்பான வரவேற்பளித்தார்.

தொடர்ந்து சேணபாக்கம், கொணவட்டம் ஆகிய ஊர்களிலும் கொடியேற்றினோம். பொய்கை பன்னீர்செல்வம் அவர்கள் சிறப்பான வரவேற்பளித்தார்.

விரிஞ்சிபுரம், பள்ளிகொண்டா ஆகிய ஊர்களில் கொடியேற்றினோம்.

குடியாத்தம் நகரில் பல இடங்களில் நிகழ்ச்சிகள் நடைபெற்றன. தலைவர் அமாவாசை மாணிக்கம் மற்றும் பலர் நகராட்சி தேர்தலில் போட்டியிட்டதால் அவர்களை ஆதரித்து பிரச்சார கூட்டங்களும் நடைபெற்றன. இரவு ஒரு மணிவரையிலும் கூட இந்த கூட்டங்கள் நடந்தன. தலைவர் ஆறுமுகம் அவர்கள் தங்கவயல் புறப்பட்டு விட்டார்.

கவாய், சாந்தமூர்த்தி, வி.கே. தாமோதரம் மற்றும் நான் இரவு இரண்டு மணிக்கு ஆம்பூர் ஜலாமத் ஒட்டலில் உணவருந்தி விட்டு திருப்பத்தூர் சென்றோம். அப்போதைய மாவட்டத் தலைவர் பொன்னுசாமி செயலாளர் இராகவன் மற்றும் பலர் மடப்பள்ளியில் சிறப்பான கூட்டத்திற்கு ஏற்பாடு செய்திருந்தார்கள். நாங்கள் காலங் கடந்து சென்றதால் அன்று இரவு திருப்பத்தூர் பயணிகள் விடுதியில் (டி.பி.) தங்கி இருந்துவிட்டு காலையில் மடப்பள்ளி கிராமத்திற்குச் சென்றோம். கடும் வெயிலிலும் மக்கள் வெள்ளம் கூடியது. பின்பு சேலம் புறப்பட்டோம்.

சேலம் மாநாடு

சேலம் மாவட்ட மாநாடு தங்கராஜ் தலைமையில் இராஜாஜி மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது. அன்று இரவு இரயில் மூலம் சென்னைக்குப் புறப்பட்டோம்.

மறுநாள் காலை தலைவர் கவாய் விமானம் மூலம் பம்பாய் புறப்பட்டுச் சென்றார்.

இது ஒரு மாபெரும் சுற்றுப் பயணமாகும். நான் எனது மகளின் திருமணத்தோடு திருமணத்திற்கு முதல் நாள் பவுத்த மாநாடு மற்றும் திருமணத்திற்கு மறுநாள் சேலம் வரை சுற்றுப் பயணம் நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்தது பெரிய தவறு என தலைவர் அவர்கள் கூறினார்கள். உண்மைதான். தலைவர்களின் வருகையைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற ஆர்வத்தில் சிரமத்தை நானே ஏற்படுத்திக் கொண்டேன். எனது மகளின் திருமண செலவைவிட அதிகமாக இந்த நீண்ட சுற்றுப் பயணத்திற்கு நான் எனது கைக்காசை (சொந்த பணத்தை) செலவிட நேர்ந்தது.

49. தங்கவயல் சிங்கம் தளபதி சி.எம். ஆறுமுகம்

தங்கவயல் சிங்கம் சி.எம். ஆறுமுகம் அவர்கள் மாபெரும் ஆற்றல் வாய்ந்த மனிதராவார். கர்நாடகத்தில் இவருடன் கலந்து கொண்ட சில மாநாடுகள், போராட்டங்கள் பற்றிய நினைவுகளைச் சுருக்கமாக இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

பெங்களூர் மாநாடு

பெங்களூர் விதான சௌதாவில் (சட்டமன்ற கட்டடம்) இந்திய குடியரசுக் கட்சியின் தென் மாநிலங்கள் மாநாடு தலைவர் சி.எம். ஆறுமுகம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

தலைவர் ஆர்.எஸ். கவாய், சாந்தமூர்த்தி, தலைவர் துரைசாமி, புதுவை மாநிலத் தலைவர் செல்வராஜ், பொய்கை பன்னீர்செல்வம், சென்னா மூர்த்தி, செங்கம் ஜெகநாதன் மற்றும் நான் உள்பட பலர் கலந்து கொண்டோம்.

பெங்களூர் தங்கவயல் ஆகிய ஊர்களில் எந்த நிகழ்ச்சியாக இருப்பினும் தளபதி சி.எம். ஆறுமுகம் அவர்கள் தவறாது என்னை அழைப்பார்கள். இவரது அழைப்பை ஏற்று 75 நிகழ்ச்சிகளுக்குமேல் இந்த ஊர்களில் கலந்து கொண்டு பங்கு பெற்றுள்ளேன்.

பால்தாக்ரே கொடும்பாவி எரிப்பு

சிவசேனா தலைவர் பால்தாக்ரே பம்பாயில் பாபா சாகேப் அவர்கள் மீது பழிதூற்றிப் பேசினார்கள் என்பதற்காக நாடு முழுவதும் கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

தங்கவயல் இராபர்ட்சன் பேட்டையில் நடத்தப்பட்ட மாபெரும் பேரணியில் பால்தாக்ரேயின் உருவப்படம் தெருவெல்லாம் இழுத்துச் செல்லப்பட்டு, இறுதியில் தீயிட்டுக் கொளுத்திய பின் கண்டன பொதுக்கூட்டம் நடந்தது. இந்தப் போராட்டத்தில் நானும் கலந்து கொண்டேன்.

இது ஒரு எழுச்சியூட்டும் மாபெரும் போராட்டமாகும்.

கோலார் தங்கவயல் தலித் மக்கள் அதிகமாக வசிக்கும் பகுதியாகும். அம் மக்கள் அனைவருமே சமுதாய உணர்வுமிக்க பாபா சாகேப் தொண்டர்களாவார்.

இந்தியக் குடியரசு கட்சியின் அகில இந்திய பொதுச் செயலாளரான "பெருந்தலைவர்", "தங்கவயல் சிங்கம்", "வெண்தாடி வேந்தர்", "தளபதி" என்றெல்லாம் அழைக்கப்பட்ட அய்யா சி.எம். ஆறுமுகம் அவர்கள் பாபா சாகேப் அம்பேத்கர் காலத்திலிருந்து சமுதாயப் பணியாற்றியவர். 15 ஆண்டுகள் கர்நாடக சட்டமன்ற உறுப்பினராக பதவி வகித்தவர்.

மாண்புமிகு குண்டுராவ் அவர்கள் முதலமைச்சராவதற்கு அரும்பாடு பட்டவர். குண்டுராவ் அவர்களுடன் நானும் சில கூட்டங்களில் கலந்து கொண்டிருக்கிறேன்.

குண்டுராவ் அவர்களைச் சந்திக்கச் செல்லும் போதெல்லாம் தலைவர் சி.எம். ஆறுமுகம் அவர்கள் என்னையும் உடன் அழைத்துச் செல்வார்.

பெங்களூரில் அம்பேத்கர் மருத்துவக் கல்லூரி தலைவர் அவர்களின் பெரு முயற்சியால் உருவாக்கப்பட்டது.

நான் மாநிலத் தலைவராக இருந்த நாட்களில் ஆறுமுகம் அவர்கள் அடிக்கடி தமிழ்நாட்டிற்கு வருவார்.

எனது தம்பிகள், தங்கை மற்றும் மகள் திருமணங்களில் அனைத்து நிகழ்ச்சிகளிலும் தவறாது கலந்து கொண்டுள்ளார்.

அவரது இறப்பால் ஏற்பட்டுள்ள வெற்றிடம் இனி எவராலும் நிரப்பக் கூடிய ஒன்றல்ல.

50. தங்களின் சாதியை வெளிக்காட்ட அஞ்சும் தலித் அதிகாரிகள்

பாபாசாகேப் டாக்டர் அம்பேத்கர் சட்டம் எழுதிய பின்புதான் சுதந்திர இந்தியாவில் தீண்டப்படாதவர்கள் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள்.

இதற்கு முன்பு சில ஆசிரியர்களின் கருணை உள்ளத்தினால் மாத்திரமே தலித் மக்களுக்கு படிக்க இடம் கிடைத்தது. மேலும் தாத்தா ரெட்டமலை சீனிவாசன், ராவ் பகதூர் எம்.சி. இராசா, ஆயிரம்விளக்கு தலைவர் ஜான் ரெத்தினம், தந்தை சிவராஜ், அன்னை மீனாம்பாள் சிவராஜ் போன்ற பல தலைவர்கள் போராடியதன் விளைவாக அன்றைய சென்னை மாகாணத்தில் தீண்டப்படாதவர்கள் கல்விக் கூடங்களில் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள்.

மொத்தத்தில் தலித் சமுதாய மக்களின் கல்வி போராடி பெறப்பட்ட தாகும். இப்படிப் போராடி பெறப்பட்ட கல்வியைத் தொடர்வதற்கு வசதியாக பாபா சாகேப் அவர்கள் கல்வி உதவித் தொகை முறையை (ஸ்காலர்ஷிப்) நாடெங்கும் நடைமுறைப்படுத்தினார்கள். அதன்படி கல்விக் கட்டணமோ, உணவு விடுதிக் கட்டணமோ ஆதித் திராவிட மாணவர்கள் செலுத்த வேண்டியதில்லை. கல்வி உதவித் தொகையில் இவைகளைப் பிடித்துக் கொள்வார்கள்.

நான் கும்பகோணம் அரசு கலைக்கல்லூரி, சென்னை மாநிலக் கல்லூரி, தஞ்சை மருத்துவக் கல்லூரி ஆகியவைகளில் சேரும் போது கல்லூரி கட்டணம் ரூபாய் இருபத்தேழு மட்டுமே செலுத்தினேன். குடந்தை கல்லூரி மாணவர் விடுதி, சென்னை விக்டோரியா மாணவர் விடுதி, தஞ்சை மருத்துவக் கல்லூரி மாணவர் விடுதி ஆகியவைகளில் தங்கிப் படித்த போது கட்டணம் ஏதும் செலுத்தவில்லை. அரசு உதவித் தொகையில் இந்தச் செலவு பிடித்துக் கொள்ளப்பட்டது.

ஆனால் பாபா சாகேப் அம்பேத்கர் அவர்களின் உழைப்பால் படித்து, பட்டம் பெற்று அவருடைய உழைப்பாலேயே இட ஒதுக்கீடு அடிப்படையில்

அரசுப் பணியில் சேர்ந்தவர்களைக் காணும்போது தான் வேதனையாக இருக்கின்றது.

ஆதித்திராவிட இனத்தைச் சேர்ந்த பெரும்பாலான அரசு அதிகாரிகள் தன் சாதிப் பெயரைக் கூட வெளிக்காட்டிக் கொள்வதில்லை. அவ்வளவு ஏன் ? உயர்பதவியிலுள்ள எனது உறவினர்கள் எனது பெயரை சொல்வதற்குக் கூட அஞ்சுகிறார்கள்.

தலித் அதிகாரிகளின் சாதனை

ஏழை எளிய தலித் மக்களின் பிரச்சனைக்காக சில சமயங்களின் ஐ.ஏ.எஸ். அதிகாரிகளைச் சந்திப்பதுண்டு. ஆனால் என்னுடைய பரிந்துரையை (சிபாரிசு) ஏற்று பல அதிகாரிகள் நல்லது செய்வதில்லை.

திரு. சீத்தாராம தாஸ், ஐ.ஏ.எஸ். அவர்கள் மட்டும் இதற்கு விதி விலக்கானவர். அவர் கருணை உள்ளத்தோடு தலித் மக்களுக்கு நல்லது செய்தார் எனலாம். நான் பலமுறை அவரிடம் சென்றிருக்கிறேன். அவர் "டாக்டர், நீங்கள் தொழிலை விட்டுவிட்டு இங்கு வரவேண்டாம். உங்களுடைய விசிட்டிங் கார்டு மட்டுமே கொடுத்தனுப்புங்கள் நான் பார்த்துக் கொள்கிறேன்'' என்று சொல்வார். பெரும்பாலான அதிகாரிகள் கண்டு கொள்ளவே மாட்டார்கள். சட்டப்படி செய்வதைக் கூட செய்யமாட்டார்கள்.

ஒரு தலித் இன அதிகாரியிடம் அவமானப்பட்டேன்

கல்பாக்கம் அணுசக்தி நிலைய ஊழியர்கள் சங்கம் சார்பில் பாபாசாகேப் அவர்களின் பிறந்தநாள் விழா நடத்துவதற்கு ஏற்பாடு செய்தார்கள். அதற்கு தலித் ஐ.ஏ.எஸ். அதிகாரி ஒருவரை அழைக்க வேண்டுமென சகோதரர்கள் விரும்பினார்கள். அன்று விடுமுறை நாள். எனவே, செனாய் நகரிலுள்ள அந்த அதிகாரியின் வீட்டிற்குச் சென்றோம்.

வரவேற்பு அறையில் அமர்ந்திருந்தோம். உள்ளேயிருந்து வந்த அதிகாரி, எங்களைப் பார்த்ததும் சீறிப் பாய்ந்தார். என்னை அவருக்கு நன்றாகத் தெரியும். கூடவந்த சகோதரர்களை அவருக்கு அறிமுகம் செய்து வைத்தேன். ஆனால் அவர் எங்களை நோக்கி "வீட்டிற்கு ஏன் வந்தீர்கள் ? வீட்டிற்கெல்லாம் வரக் கூடாது. அலுவலகத்தில் வந்து பாருங்கள்'' என நாயை விரட்டுவது போல கூச்சலிட்டார்.

"அய்யா, நாங்கள் சிபாரிசுக்காக தங்களிடம் வரவில்லை. கல்பாக்கத்தில் பாபாசாகேப் அம்பேத்கர் பிறந்தநாள் விழா நடத்த இருக்கின்றோம். அதில் தாங்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்ற வேண்டும். அதற்காக தங்களை அன்புடன் அழைக்க வந்துள்ளோம்'' என்றோம்.

அப்போதுகூட அவர் எங்களை உட்காருங்கள் எனக் கூறவில்லை. "அதெல்லாம் அலுவலகம் வந்து பேசிக் கொள்ளுங்கள்'' என்று சொல்லி எங்களை விரட்டியடித்து விட்டார்.

வேதனையுடன் திரும்பினோம். ஆனால் அவமானப்பட்டதை மறக்க முடியவில்லை.

51. பலமுறை முட்டாளானேன்

மனிதர்கள் சில நேரங்களில் முட்டாள் தனமான காரியங்களைச் செய்யக்கூடும். அது சில சமயங்களில் நல்லதாகவும் முடியலாம் அல்லது தீயதாகவும் முடியலாம். ஆனால் என்னுடைய வாழ்க்கையில் எனது செயல்கள் தீமையாக முடிந்தன. அவைகளில் சிலவற்றை இங்கே நினைவுகூற விரும்புகிறேன்.

இந்தி எதிர்ப்பு

நாங்கள் படிக்கும் போது இந்தி விருப்ப பாடமாக இருந்தது. இந்தி படிப்பது அவசியம் என உணர்ந்து எனது தந்தை இந்தி டியுஷன் (பள்ளிக்கு வெளியே படிப்பது) படிக்க பணம் கொடுத்தார். நான் இந்தி ஆசிரியரிடம் தனியாக டியுஷன் படித்தேன். ஆனால் சக மாணவர்கள் நான் இந்தி படிப்பதை கிண்டல் செய்தார்கள். அதனால் இந்தி படிப்பதை விட்டுவிட்டேன். ஆனால் ஒவ்வொரு திங்களும் எனது தந்தை டியுஷன் படிக்க கொடுக்கும் பணத்தை சினிமா பார்த்துவிடுவேன். இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் தீவிரமாக கலந்து கொண்டேன்.

இப்போது உணர்கின்றேன்

திராவிட இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் ஒரு காலத்தில் தீவிரமாக இந்தி எதிர்ப்பு போராட்டம் நடத்தினார்கள். ஆனால் இன்று அவர்களுடைய பிள்ளைகளெல்லாம் டெல்லியை ஆட்டிப் படைக்கிறார்கள்.

படிக்கும்போது அரசியலில் ஈடுபட்டு மகா முட்டாளானேன்.

ஆயக்காரன்புலம் பள்ளியிலும் கும்பகோணம் கலைக் கல்லூரி மற்றும் சென்னை மாநிலக் கல்லூரியிலும் படிக்கும் போது அரசியலில் ஈடுபட்டு சாதனைகள் புரிந்ததை முன்பே விரிவாக விளக்கியுள்ளேன்.

ஆனால் மருத்துவக் கல்லூரி படிப்பு மிகவும் கடினமானது. இரவு பகலாக படிக்க வேண்டும். பெரும்பாலான மாணவர்கள் சினிமாவிற்குக் கூட போக மாட்டார்கள்.

ஆனால் நானோ படிப்பைப் புறக்கணித்து முட்டாள்தனமாக

தஞ்சையில் மாணவர் காங்கிரசைத் துவங்கினேன். தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டேன். தலைவர்கள் புகழாரம் சூட்டினார்கள். முதலாம் ஆண்டு மருத்துவப் படிப்பில் மூன்று முறையும் கோட்டைவிட்டேன்.

அதனால் மருத்துவப் படிப்பை இழந்து வாழ்க்கையின் கடைக் கோடிக்குத் தள்ளப்பட்டேன்.

மகாமகா முட்டாளானேன். படிக்கச் சென்றவனுக்கு அதுவும் மருத்துவக் கல்லூரியில் படிக்கும்போது அரசியல் எதற்கு ? எனது முட்டாள் தனத்தினால் சொல்ல முடியாத இன்னல்கள் பலவற்றை அனுபவித்தேன். ஆக வேதான் படிக்கும் போது மாணவர்கள் அரசியலில் ஈடுபடக்கூடாது என வலியுறுத்தி வருகிறேன்.

படிக்கும்போது நான் அரசியலில் ஈடுபட்டதால் நானும் எனது குடும்பமும் பட்ட துயரத்திற்கு எல்லையே இல்லை.

ஆம்! சென்னை நகரில் சைக்கிளில் சோப்பு, கற்பூரம், ஊதுபத்தி ஆகியவைகளைச் சுமந்து கொண்டு விற்பனை செய்தேன். அப்போதெல்லாம் ''குற்றம் புரிந்தவன் வாழ்க்கையில் நிம்மதி காண்பதென்பதேது ?'' என மனதிற்குள் பாடிக் கொண்டே சென்றேன்.

தேர்தலில் போட்டியிட்டு முட்டாளானேன்!

கொடிய விலங்குகள் நிறைந்த அடர்ந்த காட்டில் ஆயுதங்களும் அனுபவமுமில்லாமல் வேட்டையாடச் சென்று சிக்கிக் கொண்டவனைப் போல ஆள்பலம், பணபலம், சூழ்ச்சி ஆகியவை எதுவுமில்லாமல் நான் தேர்தலில் நின்றது முட்டாள்தனமானதே.

1984ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தல்

தி.மு.க. கூட்டணியில் சேர்ந்து பல போராட்டங்களில் கலந்து கொண்டோம். ஆனால் கடைசி நேரம் வரை குடியரசுக் கட்சிக்கு தேர்தல் கூட்டணியில் இடம் ஒதுக்காமல் டாக்டர் கலைஞர் கருணாநிதி அவர்கள் பெரும் ஏமாற்றமடையும்படிச் செய்து விட்டார்கள்.

எனவே தமிழகமெங்கும் 16 இடங்களில் குடியரசுக் கட்சி (கவாய் பிரிவு) தனித்துப் போட்டியிட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

நான் யானை சின்னத்தில் ஆயிரம் விளக்கு சட்டமன்ற தொகுதியில் போட்டியிட்டேன்.

கலைஞரின் மகன் ஸ்டாலின் தி.மு.க. சார்பிலும், திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி அ.தி.மு.க. வேட்பாளராகவும் போட்டியிட்டார்கள்.

அ.தி.மு.க. வேட்பாளர் கே.ஏ. கிருஷ்ணசாமி வெற்றி பெற்றார்.

இந்தத் தேர்தல் எனக்கு ஒரு நல்ல அனுபவத்தைக் கொடுத்தாலும் நான் தலித் சமுதாய மக்களை நம்பி போட்டியிட்டது மகா முட்டாள்தனமாகும். இந்தத் தொகுதியிலுள்ள தலித் மக்கள் மட்டுமே எனக்கு வாக்களித்திருந்தால் நான் வெற்றி பெற்றிருப்பேன்.

மேலும் அப்போதெல்லாம் கம்ப்யூட்டர் கிடையாது. வாக்காளர்களுக்கு அடையாள அட்டை எதுவும் கிடையாது. கள்ள ஓட்டு போடுவது சாவ சாதாரணமாகவே நடைபெற்றது. எனக்கு கள்ளவோட்டு போட ஆள் கிடையாது. அதனால் நான் போட்டியிட்டது பெரிய முட்டாள்தனமென்பதை பிறகு தான் உணர்ந்தேன்.

1989ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தல்

இந்தத் தேர்தலில் காங்கிரசுக் கூட்டணியில் பெரம்பலூர் மாவட்டம் வரகூர் தொகுதியில் போட்டியிட்டேன். இந்த மாவட்டத்தில் குறிப்பாக வரகூர் தொகுதியில் தலித் மக்களுக்காக பல போராட்டங்கள் நடத்தியுள்ளேன். அந்தக் காலத்தில் என்னைத் தவிர வேறு எந்த தலித் தலைவரும் அந்தப் பகுதியில் சமுதாயத்திற்காக போராடியது கிடையாது. அந்த நம்பிக்கையில் வரகூர் தொகுதியில் போட்டியிட்டேன்.

ஆனால் சில காங்கிரசுத் தலைவர்கள் காலைவாரி விட்டார்கள். தலித் மக்களும் காலை வாரி விட்டார்கள். வன்னியர்கள் பழி வாங்கிவிட்டார்கள். உடையார் இனத்தவர்கள் மட்டுமே முழு ஆதரவு கொடுத்தார்கள்.

தி.மு.க. வேட்பாளர் வெற்றி பெற்றார். தலித் மக்களை நம்பி தேர்தலில் போட்டியிட்டது மகா மகா முட்டாள்தனமென்பதை பிறகு உணரலானேன்.

1996ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தல்

பாட்டாளி மக்கள் கட்சி கூட்டணியில் ஏணி சின்னத்தில் சிறீபெருமந்தூர் சட்டமன்றத் தொகுதி வேட்பாளராக போட்டியிட்டேன். இந்தத் தொகுதியில் அம்பேத்கர் அவர்களின் தொண்டர்களும் கணிசமான அளவு உள்ளார்கள்.

ஆனால் குடியரசுக் கட்சியினரே மற்ற கட்சி வேட்பாளரிடம் பணம் வாங்கிக் கொண்டு எனக்கு எதிராகச் செயல்பட்டார்கள். மேலும் தம்பி சாந்தமூர்த்தி மற்றும் வேலாயுதம் தவிர மற்ற குடியரசுக் கட்சிக்காரர்கள் யாருமே எனது தொகுதியை எட்டிப் பார்க்கவில்லை.

பாட்டாளி மக்கள் கட்சியைச் சேர்ந்த வன்னிய நண்பர்கள் முழு மூச்சுடன் என்னை ஆதரித்து பணியாற்றினார்கள் என்பதை என்றும் மறக்க முடியாது. அந்த நண்பர்களுக்கு என்றும் நன்றி செலுத்த கடமைப்பட்டுள்ளேன்.

மொத்தத்தில் ஆதித் திராவிட மக்களின் வாக்குகள் எனக்கு மிகவும் குறைவாகவே கிடைத்தன. இந்தத் தொகுதியில் தி.மு.க. வேட்பாளர் வெற்றி பெற்றார்.

பூவை மூர்த்தி பா.ம.க. கூட்டணியில் ஏணி சின்னத்தில் பாராளுமன்றத்திற்குப் போட்டியிட்டார். ஆனால் பூவை மூர்த்தியின் தொண்டர்களில் சகோதரர் மாரி போன்ற ஒரு சிலரைத் தவிர மற்றவர்கள் அனைவரும் காங்கிரசுக்காரர்களிடம் பணம் வாங்கிக் கொண்டு என்னைக் காலைவாரி விட்டார்கள். இந்தத் தேர்தலில் போட்டியிட்டது மகா மகா முட்டாள்தனமென்பதை இப்போதுதான் உணருகிறேன்.

1996 சென்னை மாநகராட்சித் தேர்தல்

சட்டமன்றத் தேர்தல் முடிந்து சில மாதங்களில் சென்னை மாநகராட்சி தேர்தல் நடைபெற்றது. முட்டாள்தனமாக மாநகராட்சி தேர்தலில் 109ஆவது வட்டத்தில் போட்டியிட்டேன். பணமும் கள்ள ஓட்டும் விளையாடியது. அந்த இரண்டிற்கும் என்னிடம் வழியில்லை. குறைந்த ஓட்டு வித்தியாசத்தில் தோற்றுப் போனேன்.

2001 ஆம் ஆண்டு மாநகராட்சி

எனக்கு புத்தியே இல்லை. மகா–மகா–மகா முட்டாள்தனமாக மீண்டும் இதே தொகுதியில் மாநகராட்சி உறுப்பினர் தேர்தலில் போட்டியிட்டேன். தி.மு.க. வேட்பாளர் வெற்றி பெற்றார். நான் படுதோல்வியடைந்தேன்.

சில முக்கிய காரணங்களும் அனுபவமும்

தலித் மக்களின் ஏழ்மை காரணமாக ஏதாவது கிடைக்கிறதா என எதிர்பார்க்கிறார்கள். அது தவிர்க்க முடியாத ஒன்று என்பதை மறுக்க இயலாது.

நான் தேர்தல் பிரச்சாரத்திற்குச் செல்லும் போதெல்லாம் ஏழை எளிய மக்கள் சேற்றிலும் சகதியிலும் உழண்டு கொண்டிருப்பதைக் கண்டு வேதனையடைந்தேன். எனக்கு ஒரு வாய்ப்பு கிடைத்தால் அந்த மக்களின் அவலநிலையை மாற்றுவதற்கு ஆவண செய்யலாமென திட்டமிட்டிருந்தேன். ஆனால் மக்கள் எனக்கு வாய்ப்பளிக்கவில்லை.

தீதும் நன்றம் பிறர்தரவாரா

எது எப்படியோ, மூன்று முறை சட்டமன்றத்திற்கும், இரண்டுமுறை மாநகராட்சிக்கும் போட்டியிட்டு போண்டியானது தான் மிச்சம். காரணம் 10 பைசா வட்டிக்குக் கடன் வாங்கி தேர்தலில் செலவு செய்தேன். ஆண்டுக் கணக்கில் 10 பைசா வட்டி கொடுத்து அலுத்துப் போய் தண்டல்காரர்களிடம் (கந்து வட்டிக்காரர்கள்) கடன் வாங்கி 10 பைசா வட்டிக் கடனைத் தீர்த்தேன். ஆனால் தண்டல் கடனைத் தீர்க்க முடியவில்லை. அது தொடர்ந்து கொண்டே போகிறது.

"தீதும் நன்றும் பிறர்தரவாரா" என்பது போல எல்லாமே என்னுடைய முட்டாள்தனம் தான்!

ஆம். நான் ஒரு மகா–மகா–மகா முட்டாள்!

52. தலித் மக்களின் எதிர்காலம்

அறிவியல் உச்சக்கட்டத்தில் வளர்ந்துள்ளது. மனிதன் சந்திர மண்டலத்தில் குடியேற இருக்கிறான். ஆனால் இந்தியாவில் தீண்டாமை முற்றிலுமாக ஒழிந்த பாடில்லை. இது உலக அரங்கில் இந்தியாவிற்கு பெருத்த அவமானமாகும் என்பதை எந்த அறிவு ஜீவியும் உணருவதாகத் தெரிவில்லை. பரலோகத்தைப் பற்றி போதிக்கின்ற புத்திசாலிகளுக்கு இந்தப் பூலோகத்தில் தலித் மக்களின் அவல நிலையை போக்குவதற்கு சிந்தனை இல்லை.

இந்தியாவிலுள்ள அரசியல்வாதிகள் அனைவரும் தேர்தல் இலாபம் கருதியே செயல்படுகிறார்கள் என்பதை யாரும் மறுக்க முடியாது.

மற்றவர்களை குறை கூறுவதை விட தலித் தலைவர்கள் தடம் புரண்டு செயல்படுவதுதான் வேதனைக்குரியதாகும். மெய்யாகவே சமுதாய உணர்வோடு செயல்பட்ட தலைவர்கள் அனைவரும் மறைந்து போய் விட்டார்கள். நான் நூற்றுக்கணக்கான தலித் தலைவர்களைப் பார்த்திருக்கிறேன்.

இன்றைய நிலையில் தலித் மக்களின் விடுதலைக்காக தியாக உணர்வோடு போராடக்கூடிய தலைவர் ஒருவர்கூட இல்லை என்பதை மன வேதனையுடன் கூறிக்கொள்கிறேன்.

சுய விளம்பரம், பதவி, பணம் ஆகியவைகளை குறிக்கோளாகக் கொண்டு தான் இந்தத் தலித் தலைவர்கள் செயல்படுகிறார்கள் என்பதை யாரும் மறுக்க முடியாது.

இந்தக் கொடுமைகளுக்குக் காரணம் இவர்கள் பாபா சாகேப் அம்பேத்கர் அவர்களைப் பற்றித் தெளிவாகப் படிக்கவில்லை.

பைபிள் படித்துத் தேர்ச்சி பெற்றவர்தான் பாதிரியாராகத் திகழ முடியும்.

திருக்குர்ஆன் படித்துத் தேர்ச்சி பெற்றவர்தான் இமாமாக செயலாற்ற முடியும்.

அதைப் போல, பாபா சாகேப் டாக்டர் அம்பேத்கர் அவர்களின்

நூல்களை ஓரளவாவது கற்றறிந்தவர்கள்தான் தலித் மக்களின் மெய்யான தலைவர்களாகச் செயல்பட இயலும்.

ஆனால், தலித் மக்களில் புத்திசாலிகள் பாபாசாகேப் அவர்களைப் பற்றித் தெரிந்து கொள்ள முயலாமல் அந்த மகானுடைய உழைப்பின் பயனை மட்டும் அனுபவித்துக் கொழுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

படித்தவர்களுடைய பிள்ளைகள் தான் படிக்க முடிகின்றது. பதவியிலுள்ளவர்களின் பிள்ளைகள் தான் உயர் பதவிகளை அடைய முடிகின்றது.

ஆனால் முன்னால் செல்பவர்கள் பின்னால் விழுந்து கிடப்பவர்களைத் திரும்பிக் கூட பார்ப்பதில்லை.

பாபா சாகேப் அவர்களுடைய உழைப்பின் காரணமாக சட்டமன்ற, பாராளுமன்ற உறுப்பினராகச் செல்லும் தனித் தொகுதி உறுப்பினர்கள் தான் சார்ந்துள்ள கட்சிக்கு மட்டும்தான் விசுவாசமாக இருக்கிறார்களே தவிர பாபா சாகேப் அம்பேத்கர் அவர்களைப் பற்றித் தெரிந்து கொள்ள முயல்வதில்லை என்னும் போது சமுதாயத்தைப் பற்றி எங்கே சிந்திக்கப் போகிறார்கள்?

தலித் அமைப்புகளைச் சார்ந்தவர்கள் கூட தான் சார்ந்துள்ள கூட்டணி கட்சிகளுக்குத்தான் விசுவாசியாகச் செயல்படுகிறார்கள் என்பதை அறிகின்றோம்.

எனவே, தலித் மக்களுடைய எதிர்காலம் சூன்யமாகவே இருக்கும் என்பதை எண்ணி கண்ணீர் விடுகிறேன்.

காரணம் சமுதாய உணர்வோடு போராடக் கூடிய தலித் தலைவர்கள் இன்று இல்லை. எதிர்காலத்தில் தோன்றுவார்கள் என என்னால் நம்ப முடியவில்லை. எனவே, இந்தியாவில் தீண்டாமை முற்றிலுமாக ஒழிக்க முடியவே முடியாது என எனது நீண்ட நாள் அனுபவத்தின் மூலம் எண்ணி வருந்தி வருந்தி சாவதைத் தவிர எனது இறுதி காலத்தில் வேறு வழியே தெரியவில்லை. அய்யகோ! எனது அப்பாவி மக்களை எனது இதயதெய்வம் பாபாசாகேப் அம்பேத்கர் அவர்கள் தான் காப்பாற்ற வேண்டும்.

மற்றவர்கள் செய்வார்களா?

அமெரிக்காவில் நீக்ரோ (கருப்பர்கள்) இன மக்களின் விடுதலைக்காக வெள்ளையர்கள் பலர் போராடினார்கள். "அடிமைத்தனையறுத்தார் அப்ரகாம் லிங்கன்'' என படித்திருக்கிறோம்.

ஆனால், இந்தியாவில் தீண்டப்படாத மக்களின் விடுதலைக்காக மெய்யாகவே போராடக் கூடிய (பெரியாரைப் போன்ற) தலித் அல்லாத தலைவர்கள் தோன்றவில்லை. ஒரு வேளை தலித் அல்லாத தலைவர்கள் யாராவது தோன்றி அரசியல் இலாபம் கருதாமல் மனித நேய அடிப்படையில் போராடினால் தீண்டாமைக் கொடுமைகளை ஓரளவு குறைக்க முடியும்.

அப்படி இனி யாரும் தோன்றுவார்கள் என எதிர்பார்க்க இயலவில்லை.

மதமாற்ற தடைச் சட்டம்

2002ல் அன்றைய மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா அவர்கள் மதமாற்ற தடைச்சட்டம் அறிவித்தார். எனவே மதிக்கப்படாதவர்கள் மதம் மாறுவது மனிதனின் அடிப்படை உரிமை. ஆகவே, மதமாற்றத்திற்கு தடை விதிப்பது மனிதனின் அடிப்படை உரிமையை பறிப்பதாகும் என குரல் எழுப்பினேன். ஆனால் நான் சார்ந்துள்ள இந்திய குடியரசுக் கட்சி அ.இ.அ.தி.மு.க.வுடன் கூட்டணி வைத்திருந்தது. அம்மா கோபிப்பார்கள் என பயம். மேலும் மதமாற்ற தடைச் சட்டத்தை எதிர்ப்பது கூட்டணியை பாதிக்கும் என அஞ்சினார்கள் போலும். இருப்பினும் கூட்டணியைவிட சமுதாயத்தின் உரிமையையும் சயமரியாதையையும்தான் முக்கியம் என நான் மதமாற்ற தடைச் சட்டத்தை கடுமையாக எதிர்த்தேன்.

எல்லா அமைப்புகளையும் அழைத்து ஆலோசனைக் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்தேன். பாம்குரோவ் ஹோட்டலில் திருவாளர்கள் கருப்பன், ஐ.ஏ.எஸ்., திருமாவளவளன், சந்திரசேகசன், வை. ஜெயராமன், கவிஞர் தமிழ்மறையான், வி.பி. பலராமன், அம்பேத்கர் பிரியன், கிருஷ்ண பறையனார் மற்றும் கலந்து கொண்டார்கள். கூட்டத்தில் மதமாற்ற தடைச்சட்டத்திற்கு கண்டனம் தெரிவிக்கப்பட்டது. மேலும் 28.10.2002ல் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்துவதென தீர்மானிக்கப்பட்டது.

27.10.2002 அன்று நான் சார்ந்துள்ள குடியரசு கட்சியின் மாநில செயற்குழு கூட்டம் மாநில தலைவர் சொல்லின் செல்வர் சக்திதாசன் அவர்கள் தலைமையில் சென்னை ஆயிரம் விளக்கு செயின்ட் சேவியர் பள்ளியில் நடைபெற்றது. எனக்கு எதிர்ப்பு தெரிவித்தவர்கள் மட்டுமே இக்

கூட்டத்தில் கலந்து கொண்டார்கள். என்னை கடுமையாக தாக்கிப் பேசினார்கள். என்னை கொலை செய்துவிடுவதாகக்கூட மிரட்டினார்கள். மறுநாள் நடக்க இருக்கும் கண்டன ஆர்ப்பாட்டத்தை நடத்தக்கூடாது என என்னை வலியுறுத்தி பேசினார்கள். இதில் வருத்தப்பட வேண்டிய விஷயம் என்னவென்றால் ஜெயலலிதா அறிவித்த மதமாற்ற தடைச்சட்டத்தை ஆதரித்து பேசினார்கள். பாபா சாகேப் அம்பேத்கர் அவர்கள்தானே மதமாற்றம் செய்து வழிகாட்டினார். ஆனால் அவருடைய தொண்டர்கள் என மார்தட்டிக் கொள்பவர்கள் மதமாற்ற தடைச்சட்டத்தை ஆதரிப்பது எனக்கு வேதனையாக இருந்தது. வசை மொழிகளைப்பற்றி கவலைப்படாமல் நான் பதில் கூறினேன். ஆனால் என்னை பேசவிடாமல் கூச்சல் போட்டார்கள். ஜெயலலிதாவை எதிர்ப்பதால் குடிமூழ்கிவிட்டதாக கருதினார்கள். தாங்க முடியாத வேதனையுடன் கூட்டத்திலிருந்து வெளியே வந்து விட்டேன். அன்று நான் அவமானப்பட்டதை இன்றும் என்னால் மறக்க முடியவில்லை.

என்னுடைய கட்சிப் பணிக்கும் சமுதாயப் பணிக்கும் கிடைத்த வெகுமதி என்றே கருதினேன். இருப்பினும் அடுத்த நாள் 28.10.2002ல் சென்னை சேப்பாக்கத்தில் அரசு விருந்தினர் மாளிகை எதிரில் மாபெரும் ஆர்ப்பாட்டம் திரு. கருப்பன் அவர்களின் தலைமையில் சிறப்பாக நடத்தினேன். பல்வேறு தலித் அமைப்புகளைச் சார்ந்தவர்கள் கலந்து கொண்டு மத மாற்றத் தடைச்சட்டத்திற்கு கண்டன குரல் எழுப்பினார்கள்.

அடுத்து மராட்டிய மாநிலம் ஜல்கானில் இந்திய குடியரசு கட்சியின் செயற்குழு கூட்டம் ஆர்.எஸ். கவாய் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. தமிழகத்தில் அறிவிக்கப்பட்டுள்ள மதமாற்ற தடைச்சட்டம் பற்றி விவாதிக்கப்பட்டது. ஆர்.எஸ். கவாய் மற்றும் கமிட்டி உறுப்பினர்கள் அனைவரும் இந்தச் சட்டத்தை கடுமையாக எதிர்த்து குரல் கொடுத்தார்கள். அடுத்து பாராளுமன்ற தேர்தல் நடைபெற்றது. அ.இ.அ.தி.மு.க. கூட்டணி படுதோல்வியடைந்தது. உடனே முதலமைச்சர் மாண்புமிகு ஜெயலலிதா அவர்கள் "மதமாற்ற தடைச்சட்டத்தை" வாபஸ் பெற்றதாக அறிவித்தார்கள். நான் எத்தனையோமுறை முதலமைச்சர் அவர்களுக்கு கடிதம் எழுதினேன். அறிக்கைகள் பலமுறை வந்தது. கண்டன கூட்டங்கள் நடத்தினேன். அதை யெல்லாம் அவர்கள் கண்டுகொள்ளவில்லை. ஆனால் படுதோல்விக்கு மதமாற்ற தடைச்சட்டமும் ஒரு காரணம் என்பதை உணர்ந்து அவர்களே அந்த சட்டத்தை வாபஸ் பெற்றார்கள். இது என்னுடைய போராட்டத்திற்கு கிடைத்த வெற்றி என்றே கூறவேண்டும்.

பூரண மதுவிலக்கு

மதுவினால் அன்றாடம் பல ஆயிரக்கணக்கான குடும்பங்கள் நாசமாகிக் கொண்டிருக்கின்றன. பல பெண்கள் வாழ்விழந்து வருந்திக் கொண்டிருக்கின்றார்கள். கொலை, கொள்ளை, கற்பழிப்பு, ஈவ்டீசிங், சாதி சண்டைகள், வாகன விபத்துக்கள் போன்ற தீய செயல்களுக்கு மதுவே முக்கிய காரணம் என்பதை யாரும் மறுக்க இயலாது. மேலும் மதுவினால் பலருடைய ஈரல் பாதிக்கப்படுகின்றது.

மகாத்மா காந்தியும், காங்கிரஸ்காரர்களும் பூரண மதுவிலக்கு அமுல்படுத்த வேண்டும் என போராடினார்கள். இந்தியா சுதந்திரமடைந்ததும் பூரண மதுவிலக்கு அமுல் படுத்தப்பட்டது. மதுவிலக்கு அமுல் படுத்தப்பட்ட பின் ஏழைகள் ஆடு வாங்கினார்கள், மாடு வாங்கினார்கள். பலர் நிலம் வாங்கினார்கள். பிள்ளைகளை பள்ளிக்கு அனுப்பினார்கள். ஆனால் மதுவிலக்கு ரத்து செய்யப்பட்டபின் ஏழைகளாகிக் கொண்டிருக்கிறார்கள். பொது இடங்களில் புகைப்பிடிப்பதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. ஆனால் பொது இடங்களில் மது அருந்திவிட்டு கலாட்டா செய்வதற்கு தடை இல்லை. அதைப் பற்றி அறிவாளிகள் யாரும் கவலைப்படுவதே இல்லை. மதுவிலக்கு பற்றி ஒரு சிலரைத்தவிர மற்ற காங்கிரஸ்காரர்கள் கண்டுகொள்வதே இல்லை. மகாத்மா காந்தியின் பெயரைக்கூட கூறாத காங்கிரஸ்காரர்கள் மதுவைப்பற்றி கவலைப்பட மாட்டார்கள். காங்கிரஸ் ஆட்சி செய்யும் மாநிலங்களில் கூட மது விலக்கு அமுல்படுத்தப்படவில்லை.

கள்ளச் சாரயத்தை ஒழிப்பதற்காக நல்ல சாராயத்தைக் கொடுப்பதாக பெருமிதப்படுகின்றார்கள். கள்ளச் சாராயத்தை ஒழிக்க இயலவில்லை எனில் அதற்கு அரசு மற்றும் காவல்துறையின் பலகீனம் என்றே கூறவேண்டும். அரசு ஏழை எளிய மக்களுக்கு ஆற்றுகின்ற நல்ல பணிகளைவிட மதுவினால் பலமடங்கு தீமை ஏற்படுகின்றது என்பதை மனித நேயமுள்ளவர்கள் யாரும் சிந்திப்பதே இல்லை.

காரணம் ஏழைகள் ஏழைகளாகவே இருப்பது தேர்தல் காலங்களில் அரசியல் கட்சிகளுக்கு லாபகரமாக இருக்கும். மேலும் அரசுக்கு வருவாய் கிடைக்கின்றது. எனவே குடிகாரர்களுக்கு குடியைவிட முடிவதில்லை. அரசுக்கு வருவாயைவிட முடிவதில்லை. இந்த அநியாயத்தைப்பற்றி யாருமே சிந்திப்பதில்லை. பொது இடங்களில் புகை பிடிக்கக்கூடாது. சினிமாவில் புகைகாட்சி கூடாது என கூறுகின்ற பெரிய மனிதர்கள் பொது இடங்களில் மது அருந்திய நிலையில் உலாவருவதைப் பற்றியோ சினிமாவில் மது

அருந்திய காட்சிகளைப் பற்றியோ கவலைப்படாதது ஏன் என்று புரியவில்லை. ஆனால் ஒன்றுமட்டும் உண்மை. யாரும்அதாவது பீடி, சிகரெட்டினால் அரசுக்கு கிடைக்கும் வருவாயைவிட மதுவகைகளினால் நிறைய வருவாய் கிடைக்கின்றது. எனவே மதுவைப்பற்றி கவலைப்பட வாய்ப்பில்லை.

நானும் அண்ணன் இலக்கியச் செல்வர் முனைவர் குமரிஅனந்தன் மட்டுமே நீண்ட நாட்களாக பூரண மதுவிலக்கு அமுல்படுத்தப்பட வேண்டும் என போராடிக் கொண்டிருக்கின்றோம். சென்னையில் வள்ளுவர் கோட்டம் அருகில் 30.01.2002 மற்றும் 1.12.2003ல் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தினோம். உவமைக் கவிஞர் சுரதா அவர்கள் உரையாற்றி எங்களுடைய உண்ணாவிரதத்தை முடித்து வைத்தார்கள்.

பாலாற்றில் அணை கட்டுவதை எதிர்த்துப் போராட்டம்

ஆந்திர அரசு பாலாற்றில் அணை கட்டுவதாக அறிவித்தது. பாலாற்றில் அணை கட்டினால் வட ஆற்காடு, காஞ்சிபுரம் மாவட்ட மக்களுக்கு பெரும் பாதிப்பு ஏற்படும் என்பதால் இந்தியக் குடியரசுக் கட்சி சார்பில் வேலூரில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தினோம். முதன் முதலில் நாங்கள்தான் கண்டன குரல் கொடுத்தோம் என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

மருத்துவர்கள் சங்கப்பள்ளி

"சமூக சமத்துவத்திற்கான மருத்துவர்கள் சங்கத்தின்'' துணை தலைவராக நான் பணியாற்றிக் கொண்டிருக்கிறேன். எங்களுடைய சங்கத்தின் சார்பில் பல போராட்டங்கள் நடத்தியுள்ளோம். திருச்சியில் எனது தலைமையில் மாபெரும் மாநாடு நடைபெற்றது. இம்மாநாட்டில் இட ஒதுக்கீடு பிரச்சினை முக்கிய கோரிக்கையாகும். திராவிடர் கழகத் தலைவர் டாக்டர் கி. வீரமணி, கம்யூனிஸ்ட் தலைவர் திரு. நல்லக்கண்ணு மற்றும் தலைவர்கள் கலந்து கொண்டார்கள்.

சுனாமியின் போது மருத்துவப்பணி

எங்களுடைய சங்கத்தின் சார்பில் சுனாமி வந்த மறுநாளே சென்னையில் பாதிக்கப்பட்டவர்களுக்கு மைலாப்பூரில் ஒரு மண்டபத்தில் மருத்துவ சிகிச்சையளித்தோம். கொஞ்சம் சிற்றுண்டியும் வழங்கினோம். இதை எங்கள் சங்கத்தின் நிறுவனரும் பொதுச் செயலாளருமாகிய செயல்வீரர் டாக்டர் ரவீந்திரநாத் அவர்கள் மிக்க முயற்சியோடு முன் நின்று நடத்தினார்.

நாகை மாவட்டத்தில் மருத்துவப்பணி

அடுத்து சுனாமி ஏற்பட்ட சில நாட்களில் கல்பாக்கம் பகுதியில் மருத்துவ முகாம் நடத்தப்பட்டது. அதை தொடர்ந்து பல மருத்துவர்களோடு நாகப்பட்டினம் மாவட்டத்திற்கு இரண்டு முறை சென்றிருந்தோம். நான்கு நாட்கள் நாகை மாவட்டத்தில் கோடியக்கரை, அகஸ்தியாம் பள்ளி, வேதாரணியம் ஆகிய பகுதிகளிலிருந்து புஷ்பவனம், நாகப்பட்டினம், மாயவரம், சீர்காழி மாவட்டங்களில் கடலோரப் பகுதிகளில் பாதிக்கப்பட்ட ஊர்களுக்கு மருத்துவ சிகிச்சையளித்ததோடு, புடவை, எவர்சில்வர் தட்டுகள் வழங்கினோம். இதற்கும் செயல்வீரர் டாக்டர் ரவீந்திரநாத் அவர்கள் தான் ஏற்பாடு செய்தார். கம்யூஸ்ட் கட்சி தலைவர் திரு. மகேந்திரன், குடியரசுக் கட்சி தலைவர் திரு. சாந்தமூர்த்தி, நீலமலர் பத்திரிகை ஆசிரியர் திரு. சேதுமகராசன் போன்றவர்கள்கூட இருந்து உதவினார்கள். எங்களுடைய சங்கத்தின் சார்பில் கருத்தரங்குகள், போராட்டங்கள் தொடர்ந்து நடந்து கொண்டே இருக்கின்றது.

உடல்நிலை பாதிப்பு

2006ல் எனக்கு சிக்கன் குனியா காய்ச்சல் ஏற்பட்டது. அதனால் உடல் மிகவும் பாதிக்கப்பட்டது. அதனால் என்னுடைய சமுதாய பணியும் வெகுவாக பாதிக்கப்பட்டது.

வேதாரணியத்தில் பேருந்து நிலையம் அருகே பாபாசாகேப் டாக்டர் அம்பேத்கர் அவர்களின் திருவுருவச்சிலை வைத்துள்ளோம். கடந்த சில ஆண்டுகளாக பாபாசாகேப் பிறந்து நாளான ஏப்ரல் 14ந் தேதி வேதாரணியம் சென்று பாபாசாகேப் அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து சிறப்பாக விழா கொண்டாடுவது வழக்கம். அன்று பல கிராமங்களுக்குச் சென்று பிறந்த நாள் விழாவில் கலந்து கொண்டேன்.

2007 ஏப்ரல் மாதம் உடல் பாதிக்கப்பட்டிருந்தாலும், சிரமத்துடன் வேதாரணியம் சென்று விழாவில் கலந்து கொண்டேன். பல கிராமங்களுக்குச் சென்று வந்தேன்.

சென்னைக்கு வந்த மறுநாள் எனது வாய் வழியாக இரத்தம் வர ஆரம்பித்தது. பாரதிராசா மருத்துவமனையில் சேர்ந்து சிகிச்சை பெற்றேன். இருப்பினும் நாளுக்கு நாள் உடல் நிலை மோசமாகிவிட்டது.

முக்கிய தலைவர்களுடன் நான் கலந்து கொண்ட விபரம்

1. என்னுடைய குருநாதர் கருப்பம்புலம் திரு. பி. வெங்கடாசல தேவர் அவர்களுடன் சுமார் 100-க்கு மேற்பட்ட கூட்டங்களில் பேசி இருக்கிறேன்.
2. சர்தார் வேதரத்தினம் பிள்ளை அவர்களோடு சுமார் 10 கூட்டங்கள்.
3. பெருந்தலைவர் காமராஜ் அவர்களோடு சுமார் 5 கூட்டங்கள்.
4. தியாகி கக்கன்ஜீ அவர்களோடு சுமார் 10 கூட்டங்களுக்குமேல்.
5. தலைவர் பி. பரமேஸ்வரன் அவர்களோடு சுமார் 15 கூட்டங்களுக்குமேல்.
6. பாபு ஜெகஜீவன்ராம் அவர்களோடு மெரினா கடற்கரையில் பாபா சாகேப் அம்பேத்கர் பிறந்தநாள் விழா.
7. தலைவர் கான்சிராம் அவர்களோடு ஒருமுறை சென்னை பெரியார் திடல் மாநாட்டில்.
8. பாரிஸ்டர் கோபராகடே இரண்டு கூட்டங்கள்.
9. மாண்புமிகு டாக்டர் செல்வி ஜெயலலிதா அவர்களோடு சென்னை மெரினா கடற்கரையில் இஸ்லாமியர்களின் சமூகநீதி மாநாடு.
10. மாண்புமிகு டாக்டர் கலைஞர் கருணாநிதி அவர்களோடு சென்னை மெரினா கடற்கரையில் ஜனாப் அப்துல்சமது, ஜனாப் அப்துல் லத்தீப் ஆகியோர் நடத்திய முஸ்லிம் லீக் மாநாடு, சென்னை எழும்பூர் இம்பீரியல் ஹோட்டலில் நடைபெற்ற நோன்பு திறப்பு விழா.
11. டாக்டர் கீ. வீரமணி அவர்களோடு சுமார் 10 கூட்டங்களில் கலந்து கொண்டு பேசியுள்ளேன்.
12. தொண்டு வீராசாமி-தியாகி கே.வி. லிங்கம்-ஜே.பி.எஸ். மணி ஆகியவர்களோடு பல கூட்டங்களில் பேசியுள்ளேன்.
13. சொல்லின் செல்வர் ஆ. சக்திதாசன் அவர்களோடு நூற்றுக்கணக்கான கூட்டங்கள்.
14. தலைவர் எஸ். இளைய பெருமாள்-அம்பேத்கர் மக்கள் இயக்கத் தலைவர் பாவலர் வை. பாலசுந்தரம் குடியரசுக் கட்சித் தலைவர் பௌத்த பெரியார் மு. சுந்தரராசன், டாக்டர் செ.கு. தமிழரசன், ஜீ. மூர்த்தி, பி.வி. கரியமால் ஆகியோருடன் நிறைய கூட்டங்களில் கலந்து கொண்டு பேசியுள்ளேன்.

15. பா.ம.க. தலைவர் இனிய நண்பர் டாக்டர் இராமதாஸ் அவர்களோடு 116 கூட்டங்களில் கலந்து கொண்டிருக்கிறேன்.
16. ஜனாப் அப்துல்லா அடியார் அவர்களோடு 15 கூட்டங்களுக்கு மேல்.
17. அல்ஹஜ் டாக்டர் பழனி பாபா அவர்களோடு சுமார் 200 கூட்டங்களுக்குமேல்.
18. இந்தியக் குடியரசுக் கட்சித் தலைவர் ஆர்.எஸ். கவாய் அவர்களோடு 50க்கு மேற்பட்ட கூட்டங்கள் (தமிழ்நாடு, மும்பை, டெல்லி, நாக்பூர், சோலாப்பூர், ஜல்கான், போபால், இண்டூர், மாலோ, கர்நாடகம் போன்ற இடங்கள்)
19. குடியரசுக் கட்சி தலைவர் தளபதி சி.எம். ஆறுமுகம் அவர்களோடு சுமார் 30க்கு மேற்பட்ட கூட்டங்கள்.
20. இராம்தாஸ் அத்வாலே-பிரகாஷ் அம்பேத்கர் ஆகியோருடன் சில கூட்டங்கள்.
21. குடியரசுக் கட்சி தலைவர்களான பேராசிரியர் ஜோகேன்ர கவாடே, நாக்பூர் கனார், அட்வகேட் சூரியகாந்த் டோங்கரே, புல்சலே, பூனா, பாஜீராவ் காம்பளே, பிகார் திவாகர் ஆகியோர்களுடன் பல கூட்டங்கள்.
22. உலகமகாகவி உவமைக் கவிஞர் சுரதா அவர்களோடு 75க்கும் மேற்பட்ட கூட்டங்கள்.
23. மக்கள் தலைவர் ஜீ.கே. மூப்பனார், இனிய நண்பர் வாழப்பாடி ராமமூர்த்தி, இலக்கியச் செல்வர் குமரி அனந்தன், கம்யூனிஸ்டு கட்சி தலைவர் அண்ணன் நல்லக்கண்ணு ஆகியோருடன் பல கூட்டங்களில் கலந்து கொண்டிருக்கிறேன்.

நடத்திய போராட்டங்கள்

★ 32முறை கைது செய்யப்பட்டுள்ளேன்.

★ 50க்கு மேற்பட்ட ஆர்ப்பாட்டங்கள்--உண்ணாவிரதப் போராட்டங்கள்.

★ இரண்டுமுறை சென்னை மத்திய சிறையில் அடைக்கப்பட்டேன்.

திருவள்ளுவர் உலகத் தமிழ்ச் சங்கம்

திருவள்ளுவர் உலகத் தமிழ்ச் சங்கம் 10.8.1997ல் சென்னை ஆயிரம் விளக்கில் துவங்கப்பட்டது. உவமைக் கவிஞர் சுரதா அவர்கள் தலைமையில் எனது முன்னிலையில் பேராசிரியர் முனைவர் பொற்கோ (பின்னாளில் சென்னைப் பல்கலைக் கழக துணைவேந்தர்) அவர்கள் தொடக்கி வைத்தார்கள்.

அதைத் தொடர்ந்து சென்னையில் தேவநேயப் பாவாணர் நூலகக் கட்டிடம்; ஆனந்த் திரையரங்கு உமாபதி வளாகத்தில் சிறப்புக் கூட்டங்கள் நடத்தப்பட்டது.

இச் சங்கத்திற்கு நான் நிறுவனத் தலைவர், உவமைக் கவிஞர் அவர்கள் இறக்கும் வரை தலைவராக செயலபட்டார். அவர் மறைவுக்குப் பின் முனைவர் இறைமறைதாசன் அவர்கள் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். ழகரக் கவிஞர் கடலூர் தேவநாதன் அவர்கள் செயலாளராக செயல்படுகின்றார்.

1998 முதல் ஆண்டு தோறும் உவமைக் கவிஞர் அவர்களின் பிறந்த நாள் விழா நடத்தப்பட்டது. 2008 சூலை மாதம் முடிய 73 சிறப்புக் கூட்டங்கள், கவியரங்கம், கருத்தரங்கம் பல நடத்தப்பட்டது.

இச்சிறப்புக் கூட்டங்களில் பெரும்பாலான தமிழ் அறிஞர்கள், புலவர்கள், கவிஞர் பெருமக்கள் கலந்து கொண்டனர்.